| வெள | வவ்வுதல் (அ) கௌவுதல் |
| சா | மரணம், பேய் |
| சீ | இகழ்ச்சி, சீத்தல் |
| சே | எருது |
| சோ | மதில் |
| யா | ஒரு மரம் |
| நொ | துன்பம் |
| து | கெடு, உண், பிரிவு |

1. அ-சுட்டெழுத்து, எட்டு, சிவன், விஷ்ணு, பிரம்மா
2. ஆ-பசு(ஆவு), ஆன்மா, இரக்கம், நினைவு, ஆச்சாமரம்
3. இ-சுட்டெழுத்து, இரண்டில் ஒரு பங்கு அரை என்பதின் தமிழ் வடிவம்
4. ஈ-பறக்கும் ஈ, தா, குகை, தேனீ
5. உ-சிவன், ஆச்சரியம், சுட்டெழுத்து, இரண்டு என்பதின் தமிழ் வடிவம்
6. ஊ-இறைச்சி, உணவு, ஊன், தசை
7. எ-வினா எழுத்து, ஏழு என்பதின் தமிழ் வடிவம்
8. ஏ-அம்பு, உயர்ச்சிமிகுதி
9. ஐ-அழகு, உயர்வு, உரிமை, தலைவன், இறைவன், தந்தை
10. ஓ-மதகு(நீர் தாங்கும் பலகை)
11. ஔ-பூமி, ஆனந்தம்
12. க-வியங்கோள் விகுதி
13. கா-காத்தல், சோலை
14. கி-இரைச்சல் ஒலி
15. கு-குவளயம்
16. கூ-பூமி, கூவுதல், உலகம்
17. கை-உறுப்பு, கரம்
18. கோ-அரசன், தந்தை, இறைவன்
19. கௌ-கொள்ளு, தீங்கு
20. சா-இறத்தல், சாக்காடு
21. சீ-லட்சுமி, இகழ்ச்சி, வெறுப்புச் சொல்
22. சு-விரட்டுதல், சுகம், மங்கலம்
23. சே-காளை
24. சை-அறுவருப்பு ஒலி, கைப்பொருள்
25. சோ-மதில், அரண்
26. ஞா-பொருந்து, கட்டு
27. தா-கொடு, கேட்பது
28. தீ-நெருப்பு, தீமை
29. து-உண்
30. தூ-வெண்மை, தூய்மை
31. தே-கடவுள்
32. தை-தமிழ்மாதம், தைத்தல், பொருத்து
33. நா-நான், நாக்கு
34. நி-இன்பம், அதிகம், விருப்பம்
35. நீ-முன்னிலை ஒருமை, நீக்குதல்
36. நூ-யானை, ஆபரணம், அணி
37. நே-அன்பு, அருள், நேயம்
38. நை-வருந்து
39. நோ-துன்பப்படுதல், நோவு, வருத்தம்

RADIAN IAS ACADEMY

| | |
|---|---|
| கண்டு, கண்டனன் | காண் |
| கற்றான் | கல் |
| கடித்தான் | கடி |
| காணாமை | காண் |
| காட்டுவான் | காட்டு |
| காத்தான் | கா |
| காத்தவன் | கா |
| காண்பார் | காண் |
| காப்பாற்றினான் | காப்பாற்று |
| கிள்ளினான் | கிள்ளு |
| கூவல் | கூவு |
| கேட்க, கேட்டல் | கேள் |
| கொண்டான் | கொள் |
| கொணர்ந்தான் | கொணர் |
| கொன்றதை | கொல் |
| கொடாமை | கொள் |
| குரைத்தது | குரை |
| குடித்தான் | குடி |
| குளித்தான் | குளி |
| கூறினான் | கூறு |
| கொள்ளுதல் | கொள் |
| கொன்றான் | கொல் |
| கோதினான் | கோது |
| கொய்தான் | கொய் |
| சாய்ந்தது | சாய் |
| சாற்றினாள் | சாற்று |
| சிரிப்பு | சிரி |
| சரிந்தான் | சரி |
| சிதறிய | சிதறு |
| சீத்தாள் | சீ |
| சுட்டது | சுடு |
| சுருட்டினான் | சுருட்டு |
| சூடினான் | சூடு |
| சென்றான் | செல் |
| செல்வான் | செல் |
| சேர்ந்தான் | சேர் |
| சொன்னான் | சொல் |
| செத்தவன் | சா |
| செய்கிறாள் | செய் |
| சென்றவன் | செல் |
| சோர்வு | சோர் |
| தந்தான் | தா |
| தருவான் | தா |
| தட்டுவான் | தட்டு |
| தாண்டினான் | தாண்டு |

| | |
|---|---|
| தட்பம் | தண்மை |
| தாவியது | தாவு |
| தாழ்வு | தாழ் |
| திறந்தது | திற |
| திருந்தினான் | திருந்து |
| தீய்ந்தது | தீய் |
| தூங்கின | தூங்கு |
| துயின்றான் | துயில் |
| துறந்தான் | துற |
| தூங்கினார் | தூங்கு |
| தெரிந்தனர் | தெரி |
| தெளிந்தான் | தெளி |
| தேடினான் | தேடு |
| தேற்றினான் | தேற்று |
| தேடல் | தேடு |
| தொழாது | தொழு |
| தைத்தான் | தை |
| தொடுவாள் | தொடு |
| தொங்கினான் | தொங்கு |
| தொடர்ந்தான் | தொடர் |
| தோண்டினான் | தோண்டு |
| தோன்றினான் | தோன்று |
| தோற்றான் | தோல்வி |
| நக்கார் | நகு |
| நட்டான் | நடு |
| நடித்தான் | நடி |
| நடந்தான் | நட |
| நாட்டும் | நாட்டு |
| நின்றார் | நில் |
| நின்றோன் | நில் |
| நிகழ்த்தினான் | நிகழ்த்து |
| நீங்கினான் | நீங்கு |
| நீண்ட | நீள் |
| நுகர்ந்தது | நுகர் |
| நேர்ந்தது | நேர் |
| நோக்கம் | நோக்கு |
| நோக்கினான் | நோக்கு |
| நாடிய | நாடு |
| நீங்கி | நீங்கு |
| பட்டான் | படு |
| படித்தல் | படி |
| பருகுவான் | பருகு |
| பழுத்தது | பழு |
| பாய்ச்சல் | பாய் |
| பார்த்தல் | பார் |

RADIAN IAS ACADEMY

| | | |
|---|---|---|
| | எழுதினான் | உழுகிறான் |
| செய்பவன் | கண்ணன் | உழவன் |
| கருவி | எழுதுகோல் | ஏர் |
| நிலம் | அறை | வயல் |
| செயல் | எழுதுதல் | உழுதல் |
| காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் |
| செய்பொருள் | கடிதம் | புழுதியாதல் |

- இவ்வாறு தொழிலும் பிறவும் வெளிப்படத் தெரியுமாறு வரும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

**குறிப்பு வினைமுற்று**

**இராமன் இனியன்**

- இத்தொடரில் 'இனியன்' என்னும் சொல், வினைச் சொல்லாகும். இது தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகக் காட்டவில்லை. எனினும் இனிய பண்பை உடையவனாக இருந்தான் எனக் குறிப்பால் காலத்தை உணர்த்துகிறது. இவ்வாறு **செய்பவனை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி பிறவற்றைக் குறிப்பாக உணர்த்தும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும்.** இஃது அது வகைப் பெயர்களின் அடிப்படையில் பிறக்கும்.

**எ.கா**

- புகழேந்தி பொன்னன் (பொருள்)
- வேலன் மதுரையான் (இடம்)
- நடராசன் திருவாதிரையான் (காலம்)
- இராமன் இனியன் (பண்பு)
- வள்ளல் செங்கண்ணன் (சினை)
- சரவணன் நடிகன் (தொழில்)

**எச்சவினை:**

- "வந்தான், பாடுகிறான், பேசுவோர், வந்த, பாடுகிற, பேசும், வந்து எழுதி, பாடி"
- மேற்கண்ட பட்டியலில் வந்தான், பாடுகிறான் என்னும் சொற்கள் செயல் முற்றுப் பெற்றதையும் காலத்தையும் காட்டுவதனால் வினைமுற்று சொற்கள் ஆகும்.
- வந்த, பாடுகிற, பேசும், வந்து, எழுதி, பாடி ஆகிய சொற்கள் செயல்முற்றுப் பெறாது எஞ்சி நிற்கின்றன. இவை எச்ச வினை எனப்படும்.

**பெயரெச்சம்**

- வந்த மாணவன், பாடுகிற பெண், பேசும், கிளி மேற்கண்ட தொடர்களில் உள்ள வந்த, பாடுகிற, பேசும் என்னும் சொற்கள் எச்சவினை என அறியலாம். இச்சொற்கள் மாணவன், பெண், கிளி என்னும் பெயர்ச் சொற்களைத் தழுவி நின்று பொருள் முடிவைத் தருவதனால் அது பெயரெச்சம் எனப்படும்.
- இப்பெயரெச்சத் தொடர்கள் செயலையும் காலத்தையும் தெளிவாக உணர்த்துகின்றன. எனவே தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.
- பெரிய வீடு, புதிய சட்டை, அழகிய குழந்தை இத்தொடர்களில் பெரிய, புதிய அழகிய என்னும் சொற்கள் எச்சவினைச் சொற்கள் இவை வீடு, சட்ட, குழந்தை என்னும் பெயர்ச் சொற்களைச் சார்ந்தது. வந்து பொருள் முடிவைத் தருகின்றன. ஆனால் பெரிய புதிய, அழகிய ஆகியவை காலத்தைத் தெளிவாகக் காட்டவில்லை. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது. **பண்பு அடியாகப் பிறந்த பெயரெச்சம் குறிப்பு பெயரெச்சம் எனப்படும்.**

**வினையெச்சம்:**

- வந்து பார், வர எழுதுகிறான், வந்தால் மகிழ்வேன்
- மேற்கண்ட தொடர்களில் உள்ள வந்து வர வந்தால் என்னும் சொற்கள் எச்சவினைகளே இவை பார், எழுதுகிறான், மகிழ்வான் என்னும் வினை முற்றுகளைத் தழுவி நின்று பொருள் முடிவைத் தருகின்றன.

**வினையெச்ச வாய்பாடுகள்:**

**இறந்தகாலம்**

- நடந்து வந்தான் - செய்து
- உண்ணுபு வந்தான் - செய்பு
- பெய்யாக் கெடுக்கும் - செய்யா
- காணுச் சென்றான் - செய்யக
- பசித்தென உண்டான் - செய்தென

**நிகழ்கால வினையெச்ச வாய்ப்பாடு**

- செய - என்பது
- மழை பெய்யப் பயிர் வளர்கின்றது.

நிகழ்காலம்

- உண்ணச் செல்வான்

எதிர்காலம்

**எதிர்கால வினையெச்சம்**

- செயின் - செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு
- உணின் - உண்ணிய காணியர், கொல்வான் - அலையான்

RADIAN IAS

- ஒரு சொற்றொடர் எழுவாய் செயப்படுபொருள் + பயனிலை என்ற வகையில் அமைய வேண்டும். இச்சொற்றொடர் ஒழுங்கு படுத்துதலில் உவமைகள் மற்றும் பழமொழிகள் இடம் பெறுகின்றன.

**சில பழமொழிகள்**

- உடுக்கை இழந்தவன் கை போல
- நுணலும் தன் வாயால் கேடும்
- பசுவைப் பிரிந்த கன்று போல
- இலை மறை காய் போல
- இருதலைக் கொள்ளி எறும்பு போல
- சிறுதுளி பெருவெள்ளம்
- கடைமடை திறந்தது போல
- குரங்கு கைபட்ட பூமாலை போல
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று
- ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
- குன்றின் மேல் எரியும் விளக்கு
- ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்
- மின்னுவது எல்லாம் பொன் அல்ல

**சில சொற்றொடர்கள்:**

- ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம்
- யானைப் பசிக்குச் சோளப்பொரியா?
- சோழியன் குடுமி சும்மா ஆடாது
- எறும்பு ஊரக் கல்லும் தேயும்
- பண்பட்ட பைந்தமிழ் பாழ்பட்டுக் கிடந்தது
- நாடும் மொழியும் நமதிரு கண்கள்
- திங்கள் அமிழ்து திகழ் ஆவின் பாலினிது
- பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்
- பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து
- தமிழர்கள் வாழ்வின் இலக்கணம் அறிந்தவர்
- நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் மகனே
- வல்லவர் நல்லவராக இருக்க வேண்டும்
- தூய நெஞ்சினர் துன்பம் செய்யார்
- உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
- நீதிக்குப் போராடாதவன் நடை பிணம்
- குன்று முட்டிய குருவி போல

## 16) பெயர்ச்சொல்லின் வகையறிதல்

**பெயர்ச்சொல்லின் வகை அறிதல்**

**பெயர்ச்சொல்**

- **ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். அது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றும்.**

**பொருட்பெயர்:**

- முருகன், யானை, கிளி, நற்காலி, மகள், மரம், புத்தகம், பந்து இவை உயிர் உள்ள உயிர் இல்லாத பொருட்களை குறிப்பதால் பொருட்பெயர் எனப்படும்.

**இடப்பெயர்:**

- குளம், கோவில், வீதி, மதுரை, சென்னை, வீடு, பள்ளி இவை ஓர் இடத்தைக் குறிப்பதால் இடப்பெயர் எனப்படும்.

**காலப்பெயர்:**

- திங்கள், கோடைக்காலம், ஞாயிற்றுக்கிழமை, ஆண்டு, மார்கழி, புதன், காலை, மாலை இவை காலத்தைக் குறிப்பதால் காலப் பெயர் எனப்படும்.

**சினைப்பெயர்:**

- தலை, காய், கண், கை, இலை, பூ இவை உறுப்பைக் குறிப்பதால் சினைப்பெயர் எனப்படும் (சினை - உறுப்பு)

**பண்புப் பெயர்:**

- பண்பினைக் குறிக்கும் பெயர் பண்புப் பெயர் எனப்படும். இது பண்பு, நிறம், வடிவம், அளவு, சுவை இவற்றின் வழியாகத் தோன்றும்.

| பண்புப் பெயர் | - விகுதிகள் |
|---|---|
| நன்மை | - மை |
| தொல்லை | - ஐ |
| மாட்சி | - சி |
| மாண்பு | - பு |
| மழவு | - உ |
| நன்கு | - கு |
| நன்றி | - றி |
| நன்று | - று |
| நலம் | - அம் நன்னர் - அர் (அ) நர் |

(மை - விகுதி பெரும்பான்மயாக வரும்)

- எ.கா: செம்மைக்கோல், மூவேந்தர், மும்மாரி, சதுரவயல், கருங்கல், வட்டக்கிணறு, கோபம், கசப்பு, துவர்ப்பு, முக்கோணம், சதுரம், குட்டை, செவ்வகம், உயரம், உருண்டை, செம்மை, வட்டநிலா, நீள்நகர், முக்கணம், அகலம், புளிப்பு.

**பொதுப்பெயர் (தான், தாம், எல்லாம்):**

RADIAN IAS ACADEMY

- தன்மை, முன்னிலை ஒழிந்த பெயர்கள் எல்லாம் படர்க்கைப் பெயர்கள். இதுவும் ஒருமை பன்மை என 2 வகைப்படும்.
- ராசன் இல்லம் - படர்க்கை ஒருமைப் பெயர்
- பசுக்கள், மனிதர்கள் - படர்க்கைப் பன்மைப் பெயர்
- தான் என்பது தன் என்றும் தாம் என்பது தம் என்றும் திரிந்து வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

| வேற்றுமைப் பெயர் | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| தான் | தன்னை | தன்னால் | தனக்கு | தன்னின் | தனது | தன்னிடம் |
| தாம் | தம்மை | தம்மொடு | தமக்கு | தம்மின் | தமது | தம்மிடம் |

**பெயர்ச்சொல்:**

- இதில் இரண்டு பெயர்கள் உண்டு. இதனை இடுகுறிப்பெயர் மற்றும் காரணப்பெயர் என்பர்.

**இடுகுறிப்பெயர்:**

- இடுகுறிப்பெயர் என்பது காரணமின்றி முன்னோர் வழங்கிய பெயர்.
- இதனை இடுகுறிப்பொதுப்பெயர் மற்றும் இடுகுறி சிறப்பு பெயர் என்பர். இடுகுறிப் பொது பெயர்: முன்னோர் காரணமின்றி வழங்கிய பெயர்.
- எ.கா: மண், மலை, மடு, கல்

**இடுகுறி சிறப்புப் பெயர்**

- மண்ணில், செம்மண், வண்டல், களிமண் என வகைப்படும் இடுகுறி சிறப்புப் பெயர் என்பர்.

**மரம் இடுகுறிப் பொதுப்பெயர்:**

- தென்னை மரம் அவற்றில் சிறப்புப் பெற்றது. ஒரு வகை மரத்திற்கு மட்டுமே வைக்கப்பட்டுள்ளது.
- இதனை இடுகுறி சிறப்புப் பெயர் என்பர்.
- (எ.கா) தென்னை, வயிறு, பல், கால், கை

**காரணப் பெயர்**

- ஒரு பொருளுக்கு பெயர் வைக்க சிறப்பான காரணம் இருந்தால் அதனை காரணப் பெயர் என்பர்.
- எ.கா: பறவை பறக்கின்ற காரணத்தால் அது பறவை என்று பெயர்.
- காரணப் பொதுப் பெயர்: காகம், குயில், நாற்காலி
- காரண சிறப்புப் பெயர்: வளையல் என்பது சிறப்பான ஒன்றைக் குறிப்பிடும் (வளையம் என்பது பொதுவானது) வளையல் என்பது காரணச் சிறப்பு பெயருக்கு எடுத்துக்காட்டு.

**கிளைப்பெயர்:**

- உறவுகளைப் பற்றி குறிப்பிடுவது கிளைப்பெயர். அண்ணன், அண்ணி, தங்கை போன்ற உறவுகளினைக் குறிப்பிடுவன.

குடிப்பெயர்:

- இனம், சாதி, பற்றி குறிப்பிடுவன குடிப்பெயர் எனப்படும். குறவன், ஆயன், மறவன், உழவன், அந்தணன், வணிகன், வேளாளன்.

## ஆகுபெயர்

- ஒன்றன் இயற்பெயர் அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு தொன்று தொட்டு பெயராக வருவது ஆகுபெயர் எனப்படும்.
- 'பாரிமுனைக்கு எதில் வந்தாய்?' என்று கேட்டால், 66-ல் வந்தேன் என்று சொன்னால், அந்த 66 என்பது எண்ணை குறிக்காது. அந்த எண்ணை உடைய பேருந்தை குறிக்கும். இதுவே ஆகுபெயராகும்.
- இது பொருள், காலம், இடம், சினை, கருவி, பண்பு, தொழில் கருத்தா, காரியம், உவகை
- *வெள்ளைச் சட்டை அணிந்தான்*
- *வீட்டிற்கு வெள்ளை அடித்தனர்.*
- முதல் தொடரிலுள்ள 'வெள்ளை' என்னும் சொல் நிறத்தைக் குறித்த பண்புப் பெயராகும். அடுத்த தொடரிலுள்ள 'வெள்ளை' என்னும் சொல் வெள்ளை நிறத்தில் அமைந்த சுண்ணாம்பு நீரைக் குறிக்கிறது.
- இவ்வாறு தொன்றுதொட்டு ஒன்றிற்கு வழங்கிவந்த இடுகுறிப்பெயர் அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகிவருமாயின், அது 'ஆகுபெயர்' எனப்படும்.

**பொருளாகுபெயர்**

- முதற் பொருளின் பெயர் அந்த பொருளின் சினைக்கு ஆகி வந்தால் அது பொருளாகு பெயர் எனப்படும்.
- ***தாமரை கண்ணா!***
- என்று அழைத்தால் இதில் தாமரை என்பது பூவைக் குறிக்கும். சாதாரணமாக தாமரை என்ற சொல் தாமரையின் இலை, தண்டு, பூ, வேர் இவற்றை சேர்த்துதான் குறிக்கும். ஆனால் இங்கு தாமரைக் கண்ணன் என்பது தாமரை பூவைப் போன்ற கண்களை உடையவன் என்று பூவை உணர்த்தியதால் இது பொருளாகு பெயராயிற்று.

தொழிலைக் குறிப்பதால் தொழிற்பெயராகும். ஆனால், இத்தொடரில் 'சுவையாக இருந்தது, என்னும் குறிப்பால் பொரித்தெடுக்கும் செயலால் உணவுப் பொருளைக் குறிக்கிறது.

- இவ்வாறு ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலால் பெறப்படும் பொருளுக்கு ஆகி வருவது 'தொழிலாகு பெயர்' எனப்படும்.

**சொல்லாகு பெயர்**

- ஒரு சொல்லின் பெயர் அச்சொல்லுடைய பொருளுக்குப் பெயராகி வருவது சொல்லாகு பெயராகும். 'நான் முதல்வரைப் பார்த்தேன்' என்பது பள்ளிக் கூடமாக இருந்தால் அங்கு உள்ள தலைமை ஆசிரியரையும், சட்டமன்றமாக இருந்தால் அங்குள்ள முதல் மந்திரியையும் குறிக்கும். எனவே, முதல்வர் என்பது அந்த பதவியினை வகிக்கக்கூடிய நபரினைக் குறிக்கும். எனவே, முதல்வர் என்பது ஒரு சொல்லாகும். எனவே இது சொல்லாகு பெயர் எனப்படும்.

**தானியவாகு பெயர்:**

- கிராமங்களில் காய்கறி விற்பவர்களை அக்காய்கறிகளை வைத்து கூப்பிடாமல் 'அக்கூடையை கூப்பிடு' என்று கூப்பிடுவார்கள். எனவே, ஓர் இடத்தில் உள்ள பொருளின் பெயர், அது சார்ந்திருக்கும் இடத்திற்கு பெயராகி வருவது தானியவாகு பெயராகும்.
- (எ.கா) கழல் பணிந்தான் - பாலை இறக்கு
- இடம் பொருளுக்கு ஆகி வருவது
- இடவாகு பெயர், பொருள் இடத்திற்கு ஆகி வருவது தானியவாகு பெயர்.

**கருவியாகு பெயர்:**

- கருவி என்பது ஒரு பொருள் செய்யப் பயன்படக்கூடிய பொருள், பட்டு என்பது நூல். இது ஆடை நெய்வதற்கு பயன்படுகிறது. நாம் 'பட்டு சட்டை அணிந்தோம்' என்று சொல்வதற்குப் பதிலாக 'பட்டு அணிந்தோம்' என்று சொல்கிறோம். இதுவே கருவியாகு பெயராகும். ஒரு கருவியின் பெயர் அக்கருவியாலாகும் பொருளுக்கும் (காரியத்துக்கு) பெயராகி வந்தால் 'கருவியாகு பெயர்' என்று அழைக்கப்படும். (எ.கா) நான் குறள் படித்தேன்.

**காரியவாகு பெயர்**

- **ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு பெயராகி வருவது காரியவாகு பெயர் எனப்படும்.**
- சமையல் என்பது காரியம். ஆனால் 'சமையல் படித்தேன்' என்று சொல்வது சமையலைக் குறிக்காமல் புத்தகத்தைக் குறிக்கும். எனவே இது 'காரியவாகு பெயர்' எனப்படும்.

**கருத்தாவாகு பெயர்**

- **'கருத்தா' என்றால் 'செய்தவன்' என்று பொருள். கருத்தாவைக் கொண்டு கருத்தா செய்த செயலைக் குறித்தால் அது கருத்தாவாகு பெயர்.**
- (எ.கா) வள்ளுவரைப் படித்தேன், கம்பனைக் கற்றேன் என்று சொன்னால் அவர்கள் எழுதிய நூல்களை குறிக்கும்.

**உவமையாகு பெயர்**

- **ஓர் உவமானம் அதனால் குறிக்கப்படும் உவமேயத்திற்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும்.**
- (எ.கா) காளை வந்தான், பாவை சிரித்தாள் இங்கு காளை, பாவை என்பன காளை போன்ற வீரனுக்கும், பாவை போன்ற பெண்ணுக்கும் ஆகி வந்திருக்கிறது.
- காளை, பாவை - உவமை
- இளைஞன், பெண் - பொருள்

**எண்ணல் அளவை ஆகுபெயர்**

- ஒன்று பெற்றால் ஒளிமயம் ஒன்று என்னும் எண்ணுப்பெயர் அவ்வெண்ணைக் குறிக்காமல் குழந்தையைக் குறிக்கும் பெயராகி வந்தது.

**எடுத்தல் அளவை ஆகுபெயர்**

- ஐந்து கிலோ என்ன விலை?
- இங்கு கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர். அவ்வளவைக் குறிக்காமல் அவ்வளவுடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு) ஆகி வந்தது. எனவே இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

**முகத்தல் அளவை ஆகுபெயர்**

- நான்கு லிட்டர் தேவை. இவற்றுள் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப் பெயர், அளவைக் குறிக்காமல் அவ்வளவுடைய நெய், எண்ணெய் போன்றவற்றுக்கு ஆகி வந்தது.

**நீட்டல் அளவை ஆகுபெயர்**

- மூன்று மீட்டர் கொடு இங்கு மீட்டர் என்பது அளவைக் குறிக்காமல் துணிக்கு ஆகி வரும்.

**இலக்கணக் குறிப்பறிதல்**

RADIAN IAS ACADEMY

- **வேண்டல், விதித்தல், வாழ்த்துதல், வைதல் முதலிய பொருட்களில் மூவிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இது ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவாக வரும். க, இய, இயர் என்னும் விகுதிகளைப் பெறும்.**
- எ.கா: வாழ்க, வாழிய, வாழியர்

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| கட்டளைப் பொருளில் வரும் | வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல் பொருளில் வரும். |
| முன்னிலை இடத்தில் மட்டும் வரும் | மூன்று இடங்களில் வரும். |
| ஒருமை, பன்மை உண்டு | ஒருமை, பன்மை என்ற பகுப்பு இல்லை |

**தெரிநிலை வினைமுற்று:**
- மலர்ந்தன, அலைக்கின்றார், உண்பான், பாடுகின்றார், செய்தான், அறிந்தீர்

**குறிப்பு வினைமுற்று:**
- நன்று, தீது, உடையார், காயன்

**உடன்பாட்டு வினைமுற்று - எதிர்மறை வினைமுற்று**
- வாழ்வார் - வாழாதார்
- செய்தார் - செய்யார்
- நாணுவார் - நாணார்
- துறப்பார் - துறவார்
- கொலை தீது - குறுப்பு வினைமுற்று
- சேர்மின் - ஏவல் வினைமுற்று
- சொல்வார் - உடன்பாட்டு வினைமுற்று
- காணார் - எதிர்மறை வினைமுற்று
- வாழ்க - வியங்கோள் வினைமுற்று

**தொழிற்பெயர்:**
- ஒரு தொழிலை உணர்த்தும் பெயர். இவை சொற்களில் தல், அல், அம், ஐ, கை, கு, பு, உ, தி, சி, வி, உள் ஆகிய விகுதிகளை (கடைசி எழுத்துக்களை கொண்டிருக்கும்).

**தொழிற்பெயர் - விகுதிகள்**
- நடத்தல் - தல்
- பாடல், ஆடல் - அல்
- ஆட்டம், பாட்டம் - அம்
- கொலை - ஐ
- தொழுகை, செயற்கை - ஐ
- பார்வை - ஐ
- நடப்பு - பு
- வரவு - வு, உ
- மறதி - தி
- வளர்ச்சி, உணர்ச்சி - சி
- உதவி, புலவி - வி
- கடவுள், விக்குள் - உள்
- சாக்காடு - காடு
- கோட்பாடு - பாடு
- தோற்றரவு - அரவு
- வாராணை - ஆணை
- கொல்லாமை, நடவாமை - மை
- பாய்ந்து - து
- போக்கு - கு
- தாழால் - ஆல்
- எ.கா: பார்த்தல், நீங்கல், அறைதல், நோற்றல், நாட்டல், நலிதல், காட்சி, வாழ்க்கை, சேர்க்கை, இன்சொல், இறக்குமதி, கொலை, ஆற்றல், மறதி, வரவு, நடப்பு.

**முதனிலைத் தொழிற்பெயர்**
- தொழிற்பெயரின் விகுதி இல்லாமல் பகுதி மட்டும் வருவது முதனிலைத் தொழிற்பெயர் ஆகும்.

**தொழிற்பெயர் - முதனிலை தொழிற்பெயர்**
- சுடுதல் - சுடு
- கெடுதல் - கெடு
- பிடித்தல் - பிடி
- விழித்தல் - விழி

**முதனிலை திரிந்த தொழிற்பெயர்**
- தொழிற்பெயர் விகுதி கெட்டு பகுதி திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.

| தொழிற்பெயர் | முதனிலை தொழிற்பெயர் | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|
| படுதல் | படு | பாடு |
| பெறுதல் | பெறு | பேறு |
| விடுதல் | விடு | வீடு |
| சுடுதல் | சுடு | சூடு |
| கெடுதல் | கெடு | கேடு |

**வினையாலணையும் பெயர்:**

RADIAN IAS ACADEMY

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரை | வரைந்தான் | வரைந்து | வரைந்த | வரைந்ததை | வரைதல் |
| எய் | எய்தான் | எய்து | எய்த | எய்தவனை | எய்தல் |
| குத்து | குத்தினார் | குத்தி | குத்திய | குத்தியவனை | குத்துதல் |
| பாய்ச்சு | பாய்ச்சினார் | பாய்ச்சி | பாய்ச்சிய | பாய்ச்சியவனை | பாய்ச்சுதல் |
| பிள | பிளந்தான் | பிளந்து | பிளந்த | பிளந்தானை | பிளத்தல் |
| கொய் | கொய்தது | கொய்து | கொய்த | கொய்தவனை | கொய்தல் |
| அரி | அரிந்தார் | அரிந்து | அரிந்த | அரிந்தவரை | அரிதல் |
| செப்பு | செப்பினார் | செப்பி | செப்பிய | செப்பியவரை | செப்பல் |
| உழு | உழுதார் | உழுது | உழுத | உழுதவரை | உழுதல் |
| அறி | அறிந்தான் | அறிந்து | அறிந்த | அறிந்தானை | அறிதல் |
| எழு | எழுந்தது | எழுந்து | எழுந்த | எழுந்தவனை | எழுதல் |
| விடு | விடுத்தார் | விடுத்து | விடுத்த | விடுத்தவனை | விடுதல் |
| வா | வந்தார் | வந்து | வந்த | வந்தாரை | வருதல் |
| போ | போனார் | போய் | போன | போனவனை | போதல் |
| வை | வைத்தான் | வைத்து | வைத்த | வைத்தவனை | வைத்தல் |
| ஓடு | ஓடினான் | ஓடி | ஓடிய | ஓடினானை | ஓடுதல் |
| வரை | வரைந்தாள் | வரைந்து | வரைந்த | வரைந்தவள் | வரைதல் |
| படி | படித்தாள் | படித்து | படித்த | படித்தவளை | படித்தல் |
| கல் | கற்றான் | கற்று | கற்ற | கற்றானை | கற்றல் |
| பார் | பார்த்தான் | பார்த்து | பார்த்த | பார்த்தானை | பார்த்தல் |
| அஞ்சு | அஞ்சினான் | அஞ்சி | அஞ்சிய | அஞ்சியவனை | அச்சம் (அ) அஞ்சுதல் |
| வளர் | வளர்ந்தது | வளர்ந்து | வளர்ந்த | வளர்ந்ததை | வளர்ச்சி (அ) வளர்தல் |
| வில் | விற்றான் | விற்று | விற்ற | விற்றானை | விற்றல் |
| முடி | முடித்தான் | முடித்து | முடித்த | முடித்தானை | முடித்தல் |
| பூண் | பூண்டார் | பூண்டு | பூண்ட | பூணுவர் | பூணல் |
| ஓம்பு | ஓம்பினார் | ஓம்பி | ஓம்பிய | ஓம்பியவரை | ஓம்பல் |
| பேசு | பேசினார் | பேசி | பேசிய | பேசியதை | பேச்சு |
| கொள் | கொண்டார் | கொண்டு | கொண்ட | கொண்டானை | கொள்ளல் |
| தாக்கு | தாக்கினார் | தாக்கி | தாக்கிய | தாக்கியவனை | தாக்கல் (அ) தாக்குதல் |
| நோக்கு | நோக்கினார் | நோக்கி | நோக்கிய | நோக்கினானை | நோக்கல் |
| தூக்கு | தூக்கியது | தூக்கி | தூக்கிய | தூக்கினானை | தூக்கல் |
| நடு | நட்டது | நட்டு | நட்ட | நட்டவனை | நடல் |
| வேய் | வேய்ந்தான் | வேய்ந்து | வேய்ந்த | வேய்ந்ததை | வேய்தல் |
| குரை | குரைத்தது | குரைத்து | குரைத்த | குரைத்ததை | குரைப்பு (அ) குரைத்தல் |
| நறுக்கு | நறுக்கியது | நறுக்கி | நறுக்கிய | நறுக்கியதை | நறுக்கல் |
| அலறு | அலறியது | அலறி | அலறிய | அலறியதை | அலறல் |
| கூறு | கூறினார் | கூறி | கூறிய | கூறியதை | கூறுதல் |
| இயம்பு | இயம்பியது | இயம்பி | இயம்பிய | இயம்பியவரை | இயல்பல் |
| ஓது | ஓதினார் | ஓதி | ஓதிய | ஓதியதை | ஓதல் |
| உணர் | உணர்ந்தான் | உணர்ந்து | உணர்ந்த | உணர்ந்தாரை | உணர்தல் |

**ஓசையை நிறைவு செய்ய மொழியின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நின்ற உயிர் நெடில் எழுத்துக்கள் ஏழும் தனக்கு இனமான குறில் எழுத்துக்களைப் பெற்று உரிய மாத்திரையிலிருந்து மிகுந்தொலிக்கும்.**

- **இதற்கு இசைநிறை அளபெடை என்ற பெயரும் உண்டு.**
- நெடில் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ
- குறில் அ இ உ எ இ ஒ உ
- (எ.கா) கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை விடாஅர் விழையும் உலகு.
- இதில் 'ஆ' தனது இன எழுத்தான குறில் 'அ' வினைப் பெற்று செய்யுளில் ஓசையை நிறைவு செய்கிறது. அவ்வாறு அளபெடை ஆக வரையில்லையெனில் அது ஓரசை கொண்ட சொல்லாக இருக்கும் (ஒன்று நேர் அல்லது நிரை)
- குறிப்பு: பொதுவாக ஈரசைச்சீர்

**இன்னிசை அளபெடை**

- **செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசை தருவதற்காகக் குறில் நெடிலாக மாறி அளவெடுப்பது இன்னிசை அளபெடை.**
- மூவசை கொண்ட சீர்களில் வரும்.
- கொடுப்பதூஉம், எடுப்பதூஉம்

**சொல்லிசை அளபெடை**

- **செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளவெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.**
- (எ.கா) குடிதழீஇ, அடிதழீஇ

**ஒற்றளபெடை**

- **ஓசை குறையும் போது மொழியில் இடையில் வரும் ஒற்றெழுத்து இரட்டிக்கும்** (எ.கா) சங்ங்கு, மஞ்ஞ்சள், அரங்ங்கம்

**குற்றியலுகரம்**

- தனிக்குற்றெழுத்தைச் சாராது சொல்லின் இறுதியில் உள்ள வல்லின மெய்யின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவில் குறைந்தால் அது குற்றியலுகரம் எனப்படும்.
- வல்லின மெய்கள் என்றால் என்ன என்பதைப் பற்றி அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். மெய்யெழுத்துகள் 18ல் மூன்று விதமான எழுத்துக்கள் உள்ளன. அவை **வல்லினம் - 6, மெல்லினம் - 6, இடையினம் - 6, மொத்தம் = 18.** வலிமையான எழுத்துக்கள் வல்லினம் என்றும் மென்மையாக உச்சரிக்கக் கூடிய எழுத்துக்களுக்கு மெல்லினம் என்றும் இவற்றுக்கு இடைப்பட்டு உச்சரிக்கக் கூடிய எழுத்துக்களுக்கு இடையினம் என்றும் பெயர்.
- வல்லினம் - கசடதபற வென ஆறே
- மெல்லினம் - ஙஞணநமன வென ஆறே
- இடையினம் - யரலவழள வென ஆறே
- இந்த ஆறு வல்லின எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வந்து அதன் மீது உகரம் ஏறினால், அது தனக்குரிய அரை மாத்திரை அளவில் பாதியாக ஒலிக்கும்.
- எடுத்துக்காட்டு: நாடு, வரகு
- இதில் நாடு + நாட் + உ = ட் என்பது வல்லினம். இதன் மீது உகரம் வந்ததால் தன் அளவிலிருந்து பாதியாக ஒலிக்கும். அது போன்றதே வரகு-வரக்+உ = வரகு

**குற்றியலுகரம் ஆறு வகைப்படும்**

- **நெடில் தொடர், 2. உயிர்தொடர், 3. வன்தொடர், 4. மென் தொடர், 5. இடைத்தொடர், 6. ஆய்தத் தொடர்**

**நெடில் தொடர் குற்றியலுகரம்:**

- ஒரு சொல்லின் இறுதியில் அதாவது உகரத்திற்கு முன்பாக உள்ள எழுத்துக்கள் நெட்டெழுத்தாக இருந்தால் அது நெடில் தொடர் குற்றியலுகரம். எடுத்துக்காட்டு நாடு, வாகு
- இவற்றில் 'டு' க்கு முன்பாக 'நா' என்ற நெட்டெழுத்து வந்துள்ளதால் நெடில் தொடர் குற்றியலுகரமாயிற்று.

**உயிர்த் தொடர் குற்றியலுகரம்:**

- ஈற்று என்றால் இறுதி என்று பொருள். இறுதி எழுத்துக்கு முன்பாக உயிர் எழுத்து வந்தால் அது உயிர்த்தொடர் குற்றியலுகரம் எனப்படும்.
- எடுத்துக்காட்டு: பகடு, பழகு, கயிறு, அரசு

**வன்தொடர் குற்றியலுகரம்:**

- அது போன்றே உகரம் ஏறிய வல்லிய எழுத்தின் முன்பாக வல்லின எழுத்துக்களான க், ச், ட், த், ப், ற் வந்தால் அது வன்தொடர் குற்றியலுகரம் எனப்படும்.
- எடுத்துக்காட்டு: பத்து, பாட்டு, பற்று, சுக்கு

**மென்தொடர் குற்றியலுகரம்**

- குற்றியலுகர சொல்லின் ஈற்று எழுத்துக்கு முன்பாக மெல்லின எழுத்துக்களான ங், ஞ், ண், ந், ம், ன் வந்தால் மென் தொடர் குற்றியலுகரம் எனப்படும்.

RADIAN IAS ACADEMY

- ✓ **திரிசொல்**
- ✓ **திசைச்சொல்**
- ✓ **வடச்சொல்** என்று 4 வகையாகக் கூறுவர்.

**இயற்சொல்:**

- ➢ அதிகமாகக் கல்வி பெறாதவர்களாலும் புரிந்து கொள்ளக்கூடிய சொற்கள் இயற்சொல் எனப்படும்.
- ➢ இதனை பெயர் இயற்சொல் என்றும் வினை இயற்சொல் என்றும் இரண்டாய் பிரிப்பர்.
- ➢ பெயர் இயற்சொல் தீ, காடு, மரம், மலை இதனை சாதாரணமாகவர்களாலும் உணர முடியும்.

**வினை இயற்சொல்**

- ➢ எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய வினைச் சொற்களை வினை இயற்சொல் என்று அழைக்கப்படும்.
- ➢ (எ.கா) படித்தான், தூங்கினான்

**திரிச்சொல்:**

- ➢ தமிழில் ஓரெழுத்து ஒரு மொழி, ஒரு சொல்லுக்கு பல பொருள், பல சொல்லுக்கு ஒரு பொருள் என்று காணப்படுவனவற்றை கற்றறிந்தோரால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.
- ➢ (எ.கா) பீலி (மயிற்தோகை), உகிர் (நகம்), ஆழி (கடல் சக்கரம்)
- ➢ இதனை பெயர் திரிச்சொல் என்றும் வினைத்திரிச்சொல் என்றும் இரண்டு வகை திரிசொற்களாகப் பார்க்கலாம்.

**பெயர் திரிச்சொல்:**

- ➢ எயிறு (பல்), வேய் (மூங்கில்), மடி, (சோம்பல்) நல்குரவு (வறுமை)

**வினைத்திரிச் சொல்:**

- ➢ வினவினான், விளித்தான், நோக்கினார்

**திசைச்சொல்**

- ➢ **வடமொழி தவிர மற்ற வட்டார மொழிகளில் இருந்து தமிழில் இடம் பெற்ற சொற்கள் திசைச்சொல் எனப்படும்.**
- ➢ (எ.கா) கேணி, (கிணறு), பெற்றம் (பசு)

**வடசொல்:**

- ➢ **வடமொழியில் இருந்து தமிழில் தோன்றிய சொற்களை வடசொல் என்பவர்.**
- ➢ (எ.கா) கமலம் (தாமரை), விஷம் (நச்சு), புஷ்பம் (பூ)

**சொல்லின் வகைகள்:**

- ➢ இலக்கண ரீதியாக சொல் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

**பெயர்ச்சொல்**

- ➢ ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். அது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றும்.

**பொருட்பெயர்:**

- ➢ முருகன், யானை, கிளி, நாற்காலி, மகள், மரம், புத்தகம், பந்து இவை உயிர் உள்ள உயிர் இல்லாத பொருட்களை குறிப்பதால் பொருட்பெயர் எனப்படும்.

**இடப்பெயர்**

- ➢ குளம், கோவில், வீதி, மதுரை, சென்னை, வீடு, பள்ளி இவை ஓர் இடத்தைக் குறிப்பதால் இடப்பெயர் எனப்படும்.

**காலப்பெயர்**

- ➢ திங்கள், கோடைக்காலம், ஞாயிற்றுக்கிழமை, ஆதிரையான், ஆண்டு, மார்கழி, புதன், காலை, மாலை இவை காலத்தைக் குறிப்பதால் காலப்பெயர் எனப்படும்.

**சினைப்பெயர்:**

- ➢ தலை, காய், கண், கை, இலை, பூ இவை உறுப்பைக் குறிப்பதால் சினைப்பெயர் எனப்படும் (சினை - உறுப்பு)

**பண்புப் பெயர்:**

- ➢ பண்பினைக் குறிக்கும் பெயர் பண்புப் பெயர் எனப்படும். இது பண்பு, நிறம், வடிவம், அளவு, சுவை இவற்றின் வழியாகத் தோன்றும்.
- ➢ பண்புப்பெயர் - விகுதிகள்
- ➢ நன்மை - மை
- ➢ தொல்லை - ஐ
- ➢ மாட்சி - சி
- ➢ மாண்பு - பு
- ➢ மழவு - உ
- ➢ நன்கு - கு
- ➢ நன்றி - றி
- ➢ நன்று - று
- ➢ நலம் - அம் நன்னர் - அர் (அ) நர் (மை விகுதி பெரும்பான்மையாக வரும்)

RADIAN IAS ACADEMY

ஆகும்.

- தேர்ப்பாகன் - தேரை ஓட்டும் பாகன். இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
- பொன் வளையல் - (பொன்னால் செய்த வளையல்) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
- தலைவலி மருந்து - தலைவலிக்குத் தரும் மருந்து நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
- குழாய்த் தண்ணீர் - ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
- காட்டுப்புலி - (காட்டின்கண் வாழும் புலி) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. (ஆறாம் வேற்றுமைத் தொகையில் பயன் தரும் சொல் மறைந்து வருவதில்லை).

**வினைத்தொகை**

- இவை **மூன்று காலமும் இரண்டு சொற்களுக்கு இடையே மறைந்திருக்கும். வினைத் தொகையில் இரண்டு சொற்களே இருக்கும். முதலில் இருக்கும் சொல் ஒரு வினைச்சொல். இரண்டாவது சொல் பெயர்ச்சொல்லாக இருக்கும்.** இதைக் கொண்டு வினைத் தொகையை அறிந்து கொள்ளலாம்.
- எ.கா: சுடுசோறு, இலங்கு நூல், ஊறுகாய், பாய்புனல்.
- சுடுகின்ற சோறு - நிகழ்காலம்
- சுட்ட சோறு - இறந்தகாலம்
- சுடும் சோறு - எதிர்காலம்
- இதனை காலம் கரந்த பெயரெச்சம் எனலாம்.

**பண்புத்தொகை**

- இவை **"மை" விகுதி "ஆகிய" எனும் பண்பு உருபு மறைந்து வருவது பண்புத்தொகை என்றும் கொள்ளலாம்.**
- எ.கா: சேவடி, செங்கண், நெடுங்கடல், மூதூர், வெண்தயிர், பைந்தொடி, வெண்சிலை, நாற்படை
- நன்மை, தீமை - குணத்தைக் குறிக்கும்
- வட்டம், சதுரம் - உருவத்தைக் குறிக்கும்
- நீலம், பசுமை - நிறத்தைக் குறிக்கும்
- ஒன்று, பத்து - எண்ணிக்கையைக் குறிக்கும்

**உவமைத்தொகை**

- இவை முதலில் இரண்டு சொல் உள்ள தொகை தானா என்பதை அறிந்து கொள்ளுங்கள். முதலில் இருக்கும் சொல் ஓர் உவமைச் சொல்லாக இருந்தால் அது உவமைத் தொகையே (பானைவாய் என்பதில் பானை என்பது உவமை). அந்த உவமைச் சொல்லை அடுத்து போன்ற என்ற சொல் மறைந்திருக்கும். (பானை வாய், பானை போன்ற வாய் என்று இருக்க வேண்டும்).
- எ.கா: மதிமுகம், மலரடி, துடியிடை, கமலக்கண், கனிவாய், தேன்மொழி, கயல்விழி, மான்விழி, இடிமுரசு.

**உம்மைத்தொகை**

- **இரண்டு சொற்களுக்கு இடையில் "உம்" என்னும் இடைச்சொல் தொக்கி வருவது உம்மைத் தொகை எனப்படும்.**
- நாடு நகர் என்பது நாடும் நகரும் எனப் பொருள் தரும் ஆதலில் இச்சொற்களை இணைக்கும் சொல்லாகிய "உம்" மறைந்து வந்தால் அது உம்மைத் தொகை எனப்படும்.

எ.கா:

- இரவு பகல் - இரவும் பகலும்
- காடு கரை - காடும் கரையும்
- இன்பதுன்பம் - இன்பமும் துன்பமும்
- மேடுபள்ளம் - மேடும் பள்ளமும்
- கபிலபரணர் - கபிலரும் பரணரும்
- வீடு வாசல் - வீடும் வாசலும்
- தாய் தந்தை, நரை திரை, காய்கறி, அண்ணன், தம்பி, பால்பழம்.

**வேற்றுமைத்தொகை**

- பரிதி கொடுத்தான்
- பரிதிக்குக் கொடுத்தான்
- முதல் தொடர் 'பரிதி' என்பவன் வேறு ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுத்தான் என்னும் பொருளை உணர்த்துகிறது. இத்தொடரின் படி 'பொருளைக் கொடுத்தவன் பரிதி' என்று ஆகிறது.
- இரண்டாவது தொடர் 'பரிதிக்கு வேறொருவன் பொருளைக் கொடுத்தான்' என்னும் பொருளை உணர்த்துகிறது. இந்தத் தொடரின் படி 'பொருளைப் பெற்றவன் பரிதி, என்று ஆகிறது.
- இத்தொடரில் வேறுபாடு எதனால் ஏற்பட்டது?
- இரண்டாவது தொடரில் 'பரிதி' என்னும் பெயர் சொல்லுடன் 'கு' சேர்வதால் பொருள் வேறுபட்டு நிற்கிறது. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருள் வேறுபடுவதை 'வேற்றுமை' என்பர். இவ்வாறு பொருள் வேற்றுமையை உண்டாக்கும் 'கு' போன்றவை வேற்றுமை உருபுகள் எனப்படும்.
- வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை,

RADIAN IAS ACADEMY

பணமும் உடன் வந்ததை உயர்த்துகிறது.

- தலைவரோடு தொண்டரும் வந்தனர்.
- இத்தொடரில் உள்ள ‘ஓடு’ என்னும் உருபு இருவரும் இணைந்து வந்தனர் எனப் பொருள் தருகிறது. இவ்வாறு ஒடு, ஓடு என்னும் உருபுகள் பெயர்ச்சொல்லின் பொருளை உடன் நிகழ்வுப் பொருளாகக் காட்டுவதால் “உடனிகழ்ச்சிப் பொருள்” எனப்படும்.

**சொல்லுருபுகள்:**

- மூன்றாம் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பவனவற்றுடன் வேறு சில சொற்களும் உருபுகளாக அமைவது உண்டு. அவற்றை சொல்லுருபுகள் என்பவர்
- ஊசி கொண்டு தைத்தான்
- இடி மின்னலுடன் மழை பொழிந்தது.
- இத்தொடர்களில் அமைந்துள்ள கொண்டு ‘உடன்’ என்பவை மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாகும்.

**நான்காம் வேற்றுமை**

- நோபல் பரிசு தாகூருக்கு வழங்கப் பெற்றது.
- தாய் குழந்தைக்கு உணவு ஊட்டினாள்
- இத்தொடர்களில் தாகூர், குழந்தை என்னும் பெயர்ச்சொற்கள் ‘கு’ என்னும் உருபையேற்று பொருள் வேறுபாட்டை உணர்த்துகின்றன.
- நான்காம் வேற்றுமைக்கு உரிய உருபு ‘கு’ இது கோடற்பொருளை உணர்த்துகிறது. கொடுப்பதை ஏற்றுக் கொள்வது ‘கோடல்’ ஆகும். நான்காம் வேற்றுமை உணர்த்தும் கோடற் பொருளானது கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என ஏழு வகைப்படும்.
- மன்னன் புலவர்க்குப் பரிசளித்தான் - கொடை
- புகைத்தல் மனிதனுக்குப் பகை - பகை
- பாரிக்கு நண்பர் கபிலர் - நேர்ச்சி (நட்பு)
- கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம் - தகுதி
- தயிருக்குப் பால் வாங்கினான் - அதுவாதல்
- நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டனர் - பொருட்டு
- வளவனுக்குத் தங்கை வளர்மதி - முறை

**சொல்லுருபுகள்:**

- பணத்திற்காகத் தீயவை செய்யேல்
- தலைவர் பொருட்டுச் செயலாளர் பேசினார்
- இவற்றில் உள்ள ‘ஆக, ‘பொருட்டு’ என்பவை நான்காம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளாகும்.

**ஐந்தாம் வேற்றுமை**

- கொடையில் சிறந்தவன் குமணன்
- ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
- இத்தொடர்களில் உள்ள கொடை, ஒழுக்கம் என்னும் பெயர்ச் சொல்லுடன் இல், இன் என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்துகின்றன. இ..து ஐந்தாம் வேற்றுமை ஆகும்.
- இல், இன் என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபுகளாகும். இவை நீங்கல், ஒப்பு, எல்லை, எது (காரணம்) என்னும் நான்கு பொருட்களை உணர்த்தி வரும்.
- தலையின் இழிந்த மயிர் - நீங்கல்
- கடலின் விரிந்த புகழுடையவர் - ஒப்பு
- பழனியான் கிழக்கு மதுரை - எல்லை
- வீணை வாசிப்பதில் வல்லவன் - ஏது

**சொல்லுருபுகள்**

- வேலன் ஊரிலிருந்து வந்தார்.
- வெண்ணிலா மேகத்தினின்று வெளிப்பட்டது.
- மன்னனைவிடக் கற்றோரே சிறப்புடையர்.
- தமிழைக் காட்டிலும் சுவையான மொழியுண்டோ!
- இத்தொடர்களிலுள்ள இருந்து நின்று விட காட்டிலும் என்பவை ஐந்தாம் வேற்றுமைக்கு உரிய சொல்லுருபுகளாகும்.

**ஆறாம் வேற்றுமை:**

- கபிலரது பாட்டு
- எனாது கை
- என் கைகள்
- இத்தொடர்களில் அது, ஆது, அ என்னும் உருபுகள் பெயர்ச் சொல்லைச் சேர்ந்து நின்று பொருள் வேறுபாட்டை உணர்த்துகின்றன. இவ்வாறு வருவது ஆறாம் வேற்றுமையாகும் இது கிழமைப் பொருளில் வரும் (கிழமை உரிமை) ஆறாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள்: அது, ஆது, அ

**சொல்லுருபுகள்:**

- நண்பருடைய இல்லம்
- ஆசிரியருடைய இருக்கை
- இத்தொடர்களிலுள்ள ‘உடைய’ என்பது ஆறாம் வேற்றுமைக்கு உரிய சொல்லுருபுகளாகும்.

**ஏழாம் வேற்றுமை:**

- வீட்டில் சோலை உள்ளது
- மலைக்கண் மூலிகை
- பிறரிடம் பகை கொள்ளாதே
- மாணவர்களுள் செழியனே சிறந்தவன்

RADIAN IAS ACADEMY

**உவமைத் தொகை**

- மலர்க்கை
- இத்தொடர் 'மலர் போன்ற கை' எனப்பொருள் தருகிறது.
- மலர் - உவமை கை (பொருள்) உவமேயம் இடையே போன்ற என்னும் உவம உருபு மறைந்துள்ளது.
- உவமைக்கும், பொருளுக்கும் (உவமேயத்திற்கும்) இடையில் போல, போன்ற, நிகர அன்ன என்னும் உவம உருபுகளுள் ஒன்று தொக்கி நிற்க வருவது உவமைத் தொகை எனப்படும்.

**உம்மைத் தொகை:**

- வெற்றிலை பாக்கு, உற்றார் உறவினர்
- இத்தொடர்கள் 'வெற்றிலையும் பாக்கும், உற்றாரும் உறவினரும், என விரிந்து பொருளை உணர்த்துகின்றன. இடையிலோ, இறுதியிலோ 'உம்' என்னும் இடைச்சொல் இல்லை மறைந்து நின்று பொருளை உணர்த்துகின்றது.
- இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் தொக்கி வருவது உம்மைத் தொகை எனப்படும்.

**அன்மொழித்தொகை:**

- பொற்றொடி வந்தாள் (தொடி-வளையல்)
- இத்தொடரில் முதலில் உள்ள 'பொற்றொடி' என்னும் சொல் 'பொன்னால் ஆன வளையல்' என்னும் பொருளைத் தரும் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். இத்தொடர் 'வந்தாள்' என்னும் வினைச் சொல்லைத் தழுவி நிற்பதால் 'பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண் வந்தாள்' எனப் பொருள் தருகிறது.
- 'அணிந்த பெண்' என்பது தொடரில் இல்லாத மொழியாகும் வேற்றுமைத் தொகையை அடுத்து அல்லாத மொழி தொக்கி நிற்பதால், இத்தொடர் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.
- **வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகை நிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது அன்மொழித் தொகை ஆகும்.**

**சில எடுத்துக்காட்டுகள்:**

- கயல்விழி பேசினாள்
- மலர்க்கை வந்தாள்

**தொகாநிலைத்தொடர்**

- அறிவரசன் படித்தான், குயில் கூவியது
- முதல் தொடரில் 'அறிவரசன்' என்னும் எழுவாயும் 'படித்தான்' என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று பொருள் உணர்த்துகின்றன.
- இரண்டாவது தொடரிலும், எழுவாயும் பயனிலையும் தொடர்ந்து நின்று 'குயில் கூவியது' என்னும் பொருளைத் தருகின்றன.
- ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து, அவற்றின் இடையில் சொல்லோ, உருபோ மறையாது பொருளை உணர்த்துவது 'தொகாநிலைத் தொடர்' எனப்படும்.

**நிலவு தோன்றியது:**

- இதில் 'நிலவு' என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'தோன்றியது' என்னும் பயனிலை அமைந்துள்ளது இது எழுவாய்த் தொடர்.
- **நண்பா! படி:** 'நண்பா' என்னும் விளிப்பெயர், படி என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளது. இது விளித்தொடர்.
- **சென்றனர் வீரர்:** வினைமுற்று முதலில் நின்று பெயரைத் தொடர்கிறது. இது வினைமுற்றுத் தொடர் ஆகும்.
- **படித்த** பாடம்: 'படித்த' என்னும் எச்சவினை 'பாடம்' என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. இது பெயரெச்சத் தொடர் ஆகும்.

**தேடிப் பார்த்தான்:**

- 'தேடி' என்னும் எச்சவினை 'பார்த்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இது வினையெச்சத் தொடர் ஆகும்.

**செய்யுளை எழுதினான்:**

- இத்தொடரில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக நின்று பொருளை உணர்த்துகிறது. இது வேற்றுமைத் தொகா நிலைத் தொடர் எனப்படும்.
- மற்றுப்பிற: மற்று + பிற - 'மற்று' என்னும் இடைச்சொல்லை அடுத்துப் 'பிற' என்னும் சொல் நின்று பொருள் தருவதால் இது இடைச்சொல் தொடர் ஆகும்.
- சால நன்று: 'சால' என்பது உரிச்சொல். இதைத் தொடர்ந்து 'நன்று' என்னும் சொல் வந்துள்ளது. இது உரிச்சொல் தொடர் ஆகும்.
- நன்று நன்று நன்று: ஒரே சொல் பல முறை அடுக்கி வந்துள்ளது. இது அடுக்குத் தொடர் ஆகும்.
- இவ்வாறு மொத்தம் தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது வகைப்படும்.

| | |
|---|---|
| | வாய்ப்பாடு வினைமுற்றுகள் |
| பொன்வயல் | உவமைத்தொகை |
| இயற்கை வெல்லும் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| செந்தமிழ் | பண்புத்தொகை |
| போந்தோர் | வினையாலணையும் பெயர் |
| அருளும், அளிக்கும் | செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள் |
| நகக்கண் | வேற்றுமைத்தொகை |
| கடந்த | பெயரெச்சம் |
| சிந்தாமணி | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| கடிய | பலவின்பால் படர்க்கை குறிப்பு வினைப்பெயர் |
| கனிவாய் | உவமைத்தொகை |
| தோன்றும் | செய்யும் என்னும் முற்று |
| உறாஅது | செய்யுளிசை அளபெடை |
| பொய்யாமை பொய்யாமை | அடுக்குத்தொடர்கள் |
| நடுக்கு | நடுங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| பசுமண் | பண்புத்தொகை |
| இலா | இல்லா என்பதன் இடைக்குறை |
| அறியாப்பழங்குடி | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| தடங்கண் | உரிச்சொற்றொடர் |
| தேவனே, செல்வியே | தேற்றேகாரங்கள் |
| பெருநிலம் | பண்புத்தொகை |
| பெரும | அண்மைவிளி |
| ஊர் ஆண்மை | வினைத்தொகை |
| தோன்றுக | வியங்கோள் வினைமுற்று |
| உடைகளைந்து | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| கொடுவினை | பண்புத்தொகை |
| வாழாதார் | வினையாலணையும் பெயர் |
| செய்யார் | பலர்பால் எதிர்மறை வினை முற்று |
| வாழ்க்கை | தொழிற்பெயர் |
| மாறா அன்பு | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| மதவெறி | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| பழீக்கும் வினை | பெயரெச்சம் |
| செய்வார் | வினையாலனையும் பெயர் |

| | |
|---|---|
| கோயில் | பெயர்ச்சொல் |
| பொருளாக் கொண்டே | பொருளாக என்பதன் தொகுத்தல் விகாரம் |
| விளைதரளம் | வினைத்தொகை |
| போலும் போலும் | அடுக்குத்தொடர் |
| ஊண் | முதல் நீண்ட முதனிலைத் தொழிற்பெயர் |
| அந்திமாலை | இருபெயரொட்டு பண்புத் தொகை |
| கொல்லாத்தீவினை | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| செய்யற்க | எதிர்மறை வியங்கோள் வினைமுற்று |
| மென்மேலும் | அடுக்குத்தொடர் |
| பழீமலைந்து | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| எல்லா அறமும் | முற்றும்மை |
| ஈன்றாள் | வினையாலணையும் பெயர் |
| ஏற்று | குறிப்பு வினைமுற்று |
| நல்குரவு | தொழிற்பெயர் |
| வான் பொருள் | உரிச்சொற்றொடர் |
| கனியமுது | உவமைத்தொகை |
| கொடுப்பார் கொள்வார் | வினையாலணையும் பெயர்கள் |
| பசும்புல் | பண்புத்தொகை |
| அழியாத | எதிர்மறை பெயரெச்சம் |
| யார் யார் | அடுக்குத்தொடர் |
| கொண்டேன் | தன்மை ஒருமை வினைமுற்று |
| முப்பழமும் | முற்றும்மை |
| பொய்மணி | வினைத்தொகை |
| பூசனை | பூஜா என்ற வடசொல்லின் திரிபு |
| வான் | இடவாகுபெயர் |
| துன்புறுத்தும் | இரண்டாம் வேற்றுமை தொகை |
| நெடுங்கடலும் | உயர்வு சிறப்பும்மை |
| சிந்தும் | தொழிற்பெயர் |
| கைக்கொளல் | வேற்றுமைத்தொகை |
| பத்துக்குணம் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| அனம் | அன்னம் என்பதன் இடைக்குறை |
| பாலமுது | உவமைத்தொகை |
| அடுப | பலர்பால் வினைமுற்று |
| எண்ணிலா உயிர்கள் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| கொண்டவன் | வினையாலனையும் பெயர் |

RADIAN IAS ACADEMY

| | |
|---|---|
| முத்துசாமித் துரையே | ஆடூஉ முன்னிலை |
| உண்டி | தொழிற்பெயர் |
| இப்பிறை | அண்மைச்சுட்டு |
| திருத்தலம் | வினைத்தொகை |
| கைதொழுது | வேற்றுமைத்தொகை |
| பிறைக்கூன் | ஒருபொருட்பன்மொழி |
| கைக்கடிகாரம் | உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| பேரண்டம் | பண்புத்தொகை |
| உள்ளத்தால் | உருபு மயக்கம் |
| புறந்தூய்மை | ஆறாம் வேற்றுமை தொகை |
| ஆர்த்தல் | தொகுத்தல் விகாரம் |
| உளன் | குறிப்பு வினைமுற்று |
| பசிகாண்பான் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| தரும் | செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று |
| கடிந்து | வினையெச்சம் |
| தருஉம் | இன்னிசையளபெடை |
| கழல் | தானியாகு பெயர் |
| கொடுமை | தொழிற்பெயர் |
| கண்ணுதல் | முன்பின்னாக தொக்க ஆறாம் வேற்றுமை தொகை |
| மறையோர் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| நீழல் | நிழல் என்பதன் நீட்டல் விகாரம் |
| விளங்கு மூதூர் | வினைத்தொகை |
| கொள்வாய் | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| கூவு | வினைப்பகுதி (அ) பகாப்பதம் |
| செய்தல் | தொழிற்பெயர் |
| மட்கலம் | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| சத்தியத்தீ | உருவகத்தொடர் |
| பொருள் செய்து | இரண்டாம் வேற்றுமை தொகை |
| நன்று | ஒன்றன் பால் வினைமுற்று |
| இடுக்கட்படினும் | இழிவு சிறப்பும்மை |
| உடுப்பாய் | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| ஆம்பணி | தொகுத்தல் விகாரம் |
| முயன்ற கோயில் | பெயரெச்சம் |
| அருமறை | பண்புத்தொகை |
| உரைகல் | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| நல்ல | குறிப்பு வினைமுற்று |
| பொன்புனை | மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| சிந்தித்து | வினையெச்சம் |
| வானோர்க்கும் | உயர்வு சிறப்பும்மை |
| விரிநீர் | வினைத்தொகை |
| புத்துலகு | பண்புத்தொகை |
| உலகம் | இடவாகுபெயர் |
| காண்பு | தொழிற்பெயர் |
| துப்பார் | வினையாலணையும் பெயர் |
| கரைந்து | இறந்தகால வினையெச்சம் |
| செந்நெல் | பண்புத்தொகை |
| எனைத்தும் | முற்றும்மை |
| சுண்டி | வினையெச்சம் |
| ஒளிர்தமிழ் | வினைத்தொகை |
| அயர்ந்தவர் | வினையாலணையும் பெயர் |
| பெண்மை நலம் | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| கொள்வார் | பலர்பால் வினைமுற்று |
| எனும் | என்னும் என்பதன் இடைக்குறை |
| சிந்தை ஆலயம் | உருவகம் |
| பேறு | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| அகன்றனள் போகி | முற்றெச்சம் |
| பழுதிலா உழுதிலா | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சங்கள் |
| தாங்கி | வினையெச்சம் |
| வென்றவன் | வினையாலணையும் பெயர் |
| பூசலன்பன் | இருபெயரொட்டு பண்புதொகை |
| மூதூர் | பண்புத்தொகை |
| மாலறியா | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| புகல்வேன் | தன்மையொருமை வினைமுற்று |
| இழப்பினும் | இழிவு சிறப்பும்மை |
| இரங்குவ | வினையாலணையும் பெயர் |
| ஒருவுதல் | தொழிற்பெயர் |
| எய்திய | பெயரெச்சம் |
| தானம் செய்வார் | இரண்டாம் வேற்றுமை தொகை |
| கடிந்த | பெயரெச்சம் |
| செய்யாமை செய்யாமை | அடுக்குத்தொடர்கள் |
| தரும் | செய்யும் எனும் வாய்பாட்டு |

| | |
|---|---|
| ஆண்மை | தொழிற்பெயர் |
| குளிர்மழை | வினைத்தொகை |
| கார் | அறவினை |
| மதிமுகம் | உவமைத்தொகை |
| தொடுவானம் | வினைத்தொகை |
| கொள்வீர் | ஏவல் பன்மை வினைமுற்று |
| குன்றம் ஏந்தி | இரண்டாம் வேற்றுமை தொகை |
| தீதிலா வடமீன் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| விரிமழை | வினைத்தொகை |
| அங்கொன்றும், இங்கொன்றும் | முரண்தொடைகள் |
| செங்கதிரோன் | பண்புத்தொகை |
| ஊர்பு | செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம் |
| தைத்திங்கள் | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| இணையிலா வளங்கள் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| வண்கை | பண்புத்தொகை |
| ஒளிக்கல் | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| பொய்யற்க | எதிர்மறை வியங்கோள் வினைமுற்று |
| உலகளித்தல் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| கெழீஇய | சொல்லிசையளபெடை |
| பழம்பாடல் | பண்புத்தொகை |
| நானிலம் | பண்புத்தொகை |
| திறன் | ஈற்றுப்போலி |
| யாக்கை | காரணப்பெயர் |
| ஆற்றான் ஏற்றான் | வினையாலணையும் பெயர் |
| வாழாதார் | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| தொடங்கற்க | எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுகள் |
| வண்பயன் | பண்புத்தொகை |
| தோன்றாமை | எதிர்மறை தொழிற்பெயர் |
| மாமலை | உரிச்சொல்தொடர் |
| நிகழ்மாற்றம் | வினைத்தொகை |
| சினங்காக்க | இரண்டாம் வேற்றுமை |
| ஒயுமே | ஏகாரம் (தேற்றம்) தெளிவு பொருளை தரும் |
| இடன் | ஈற்றுப்போலி |

| | |
|---|---|
| ஆகுமதி | மதி முன்னிலை அசை |
| எண்ணியார் | வினையாலணையும் பெயர் |
| காப்பாய் | ஏவல் ஒருமை வினைமுற்று |
| பெறா அ | இசைநிறையளபெடை |
| சுடும் | செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று |
| மறத்தல் | “தல்“ ஈற்று வியங்கோள் வினைமுற்று |
| துணைநலம், வினைநலம் | ஆறாம் வேற்றுமைத் தொகைகள் |
| நெடும்புனல் | பண்புத்தொகை |
| கேடு | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| இரப்பார் உரைப்பார் | வினையாலணையும் பெயர் |
| எற்று | குறிப்பு வினைமுற்று |
| நெடுந்தேர் | பண்புத்தொகை |
| வான்முகிழ், வான் மழை | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள் |
| நீள்புகழ் | வினைத்தொகை |
| பழிக்கும் வினை | பெயரெச்சம் |
| நிலத்தறைந்தான் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| ஆற்றார் | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| கழிநல்குரவு | உரிச்சொற்றொடர் |
| சினங்காப்பான் | இரண்டாம் வேற்றுமை தொகை |
| மறையோர் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| வன்நெஞ்சு | பண்புத்தொகை |
| நைவார் | முற்றெச்சம் |
| செல்லா இடத்து | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| வினைப்பயன் | ஆறாம் வேற்றுமை தொகை |
| நல்வினை | பண்புத்தொகை |
| வேண்டாக்குப்பை | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| குரு | உரிச்சொல் |
| உவகைத்தேன் | உருவகம் |
| பெருஞ்செல்வம் | பண்புத்தொகை |
| மனமொழிமெய் | உம்மைத்தொகை |
| கருநிறம் | பண்புத்தொகை |
| தொடுகுழி | வினைத்தொகை |
| சொலல் | தொழிற்பெயர் |
| செங்கண் | பண்புத்தொகை |

| | |
|---|---|
| புகுந்து, வாழ்ந்து | வினையெச்சங்கள் |
| குறைவிலா | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நினைத்து | வினையெச்சம் |
| தீயறிவு, செவ்வானம் | பண்புத்தொகைகள் |
| செய்கை | தொழிற்பெயர்கள் |
| மேன்மேலும் | அடுக்குத்தொடர் |
| பைப்புனல், பெருமணல் | பண்புத்தொகைகள் |
| எரிதழல் | வினைத்தொகை |
| கொண்ட கூற்று | பெயரெச்சம் |
| முத்தமிழ் | பண்புத்தொகை |
| புழுதிரை, உழுதிடா | ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சங்கள் |
| பேரின்பம் | பண்புத் தொகைகள் |
| வளைந்த | பெயரெச்சங்கள் |
| உழைத்து உழைத்து | அடுக்குத்தொடர் |
| வெண்ணீறு | பண்புத்தொகை |
| தொழுதோர் | வினையாலணையும் பெயர் |
| இசையிலா யாக்கை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| அசைவிலா ஊக்கம் | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| ஏற்றார் | வினையாலணையும் பெயர்கள் |
| பெருமகன் | பண்புத்தொகை |
| ஆழி | உருவகம் |
| ஒடுங்குயிர் | வினைத்தொகை |
| நற்றவன் | பண்புத்தொகை |
| பெரும்பழம் | பண்புத்தொகைகள் |
| தீந்தமிழ், நறுஞ்சுவை, மென்பிடி, பெருவாழ்வு | பண்புத்தொகைகள் |
| வளர்செழியர் | வினைத்தொகை |
| சேர்வித்வம் | வினைத்தொகை |
| பேரண்டங்கள் | பண்புத்தொகை |
| எண்ண எண்ண | அடுக்குத்தொடர் |
| களிவெள்ளம் | உருவகம் |
| பெருந்தகை | பண்புத்தொகை |
| நின்றான், நினைந்தான், மொழிந்தான், உள்ளான் | வினைமுற்றுகள் |
| தெய்வமே, பொன்னே, அன்பே | விளித்தொடர்கள் |
| நற்றமிழ் | பண்புத்தொகை |
| நீலமுடி | பண்புத்தொகை |
| நறுநெய், நன்செய், புன்செய் | பண்புத்தொகை |
| ஆர்வலர், விரித்தனர் | வினையாலணையும் பெயர் |
| வருமழை | வினைத்தொகை |

| | |
|---|---|
| உயர்கொடி | வினைத்தொகை |
| வேறு வேறு | அடுக்குத்தொடர் |
| மாஅ | செய்யுளிசை அளபெடை |
| கொழுமீன் | பண்புத்தொகை |
| வருபுனல் | வினைத்தொகை |
| அதாஅன்று, நகா அர், மகாஅர் | செய்யுளிசை அளபெடை |
| கடுந்தேர் | பண்புத்தொகை |
| செம்பொன் | பண்புத்தொகை |
| உழந்தான் | வினைமுற்று |
| தழீஇ, தழீஇய | சொல்லிசை அளபெடை |
| கடிமுரசு | உரிச்சொற்றொடர் |
| வெண்மதி | பண்புத்தொகை |
| இடுபுகை | வினைத்தொகை |
| மழகளிறு | உரிச்சொற்றொடர் |
| நன்னலம் | பண்புத்தொகை |
| காய்கதிர், ஆய்கதிர் | வினைத்தொகை |
| கடிவினை | உரிச்சொற்றொடர் |
| பசும்பொன் | பண்புத்தொகை |
| தடமாலை | உரிச்சொல்தொடர் |
| மாமலர் | உரிச்சொல்தொடர் |
| செய்தவம் | வினைத்தொகை |
| ஆயிழை | அன்மொழித்தொகை |
| எரிகதிர் | வினைத்தொகை |
| விடுஉம் | செய்யுளிசை அளபெடை |
| வழிப்படுஉம் | இன்னிசை அளபெடை |
| நகுக | வியங்கோள் வினைமுற்று |
| இல் | குறிப்பு வினைமுற்று |
| உள்ளதூம் | இன்னிசை அளபெடை |
| உறாஅதவர் | செய்யளிசை அளபெடை |
| ஓங்குமரம் | வினைத்தொகை |
| மாமுகில் | உரிச்சொல்தொடர் |
| விதிர் விதிர்த்து | அடுக்குத்தொடர் |
| தொழுதோர் | வினையாலணையும் பெயர் |
| ஒன்றாப்புகழ் | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| மலர்நீட்டம் | சினையாகு பெயர், ஆறாம் வேற்றுமைத் தொகை |
| உள்ளல் | அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று |
| இலாதவர் | இல்லாதவர் என்பதன் தொகுத்தல் விகாரம் |
| வெரூஉம் | இசை நிறையளபெடை |
| பொதியிலாயினும் இமயமாயினும் | எண்ணும்மை |
| பொற்புயம் | உவமைத்தொகை |
| ஈட்டுபுகழ் | வினைத்தொகை |

- அகழ் - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை
- ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி
- மறத்தல் பொறுத்தல் - தொழிற்பெயர்கள்
- நன்று - குறிப்பு வினைமுற்று
- பகுபத உறுப்பிலக்கணம்: மறத்தல் - மற+த்+த்+அல் மற - பகுதி
- த் - சந்தி, த் - இடைநிலை, அல்-தொழிற்பெயர் விகுதி
- விருந்து - பண்பாகு பெயர்
- ஓரால், பொறை - தொழிற்பெயர்கள்
- நீங்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர்
- போற்றி - வினையெச்சம்
- ஒறுத்தார் - வினையாலணையும் பெயர்
- பொதிந்து - வினையெச்சம்
- வையார் - வினைமுற்று

**பகுபத உறுப்பிலக்கணம்**

- வைப்பர் - வை+ப்+ப்+அர்
- வை - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை
- அர் - பலர்பால் வினைமுற்று விகுதி
- ஒறுத்தார், பொறுத்தார் - வினையாலணையும் பெயர்கள்

**பகுபத உறுப்பிலக்கணம்**

- ஒறுத்தார் - ஒறு+த்+த்+ஆர். ஒறு பகுதி
- த்-சந்தி, த் - இறந்த கால இடைநிலை
- ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி
- தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை
- செய்யினும் - இழிவு சிறப்பும்மை
- நொந்து - வினையெச்சம்
- அறன், திறன் - ஈற்றுப்போலிகள்
- செய்தாரை - வினையாலணையும் பெயர்
- விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
- இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர் - வினையாலணையும் பெயர்கள்
- இன்னாச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- இன்னாச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- பகுபத உறுப்பிலக்கணம்:
- இறந்தார் - இற+த்(ந்)+த்+ஆர்
- இற - பகுதி, த்-ந் ஆனது விகாரம் த் - இறந்தகால இடைநிலை
- ஆர் - விகுதி (பலர்பால் வினைமுற்று)
- உண்ணாது - எதிர்மறை வினையெச்சம்

**சேர்த்து எழுதுக:**

- தன் + நெஞ்சு - தன்னெஞ்சு
- புகழ் + இல்லை - புகழில்லை
- அளை இ - சொல்லிசை அளபெடை
- அகன், முகன் - ஈற்றுப்போலி
- துன்புறூஉம், இன்புறூஉம் - இன்னிசை அளபெடை

**பகுபத உறுப்பிலக்கணம்:**

- அறிந்து - அறி+த்(ந்)+த்+உ
- அறி - பகுதி
- த்-ந் ஆனது விகாரம், த்-இறந்த கால இடைநிலை
- உ-வினையெச்ச விகுதி
- கலங்காது - எதிர்மறை வினையெச்சம்
- வினைவலி, துணைவலி - ஆறாம் வேற்றுமைத்தொகை
- செயல் - வியங்கோள் வினைமுற்று
- செல்வார் - வினையாலணையும் பெயர்
- அறியார் - எதிர்மறை வினையாலணையும் பெயர்
- ஒழுகான், அறியான் (முற்றுகள் எச்சப் பொருளில் வந்தன) முற்றெச்சம்
- நுனிக்கொம்பர் - முன் பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை
- ஈக - வியங்கோள் வினைமுற்று
- வழங்கும் நெறி - பெயரெச்சத் தொடர்
- ஆகாறு, போகாறு - வினைத்தொகைகள்
- அகலாக்கடை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
- தோன்றாக்கெடும் - செய்யா எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம்
- வேண்டாக் கடப்பாடு - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
- தந்தபொருள் - பெயரெச்சம்
- பொருட்டு - குறிப்பு வினைமுற்று
- பெறல் - தொழிற்பெயர்
- ஈண்டும் - உம்மை எண்ணுப்பொருள்
- அறிவான், வாழ்வான் - வினையாலணையும் பெயர்கள்
- மற்றையான் - குறிப்பு வினையாலணையும் பெயர்
- பேறறிவு - பண்புத்தொகை
- அவாம் - அவாவும்: செய்யும் என்னும் எச்சம்
- ஊருணி - காரணப் பெயர்
- பயன்மரம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை (பயனைத் தரும் மரம்)
- உள்ளூர் - ஊருள் என்பது முன் பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை
- தப்பா மரம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- பெருந்தகை - பண்புத்தொகை
- கடனறி காட்சி - வினைத்தொகை
- ஒல்கார் - வினையாலணையும் பெயர்
- இல்பருவம் - பண்புத்தொகை

RADIAN IAS ACADEMY

- காழ்ப்ப இயற்றியார் - பெயரெச்சம்
- வினைத்திட்டம் - நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- மனத்திட்பம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- பிற - பலவின் பால் வினைமுற்று
- ஆய்ந்தவர் - வினையாலணையும் பெயர்
- ஒரால், ஒல்காமை - தொழிற்பெயர்கள்
- கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
- எற்றா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- சொல்லுதல் - தொழிற்பெயர்
- யார்க்கும் - முற்றும்மை
- எளிய - குறிப்பு வினைமுற்று
- செயல் - தொழிற்பெயர்
- சொல்லிய - பெயரெச்சம்
- எய்தி - வினையெச்சம்
- மாண்டார் - வினையாலணையும் பெயர்
- உள்ளப்படும் - செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று
- எண்ணியவர் - வினையாலணையும் பெயர்
- எய்துப - பலர்பால் வினைமுற்று
- எண்ணியாங்கு - எண்ணிய வாங்கு என்பதன் தொகுத்தல் விகாரம்
- கண்டு - வினையெச்சம்
- எள்ளாமை - தொழிற்பெயர்
- உடைத்து - வினையெச்சம்
- பெருந்தேர் - பண்புத்தொகை
- கலங்காது, துளங்காது, கடிந்து - வினையெச்சங்கள்
- தூக்கம் - தொழிற்பெயர்
- செய்க - வியங்கோள் வினைமுற்று
- வேண்டாரை - வினையாலணையும் பெயர்
- உலகு - இடவாகு பெயர்
- போர்க்குகன் (போரைச் செய்யும் குகன்) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- கல்திரள் தோள் (மலை போன்ற திரண்ட தோள்) - உவமைத்தொகை
- நீர் முகில் (நீரையுடைய முகில்) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- திரைக் கங்கை (திரையை உடைய கங்கை) (திரை-அலை) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- இருந்த வள்ளல் - பெயரெச்சம்
- வந்து எய்தினான் - வினையெச்சம்
- நின்பணி (நினது பணி) - ஆறாம் வேற்றுமைத்தொகை
- இறைவா - விளி
- அழைத்தி (அழைப்பாய்) - முன்னிலை ஒருமை வினைமுற்று
- வருக - வியங்கோள் வினைமுற்று
- பணிந்து, வளைத்து, புதைத்து - வினையெச்சங்கள்
- இருத்தி (இருப்பாய்) - முன்னிலை ஒருமை வினைமுற்று
- தேனும் மீனும் - எண்ணும்மை
- மாதவர் (மா+தவர்) - உரிச்சொற்றொடர்
- அமைந்த காதல் - பெயரெச்சம்
- சீர்த்தது - ஒன்றன் பால் வினைமுற்று
- தழீஇய (தழுவிய) - சொல்லிசை அளபெடை
- கார்குலாம் (காரது குலாம்-மேகக்கூட்டம்) - ஆறாம் வேற்றுமைத்தொகை
- உணர்த்துவான் (உணர்த்துபவன்) - வினையாலணையும் பெயர்
- பார்த்த கண்ணை - பெயரெச்சம்
- தீர்கிலேன் (நீங்க மாட்டேன்), செய்குவென் (செய்வேன்) தன்மை ஒருமை வினைமுற்றுகள்
- தீராக்காதன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- மலர்ந்த கண்ணன் - பெயரெச்சம்
- இனிய நண்ப - குறிப்புப் பெயரெச்சம்
- நெடுநாவாய் (நெடுமை + நாவாய்) - பண்புத்தொகை
- தாமரை நயனம் (தாமரை போன்ற கண்கள்) - உவமைத்தொகை
- நனிகடிது - உரிச்சொற்றொடர்

**இலக்கணக்குறிப்பு**

- கேடு, கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
- எண்ணுயிர் - ஆறாம் வேற்றுமைத்தொகை (எனது உயிர்)
- நன்னுதல் - பண்புத்தொகை
- நின்கேள் - நான்காம் வேற்றுமைத் தொகை
- மல்லல் - உரிச்சொற்றொடர், நெடுமதில் - பண்புத்தொகை
- வாங்குவில், உயர்துலை - வினைத்தொகை
- குறையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- இலைவேல் - உவமைத்தொகை
- மருப்பூசி, மார்போலை - உருவகம்
- மாறன்களிறு - ஆறாம் வேற்றுமைத்தொகை
- வாயிலும் மாளிகையும் - எண்ணும்மை
- எம்மருங்கும் - முற்றும்மை
- மாடமும் ஆடரங்கும் - எண்ணும்மை
- செய்குன்று, ஆடரங்கு - வினைத்தொகை
- சுற்றிய பாங்கர் - பெயரெச்சம்
- மயங்கி, பிணங்கி, வணங்கி, உயங்கி - வினையெச்சங்கள்
- செற்ற சிலை - பெயரெச்சம்
- காணீர் - ஏவல் வினைமுற்று
- சோனாடு - சோழ நாடு என்பதன் மரூஉ

RADIAN IAS ACADEMY

தரும் பொருட்டு வினவுவது கொடை வினா.

- **எ.கா.** அணிய ஆடை உள்ளதா?

**ஏவல் வினா:**

- ஒரு செயலைச் செய்வதற்காக ஏவும் நோக்கில் வினவப்படும் வினா. கடைக்கு சென்று பொருளை வாங்கி வருகிறாயா? திருக்குறளை மனப்பாடம் செய்து விட்டிர்களா? என்று வினவி கட்டாயமாக செய்ய வேண்டும் என்று ஏவும் நோக்கில் வினவப்படுதல்.

**எண்வகை விடைகள்**

**சுட்டு விடை:**

- திருச்சிக்கு செல்லும் வழி யாது? என்று வினவும் பொழுது இந்த வழியாக செல்லுங்கள் என்று சுட்டிக்காட்டும் விடை.

**மறை விடை:**

- வினவும் வினாவிற்கு எதிர் மறைப் பொருளில் விடை இருந்தால் அதற்கு மறை விடை என்று பெயர். கடைக்கு செல்வாயா என்று வினவும் போது செல்ல மாட்டேன் என்று கூறுதல்.

**நேர்விடை:**

- வினவும் வினாவிற்கு நேர்மறை பதில் தருதல். கடைக்கு செல்வாயா என்ற கேள்விக்கு செல்வேன் என்று குறிப்பிடுதல்.

**ஏவல் விடை:**

- கேட்கப்படும் கேள்விக்கு பதிலாக கட்டளைத் தோனியில் பதிலளித்தல். கடைக்கு செல்வாயா? என்று கேட்கும் பொழுது நீயே செல் என்று குறிப்பிடுதல்.

**வினா எதிர் வினாதல் விடை:**

- கேட்கப்படும் வினாவிற்கு மறு வினா வினவுதல். கடைக்கு செல்வாயா என்ற கேள்விக்கு செல்லாமல் இருப்பேனா? என்று வினவுதல்.

**உற்றது உரைத்தல் விடை:**

- ஒரு கேள்வி கேட்கும் பொழுது அதற்கு பதிலாக நடந்த நிகழ்வைக் குறிப்பிடுதல். கடைக்கு செல்வாயா என்ற கேள்விக்கு கீழே விழுந்துவிட்டேன். வலிக்கிறது என்று பதில் கூறுதல்.

**உறுவது கூறல் விடை:**

- கேட்கப்படும் கேள்விக்கு பதிலாக நடக்கப் போகும் நிகழ்வைக் குறிப்பிடுதல். கடைக்கு செல்வாயா என்பதற்கு கால் வலிக்கும் என்று கூறுதல்.

**இனமொழி விடை:**

- ஒரு வினா கேட்கப்படும் பொழுது அதற்கு விடையாக அதனோடு தொடர்புடைய ஒன்றினைப் பதிலாக அளித்தல்.
- பாட்டுப் பாடத் தெரியுமா? என்ற கேள்விக்கு ஆடத் தெரியும் என்று பதில் அளித்தல்.

## 19) எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிதல்

**வாக்கிய வகை:**

- **சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் எனப்படும்.** இதனை வாக்கியம் என்றும் கூறுவர்.
- **வாக்கியம் என்பதை கருத்துவகை வாக்கியம், அமைப்பு வகை வாக்கியம் என இருவகைப்படும்.**

**கருத்துவகை வாக்கியம்:**

- வாக்கியங்களில் அமைந்துள்ள கருத்திற்கேற்ப அவற்றைச் செய்தி வாக்கியம், வினா வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், ஏவல் வாக்கியம் என வகைப்படுத்தலாம் (உடன்பாட்டு வாக்கியம் எதிர்மறை வாக்கியம்)

**செய்தி வாக்கியம்:**

- கவியரசு பரிசு பெற்றான்
- ஆடலரசு சிறப்பாகச் சொற்பொழிவாற்றினான்
- இவ்விரு வாக்கியங்களும் குறிப்பிட்ட செய்திகளைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு **செய்தியை உணர்த்தும் வாக்கியம் செய்தி வாக்கியம் ஆகும்.**

**வினா வாக்கியம்:**

- விளையாட்டுப் போட்டியில் வென்றவர் யார்?
- பாரதியார் எங்கு ஆசிரியராகப் பணியாற்றினார்?
- இத்தொடர்கள் வினாப் பொருளை உணர்த்துகின்றன. எனவே, இத்தகைய வாக்கியம் வினா வாக்கியம் எனப்படும்.

**உணர்ச்சி வாக்கியம்**

- குற்றால அருவியின் அழகுதான் என்னே!
- மலர்க் கண்காட்சியில் எத்தனை அழகான மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன!
- இத்தொடர்கள் வியப்பு உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.
- ஐயகோ! இளவழகனாரின் மறைவு ஈடு செய்யவியலுமோ?
- இத்தொடர் அவல உணர்ச்சியை உணர்த்துகிறது இவ்வாறு **உவகை, அவலம், அச்சம், இரக்கம், இழிவு, வெகுளி, வியப்பு போன்ற உணர்ச்சிகளை வெளிப்பத்துவது உணர்ச்சி வாக்கியம் எனப்படும்.**

**ஏவல் வாக்கியம்**

- திருக்குறளைப்படி
- மூத்தோர் சொல் கேள்
- இத்தொடர்கள் முன் இருப்பவரை ஏவுதல் பொருளில் அமைந்துள்ளன. இவ்வாறு **பிறரை ஏவுதல் அல்லது பிறருக்குக் கட்டளையிடும் முறையில் அமைவது ஏவல் வாக்கியம் எனப்படும்.** இதனைக் கட்டளை

RADIAN IAS ACADEMY

போவதைத் தெரிவிக்குமாறு கூறினான்.

| நேர்க்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| ➢ இது, இவை | அது, அவை |
| ➢ இன்று | அன்று |
| ➢ இப்பொழுது | அப்பொழுது |
| ➢ இதனால் | அதனால் |
| ➢ நாளை | மறுநாள் |
| ➢ நேற்று | முன்னாள் |
| ➢ நான், நாம், நாங்கள் | தான், தாம், தாங்கள் |
| ➢ நீ | அவன், அவள் |

**அயற்கூற்றை நேர்க்கூற்றாக மாற்ற:**

➢ கீரை வாங்கி வருமாறு தாயார் மகனிடம் கூறினார் - அயல்கூற்று

1. படர்க்கையாய் வேற்றுமை உருபு ஏற்றிருக்கும் பெயரை (மகனிடம் - மகன் + இடம்) 'மகனே' என விளிக்கும் சொல்லாக (அழைக்கும் பொருளில்) மாற்ற வேண்டும்.
2. 'வருமாறு' என்னும் வினை எச்சத்தை வா என முன்னிலை ஏவல் வினையாக மாற்ற வேண்டும். இவ்வாறு மாற்றியமைத்தால் மகனே! 'கீரை வாங்கி வா' என நேர்க்கூற்றாக அமையும்.
3. இதனுடன் கூறியவர் பெயரையும் 'என்று' என்னும் சொல்லையும் சேர்த்தல் வேண்டும்.
   மகனே! கீரை வாங்கி வா என நேர்க்கூற்றாக அமையும்.

**வகைகள்:**

**செய்வினை:**

➢ எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமைதல் வேண்டும். செயப்படுபொருளோடு ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டும். (ஐ-உருபு, மறைந்தும், வெளிப்பட்டும் வரும்)

**செயப்பாட்டு வினை**

➢ செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையோடு வாக்கியம் அமைய வேண்டும். எழுவாயோடு 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டும். பயனிலையோடு படு, பட்டது எனும் சொற்களைச் சேர்க்க வேண்டும். (படு-துணை வினை)

| செய்வினை | செயப்பாட்டு வினை |
|---|---|
| மாணவர்கள் வகுப்பைத் தூய்மை செய்தனர். | வகுப்பு, மாணவர்களால் தூய்மை செய்யப்பட்டது. |
| ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார். | இலக்கணம், ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது. |
| தச்சன் நாற்காலியைச் செய்தான் | நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது. |
| நாடகக் கலைஞர் நாட்டுப்பற்றை வளர்த்தனர் | நாட்டுப்பற்று நாடகக் கலைஞர்களால் வளர்க்கப்பட்டது |

➢ (செய்வினை வாக்கியத்தில் எழுவாயாக இருப்பது செயப்பாட்டு வினை வாக்கியத்தில் செயப்படு பொருளாக மாறி அமைவதைக் காணலாம்)

| செய்வினை | செயப்பாட்டு வினை |
|---|---|
| கரிகாலன் கல்லணையைக் கட்டினான் | கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது |
| சோழன் சேக்கிழாரை வரவேற்று வணங்கினான் | சேக்கிழார் சோழனால் வரவேற்கப்பட்டு வணங்கப்பட்டார் |
| நான் பாடம் படித்தேன் | பாடம் என்னால் படிக்கப்பட்டது |
| திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் | திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. |
| **உடன்பாட்டு வாக்கியம்** | **எதிர்மறை வாக்கியம்** |
| போட்டியில் சிலர்தான் வெற்றி பெற முடியும் | போட்டியில் எல்லாரும் வெற்றி பெற முடியாது. |
| இந்த வகுப்பில் மாணாக்கர் சிலரே நன்கு படிக்கின்றனர் | இந்த வகுப்பில் மாணாக்கர் பலர் நன்கு படிக்கவில்லை. |
| 3. மொழிகள் சிலவே இலக்கிய வளம் உள்ளவை. | மொழிகள் பல இலக்கிய வளமற்றவை. |
| 4.பேதை தனக்குத்தான் கேடு செய்து கொள்கிறான் | பேதைக்குக் கேடு செய்ய வேறொருவர் வேண்டியதில்லை. |
| திருக்குறளில் எல்லாக் கருத்துக்களும் உள | திருக்குறளில் இல்லாத கருத்துக்கள் இல்லை. |
| **செய்தி வாக்கியம்** | **வினா வாக்கியம்** |
| 1. தோல்வியடைய வேண்டும் என்று எவரும் விரும்பார் | தோல்வியடைய விரும்புவரும் உளரோ? |
| 2. முயன்றால் அனைத்தும் ஆகும் | முயன்றால் ஆகாததும் உண்டோ? |
| 3. தமிழின் இனிமையை ஒருவரும் மறுக்கார் | தமிழின் இளிமையை எவரும் மறுப்பரோ? |
| **செய்தி** | **கட்டளை வாக்கியம்** |
| இளமையில் கற்க வேண்டும் | இளமையில் கல் |
| அறம் செய்ய வேண்டும் | அறம் செய் |
| வைகறையில் துயில் | வைகறையில் துயில் எழு |

RADIAN IAS ACADEMY

**1. தன்வினை:**

- ஒருவன் தானே செய்யும் செயலை உணர்த்துவதைத் தன்வினை வாக்கியம் என்பர்.
- எ.கா: கோதை நன்கு படித்தாள்.
- மன்னர் நாட்டை ஆண்டார்.
- பெரியவர் கடவுளை தொழுதார்.
- **புதியதோர் உலகம் செய்வோம்.**

**2. பிறவினை:**

- ஒருவன் பிறரைக்கண்டு தொழிலைச் செய்வித்தலை உணர்த்துவது பிறவினை வாக்கியமாகும்.
- எ.கா: ஆசிரியர் பாடம் கற்பித்தார்.
- **மாதவி நடனம் கற்பித்தாள்**

**தன்வினையைப் பிறவினையாக்குவதற்குச் செய்ய வேண்டுவன**

- தன்வினைப் பகுதியிலுள்ள மெல்லின மெய்யை வல்லின மெய்யாக மாற்ற வேண்டும்.

 **எ.கா:** திருந்தினான் - திருத்தினான்
- தன்வினைப் பகுதியிலுள்ள வல்லின மெய்யெழுத்தை இரட்டிக்க வேண்டும்.

 **எ.கா:** பழகினாள் - பழக்கினாள்
- தன்வினைப்பகுதியுடன் வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளில் ஒன்றைச் சேர்க்க வேண்டும்.

 **எ.கா:** செய்தான் - செய்வித்தான்

| தன்வினை | பிறவினை |
|---|---|
| அகல் | -அகற்று |
| அமைவான் | -அமர்த்துவான் |
| ஏறு | -ஏற்று |
| செய் | -செய்வி |
| உண் | -உண்பி |
| பெருகு | -பெருக்கு |
| வாடு | -வாட்டு |
| மடங்கு | -மடக்கு |
| கட | -கட்டு |
| உருகு | -உருக்கு |
| படித்தாள் | -படிப்பித்தல் |
| போனான் | -போக்கினான் |
| உருண்டான் | -உருட்டினான் |
| நடந்தாள் | -நடத்தினாள் |
| எழுந்தான் | -எழுப்பினான் |
| பயின்றான் | -பயிற்றினான் |
| போ | -போக்கு |
| பாய் | -பாய்ச்சு |
| உருள் | -உருட்டு |
| நட | -நடத்து |
| எழு | -எழுப்பு |
| பயில் | -பயிற்று |
| உண் | -உண்ணச்செய் |
| உறங்கு | -உறங்கச்செய் |
| சேர்கிறேன் | -சேர்க்கிறேன் |
| சேர்வேன் | -சேர்ப்பேன் |
| சேர்ந்தேன் | -சேர்த்தேன் |

- **வழாநிலை** - குற்றமில்லாத சொற்கள்
- **வழு** - குற்றமுடைய சொற்கள்
- **திணைவழு** - ஒரு திணைச்சொல் வேறு திணையைக் கொண்டு முடிவது
- **பால் வழு** - ஒரு பாலுக்குரிய சொல் வேறு பாலைக் கொண்டு முடிவது
- **விடை வழு** - வினாவுக்கேற்ற விடை இல்லாதது

| தன்வினை | பிறவினை |
|---|---|
| குழந்தை தாயிடம் சொற்களைக் கற்றது | தாய் குழந்தைக்குச் சொற்களைக் கற்பித்தாள் |
| செல்வன் பாடம் கற்றான் | செல்வம் பாடம் கற்பித்தான் |
| பூங்கோதை பொம்மை செய்தாள் | பூங்கோதை பொம்மை செய்வித்தாள் |
| மாதவி நடனம் கற்றாள் | மாதவி நடனம் கற்பித்தாள் |
| மாறன் மாட்டை ஓட்டினான் | மாறன் மாட்டை ஓட்டுவித்தான் |
| தாய் உணவு உண்டாள் | தாய் குழந்தைக்கு உண்பித்தாள் |
| ஆசிரியர் பாடம் கற்றார் | ஆசிரியர் பாடம் கற்பித்தார் |
| சினம் அடங்குவது நல்லது | சினத்தை அடக்குவது நல்லது |
| கண்ணன் திருக்குறள் கற்றான் | கண்ணன் திருக்குறள் பற்பித்தான் |
| தாய் சொற்களைக் கற்றாள் | தாய் குழந்தைக்கு சொற்களைக் கற்பிக்கிறாள் |
| ஆசிரியர் பாடல் பாடினார் | ஆசிரியர் பாடல் பாடுவித்தார் |
| விளையாட்டாசிரியர் ஓட்டப்பந்தையம் ஓடினார் | விளையாட்டாசிரியர் ஓட்டப்பந்தையம் ஓடுவித்தார் |
| சமூக விரோதச் சக்திகளின் கொட்டம் அரசின் தலையீட்டால் அடங்கியது | அரசு தலையிட்டு சமூக விரோதச் சக்திகளின் கொட்டத்தை அடக்கியது |
| அவன் தன் தவறு உணர்ந்து திருந்தினான் | அவன் உணர்ந்து தன் தவற்றைத் திருத்தினான் |

## 20) உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளை தேர்ந்து எடுத்தல்:

- அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல - பொறுமை
- நன்பால் கலந்தீமையால் திரிதல் போல - தவறான நண்பர்களால் கெடுதல்
- மரப்பாவை நாணால் உயிர் மருட்டல் போல - மயங்குதல்
- அடுத்தது காட்டும் பளிங்கு போல - வெளிப்படை
- அத்தி பூத்தாற் போல - அரிய செயல்
- அடியற்ற மரம் போல - வீழ்தல்
- இலவு காத்த கிளி போல - ஏமாற்றம்
- உடலும் உயிரும் போல - ஒற்றுமை, நெருக்கம்
- கடல் மடை திறந்தாற்போல - வெளியேறுதல் / விரைவு

RADIAN IAS ACADEMY

**எனப்படும்.**

- **எண்ணித்துணிக** *கருமம் துணிந்தபின்*
- **எண்ணுவம்** *என்ப திழுக்கு - குறள் 467*
- **இக்குறட்பாவில்** முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள் முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதால், இது மோனைத் தொடை எனப்படும்.

**எதுகைத்தொடை**

- அடிதோறும் **முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்.**
- *அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி*
- *பகவன் முதற்றே உலகு*
- இக்குறட்பாவில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் 'க' என்னும் இரண்டாம் எழுத்து ஒத்து வந்துள்ளது. எனவே, இஃது அடியெதுகைத் தொடை எனப்படும்.

**முரண்தொடை**

- அடிதோறும் **முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடி முரண் தொடை எனப்படும்.**
- இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
- துன்பம் உறுதல் இலன் - குறள் 615
- *இப்பாடலில்* முதலடியில் இன்பம் என்றும், இரண்டாம் அடியில் துன்பம் என்றும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. எனவே, இஃது அடி முரண்தொடை எனப்படும்.

**இயைபுத்தொடை**

- அடிதோறும் **இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடி இயைபுத்தொடை எனப்படும்.**
- "கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
- கொடிகள் வானம் படிதர மூடும்
- கண்ட பேரண்டத் தண்டலை நாடும்
- கனக முன்றில் அனம்விளை யாடும்"
- இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வந்துள்ளதால் அடி இயைபுத் தொடை ஆயிற்று.

**அளபெடைத் தொடை:**

- அடிதோறும் **முதற்சீர் அளபெடுத்து** வருவது **அளபெடைத் தொடை எனப்படும்.**
- கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
- எடுப்பதூஉம் எல்லாம் மழை - குறள் 15
- இப்பாடலில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால் அளபெடைத் தொடை எனப்படும்.

**தொடை விகற்பங்கள்**

- **நான்கு சீர்களுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியன வரத் தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும்.** இவ்வேழும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய ஐந்து பொருந்தத் தொடை விகற்பம் முப்பத்தைந்து வகைப்படும்.

**மோனை**

- மோனைக்கு முதலெழுத்தேயன்றி அதற்குரிய இனவெழுத்துகளும் ஒன்றி வரும். இதனை இனமோனை என்றும் கிளை மோனை என்றும் வழங்குவர்.

**இன மோனையாக வரும் எழுத்துகள்:**

**உயிரெழுத்து:**

- **அ, ஆ, ஐ, ஔ - ஓரினம்**
- **இ, ஈ, எ, ஏ - ஓரினம்**
- **உ, ஊ, ஒ, ஓ - ஓரினம்**

**உயிர்மெய்யெழுத்து:**

- **ஞ, ந - ஓரினம்**
- **ம, வ - ஓரினம்**
- **த, ச - ஓரினம்**
- மெய்யெழுத்துகளும் அவற்றின் எழுத்துகளும் வருமென அறிய வேண்டும்.

**சில எடுத்துக்காட்டுகள்:**

- மனத்தொடு வாய்மை மொழியின் - ம, வா
- யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனத்தோன்றும் - இ, எ
- சாதனத்தோடு தச்சர் - சா, த
- மாநிதி வருந்தித் தேடி - மா, வ
- ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார்கோமான் - ஐ, ஆ, அ
- ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் - ஔ, ஆ
- மோனைத் தொடர் அடிமோனை, இணைமோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்று மோனை என எண்வகைப்படும்.
- இவற்றில் அடி மோனை தவிர்த்த மற்ற எழும் தொடை விகற்பம் எனப்படும்.

**அடி மோனை**

- அடிதோறும் முதற்சீர் முதலெழுத்து ஒன்றி வருவது அடி மோனை ஆகும்.

RADIAN IAS ACADEMY

- வெண்வத் தோறும் சேயரிக் கருங்கனும்

**கீழ்க்கதுவாய் முரண்: (1, 2, 4)**

- இருக்கையும் நிலையும் ஏந்தெழில் இயக்கமும்

**முற்றுமுரண்: (1, 2, 3, 4)**

- துவர்வாய்த் தீஞ்சொலும் உவந்தெனின் முனியாது

**இயைபுத் தொடை**

- *கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்*
  *கொடிகள் வானம் படிதர மூடும்*
  *கண்ட பேரண்டத் தண்டலை நாடும்*
  *கனக முன்றில் அனம்விளை யாடும்*
- செய்யுளின் அடியிலும் சீர்களிலும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபுத் தொடை எனப்படும். இயைபுத் தொடையும் பல நிலைகளில் வரும் நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம்.

**மோனை, எதுகை, இயைபுச் சொற்கள்**

1. பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
   **மோனைச் சொற்கள்:** பாவை - பலவுடன் - பரப்புமின்
2. அன்புகோர் உரைகல்லாய் அருளுக்கோர் நிரையில்லாய்
   **இயைபுச் சொற்கள்:** உரைகல்லாய் - நிரையில்லாய்
3. என்னையும் இடுக்கண் துன்னுவித் தின்னிசை
   **எதுகைச் சொற்கள்:** என்னையும் - துன்னுவித் - தின்னிசை
4. யாதும் ஊரே, யாவரும் கேளிர்
   **மோனைச் சொற்கள்:** யாதும் - யாவரும்
5. இமயமலை என்னுடைய தமையன் மலை அம்மே
   சொல் அரிய சாமி மலை மாமி மலை அம்மே
   **இயைபுச் சொற்கள்:** தமையன் மலை அம்மே, மாமி மலை அம்மே
6. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார் மாட்டும்
   **மோனைச் சொற்கள்:** எய்தல் - எளிதென்ப - எண்பதத்தால்
7. நகமும் சதையும் போல
   பூவும் நாரும் போல
   **இயைபுச் சொற்கள்:** சதையும் போல - நாறும் போல
8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
   **எதுகைச் சொற்கள்:** நன்றி - நன்றன்று - நன்றல்லது
9. பல்லார் பகை கொளாலிற் பத்தடுத்த தீமைந்தே
   **மோனைச் சொற்கள்:** பல்லார், பகை, பத்தெடுத்த
10. யாதுமூரே யாவருங் கேளிர்
    தீதும் நன்றும் பிறர்தர வாரா
    **எதுகைச் சொற்கள்:** யாது, தீதும்
11. வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
    வாளாண்மை யாலும் வலியராய்.
    **மோனைச் சொற்கள்:** வேளாண்மை, விருந்தோம்பி, வெஞ்சமத்து
12. நன்னிற மென்முகை மின்னிடை வருத்தி
    **எதுகைச் சொற்கள்:** நன்னிற - மென்முகை - மின்னிடை
13. முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
    முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்
    **இயைபுச் சொற்கள்:** வாழ்வோம், வீழ்வோம்

- **ஆகுபெயர்** - ஒரு பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பொருளுக்குப் பெயராகி வருவது
- **பொருளாகு பெயர்** - ஒரு பொருளின் பெயர் அதன் சினைக்கு ஆகி வருவது
- **இடவாகு பெயர்** - ஒரு இடத்தின் பெயர் அங்குள்ள பொருளுக்கு ஆகி வருவது
- **காலவாகு பெயர்** - காலத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்குப் பெயராகி வருவது

14. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
    **எதுகைச் சொற்கள்:** நன்றென்ற, நன்றே
15. முல்லைக்கொடி யடுக்கையின் - மலி
    சொல்லைக்கோடி கடுக்கையின்
    **இயைபுச் சொற்கள்:** யடுக்கையின், கடுக்கையின்
16. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
    **எதுகைச் சொற்கள்:** வகுத்தான், வகுத்த
17. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
    **மோனைச் சொற்கள்:** அணியன்றோ - அஃதின்றேல்
18. பாரிலே பட்ட வானப்பரப்பிலே பட்ட வெல்லாம்
    **இயைபுச் சொற்கள்:** பாரிலேபட்ட, பரப்பிலேபட்ட
19. நாணால் உயிரைத் துறப்பர்; உயிரிப்பொருட்டால் நாண்துறவார் நாணாள் பவர்.
    **மோனைச் சொற்கள்:** நாணால் - நாண்துறவார்
20. சிறகை விரித்தால் மயிலாட்டம் சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம்
    **இயைபுச் சொற்கள்:** மயிலாட்டம் - ஒயிலாட்டம்
21. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு
    **எதுகைச் சொற்கள்:** ஒறுத்தார்க்கு - பொறுத்தார்க்கு
22. பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்
    **இயைபுச் சொற்கள்:** மாற்றுமின் - பரப்புமின்
23. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
    என்ன பயத்தோ சால்பு.
    **எதுகைச் சொற்கள்:** இன்னா, என்ன
24. இயலும் இசையும் போல
    கடலும் அலையும் போல
    **இயைபுச் சொற்கள்:** இசையும் போல - அலையும் போல
25. அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு

RADIAN IAS ACADEMY

**மோனை:** மடக்கொடி - மாத

**62.** "தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர் அறமும் ஈறின்றால்?"
**எதுகை:** தேவரும் - ஏவரும்

**63.** "முனிபவர் அரக்கியர் முறையின் நீங்கினார்
இனி அவள் தானலா தியாரும் இல்லையால்"
**எதுகை:** முனிபவர், இனிஅவள்

**64.** "நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
**சீர் மோனை:** நாகநீர் - நகரொடு

**65.** "வணங்காத முரண்கழுந்தர் வல்லுருக்கிற
கடினமுறீஇக்
குணங்காணாக் கொடுமனத்தார் கூறியதீ
மொழியொன்றோ!
**எதுகை:** வணங்காத - குணங்காணாக்

**66.** "மற்றிதனை உணராது வன்னெஞ்சோய்! மாசணுகா
நற்றவனை இகழுவது நன்மையோ? நன்மையலாற்"
**எதுகை:** மற்றிதனை - நற்றவனை

**67.** கண்ணுறும் கடலின் காட்சி
கவன்மிகு காட்சி யம்மா
**மோனை:** கண்ணுறும், கடலின், காட்சி, கவன்மிகு, காட்சி

**68.** தான்குறைந்த திழிதல் இல்லாத்
தகைமையின், கடலெந் நாளும்
மேன்மையின் மேன்மை கொண்டும்
விளங்கிடும் விகார மின்றி
அடி எதுகை: தான்குறைந் - மேன்மையின்
மேன்மையின் - மேன்மை

**69.** ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்பின்
தாள்தோய் தடக்கை தகைமாண் வழுதி
**மோனை:** ஆரந் - அணிகிளிர்
**மோனை:** தாள்நோய் - தடக்கை - தகைமாண்

**70.** வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
**எதுகை:** வேரல் - சாரல்

**71.** வீட்டிருந்து பாட விடியளவும்
**மோனை:** வீட்டிருந்து - விடியளவும்

**72.** பேயென்றா என்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றென் நான்
**அடி எதுகை:** பேயென்றா - நாயென்றா
**சீர் எதுகை:** நாயென்றாள் - நீயென்றாள்

**73.** சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே
சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே
**அடி மோனை:** சயிலமலை - சகலமலை

**74.** கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
**எதுகை:** கொல்லிமலை - செல்லிமலை

**75.** "இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே"
**மோனை:** இமயப் - இளமென்

**76.** பாரத நாடும் பார்க்கெலாம் திலகம்
**மோனை:** பாரத - பார்க்கெலாம்

**77.** இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!
**எதுகை:** இன்னரும் - உன்னத

**78.** தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
**எதுகை:** தன்பெண்டு - தன்பிள்ளை

**79.** "அந்தரத்தில் மேடை அமைத்தார் - அங்கே
அனுப்பிய மின்விசையாற் செய்தி அறிவார்!"
**சீர் மோனை:** அந்தரத்தில் - அமைத்தார் - அங்கே
**அடி மோனை:** அந்தரத்தில் - அனுப்பிய

**80.** "ஆற்றல்தரும் அணுபிளந்தார் - அந்த
ஆற்றலினாற் பேரண்டங்கள் யாவும் அளந்தார்"
**எதுகை:** ஆற்றல் தரும் - ஆற்றலினாற்

**81.** மேதினியில் சுற்றுப்புறத்தை
மேன்மை யாகவே வைத்திருப்போம்!
**மோனை:** மேதினி - மேன்மை

**82.** முற்றும் மாசினை ஒழித்திடுவோம்
முனைந்தே அனைவரும் செயல்படுவோம்!
**மோனை:** முற்றும் - முனைந்தே

**83.** தொற்றும் கிருமிகள் சேராமல்
தொல்லைகள் அதனால் தொடராமல்
முற்றும் மாசினை ஒழித்திடுவோம்!
முனைந்தே அனைவரும் செயல்படுவோம்!
**எதுகை:** தொற்றும் - முற்றும்

**84.** மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலை
**சீர் எதுகை:** மண்ணில்நல்ல - வண்ணம்
**அடி எதுகை:** மண்ணில் நல்ல - எண்ணில் நல்ல

**85.** குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
**மோனை:** குற்றம் - குளிர்மழை

**86.** முன்றான் பெருமைக்கண் நின்றான் முடிவெய்து
காறும்
நன்றே நினைந்தான், குணமே மொழிந்தான்
தனக்கென்(று)
**சீர் எதுகை:** முன்றான் - நின்றான்
**அடி எதுகை:** முன்றான் - நன்றே

**87.** இனிதின் ஒதுங்கிய இறைவனை
**மோனை:** இனிதின் - இறைவன்

**88.** நானிலம் பரப்புஞ் சோதி
நாயகக் கடவுள் தம்மை
**மோனை:** நானிலம் - நாயகக்

RADIAN IAS ACADEMY

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் (சேயோன்) | திருமால் (மாயோன்) | இந்திரன் (வேந்தன்) | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவன், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் | சேர்ப்பன், பரதவன், பரத்தியர், உமணர் | எயினர் எயிற்றியர் |
| உணவு | மலைநெல், திணை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெய் | மீன், உப்பு மாற்றாக பெற்ற பொருள் | சூறையாடல் மூலம் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர் நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி காந்தள் | முல்லை தோன்றி | குவளை, தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழம் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக் கோழி, மயில் | நாரைக், நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம்பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனை நீர் | காட்டாறு | மனைக் கிணறு, பொய்கை | மணல் கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரி கிணை | மீன் கோட்பறை | துடி |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேன் எடுத்தல், கிழங்கு எடுத்தல் | ஏறு தழுவுதல் நிரை மேய்த்தல் | நெல் அரிதல், களை எடுத்தல் | மீன் பிடித்தல், உப்பு உண்டாக்குதல் | வழிப்பறி |

**புறப்பொருள்கள்:**

- அறம், பொருள், வீடு பற்றியும் கல்வி, வீரம், கொடை முதலியன பற்றியும் கூறுவது புறப்பொருளாகும்.
- **வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் புறத்திணைகள் பன்னிரண்டு வகைப்படும்.**

**வெட்சித் திணை**

- **பகை** நாட்டின் மீது போர் தொடுக்க விரும்பும் அரசன் அந்நாட்டிலுள்ள பசுக்கூட்டங்களுக்குப் போரால் துன்பம் நேரக் கூடாது என்பதற்காக நாட்டிலுள்ள பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வரச் செய்வான். அவ்வாறு நிரைகவரச் செல்லும் வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வர். அதுவே வெட்சித் திணையாகும்.

**கரந்தைத் திணை**

- வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்படும் தம் நாட்டு ஆநிரைகளை மீட்கச் செல்வோர் கரந்தைப் பூவைச் சூடிச் சென்று மீட்பர். அது கரந்தைத் திணையாகும்.

**வஞ்சித்திணை:**

- மண்ணாசையால் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதிப் போருக்குச் செல்லும் அரசன் வஞ்சிப்பூவைச் சூடிச் செல்வான். அது வஞ்சித் திணையாகும்.

**காஞ்சித் திணை:**

- ஓர் அரசன் தன் நாட்டின் மீது போர் குறித்து வந்த மாற்றரசனோடு எதிர் சென்று போர் புரிதல் காஞ்சித் திணையாகும். அவன் காஞ்சிப்பூவை சூடிச் செல்வான்.

- நிரை - மலர்
- நிரைபு - பிறப்பு

**ஈரசைச்சீர்-4:**

**சீர்**

- நேர் நேர் - தேமா
- நிரை நேர் - புளிமா
- நிரை நிரை - கருவிளம்
- நேர் நிரை - கூவிளம்

**வாய்பாடு**

- தேமா - இயற்சீர்
- புளிமா - ஆசிரியவுரிச்சீர்
- கருவிளம் - அகவலுரிச்சீர்
- கூவிளம் - விளச்சீர்

**தளை**

1. மா முன் நேர் - நெரொன்றாசிரியத்தளை
2. விளமுன்நிரை - நிரையொன்றாசிரியத்தளை
3. மா முன் நிரை, விள முன் நேர் - இயற்சீர் வெண்டளை
4. காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
5. காய் முன் நிரை - கலித்தளை
6. கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை
7. கனி முன் நேர் - ஒன்றாத வஞ்சித்தளை

**அடி**

- அடி ஐந்து வகைப்படும்.
- இருசீரினைக் கொண்டது - குறளடி
- முச்சீரினைக் கொண்டது - சிந்தடி
- நாற்சீரினைக் கொண்டது - அளவடி (அ) நேரடி
- ஐஞ்சீரினைக் கொண்டது - நெடிலடி
- ஆறுசீர் முதல் கொண்டது - கழிநெடிலடி

**வெண்பாவின் ஈற்றுச் சீர்**

நேர் - நாள்

நிரை - மலர்

- நேர்பு (நேர் நேர்) - காசு, இதனை நேர்பு அசை என்பர்.
- நிரைபு (நிரை நேர்) - பிறப்பு, இதனை நிரைபு அசை என்பர்.
- வெண்பாவின் ஈற்றடி, ஈற்றுச்சீரை, ஈரசைச் சீராகக் கொள்ளக் கூடாது. வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் நேர் நேர் என்றிருப்பின் தேமா என்றோ நிரை நேர் என்று இருப்பின் புளிமா என்றோ வாய்பாடு கூறுதல் கூடாது. அவற்றுக்குக் காசு, பிறப்பு என்றே வாய்பாடு கூற வேண்டும் என்பதை மறத்தல் கூடாது.
- காசு, பிறப்பு ஆகிய இரு சீர்களும் குற்றியலுகரத்தை இறுதியாக உடையனவாக அமைய வேண்டும். முற்றியலுகரம் சிறப்பானதன்று, எனினும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பாவகை:**

- **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும்.**

**வெண்பாவின் பொது இலக்கணம்:**

1. **ஓசை:** வெண்பா செப்பலோசை பெற்று வரும்.
2. **அடி:** ஈற்றடி சிந்தடியாகவும் ஏனையடிகள் அளவடியாகவும் இருக்கும்.
3. **சீர்:** இயற்சீரும் வெண்சீரும் வரும். வேற்றுச்சீர்கள் வராது.
4. **தளை:** இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும். வேற்றுத் தளைகள் வரா
5. **முடிவு:** ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றினைக் கொண்டு முடியும்.

**வெண்பாவின் வகை:**

- **குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என வெண்பா ஆறு வகைப்படும்.**

**ஆசிரியப்பா பொது இலக்கணம்:**

1. **ஓசை**: ஆசிரியப்பா அகவலோசை பெற்று வரும்.
2. அடி அளவடிகளைக் கொண்டது
3. **சீர்**: இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும் வரும் கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய இரு வஞ்சியுரிச்சீர்களும் வராது.
4. தளை: ஆசிரியத்தளை பயின்றும் பிற தளை கலந்தும் வரும்.
5. **முடிவு**: ஈற்றடியின் ஈற்றுச்சீர் 'ஏ' காரத்தில் முடிவது சிறப்பு படைத்தது. பிற ஈறுகளைக் கொண்டும் முடியும்.
6. சிறுமை, பெறுமை: பாட்டின் அளவு மூன்றடிச் சிறுமையும் பாடுவோன் உள்ளக்கருத்தினளவு பெருமையும் கொண்டது.

**ஆசிரியப்பாவின் வகை:**

- **நேரிசை ஆசிரியப்பா, இணைக் குறளாசிரியப்பா, நிலை மண்டில் ஆசிரியப்பா, அடி மறிமண்டில் ஆசிரியப்பா என நாங்கு வகைப்படும்.**

RADIAN IAS ACADEMY

பாரி ஒருவன் மட்டுமா கைம்மாறு கருதாமல் கொடுக்கின்றான். மாரியும் தான் கைம்மாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகம் புரக்கின்றது என்பது இப்பாடற் பொருள். இது பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும் பாரிக்கு நிகராகக் கொடுப்பாரில்லை என்று புகழ்ந்ததாகும்.

### இரட்டுற மொழிதல் அணி

- **ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள் பட வருவது இரட்டுற மொழிதல் அணியாகும். இதனைச் சிலேடையணி என்பர். ஒரு சொல் பிரிபடாமல் தனித்து நின்று பல பொருள் தருவது செம்மொழிச் சிலேடை என்றும் சொற்றொடர் பல வகையாகப் பிரிக்கப்பட்டுப் பல பொருட்களைத் தருவது பிரிமொழிச்சிலேடை என்றும் பெயர் பெறும்.**

செம்மொழிச்சிலேடை:

- **எ.கா:** "வஞ்சியேன் என்றவன்தன் ஊருரைத்தான் யானுமவன்
- வஞ்சியான் என்பதனால் வாய்நேர்ந்தேன் - வஞ்சியான்
- வஞ்சியேன் வஞ்சியேன் என்றுரைத்தும் வஞ்சித்தான்
- வஞ்சியாய் வஞ்சியார் கோ"
- இப்பாடலிலுள்ள வஞ்சியேன் என்னும் சொல் நான் வஞ்சிமா நகரைச் சேர்ந்தவன் என்ற ஒரு பொருளும் வஞ்சிக்க மாட்டேன் என்ற ஒரு பொருளும் தருகின்றது. இவ்வாறு ஒரு சொல் பிரிபடாமல் நின்று பல பொருள் தருவதால் இது செம்மொழிச் சிலேடையாகும்.

### பிரிமொழிச் சிலேடை

- "ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும் காவலரைச் சூழங் கலைசையே"
- இப்பாடல் அடிகளில் உள்ள காவலர் என்ற சொல் பிரிபடாமல் நின்று மன்னனையும், அச்சொல்லே கா + அலர் என்று பிரிந்து நின்று சோலையின் கண் உள்ள மலரையும் குறிப்பதால் இது பிரிமொழிச் சிலேடையாகும்.

### இல்பொருள் உவமையணி:

- "குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கை கரையனுகி"
- குன்று எழுந்து நடந்ததைப் போன்று பரதன் கங்கைக்கரையை அடைந்தான் என்பது இப்பாடலின் பொருளாகும். குன்று எழுந்து நடப்பது என்பது உலகில் நடைபெறாத செயலாகும். ஆனால், கம்பர் அதைப் பரதனுக்கு உவமை காட்டியுள்ளார்.
- இவ்வாறு **புலவன் உலகில் இயல்பாக இல்லாத பொருளை அல்லது நிகழ்ச்சியை உவமையாக்கிக் கூறுவது இல்பொருளுவமையணி ஆகும்.**

### ஏகதேச உருவக அணி:

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவ னடிசேரா தார்*

- இறைவன் அடியெனும் புணையைச் சேர்ந்தவர் பிறவிப் பெருங்கடலை நீந்துவர். அதனைச் சேராதவர் அக்கடலை நீந்தாமல் துன்புறுவர் என்பது இக்குறட்பாவின் பொருள்.
- திருவள்ளுவர் பிறவியைப் பெருங்கடல் என உருவகஞ் செய்துள்ளார். அதற்கேற்ப இறைவன் அடியை மரக்கலமாக உருவகம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாததால் இஃது ஏகதேச உருவக அணி (ஒரு பகுதி மட்டும்) யாகும். இவ்வாறு **புலவர், செய்யுளில் ஒரு பொருளை உருவகஞ் செய்து அதற்கேற்ப இணையானதொரு மற்றொரு பொருளை உருவகஞ் செய்யாது விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.**

### பிறிது மொழிதல் அணி

*பீலிமெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்*

- **புலவர் தாம் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாது, அதனோடு ஒத்த வேறொன்றின் மீது ஏற்றிக் கூறி, கருதிய பொருட்களை உணர்த்துவது பிறிது மொழிதல் அணி எனப்படும்.** உவமையைக் கூறி உவமேயத்தைப் பெறவைப்பது இவ்வணியாகும். இதனை ஒட்டணி என்றும் வழங்குவர்.
- மேலே கண்ட குறளில் மயிற்பீலியை அளவுக்கு மேல் வண்டியில் ஏற்றினால் அதைத் தாங்காது வண்டியின் அச்சு முறிந்துவிடும். இது குறட்பா தரும் நேரான பொருளாகும். இதன் மூலம் மன்னன் எவ்வளவு வலிமையுடையவனாய் இருந்தாலும், பகைவர்களை எளியவர்கள் என்றெண்ணிப் பெருக்கிக் கொண்டே இருந்தால், அவனுக்குத் துன்பம் நேரும். தோல்வி உண்டாகும் என்பது நாம் பெறும் பொருளாகும். வள்ளுவர் இதில் உவமையை மட்டும் கூறிப் பொருளை உணரச் செய்துள்ளார்.

### வேற்றுமை அணி

- **புலவர் ஒரு செய்யுளில் இரு பொருட்களுக்குரிய ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர், ஒரு காரணத்தால் ஒன்றிலிருந்து மற்றொன்று**

RADIAN IAS ACADEMY

உவம உருபும் மறைந்து வந்துள்ளது. இவ்வாறு **உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் (பொருள்) இன்னொரு தொடராகவும் அமைய இடையில் உவம உருபு வெளிப்படையாக இல்லாமல் பாடப்படுவது எடுத்துக்காட்டு உவமை அணி** ஆகும்.

**உருவக உவமைத் தொகை**

- 'மலர்முகம்' - இத்தொடரில் 'மலர்' ஒப்பிடப்பட்ட பொருள் உவமை - உவமானம்
- 'முகம்' பேச எடுத்துக் கொண்ட பொருள் - உவமேயம் பொருள்.
- போன்ற-ஒப்பிடுவதை உணர்த்தும் சொல் - உவம உருபு
- 'மலர் முகம்' என்பதில் 'உவம உருபு' இல்லாததனால் உவமைத் தொகை என்றும் கூறுவர்.
- மலர் போன்ற முகம் என்பதில் உவம உருபும் வெளிப்படையாக வந்துள்ளாது.
- பொதுவாக உவமைத் தொடர்களில் உவமானம் வேறாகவும், உவமேயம் வேறாகவும் தோன்றுகின்றன.
- 'மலர் முகம்' என்பதில் உவம உருபு மறைந்து (தொக்கி) வந்துள்ளது. இதில் 'உவமை' எனப்படும் உவமானம் முன்னும் உவமேயம் எனப்படும் 'பொருள்' பின்னும் அமைந்துள்ளன.

## 25) தொகைச் சொற்களை விரித்து எழுதுக

1. **இருதிணை:** உயர்திணை, அஃறிணை, அகத்திணை, புறத்திணை
2. **இரட்டைக் காப்பியம்:** சிலப்பதிகாரம், மணிமேகலை
3. **ஈரெச்சம்:** பெயரெச்சம், வினையெச்சம்
4. **முத்தமிழ்:** இயல், இசை, நாடகம்
5. **முக்கனி:** மா, பலா, வாழை
6. **முக்காலம்:** இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
7. **மூவேந்தர்:** சேரர், சோழர், பாண்டியன்
8. **நானிலம்:** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
9. **நாற்படை:** யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை
10. **நாற்குணம்:** அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
11. **ஐந்திலக்கணம்:** எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
12. **அறுசுவை:** இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு
13. **அறுசமயம்:** சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம்
14. **ஏழிசை:** குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்
15. **எட்டுத் தொகை:** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு
16. **எண் குணங்கள்:** தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.
17. **ஒன்பான் சுவை:** நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி, சாந்தம்
18. **நவரத்தினங்கள்:** மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம், கோமேதகம், நீலம் பவளம், புட்பராகம்
19. **பத்துப்பாட்டு:** திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுபடை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

**உவமை: உருவகம்**

1. மலரடி: அடிமலர்
2. மலர்க்கண்: கண்மலர்
3. தேன்மொழி: மொழித்தேன்
4. தாமரை முகம்: முகத்தாமரை
5. மலர்க்கை: கைம்மலர்
6. குமுதவாய்: வாய்க்குமுதம்
7. மதிமுகம்: முகமதி
8. கயல்விழி: விழிக்கயல்
9. கனிவாய்: வாய்க்கனி
10. தாமரை முகம்: முகத்தாமரை
11. வேல்விழி: விழிவேல்
12. கயற்கண்: கண்கயல்

**உருவகம்: உவமை**

1. தாள்மலர்: மலர்த்தாள்
2. புயம் பொன்: பொற்புயம்
3. தமிழன்னை: அன்னைத்தமிழ்
4. மொழித்தாய்: தாய்மொழி
5. மொழியமுது: அமுதமொழி
6. குழற்காடு: காடு குழல்
7. நூற்கடல்: கடல் நூல்
8. உவகைத்தேன்: தேன் உவகை
9. கைக்காந்தள்: காந்தள் கை

RADIAN IAS ACADEMY

**ஆழ்வார்கள் - 12**

- பாடல்தொகுப்பு: நாலாயிரத்திவ்விய பிரபந்தம் தொகுத்தவர் - நாதமுனிகள்

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவியாழ்வார்
7. பெரியாழ்வார்
8. ஆண்டாள்
9. திருப்பாணாழ்வார்
10. திருமங்கையாழ்வார்
11. தொண்டரடிப் பொடியாழ்வார்
12. குலசேகர ஆழ்வார்

**நாயன்மார்கள் - 63**

- சைவத்திருமுறைகள் - 12
- தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி
- சேக்கிழார் - பெரியபுராணம்
- சம்பந்தர் - திருக்கடைக்காப்பு
- அப்பர் - தேவாரம்
- சுந்தரர் - திருப்பாட்டு
- மாணிக்கவாசகர் - திருவாசகம்
- திருமூலர் - திருமந்திரம்

## 28) ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள்

**ஐம்பெருங்காப்பியங்கள்**

1. **சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்**
2. **மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்**
3. **சீவக சிந்தாமணி - திருத்தக்கத்தேவர்**
4. **வளையாபதி**
5. **குண்டலகேசி - நாதகுத்தனார்**

**ஆசிரியர் - இளங்கோவடிகள்**

- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மகன். மூன்று காண்டம் முப்பது காதை
- **புகார் காண்டம்** - மங்கல வாழ்த்துப்பாடல் முதல் நாடுகாண் காதை வரை பத்து காதைகள்
- **மதுரைக்காண்டம்**: காடுகாண் காதை முதல் கட்டுரைக்காதை முடிய 13 காதைகள்
- **வஞ்சிக் காண்டம்**: குன்ற குரவை முதல் வரந்தருகாதை முடிய 7 காதைகள்

**கதை மாந்தர்கள்**

- தலைவன் - கோவலன் தலைவி - கண்ணகி
- ஆடல் மங்கை - மாதவி - கோவலனின் தந்தை - மாசாத்துவான்
- கண்ணகியின் தந்தை - மாநாய்கன்
- மாதவியின் தாய் - சித்திராவதி
- கவுந்தியடிகள் - சமணத்துறவி
- மாதிரி - இடைக்குல மாதர் - மதுரை
- மாதவியின் தோழி - வயந்தமாலை
- மதுரைக்கு காவல் தெய்வம் - மதுராபதி
- கண்ணகிக்கு கோயில் கட்டியவன் செங்குட்டுவன்
- சிலை எடுத்த போது உடன் இருந்தவர்கள் இலங்கை மன்னன் கயவாகு, சோழ மன்னன் பெருநற்கிள்ளி, கனக விசயர்.
- கண்ணகி கோயிலின் முதல் பூசாரி தேவந்தி
- இராமன் திருமாலின் அவதாரம் எனக் கூறும் முதல் காப்பியம்
- நரபலி கொடுக்கும் பழக்கம் பற்றி கூறுகிறது சிலப்பதிகாரம்

**மூன்று உண்மைகள்**

- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
- ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்

**சிலம்பின் புகழ்**

- நெஞ்சம் அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு - பாரதியார்
- யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல வள்ளுவனைப் போல் இளங்கோவை போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை - பாரதியார்
- இசை நாடகமே சிலப்பதிகாரக் கதையின் உருவம்.

**ஐந்திணை அமைப்பு முறை**

- குறிஞ்சித் திணை - குன்ற குரவை
- முல்லைத் திணை - ஆய்ச்சியர் குரவை
- மருதத்திணை - நாடுகாண் காதை
- நெய்தல் திணை - கானல் வரி
- பாலை திணை - வேட்டுவ வரி

**பல்வேறு பெயர்கள்:**

- சிலப்பதிகாரம்
- தமிழ் முதல்காப்பியம்
- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
- முத்தமிழ் காப்பியம்
- முதன்மை காப்பியம்
- பத்தினிக் காப்பியம்

RADIAN IAS ACADEMY

ஒப்பிட்டுள்ளார். தமிழ்க்கவிஞர்களின் இளவர்சன் என்று திருத்தக்க தேவரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

- அனைத்து சமயத்தவரும் விரும்பிக்கற்ற சமணக் காப்பியம்.

**வளையாபதி:**

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
- சமணக் காப்பியம்
- விருத்தப்பாவில் ஆனது
- கிடைத்தவை 72 பாக்கள்
- மூலநூல் வைசிக புராணம் 35வது சருக்கம்
- நவகோடி நாராயணன் பற்றிய நூல்
- ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டிய வளையாபதியை நினைத்தார் என்று தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் தெரிவிக்கிறார்.

**மேற்கோள்:**

- பொறையிலா அறிவு - போகப் புணர்வு இலா இளமை

**குண்டலகேசி:**

- ஆசிரியர் நாதகுத்தனார்
- பௌத்த காப்பியம்
- குண்டலகேசி சுருண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள் குண்டலகேசி விருத்தம். அகல கவி என்ற வேறு பெயர்களும் உண்டு.
- காளன் என்ற கள்வனை மணம்புரிய பத்திரை என்ற வணிக குலப்பெண் விரும்புகிறாள். திருமணத்திற்குப் பின் பத்திரை சினம் கொண்டிருந்த வேளையில் காளனை 'கள்வன் தானே' என்று கூறி விடுகிறாள். பத்திரையைக் கொல்ல மலையுச்சிக்கு அழைத்துச் செல்கின்றான். அவனது சூழ்ச்சியை அறிந்து கொண்ட பத்திரை 'தற்கொல்லியை முற்கொல்' என்று தனது கணவரை கொலை செய்வாள். பின்னர் அவள் தனது மயிரை நீக்கி புத்த துறவியாகிறாள். அப்போது வளர்ந்த முடியே சுருண்டு இருப்பதால் அது குண்டலகேசி என்று அழைக்கப்படுகிறது.
- **கலைஞரால் 'மந்திரி குமாரி' என்று திரைப்படமாக்கப்பட்டது.**

**ஐஞ்சிறு காப்பியங்கள்:**

1. சூளாமணி - தோலா மொழித்தேவர்
2. நீலகேசி - வாமன முனிவர் (உரை எழுதியவர்)
3. உதயணகுமார காவியம்
4. யசோதர காவியம் - வெண்ணாவலூரூடையார் வேள்
5. நாககுமார காவியம்

**ஐஞ்சிறு காப்பியங்கள்**

- **அனைத்தும் சமணக் காப்பியங்களே**

**நாககுமார காவியம்:**

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கந்தியார் ஒருவர் எழுதினார் என்பர்.
- நாகபஞ்சமி நோன்பின் சிறப்பை கூறும் நூல்
- இந்நூலுக்கு நாகபஞ்சமி கதை என்ற பெயரும் உண்டு. மணத்தையும் போகத்தையும் மிகுதியாகக் கூறும் சமண நூல். நாககுமார காவியம் அல்லது நாகபஞ்சமி கதை எனப்படும் இந்நூல், தமிழில் தோன்றிய சிறு காப்பியங்களில் ஒன்றாகும். இதை எழுதியவர் யார் என்ற தகவல்கள் கிடைக்கவில்லை நாட்டு மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கௌதமர் என்பார் அவனுக்குக் கதை கூறும் பாங்கில் இந்நூல் அமைக்கப்பட்டு உள்ளது. 170 விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்ட இந்நூல் ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- சமண சமய நூலான நாககுமார காவியம் அச்சமயக் கொள்கைகளை நூலில் விளக்க முற்படுகிறது. இளமைக் காலத்தில் இன்பம் துய்ப்பதிலேயே தனது காலத்தைக் கழித்த நாககுமாரன் தனது இறுதிக் காலத்தில் வாழ்வின் நிலையாமையை உணர்வு துறவு மேற்கொள்வதே இக்கதையின் சாரம். பிறவிச் சூழலில் இருந்து விடுபட்டு முக்தி பெறுவதற்குத் துறவியின் இன்றியமையாமை பற்றிப் பேசுவதே இக்கதையின் நோக்கமாகத் தெரிகிறது.

**உதயணகுமார காவியம்:**

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை கந்தியார் என்பர்.
- மூலநூல் - பெருங்காதை
- **காண்டங்கள்** - 6, விருத்தப்பாக்கள் - 369
- **சூரிய** குலத்தில் பிறந்ததால் உதயணன் எனப்பட்டான்.
- **இந்நூலில்** ஆறு காண்டங்கள் உள்ளன உஞ்சைக் காண்டம், இலாவணக் காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாகன காண்டம் மற்றும் துறவுக் காண்டம். இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது.

**யசோதர காவியம்:**

- **ஆசிரியர்** - வெண்ணாவலுடையார் வேள்
- **உயிர்க்கொலை தீது** என்றும் உணர்த்தும் நூல்
- **ஏழுவகை** நரகங்கள் பற்றி கூறும் நூல்

## 29) சங்ககால புலவர்களின் மேற்கோள்கள்

**மேற்கோள்கள்:**

**ஔவையார்:**

- ‘எவ்வழி நல்லவர் ஆடவர்
  அவ்வழி நல்லை வாழிய நிலனே’
  ‘மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்’
  ‘ஊருடன் கூடி வாழ்’
- உண்பது நாழி உடுப்பது நாலு முழம்
  ‘எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே’
  ‘பசித்துப்புசி’
- ‘சாதி இரண்டொழிய வேறில்லை’
- ‘இளமையில் கல்’
- ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’
- ‘அறம் செய விரும்பு’
- ‘ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்’
- ‘சீரைத் தேடின் ஏரைத்தேடு’
- அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது

**கணியன் பூங்குன்றனார்:**

- யாதும் ஊரே யாவரும் கேளிர்
  தீதும் நன்றும் பிறர் தர வாரா

**நக்கீரர்:**

- ‘உண்பது நாழி, உடுப்பது இரண்டே’
  செல்வத்துப் பயனே ஈதல்’

**கோவூர்க்கிழார்:**

- ‘ஒருவீர் தோற்பினும் தோற்பநும்குடியே
  இருவீர் வேறலும் இயற்கையுமன்றே’

**நரிவெரு உத்தலையார்:**

- ‘நல்லது செய்தல் ஆற்றீர் ராயினும்
  அல்லது செய்தல் ஓம்புமின்’

**குடபுல வியனார்:**

- ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
  உண்டி முதற்றே உணவின் பிண்டம்’

**பொன்முடியார்:**

- ‘களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே’

**கழைதின் யானையார்:**

- ‘ஈயென இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்
  ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று’

**நெடுஞ்செழியன்**

- ‘உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும்
  பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே’

**தாயுமானவர்:**

- ‘எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
  அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே’

**திருநாவுக்கரசர்:**

- ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’
  ‘நாமர்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்’
  ‘மாசில் வீணையும் மாலை மதியமும்’
  ‘இன்பமே எந்நாளும் துன்பமே இல்லை’
  ‘ஈசன் எந்தை இணையடி நிழலே’
  ‘குறிக்கோளிலாது கெட்டென்’

**திருஞான சம்பந்தர்:**

- ‘தோடுடை செவியன் போற்றி’

**சுந்தரர்:**

- ‘பித்தாபிறை சூடி பெருமானே அருளாளாய்’
- ‘பொன்னார் மேனியனே புலிக்கொடியை அரைக்கசைத்து’

**மாணிக்கவாசகர்:**

- ‘உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் கற்றாரை யான் வேண்டேன்’

**இராமலிங்க அடிகள்:**

- ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’
- ‘எல்லோரும் வாழ்க இசைந்து’
- ‘பசித்திரு, தனித்திரு, விழித்திரு’
- ‘கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக’
- ‘அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை’

**திருமுலர்:**

- ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’
- ‘தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ’
- ‘உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே’
- ‘அன்பே சிவம்’
- ‘வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்’
- ‘உடம்பால் அழியின் உயிரால் அழிவர்’

**கபிலர்**

- ‘நன்றே செய்தல் வேண்டும் - நன்றும் இன்றே செய்தல் வேண்டும்.’
- ‘உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ’

RADIAN IAS ACADEMY

- **மூதுரை**: வாக்குண்டாம்
- **பெரும்பாணாற்றுப்படை**: பாணாறு
- **மலைபடுகடாம்**: கூத்தராற்றுப்படை
- **குறிஞ்சிப்பாட்டு**: பெருங்குறிஞ்சி, காப்பியப்பாட்டு, உளவியல் பாட்டு
- **முல்லைப்பாட்டு**: நெஞ்சாற்றுப்படை
- **திருமுருகாற்றுப்படை**: புலவராற்றுப்படை முருகு
- **திருக்குறள்**: தமிழ்மறை, தெய்வநூல், உத்திரவேதம், உலகப்பொதுமறை, வாயுறை வாழ்த்து, முப்பால், வள்ளுவப்பயன், பொய்யாமொழி
- **பழமொழி**: முதுமொழி
- **கம்பராமாயணம்**: இராமவதாரம், கம்பநாடகம், கம்ப சித்திரம், இராமகாதை
- **சிலப்பதிகாரம், மணிமேகலை**: இரட்டைக் காப்பியங்கள், சிலப்பதிகாரம் (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்): சிலம்பு, முதல் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், தேசிய காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், சமுதாயக் காப்பியம், செய்யுள்.
- **மணிமேகலை**: மணிமேகலைத் துறவு
- **சீவகசிந்தாமணி**: மணநூல், முக்திநூல், காமநூல்
- **பெருங்கதை**: அகவற்காப்பியம்
- **மணிமேகலை, குண்டலகேசி**: பௌத்த காப்பியங்கள்
- **நீலகேசி**: நீலகேசித் திரட்டு
- **திருவாசகம்**: அழகிய வாய்மொழி, தெய்வத்தன்மை பொருந்திய திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.
- **திருமந்திரம்**: வாய்மொழி, தமிழர் வேதம், தமிழ் மூவாயிரம்
- **பெரியபுராணம்**: திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் புராணம், வழிநூல், அறுபத்து மூவர் புராணம்.
- **நேமிநாதம்**: சின்னூல்
- **தொன்னூல் விளக்கம்**: குட்டித் தொல்காப்பியம்
- **பிள்ளைத்தமிழ்**: குழந்தை இலக்கியம்
- **குறுந்தொகை**: நல்ல
- **குறவஞ்சி**: குறத்திப்பாட்டு

## 32) நூல்களின் மேற்கோள்கள்

**தொல்காப்பியம்:**

- '**கற்பெனப்படுவது** பிறன்நெஞ்சு புகாமை'

**நற்றிணை:**

- 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
  நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'

**குறுந்தொகை:**

- 'யாயும் ஞாயும் யாராகியரோ?
- எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேள்'
- 'வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
- மனை உறை மகளிருக்கு ஆடவர் உயிர்'
- 'விருந்து வர கரைந்தது காக்கை'
- 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சறைத் தும்பி'
- 'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
- நீரினும் ஆரளவின்றே'

**பரிபாடல்:**

- 'தீயினுள்தென்றல் நீ பூவினுள் நாற்றம் நீ
  கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ'
  'யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல'

**அகநானூறு**

- '**உயிர்** இயைந்தன்ன நட்பின் அவ் உயிர்
- வாழ்தல் அன்ன காதல்
- சாதல் அன்ன பிரிவு அரியாளே'

**புறநானூறு**

- 'உண்பது நாழி உடுப்பது இரண்டே'
- 'செல்வத்துப் பயனே ஈதல்'
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
- 'தீதும் நன்றும் பிறர் தரவாரா'
- 'பெரியோரை இகழ்தல் அதனினும் இலமே'
- 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
- மன்னன் உயிர்த்த மலர்தலை உலகம்'
- 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
- உண்டி முதற்றே உணவின் பிண்டம்'
- 'நல்லது செய்தல் அற்றீர் ராயினும்
- அல்லது செய்தல் ஓம்புமின்'
- 'ஒருவர் தோற்பினும் தோற்பநுங்குடியே
- இருவர் வேறலும் இயற்கையு மன்றே'
- 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
- ஒளிருவாள் அருஞ்சமம் முருக்கிக்
- களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'
- 'எவ்வழி நல்லவர் ஆடவர்
- அவ்வழி நல்லை வாழிய நிலனே'
- 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே'
- 'வெயிலென முனியேன் பனியேன மடியேன்'
- 'ஈயென இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்
- ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று'

**திருமுருகாற்றுப்படை:**

- "அறுபர் பயந்த ஆறமர் செல்ல

RADIAN IAS ACADEMY

பொருள்: உடம்போடு உயிர் இணைந்து இருப்பது போல, வாழ்க்கை நெறியோடு அன்பு இணைந்து இருக்கிறது.

4. அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு

பொருள்: அன்பு விருப்பத்தைத் தரும். விருப்பம் அனைவரிடமும் நட்பு கொள்ளும் பெருஞ்சிறப்பைத் தரும்.

5. அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

பொருள்: அன்போடு பொருந்திய வாழ்க்கை நெறியைக் கடைபிடித்தவர் உலகத்தில் மகிழ்ச்சி உடையவர் ஆவர்.

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

பொருள்: அன்பு அறத்தை மட்டும் சார்ந்தது என்று கூறுவோர் அறியாதவர், வீரத்திற்கும் அன்புதான் துணை.

7. என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

பொருள் எலும்பில்லாத உயிர்களை வெயில் வருத்தி அழிப்பது போல் அன்பில்லாத உயிர்களை அறம் வருத்தி அழிக்கும்.

8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று

பொருள்: பாலை நிலத்தில் உள்ள வாடிப்போன மரம் தளிர்க்காது அதுபோல நெஞ்சில் அன்பு இல்லாத மனிதர் வாழ்க்கை தளிர்க்காது.

9. புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு

பொருள்: நெஞ்சில் அன்பு இல்லாதவர்க்கு கைகால் போன்ற உடல் உறுப்புகளால் என்ன பயன்?

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

பொருள்: அன்பு செய்வதுதான் உடம்பில் உயில் இருப்பதற்கு அடையாளம். அன்பில்லாதவர் உடம்பு வெறும் தோலால் மூடப்பட்ட எலும்புதான். அங்கு உயிர் இல்லை.

பண்புடைமை:

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

பொருள் யாரிடத்தும் எளிமையாகப் பழகினால் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைதல் எளிது.

2. அன்புடைமை ஆன்ற குடிபிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

பொருள்: அன்புடையவராகத் திகழ்தல், உயர்ந்த குடிப்பிறப்பு ஆகிய இவ்விரண்டும் பண்பாளரின் இயல்பு.

3. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

பொருள்: உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று. பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருந்தாலே மக்களாகக் கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

4. நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

பொருள்: நேர்மையையும், அறத்தையும் கொண்டு பிறர்க்கு உதவ வேண்டும். அத்தகைய பண்பாளரையே உலகம் போற்றும்.

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு

பொருள்: விளையாட்டாக ஒருவரை இகழ்ந்து பேசுதலும் துன்பத்தை தரும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகையேயிருப்பின் நல்ல பண்புகள் இருக்கும்.

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

பொருள்: உலகம் பண்புடையவர்களாலே நிலைபெற்று இருக்கிறது. இல்லையெனில் இவ்வுலகம் மண்ணோடு மண்ணாகப் போய்விடும்.

7. அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்(பு) இல்லாதவர்

பொருள்: அரம் போன்ற கூர்மையான அறிவுடையவராக இருப்பினும் மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் ஓரறிவுடைய மரமாகவே கருதப்படுவார்.

(அரம் - வாளைக் கூர்மையாக்கும் கருவி)

RADIAN IAS ACADEMY

3. செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றோரோ டொப்பர் நிலத்து

பொருள்: செவியுணவாகிய கேள்வியினை உடையவர் இவ்வுலகில் வாழ்ந்தாலும் அவிவுவினைக் கொள்ளும் தேவர்களுக்கு நிகராவர்.

4. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற் (கு)
ஒற்கத்தின் ஊற்றாந் துணை

பொருள்: ஒருவன் கற்க வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் கற்றாரிடம் கேட்டறிய வேண்டும். வாழ்க்கையில் தளர்ச்சியுறும்போது அக்கேள்வியறிவு அவனுக்கு ஊன்றுகோல் போலத் துணையாக நிற்கும்.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்

பொருள்: வழுக்குகின்ற நிலத்தில் ஊன்றுகோல் உதவுவது போல, நல்லொழுக்கம் மிக்க பெரியோரின் வாய்ச்சொற்கள் வாழ்க்கைக்கு என்றும் உதவும்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்

பொருள்: எவரும் அறிஞரின் நல்லுரைகளை கேட்க வேண்டும். அந்நல்லுறை எவ்வளவு சிறிதேயாயினும் அதனை பின்பற்றுபவருக்கு நிறைந்த பெருமையை அது தேடித் தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்
இழைத்துணர்ந் (து) ஈண்டிய கேள்வியவர்

பொருள் நுட்பமாக ஆய்ந்தறிந்த கேள்வி அறிவுடையவர் தவறாக உணர்ந்திருந்தாலும் ஒருபொழுதும் இழி சொற்களைக் கூறமாட்டார்.

8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி

பொருள் கேள்வியால் துளைக்கப்படாத செவிகளுக்கு கேட்கும் தன்மை இருப்பினும் கேளாத செவிகளாகவே கருதப்படும்.

9. நுணங்கிய கேள்விய ரல்லால் வணங்கிய
வாயின ராதல் அரிது

பொருள்: நுட்பமாகிய கேள்வியறிவு இல்லாதவர் பணிவான சொற்களைப் பேசுவதில்லை.

10. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்

பொருள்: கேள்வியின் வாயிலாக செவிச்சுவை உணராது, உணவின் வாயிலாக வாய்ச்சுவை மட்டுமே உணரும் மக்கள் இறந்தாலும் என்ன? வாழ்ந்தாலும் என்ன?

அறிவுடைமை

1. அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்

பொருள்: ஒருவனுக்கு அறிவு அழிவு ஏற்படாமல் பாதுகாக்கும் கருவி பகைவர்களாலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரண் ஆகும்.

2. சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு

பொருள்: மனம் போகும் போக்கில் போகாமல் தீமையைத் தவிர்த்து நன்மையைச் செய்வது அறிவு.

3. எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

பொருள்: எந்த செய்தியை யார் கூறினாலும் அச்செய்தியின் உண்மை அறிந்து அதனை ஏற்க வேண்டும்.

4. எண்பொருள் வாகச் செலச்சொல்லத் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு

பொருள்: கேட்பவர்களுக்குப் புரியும் வகையில் எளிமையான நுண்மையான கருத்துக்களையும் கூறுவதே அறிவுடையார் சிறப்பு.

5. உலகந் தழீ இய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு

பொருள்: உலகம் தழுவி நடப்பதே அறிவு, தெளிவும் கலக்கம் மாறி மாறி வராமல் இருப்பதே அறிவு.

6. எவ்வ துறைவ துலக முலகத்தொடு
அவ்வ துறைவ தறிவு

பொருள்: (அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் நடப்பது போல் நடப்பதே அறிவுடைமை ஆகும்)

7. அறிவுடையான் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

பொருள்: (செய்யும் செயலின் பின் விளைவு அறிந்து செய்பவர் அறிவுடையவர், அவ்வாறு செய்யாதவர் அறிவில்லாதவர்)

RADIAN IAS ACADEMY

ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

பொருள்: ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே. ஆதலால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல் வேண்டும்.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை

பொருள்: (எம் முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது அதனை விரும்பி காத்தல் வேண்டும்).

3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

பொருள்: (ஒழுக்கம் உள்ளவரே உயர் குடியினர், அவ்வொழுக்கம் இல்லாதவர் இழி குடியினர்)

இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்

4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

பொருள்: ஒருவன் தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்று கொள்ள இயலும். ஆனால் ஒழுக்கம் குறைந்தால், அதனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்து போகும்.

5. அழுக்காறுடையான்கண் ஆக்கம் போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

பொருள்: (பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது அது போல் ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு இருக்காது)

அணி: உவமை அணி

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து

பொருள்: ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலக மாட்டார்.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

பொருள்: (ஒழுக்கம் உடையவர் மேன்மை அடைவர்: ஒழுக்கம் இல்லாதவர் அடையக்கூடாத பழியை அடைவர்)

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

பொருள்: நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவுகளைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கமோ எப்பொழுதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

பொருள்: (நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமை தரும் சொற்களைச் சொல்ல இயலாது)

இலக்கணக் குறிப்பு: சொலல் - தொழிற்பெயர்

10. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

பொருள்: (உயர்ந்தாரோடு பொருந்தி வாழும் கல்வியைக் கல்லாதவர். எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்)

பொறையுடைமை

1. அகல்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

(நிலமானது தன்னைத் தோண்டுபவரையும் பொருள்: தாங்குவது போலத் தம்மை இழிவுப்படுத்துவோரைப் பொறுத்துக் கொள்வதே சிறந்த பண்பு)

அணி: உவமை அணி

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதினினும் நன்று

பொருள்: பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்தது. அத்துன்பத்தை மறந்து விடுதல் அதைவிடச் சிறந்தது.

3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை

பொருள்: விருந்தினர்களை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை, வறுமையுள் கொடிய வறுமையாகும். அதுபோல, அறிவற்றார் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமையாகும்.

அணி: எடுத்துக்காட்டு உவமையணி

4. நிறையுடைமை நீங்காமை வேண்டின்
பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்

RADIAN IAS ACADEMY

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

பொருள்: உடுத்திய ஆடை நழுவும்போது கை தன்னையறியாமல் தானே சென்று காக்கும். அதுபோல, நண்பன் துன்புறும் போது விரைந்து சென்று அத்துன்பத்திலிருந்து அவனை காப்பதே நட்பு.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை

பொருள்: நட்பிற்குச் சிறந்த நிலை எதுவென்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், இயலும் பொழுதெல்லாம் உதவி செய்து தாங்குதல்.

10. இணையர் இவர் எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு

பொருள்: இவர் எமக்கு இத்தகைய அன்பினர் : யாம் இவர்க்கு இத்துணைச் சிறப்புடையவர் என்று புகழ்ந்துரைக்கக் கூடாது. அவ்வாறு புகழ்ந்துரைத்தால் நட்புச் சிறப்பு இழக்கும்.

பொருளுணர்ந்து பொருத்துக.

- பேதையார் நட்பு - (அ) உடுக்கை இழந்தவர் கை போன்றது
- பண்புடையாளர் தொடர்பு - (ஆ) வளர்பிறை போன்றது
- அறிவுடையார் நட்பு - (இ) நவில் தோறும் நூல் நயம் போன்றது
- இடுக்கண் களையும் நட்பு - (ஈ) தேய்பிறை போன்றது.

விடை: 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ

வாய்மை

1. வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்

பொருள்: வாய்மை எனப் போற்றப்படும் பண்பு எதுவெனில் அது மற்றவருக்கு தீமை தராத சொற்களைப் பேசுதல்.

2. பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

பொருள்:பிறர்க்கு குற்றமற்ற நன்மையைத் தருமாயின், பொய்யும் உண்மையாகக் கருதப்படும்.

3. தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச்சுடும்

பொருள்:: தன் நெஞ்சம் அறிந்து பொய்கூறக் கூடாது கூறின் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

4. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

பொருள்:: ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய்யில்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை

பொருள்: மனத்தோடு பொருந்திய வாய்மை பேசுபவன் தானம் தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாக கருதப்படுவான்

6. பொய்யாமை அன்ன புகழ் இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

பொருள்: பொய்யாமை, ஒருவனுக்கு எல்லாப் புகழையும் தரும். அஃது அவன் வருந்தாமலேயே அவனுக்கு எல்லா நலன்களையும் தரும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

பொருள்: பொய் சொல்லாமை என்னும் அறத்தை இடைவிடாமல் கடைபிடித்தால் வேறு எந்த அறங்களையும் செய்ய வேண்டியது இல்லை.

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்

பொருள்:உடல் தூய்மை நீரால் உண்டாகும். உள்ளத் தூய்மை வாய்மையால் வெளிப்படும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

பொருள்:: புற இருளை நீக்கும் விளக்கை விட அக இருட்டைப் போக்கும் பொய்யாமையே சான்றோர்க்கு விளக்காகும்.

10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை
எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற

பொருள்: யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள் எவ்வகையிலும் உண்மையை விட சிறந்தவையாகச் சொல்லத் தக்கவை வேறில்லை.

4. ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

பொருள்: காலமறிந்து, இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால் உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும்.

5. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்

பொருள்:: உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர் அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல் காத்திருப்பார்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்கு பேருந் தகைத்து

பொருள்: ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது. ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

அணி: உவமையணி

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்

பொருள்: அறிவுடையார், பகைவர் தீங்கு செய்த உடனே சினத்தை வெளிப்படுத்த மாட்டார் அவரை வெல்லும் காலம் வரும் வரை, அச்சினத்தை மனத்தினுள் மறைத்து வைத்திருப்பார்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை

பொருள்: பகைவரைக் காணும் போது பணிவாக இருக்க வேண்டும். அப்பகைவர்க்கு முடிவு காலம் வரும்போது அவர் நிலைமை தலைகீழாய் மாறும்.

9. எய்தற் கரிய தியைந்தக்கால அந்நிலையே
செய்தற் கரிய செயல்

பொருள்:: கிடைத்தற்கு அரிய வாய்ப்புக் கிடைத்த பொழுது அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கரிய செயல்களைச் செய்திடல் வேண்டும்.

10. கொக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன்
குக்தொக்க சீர்த்த இடத்து

பொருள்:: வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல அமைதியாகக் காத்திருக்க வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப் போல் விரைந்து செயலை செய்து முடித்தல் வேண்டும்.

அணி: உவமை அணி

வலியறிதல்

➢ (பகை வெல்லுதலில் கொடுத்தல், இன்சொற் கூறுதல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்னும் நால்வகை உபாயங்களுள் ஒறுத்தல் குறித்தோர் நால்வகை வலிமையையும் அறிந்து செயல்படுதல்)

1. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்

பொருள்: தான் செய்ய இருக்கும் ஒரு செயல் திறனையும் அதனை முடிக்க விருக்கும் தனது வலிமையையும் அதற்கு இடையூறு விளைவிக்கும் எதிரியின் வலிமையையும் எதிரிக்குத் துணையாக இருப்போரின் வலிமையையும் ஆராய்ந்து செயலில் ஈடுபடுதல் வேண்டும்.

2. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்

பொருள்: ஒரு செயலை மேற்கொள்ளும்போது முடியுமா என்பதும் அத்துறை பற்றிய அறிவு தனக்கு உள்ளதா என்பது ஆராய்ந்து செய்வோருக்கு முடியாதது என்று ஒன்றும் இல்லை.

3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்

பொருள்:: ஒரு செயலைச் செய்வோர் தமது ஆற்றலின் அளவை அறியாமல், மன எழுச்சியால், வலிமையுடையோருடன் மோதி, செயலின் இடையிலேயே தளர்ந்து தோல்வியைத் தழுவியோர் பலர். ஆகவே சொந்த ஆற்றலை வைத்து எதனையும் செய்ய முற்படல் வேண்டும்.

4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

பொருள்:எதிரிகளுடன் சாதுர்யமாக பழகி நடக்கத் தெரியாமல், தனது ஆற்றலை உணரவும் இல்லாமல், எதிரியை மதிக்காமல் நடந்து கொள்ளும் அரசன் விரைவாகக் கெட்டு அழிவான்.

5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

பொருள்: மயிலின் தோகையே ஆனாலும் அதிக பாரத்தை ஏற்றினால் வண்டியின் இரும்பாகிய அச்சு முறிந்து விடும். வலிமை இல்லா எளியவர்கள் தான் என்று கருதி பலரோடும் பகை

RADIAN IAS ACADEMY

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடைய யான்கட் படின்

பொருள்: உலக நீதிகளை அறிந்த ஒருவனிடம் செல்வம் தங்குமாயின் அது ஊருக்கு நடுவே பொது இடத்தில் பழம் தரும் மரம் பழுத்து நிற்பதற்குச் சமம்.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்

பொருள்: பெருந்தன்மையுடைய ஒருவனிடம் செல்வம் வந்து தங்குமானால் அச்செல்வம் எல்லா உறுப்புகளாலும் பயன்படத் தக்க மருந்து மரத்துக்கு ஒப்பாகும்.

8. இடனில் பருவத்தும் ஒப்புறவிற் கொல்கார்
கடனிற் காட்சி யவர்

பொருள்: தனது செல்வம் சுருங்கிய காலத்திலும் பிறருக்கு உதவி செய்யும் பண்புடையார் தமது ஈகை குணத்தை விடார்.

9. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும் நீர
செய்யா தமைகலா வாறு

பொருள்: கொடுத்து மகிழும் இயல்புடைய நல்லவர்களுக்கு வறுமை என்பது உணவும் பிற பொருள்களும் இல்லாமை அன்று. இந்நிலையை வறுமையாகக் கருத மாட்டார்கள். ஆனால் பிறர்க்கு உதவும் நிலை இல்லாது போயிற்றே என்று எண்ணி வருந்தும் நிலையே உண்மையான வறுமையாகும்.

சொற்பொருள்:

- நயனுடையான் - ஒப்புரவாளன்
- நல்கூர்ந்தானாதல் - வறுமை வாய்ப்படுதல்

10. ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து

பொருள்: மற்றவர்களுக்கு உதவுவதால் நமது செல்வம் அழிந்து விடும் என்று உயர்குணம் படைத்தவர்கள் கருதமாட்டார்கள். அழிவு என்பது ஒரு போதும் கருதாது தன்னையே விற்றாவது பிறர்க்கு உதவி செய்வர்.

செய்ந்நன்றியறிதல்:

1. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது
2. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்\
ஞாலத்தின் மாணப் பெரிது
3. பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது
4. திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்
5. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து
6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு
7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங் கண்
விழுமந் துடைத்தவர் நட்பு
8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று
9. கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன் துள்ளக் கெடும்
10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

சான்றாண்மை

1. கடன் என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு
2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று
3. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையெரிடு
ஐந்து சால்(பு) ஊன்றிய தூண் (ஏகதேச உருவக அணி)
4. கொல்லா நலத்தது நோன்மை பிறர் தீமை
சொல்லா நலத்தது சால்பு (எடுத்துக்காட்டு உவமை அணி)
5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றோரை மாற்றும் படை
6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லோர் கண்ணும் கொளல்
7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு
8. இன்மை ஒருவற்று இளிவன்று சால்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்
9. ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்
10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

பெரியோரைத் துணைக்கோடல்

- (நன்னெறியில் செலுத்தும் பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல்)

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை

RADIAN IAS ACADEMY

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்

பொருள்:அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழியில் வரும் செல்வத்தைப் பற்றாமல் நீக்குதல் வேண்டும்.

6. உறுபொருளும் உலகு பொருளுந்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்

பொருள்:அரசுரிமையால் வந்த பொருளும் மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்று கொண்ட திரை பொருளும் அரசனுக்குரிய பொருளாகும்.

7. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியால் உண்டு

பொருள்:அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை

பொருள்:தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின் மேல் இருந்து கொண்டு யானை போரைக் காண்பதற்கு ஒப்பானது.

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரிய தில்

பொருள்:பொருளைத் தேடி சேர்த்தல் வேண்டும் அது பகைவரின் செறுக்கை அறுக்கும் உறுதியான படைக்கலம். அதனைவிடக் கூர்மையான கருவி வேறொன்றுமில்லை.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள் ஏனை யிரண்டும் ஒருங்கு

பொருள்:சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு மற்றைய அறனும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒரு சேரக் கைகூடும் எளிய பொருட்களே.

வினைத்திட்பம்:

1. வினைத்திட்பம் என்ப தொருவன்மனத்திட்டம் மற்றைய எல்லாம் பிற
2. ஊறொரால் உற்றபின் ஒல்காமை ஆறென்பர் இவ்விரண்டின் ஆய்ந்தவர் கோள்
3. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின் எற்றா விழுமந் தரும்
4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம், சொல்லிய வண்ணம் செயல்
5. வீறெய்தி மாண்டார் வினைத்திட்டம் வேந்தன் கண் ஊறெய்தி உள்ளப்படும்
6. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்
7. உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க் கச்சாணி யன்னார் உடைத்து
8. கலங்காது கண்ட வினைக் கண் துளங்காது தூக்கங் கடிந்து செயல்
9. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை
10. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டா துலகு

- திருக்குறள் - (திரு+குறள்) சிறந்த குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல் ஆதலின் இப்பெயர் பெற்றது. குறள் - இரண்டடி வெண்பா. திரு சிறப்பு அடைமொழி. குறள் என்பது குறட்பாவை உணர்த்தாமல் அப்பாக்களால் ஆகிய நூலை உணர்த்துவதால் ஆகுபெயர் இது தமிழில் வழங்கும் பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

- அறத்துப்பால்: பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு இயல்களையும் 38 அதிகாரங்களையும்
- பொருட்பால்: அரசியல், அங்கவியல், ஒழிபியல்என மூன்று இயல்களையும் 70 அதிகாரங்களையும்
- காமத்துப்பால்: களவியல், கற்பியல் என இரண்டு இயல்களையும் 25 அதிகாரங்களையும் கொண்டது.
- திருக்குறள், முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், பொதுமறை, முதுமொழி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.
- திருவள்ளுவரை நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யில் புலவர் எனப் பல பெயர்களால் பாராட்டுகின்றனர்.
- திருக்குறளுக்குத் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர் கவிப் பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மர் (பத்து பேர்) உரை எழுதியுள்ளனர்.
- வள்ளுவன் தன்னை உலகனுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - பாரதியார்

RADIAN IAS ACADEMY

- திணைக்கு 30 பாடல், 150 பாடல்
- இந்நூலின் கருத்துக்கள் சுந்தரனின் தேவாரத்திலும் இடம் பெற்றுள்ளது.

**கைந்நிலை:**

- புல்லங்காடனார். இதற்கு ஐந்திணை அறுபது என்ற பெயர் உண்டு.

**புறநூல்:**

- களவழி நாற்பது இதன் ஆசிரியர் பொய்கையார் மொத்தம் 40 பாடல்கள்.
- புறப்பொருள் பற்றிக் கூறும் நூல்.
- களம் பாடுவதில் போர்களம் பாடுதல், ஏர்களம் பாடுதல் என இரண்டு உண்டு இது போர்களம் பாடுதல் பற்றியது.
- ஒவ்வொரு பாடலும் அட்டகளத்து (அல்லது) பொருதகளத்து என்று முடிகின்றது.
- இந்நூல் சோழனைச் சிறப்பிக்கிறது.
- சோழன் செங்கண்ணனால் அடைக்கப்பட்ட சேரன் கணைக்கால் இரும்பொறை, போர் நடந்த இடம் கழுமலம், சிறை - குடவாயிற் கோட்டம்.
- இச்சேரன் தன் குழவியிறப்பினும் ஊன்றடி பிறப்பினும் என்ற பாடலை எழுதியவன்.
- இந்நூல் நால்வகைப் படையுள் யானைப் படையைப் பற்றிக் கூறுகிறது.
- கார்த்திகை திருவிழா பற்றிக் கூறுகிறது.
- கலிங்கத்துப் பரணி போன்ற பிற்கால நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்த நூல்.

**அறநூல்கள்**

**நாலடியார்**

- **வேளாண் வேதம், நாலடி நானூறு, நாலடியார் என்றும் வழங்கப்படும் நூல்**
- பாண்டிய நாட்டு சமண முனிவர்கள் இயற்றியவர் தொகுத்தவர் பதுமனார்
- அதிகாரம் வகுத்தவர் பதுமனார் முப்பாலாய் பகுத்தவர் தருமர்.
- **அறத்தூப்பால் 13 அதிகாரம், பொருட்பால் 24 அதிகாரம், காமத்துப்பால் 3 அதிகாரம்.**
- மொத்தம் 40 அதிகாரங்களும் 12 இயல்களும் உள்ளன.
- துறவறவியல் முதலில் உள்ளது.
- பதினெண் கீழ்க் கணக்கில் ஒரே தொகை நூல் நாலடியார்.
- ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளர்.
- முத்தரையரைப் பற்றிக் கூறும் நூல்.

**மேற்கோள்:**

- கல்வி அழகே அழகு
- கல்வி கரையில் கற்பவர் நாள் சில,
  ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர் ஒழிய பால் உண் குருகின் தெரிந்து.
- பெரியோர் கேண்மை பிறை போல நாளும் வரிசை வரியை நந்தும்
- வானூர் மதியம் போல வைகலும், தேயுமே தானே சிறியோர் நட்பு

**நான்மணிக்கடிகை**

- **கடிகை என்றால் துண்டு (பகுதி) என்ற பொருள், கட்டுவடம் என்ற பொருளும் ஆபரணம் என்ற பொருளும் உண்டு.**
- **ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான கருத்துக்கள் உள்ளன - 104 பாடல்கள்.**
- **ஜி.யு.போப் (7,100) பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.**

**மேற்கோள்:**

- யார் அறிவார் நல்லாள் பிறக்கும் குடி
- இந்நிலத்தது மண்ணாதல் வேண்டின் அசையிடுக
- தன்னோடு செல்வது வேண்டின் அறம் செய்து
- வெல்வது வேண்டின் வெகுளி விடேல்
- இளமைப் பருவத்து கல்லாமை குற்றம் வளமில்லா போழ்தத்து வள்ளாண்மை குற்றம்
- ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்
- மனைக்கு விளக்கம் மடவாள்
- மடவாளுக்கு விளக்கம் புதல்வர்
- புதல்வர்க்கு விளக்கம் கல்வி
- கல்விக்கு விளக்கம் புகல் சால் உணர்வு
- நிலத்துக்கு அணி நெல்லும் கரும்பும்
- குளத்துக்கு அணி தாமரை
- பெண்ணுக்கு அணி நாணம்

**இன்னா நாற்பது-கபிலர்**

- ஆசிரியர்-கபிலர், மொத்தம் 40 பாடல்கள்
- துன்பம் செயல்களைத் தொகுத்துக் கூறும் நூல்.
- **மொத்தம் 164 இன்னச் செயல்கள்**

**மேற்கோள்**

- உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா
- தீமையுடையார் அருகில் இருத்தல் இன்னா
- ஊனைத் தின்று ஊனைப் பெருக்கல் முன்னின்னா
- இன்னா பொருள் இல்லார் வன்னை பிரிவு

RADIAN IAS ACADEMY

**மேற்கோள்கள்**

- "ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
- ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"
- "வண்மையிற் சிறந்தன்று வாய்மை உடைமை"
- "மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை"
- "இளமையிற் சிறந்தன்று மெய்ப்பிணி இன்மை"

**ஏலாதி**

- **மருந்தால் பெயர் பெற்ற நூல்**
- ஏலாதி என்பதற்கு ஏலத்தை முதலாக உடையது என்று பொருள்.

**பெயர்க்காரணம்**

- ஏலம் - **1 பங்கு**
- இலவங்கப்பட்டை - **2 பங்கு**
- **நாககேசரம் - 3 பங்கு**
- **மிளகு - 4 பங்கு**
- **திப்பிலி - 5 பங்கு**
- **சுக்கு - 6 பங்கு**
- என ஏலம் முதலான ஆறு பொருட்களையும் பொடி செய்த மருந்து கலவைக்கு ஏலாதி என்று பெயர். இந்த ஆறு மருந்துகளும் உடலுக்கு நன்மை பயக்கும். அது போல் உள்ளத்திற்கு நன்மை பயக்கும் பாடல்கள்.

**மேற்கோள்:**

- "தாய் இழந்த பிள்ளை தலை இழந்த பெண்டாட்டி
- வாய் இழந்த வாழ்வினார், வணிகம் போய் இழந்தார்
- கைத்தூண் பொருள் இழந்தார் கண் இலவர்க்கு ஈந்தார் வைத்து வழங்கி வாழ்வார்"

**இன்னிலை:**

- இன்னிலை என்னும் நூலைப் பாடியவர் பொய்கையார்
- அறத்துப்பால், **பொருட்பால், இன்பத்துப்பால், வீட்டிலக்கட்பால் என நான்கு வகைப்பாட்டுகளை இந்நூல் கொண்டது.**
- இதற்கு உரை எழுதி வெளியிட்டவர் வ.உ.சிதம்பரனார்.

**ஔவையார் நீதிநூல்கள்**

**ஆத்திச்சூடி (கி.பி 12)**

- 109 **ஒற்றை வரிப் பாக்கள் கொண்டது. அகரநிரல் கொண்டு எழுதப்பட்ட முதல் இலக்கியம் மற்றும் நீதி நூல் இது.**
- ஆத்திசூடி அமர்ந்த தேவனை
- ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே என்பது ஆத்திசூடியின் கடவுள் வாழ்த்து
- ஆத்திமாலை அணிந்த சிவபெருமானைக் குறிக்கும் தொடரால் நூலும் 'ஆத்திசூடி' எனச் சுட்டப்படுகிறது.
- அறம் செய விரும்பு
  ஆறுவது சினம்
  இயல்பது கரவேல்
  ஈவது விலக்கேல்

**கொன்றை வேந்தன்**

- **இந்த நூலும் அகர நிரல் அமைப்பினைக் கொண்டுள்ளது.** 91 ஒற்றை வரிப்பாக்கள் அமைந்தது.
- அன்னையும் பிதாவும் முன்னறிவு தெய்வம்
  ஆலயம் தொழுவது சாலவும் நன்று
  இல்லறம் அல்லது நல்லறம் அன்று
  ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

- கொன்றை வேந்தன் செல்வன் அடி இணை
  என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே
- என்ற கடவுள் வாழ்த்து முதல் அடி கொண்டு கொன்றை வேந்தன் என்று இந்த நூல் அழைக்கப்படுகிறது.

**மூதுரை**

- 'வாக்குண்டாம்' எனத் தொடங்குவதால் **'மூதுரைக்கு' 'வாக்குண்டாம்' என்றும் பெயர் உண்டு.**
- கடவுள் வாழ்த்து நீங்கலாக 30 வெண்பாக்கள் உள்ளன.

**மேற்கோள்:**

- நெல்லுக்கு இளைத்த நீர்....
- கவையாகிக் கொம்பாகி
- கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி

**நல்வழி:**

- பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடல் கொண்டது இந்த நூல்.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 வெண்பாக்கள் உள்ளன.

**மேற்கோள்:**

- வேதாளம் சேருமே வெள்ளருக்கு பூக்குமே
  உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்

RADIAN IAS ACADEMY

- கடவுள் வாழ்த்து - பாரதம் பாடிய பெருந்தேவனார்
- (முருகனைப் பற்றியது) கரிகாலன் மகள் ஆதிமந்தி அவன் கணவன் சேர மன்ன ஆட்டனத்தி
- குழல் அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை, மகளிர் கூந்தல் ஒப்பனைகள்
- ஓரி, குஞ்சி, குடுமி - ஆணின் முடி
- கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
- காமம் செப்பாது கண்டது மொழிமோ
- யாயும் ஞாயும் யாராகியரோ
  எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
  யானும் நீயும் எவ்வழியறிதும்
  செம்புலப் பெயல் நீர்போல
  அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே
- நிலத்தினும் பெரிதே வானினும் உயிர்ந்தன்று
  நீரினும் ஆரள வின்றே சாரல்

ஐங்குறுநூறு: 3-6 அடி

- ஐந்துபேர்
- மருதம் - ஓரம் போகியார்
- நெய்தல் - அம்மூவனார்
- குறிஞ்சி - கபிலர்
- பாலை - ஓதலாந்தையார்
- முல்லை - பேயனார்
- தொகுத்தவர்: புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.
- நெய்தல் திணையில் உள்ள நொண்டிப்பத்து - அந்தாதி முறையில் அமைந்துள்ளது. இந்திர விழா குறித்துக் கூறும் எட்டுத் தொகை நூல்

பதிற்றுபத்து

- இதில் உள்ள ஒவ்வொரு பாடலும் பாடல் பெயரால் பெயர் பெற்ற நூல்
- பத்து + பத்து, பத்து + இன் + இற்று + பத்து = பதிற்றுப்பத்து
- சேர அரசர்கள் பத்து பேரை, நபருக்கு 10 பாடல்கள் வீதம் பாடுவது.
- இதற்கு இரும்புக் கடலை என்ற பெயர் உண்டு. முதல் பத்தும் இறுதிப் பத்து கிடைக்கவில்லை.
- ஒவ்வொரு பாடலிலும் துறை வண்ணம், தூக்கு போன்றவை இடம் பெற்றிருக்கும்.

இரு தலைமுறை:

- உதியஞ்சேரல்
- இரும் பொறை என்ற இரண்டு சேர வம்சங்கள் பற்றி இந்த நூல் குறிப்பிடும்.

- பாடல்கள் அனைத்தும் பாடாண் திணையைச் சார்ந்தது. பரிபாடல் போல் இசையோடு அமைந்த பாடல்.

பரிபாடல்:

- 25-400 அடி பாவகையால் பெயர் பெற்ற நூல் - பரிபாடல்
- முதல் இசைப்பாடல் நூல்
- எட்டுத் தொகை நூல்களுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் கூறும் நூல்.
- எட்டுத் தொகையில் பாண்டியர்களைப் பற்றிக் கூறும் நூல் - பரிபாடல், கலித்தொகை. 22 பாடல்கள் (திருமால்-6, முருகன்-8, வைகை-8) கிடைத்தவை மொத்தம் 70 பாடல்கள் (திருமால்-8, முருகன்-31, காடுகிழார் (காளி)-1, வையை-26, மதுரை.
- நான், ஆமாம் போன்ற சொற்கள் இதில் மட்டுமே உள்ளன. (எட்டுத்தொகையில்)
- அம்பா ஆடல் - தை நீராடல்
- உலகம் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் நூல்.
- நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், வெள்ளம் தமிழின் பேரெண்கள்

கலித்தொகை:

- அகநூல் - மொத்தம் 150 பாடல் (கடவுள் வாழ்த்து) தொகுத்தவர் - நல்லந்துவனார்
- கடவுள் வாழ்த்து - சிவன் பற்றியது (பாடியவர் நல்லந்துவனார்)

ஐந்திணை நூல்

- பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல்
- பாலையில் 35 பாடல்கள் - பெருங்கடுக்கோ
- குறிஞ்சி - கபிலர் (29 பாடல்கள்)
- மருதம் - மருதனிள நாகனார் (35 பாடல்கள்)
- முல்லை - சோழன் நல்லுருத்திரன் (17 பாடல்கள்)
- நெய்தல் - 33 பாடல்கள் (நல்லந்துவனார்)
- ஏறு தழுவுதலைப் பற்றிக் கூறும் நூல்
- பெருந்திணைப் பாடல்கள் இடம் பெற்ற ஒரே சங்க நூல்.
- ஓரங்க நாடக அமைப்பு
- கற்றிந்தோர் ஏத்தும் கலி

அகநானூறு

- 13 முதல் 31 அடிகள்
- 400 பாடல்கள் ஆசிரியப்பா
- தொகுத்தவர் - உருத்திரசன்மர்
- தொகுப்பித்தவன் - பாண்டியன் உக்கிரப்

RADIAN IAS ACADEMY

வழிப்படுத்துவது ஆற்றுப்படை.

**திருமுருகாற்றுப்படை:**

- **பத்துப்பாட்டில் காலத்தால் பிந்தய நூல்**
- **கடவுள்** வாழ்த்தாகக் கருதி முதலில் வைக்கப்பட்டது.

ஆசிரியர் நக்கீரர்
317 அடிகள்
பாடப்பட்டவன் முருகன்

- **ஆற்றுப்படை நூல்கள் பரிசில் பெறச் செல்வோரால் பெயர் பெறும். திருமுருகாற்றுப்படை மட்டும் பரிசில் கொடுப்போனால் பெயர் பெற்றது.**

ஆசிரியப்பாவால் ஆனது.

- ஆறுபடை முருகன் கோயில் பற்றிக் காணப்படுகிறது.
- **முதல்: திருப்பரங்குன்றம்**
- **இரண்டாவது: திருச்செந்தூர்**
- **மூன்றாவது: திரு ஆவினன் குடி - இதனை வையாபுரி என்றும் அழைப்பர். வையாவி என்பது பேகனைக் குறிக்கும்.**
- **நான்காவது: திருவேரகம் (திருப்பதி (எ) சுவாமிமலை)**
- **ஐந்தாவது: மலை நாட்டு மக்கள், இவர்கள் குரவை ஆடி வணங்குதல், குன்று தோறாடல் - திருத்தணி ஆறாவது: முருகன் எழுந்தருளும் இடங்களும் அவனிடம் அருள் பெறும் முறைகள், பழமுதிர்சோலை.**

**பொருணராற்றுப்படை:**

- ஆசிரியர் - முடத்தாமக் கண்ணியார்
- பாட்டுடைத் தலைவன் - கரிகாலச் சோழன்
- 248 அடிகள்
- **பொருநர் பாடிய யாழ் இசையில் கள்வரும் திருந்தியதாக கூறுவது இது. ஆசிரியப்பாவால் ஆனது.**
- **வேடம் தாங்கி நடிப்பவர்கள் பொருநர்கள்.**
- **ஏர்க்களம், போர்க்களம், பரணி பாடும் வேடம் தாங்கிய கூத்தரும் பொருநர் என அழைக்கப்பட்டனர்.**
- **இப்பொருநர்** போர்க்களம் பாடுவோன்.
- வெண்ணிப் போரின் பெற்ற வெற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- **விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறும் நூல்**
- **விருந்தினர் பிரியும் போது ஏழடி சென்று வழியனுப்புதல் மரபு. இதனைக் கரிகாலன் பின்பற்றினான்.**

**சிறுபாணாற்றுப்படை:**

- **ஆசிரியர்**: நல்லூர் நத்தத்தனார்
- தலைவன் ஒய்மா நாட்டு நல்லியக் கோடான். 269 அடிகள் இன்றைய திண்டிவனப் பகுதி ஒய்மா நாடு ஆகும்.
- நல்லியக் கோடனின் வாயில் இரவலர்க்கு அடையாளம். கடையேழு வள்ளல்கள் பற்றிக் கூறும் நூல்.
- பேகன் - **மயிலுக்கு போர்வை**
- **பாரி - முல்லைக்கு தேர்**
- **காரி - இரவலர்க்கு குதிரை**
- **ஆய்வண்டிரன் - நீலமணி நாகம் தந்த சிவலிங்கம் சிவனுக்கு வழங்கினான்**
- **அதியமான் - ஔவைக்கு நெல்லிக்கனி**
- **நள்ளி - மனதில் உள்ளதை கூறி நகைத்தல்**
- **காரி - இரவலர்க்கு நாடுகளை பரிசாகத் தந்தது**

**கடையேழு வள்ளல்கள்:**

- **பாரி - பறம்புமலை**
- **பேகன் - பொதினிமலை**
- **ஓரி - கொல்லிமலை**
- **ஆய் - பொதிகை மலை**
- **அதியன் - தகடூர்**
- **குமணன் - முதிரமலை**
- **நள்ளி - தோட்டிமலை**

**பெரும்பாணாற்றுப்படை:**

பாணாறு என்ற பெயரும் உண்டு.
500 வரிகள்

- பாடியவர்: கடியலூர் உருத்திரங் கண்ணனார்
- பாடப்பட்டவன்: தொண்டைமான் இளந்திரையன்
- திரு.வெ.கா.இளந்திரையனின் தலைநகரம் (இன்றைய காஞ்சிபுரம்)
- **இந்நூலில் நீர்ப்பாய பெயற்று என்ற நகர் பற்றி கூறுகிறது.**
- **நீர்ப்பாயபெயற்று என்பது இன்றைய மாமல்லபுரம்**

**அகப்பாடல்கள்:**

- **முல்லைப்பாட்டு**: முல்லை ஒழுக்கம் என்பது இருத்தலும் இருத்தல் நிமித்தமும் (தலைவனைப் பிரிந்து தலைவி காத்து இருத்தல்)
- **ஓதல்**, பகை, தூது, பொருள், அறப்புறங்காவல் பிரிவுக்குக் காரணம்

நேரிசை ஆசிரியப்பா
பாடியவர்: நப்பூதனார்
103 அடிகள் - சிறிய நூல்

- இவரது பாடல்கள் எதுவும் எட்டுத் தொகையில்

RADIAN IAS ACADEMY

குன்றியிருத்தற் பொருட்டு அது ஐஞ்சிறுகாப்பிய வரிசையில் வைக்கப்பட்டது.

- நூற்பிரிவு: அகவற்பாவால் பாடப்பட்டுள்ள இந்நூலுள் பின்வரும் ஐந்து காண்டங்கள் உள்ளன.

1. **உஞ்சைக் காண்டம்**
2. **இலாவாண காண்டம்**
3. **மகத காண்டம்**
4. **வத்தவ காண்டம்**
5. **நரவாண காண்டம்**

## 36) சமய இலக்கியத் தகவல்கள்

- **ஆங்கிலம், வணிகத்தின் மொழி, இலத்தின் சட்டத்தின் மொழி கிரேகம் இசையின் மொழி, பிரெஞ்சு தூதின் மொழி, இத்தாலி காதலின் மொழி என்றால் தமிழ் பக்தியின் மொழி - மறைத்திரு தனி நாயக அடிகள்.**
- **சமய மறுமலர்ச்சிக் காலம் - பல்லவர் காலம்**
- **பக்தி இலக்கிய காலம் - பல்லவர் காலம்**
- **சைவப் பெரியோர் பாடிய பாக்கள் திருமுறைகள் எனப்படும்.**
- **இவை** 12 திருமுறைகள்
- **1, 2, 3, திருமுறைகள் - திருஞானசம்பந்தர்**
- **4, 5, 6 திருமுறைகள் - திருநாவுக்கரசர்**
- **7 - சுந்தரர்**
- **8ம் - மாணிக்கவாசகர் - திருவாசகம், திருக்கோவை என்ற திருச்சிற்றம்பலக்கோவை 9ம் திருமுறை - திருவிசைப்பா - 9 பேர் பாடியது**
- திருப்பல்லாண்டு - சேந்தனார் பாடியது
- திருமானிகைத் தேவர்
- கருவூர் தேவர்
- சேந்தனார்
- பூந்துரத்தி காடவ நம்பி
- கண்டராத்தித்தர்
- வேண்டாட்டிகள்
- திருவேலி அமுதனார்
- புருடோத்தம நம்பி சேதிராயர்
- 10ம் **திருமுறை: திருமந்திரம்-திருமூலர்**
- 11ம் **திருமுறை: திருவாலவாடையார்-ஐயடிகள் காடவர் கோன்**
- காரைக்கால் அம்மையார் - சேரமான் பெருமாள்
- கல்லடதேவ நாயினார் - பட்டினத்தடிகள்
- நக்கீர தேவ நாயினார் - நம்பியாண்டர் நம்பிகள்
- கபில தேவ நாயனார்
- பரண தேவ நாயனார்
- அதிரா அடிகள்
- எம்பெருமானடிகள் **என்ற பன்னிருவரால் பாடப்பட்டது.**
- பெரியபுராணம் - **சேக்கிழார்**
- **திருமுறைகளைத் தொகுத்தவன் - நம்பியாண்டார் நம்பி**
- திருமுறைகளைத் **தொகுப்பித்தவன் - முதலாம் ஆதித்தன் அல்லது 2ம் ஆதித்தன் அல்லது** முதலாம் ராஜராஜன் என்று கூறுவர்.
- முதலாம் **ராஜ ராஜன் - திருமுறை கண்ட சோழன் என அழைக்கப்படுகிறான்.**

திருஞானசம்பந்தர்:

- இயற்பெயர் ஆளுடைய பிள்ளை பிறந்த ஊர்: சீர்காழி
- இதற்கு தோணிபுரம், பிரமபுரம், வேணுபுரம் என்ற பெயர்களும் உண்டு.
- பாடியவை 16000 பதிகங்கள் கிடைத்தவை 384
- பதிகங்கள்-23 பண்களில் பாடியுள்ளார்.
- 220 ஊர்களுக்கு சென்று இறைவனை வழிபட்டவர்.
- யாழ்முறி பதிகம் பாடியவர்.
- **திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பட்டம் கொடுத்தவர் இவர்.**
- **மதுரை: கூன் பாண்டியனை நின்ற சீர் நெடுமாறனாக்கினார்**
- **பூம்பாவை திருப்பதிகம் பாடினார்.**
- **இவரது தேவாரத்திற்கு திருக்கடைக்காப்பு என சிறப்பிக்கப்படுகிறது.**
- **கதவு திறக்கப்பாடியது**: இரக்கம் ஒன்றிலிர்
- **மன்னன் நோய் தீர்க்கப்பாடியது**: மந்திரமாவது நீறு
- **நல்லவர்க்கு நாளும் கோளும் இல்லை என பாடியது**
- வேயிரு தோளி பங்கன்
- காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி

- **சிறப்புகள்:** கிரியை என்ற சற்புத்திர மார்க்கம்
- **யாழ்மறி** பதிகம் பாடியவர்.
- இயற்கையை அதிகமாகப் பாடியவர்.
- **ஆதிசங்கரர் தம் நூலான "சௌந்தர்யலகரி" யில் திருஞான சம்பந்தத்தைத் 'திராவிட சிசு' என்று புகழ்ந்துள்ளார்.**

திருநாவுக்கரசர்:

- **இயற்பெயர்** - மருள் நீக்கியார்
- **வேறு** பெயர்: திருநாவுக்கரசர்
- **வாசீகர்**, அப்பர், ஆளுடை அரசு, தாண்டக வேந்தர், **தருமசேனர்**
- **பெற்றோர் புகழனார் - மாதிரியார்**
- **தமக்கை** - திலகவதியார்
- **பிறந்த** ஊர் - திருவாமூர்
- **பதிகத் தொடை பாடிய பான்மையால் நாவுக்கரசர்**

- இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டார்.
- திருவாலங்காட்டிலும் இறைவனை காணத் தலையாலேயே நடந்து சென்றனர். சம்பந்தர் அம்மை தலையால் நடந்த பகுதியை காலால் மிதிக்க மறுத்தார்.
- **63 நாயன்மார்களுள் அமர்ந்த கோலத்தில் உள்ளவர் காரைக்கால் அம்மையார்.**

**நூல்கள்:**

- திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2 நூல்கள், திரு இரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி.
- இவரது பாடல் மட்டுமே மூத்த திருப்பதிகம் என்று சிறப்பிக்கப்படுகிறது. கட்டளை கலித்துறை என்ற புதுவகை யாப்பை படைத்தவர்.

**நக்கீரனின் நூல்கள்:**

- திருமுருகாற்றுப்படை
- கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி
- திரு ஈங்கோய் மலை எழுவது
- திருவழஞ்சுழி மும்மணிக்கோவை
- திரு எழுக்கூற்றிருக்கை
- கோபப்பிரசாதம்
- காரெட்டு
- போற்றி கலிவெண்பா
- திருமுருகாற்றுப்படை இரண்டு நூல் அமைப்பில் பத்துப்பாட்டில் ஆற்றுபடை நூலாகவும் பதினோறாம் திருமுறையிலும் இடம் பெற்றுள்ளது.

**நம்பியாண்டர் நம்பி:**

- தமிழ் வியாசர் இவர் இயற்றிய 8 நூல்களும் 11ம் திருமுறையின் இறுதியில் சேர்த்துக் கொண்டார்.
- கோயில் திருப்பண்ணயர் விருத்தம்
- திருத்தொண்டர் திருவந்தாதி
- ஏகதேச மாலை
- விநாயகர் இரட்டை மணிமாலை
- திருச்சபை விருத்தம்
- திருமும் மணிக்கோவை
- ஆளுடை பிள்ளையார்
- திருவுலாமாலை

**திருக்கலம்பகம்**

- திருத்தொகை திருவந்தாதி

**பட்டிணத்தடிகள்**

- இயற்பெயர் - திருவெண்காடர்
- இவரிடம் சேந்தனார் கணக்கராய்ப் பணியாற்றினார்.
- கோயில் நான்மணிமாலை
- திருக்கழுமல மும்மணிக்கோவை - (சம்பந்தர் குறிப்பு)
- திருவிடை மருதூர் மும்மணி கோவை
- திருவேகம்பமுடையார் திருவந்தாதி
- திருவொற்றியூர் ஒருவா ஒருபஃது

**12ம் திருமுறை**

- சேக்கிழார் 63 நாயன்மார்களைப் பற்றி விரித்துரைத்த பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை.

**சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித் தேவர்.**

- அநபாயச் சோழனிடம் அமைச்சராய் இருந்தவர். அமைச்சராய் இருந்த போது உத்தமசோழ பல்லவராயன் என்ற பட்டம் உண்டு.

**தொண்டர்சீர் பரவுவார் என்ற பெயரும் உண்டு.**

- பெரியபுராணத்திற்கு இவர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் / திருத்தொண்டர் மாக்கதை என்றும் அழைக்கப்படுகிறது.
- இதன் முதல் நூல் சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகை.
- வழிநூல் நம்பியாண்டர் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி.
- உலகெலாம் என்று இறைவன் அடியெடுத்து கொடுக்கப்பட்ட நூல் பெரிய புராணம்.

**திருவிளையாடற்புராணம்**

- புராணம் என்றால் வரலாறு. சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூல்.
- இறைவனின் திருவிளையாடல் பற்றி முதலில் கூறிய நூல்கள் கல்லாடம், சுந்தர பாண்டியம்.
- கல்லாடம் ஆசிரியர் கல்லாடனர்
- **முதன் முதலில் திருவிளையாடற் புராணம் பாடியர் பெரும்பற்ற புலியூர் நம்பி. இவர் பாடிய திருவிளையாடற் புராணம் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.**
- அடுத்து **திருவிளையாடற் புராணம் பாடியவர் பரஞ்சோதி முனிவர்.**
- **இது ஆலாஸ்ய மகாத்தியம் என்ற வடமொழி நூலின் தழுவல். நூலாசிரியர்**
- இந்நூலை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் தஞ்சை மாவட்டத்துத் திருமறைக்காட்டில் தோன்றியவர். சைவ வேளாள ஆசிரிய மரபில் பிறந்தவர்.

**நூலின் அமைப்பு**

- 68 படலங்களுடன் 3363 பாடல்கள் கொண்ட திருவிளையாடற் புராணம், மதுரை, கூடல், திருவாலவாய் என்ற 3 காண்டங்களை உடையது.

RADIAN IAS ACADEMY

**4 பிரிவுகள்**

- முதலாயிரம்
- பெரிய திருமொழி
- திருவாய்மொழி
- இயற்பா

**திருமாலின் ஐம்படைகள்**

- சக்கரம் - **சுதர்சனம்**
- வில் - **சாரங்கம்**
- **வாள் - நந்தகம்**
- **தண்டு - கௌமோதகி**
- **சங்கு - பாஞ்சசன்னியம்**

**முதலாயிரம்**

- பெரியாழ்வார் திருமொழி (திருப்பல்லாண்டு உட்பட)
- நாச்சியார் திருமொழி
- பெருமாள் திருமொழி
- திருச்சந்த விருத்தம்
- திருப்பள்ளி எழுச்சி
- அமலனாதிபிரான்
- கண்ணி நுன் சிறுத்தாம்பு

**பெரிய திருமொழி**

- திருமங்கை ஆழ்வார் பாடல்கள்

**திருவாய்மொழி**

- நம்மாழ்வார் பாடல்கள்

**இயற்பா**

- முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான் முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திரு எழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.

**பொய்கையார்**

- ஊர், காஞ்சிபுரம் -தாமரைப் பொய்கை
- சங்கின் அம்சம்
- பாடியது முதலாம் திருவந்தாதி
- முதலாம் திருவந்தாதி 100 பாடல்கள்
- முதன் முதலாகத் திருமாலின் பத்து அவதாரங்களைப் பாடியவர்.

**மேற்கோள்**

- வையம் தகளியா, வார்கடலே நெய்யாக.

**பூதத்தாழ்வர்**

- மகாபலிபுரம் - குருக்கத்தி மலரில் பிறந்தார்
- கதாயுதத்தின் அம்சமாக பிறந்தவர்
- இரண்டாம் திருவந்தாதி (100 பாடல்கள்)
- பெருந்தமிழன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஆழ்வார்.

**மேற்கோள்:**

- அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக

**பேயாழ்வார்**

- மயிலாப்பூர் - செவ்வல்லிப் பூவில் பிறந்தார்
- திருமாலின் நந்தகம் என்னும் வாளின் அம்சம்.
- மூன்றாம் திருவந்தாதி (100 பாடல்கள்)
- மேற்கோள்: திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன்

**திருமழிசையாழ்வார்**

- ஊர்-திருமழிசை
- சக்கரத்தின் அம்சம்
- சக்கரத்தாழ்வார், பக்தி சாகரர் என்று வேறு பெயர்களும் இவருக்கு உண்டு.
- இவர் சைவத்தில் இருந்தபோது சிவவாக்கியர் என்ற சித்தராக இருந்தார்.
- பாடியவை நான்காம் திருவந்தாதி என்ற நான்முகன் திருவந்தாதி
- திருமழிசை ஆழ்வாரின் சீடன் கனிகண்ணன் என்பவர் ஆவார்.

**நம்மாழ்வார்**

- ஊர் ஆழ்வார் திருநகர் என்ற திருக்குருகூர் இவர் தந்தை மாறன்காரி, பராந்தகன் நெடுஞ்சடையனின் அமைச்சர்
- அவர் தியானம் செய்த புளிமரத்தை ஆதிசேஷனின் அவதாரம் என்பர் (திருப்புளி ஆழ்வார்)
- சடகோபர் என்று அழைக்கப்பட்டார் **திருமாலே நம் சடக்கோபன் என்று அழைத்தமையால் 'நம்மாழ்வார்' என்று அழைக்கப்படுகிறார்.**
- திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்னும் நான்கு நூல்களைப் பாடியுள்ளார்.
- எனவே இவரை வேதம் தமிழ் செய்த மாறன் என்பர் - (நாதமுனி)
- இவரது **நூல்களுள் திருவாய் மொழியைத் திராவிட வேதம் என்பர்.**
- **நம்மாழ்வார் உடல் என்றும் மற்றவர்கள் உறுப்பும் என்றும் கூறுவர்.**
- வைணவத்து மாணிக்கவாசகர் என்று கூறப்பெறுவார்.

RADIAN IAS ACADEMY

**ஆண்டாள்**

- ஸ்ரீவில்லிபுத்தூர்
- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- பூமகள் அம்சம்
- துழாய் (துளசி) வனத்தில் கண்டெடுக்கப்பட்டவள்
- **மாலைசூட்டி கொடுத்ததால் கோதை எனப்பட்டாள்**
- **இறைவனுக்கு மனைவியானதால் நாச்சியார்.**
- **ஆண்டவனையே ஆண்டதால் ஆண்டாள் ஆனார்**
- **இறைவன் ஆண்டாள் திருமணம் - திருவரங்கம்**
- பாடியவை: திருப்பாவை, நாச்சியார் திருமொழி
- திருப்பாவையே வேதம் அனைத்திற்கும் வித்து என்று கூறியவர் - இராமானுஜர்
- கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ?
- வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
- நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
- நாராயணனே நமக்கு பறை தருவான்
- மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்நாளால்

**ஆச்சாரியர்கள்**

- ஆழ்வார்களைத் தொடர்ந்து வைணவம் வளர்த்தவர்கள்
- முதல் ஆச்சாரியார் நாதமுனி
- வைணவ இறுதி ஆச்சாரியர் மணவாள மாமுனி
- முக்கியமானவர் இராமானுஜர்
- இராமானுஜரின் குரு திருக்கோட்டியூர் நம்பி
- இராமானுஜரின் சீடர் கூரத்தாழ்வார்
- **குருவின் கட்டளையை மீறி திவ்விய ரகசியத்தை (திருமந்திரம்) அனைவருக்கும் சொன்னவர் இராமானுஜர், மக்களுக்குச் சொன்ன இடம் திருக்கோட்டியூர்.**
- வைணவத்தின் வளர்ப்புதாய் இராமானுஜர்
- விசிஷ்டாத்வைத்தைத் தோற்றுவித்தவர் இராமானுஜர்
- இராமானுஜர் இயற்றிய நூல்கள் ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகாம், தமிழில் ஒரு நூலும் எழுதவில்லை.
- வேதாந்த தேசிகர் விளக்கும் நெறி வடகலை, இராமானுஜர் தென்கலை
- இராமானுஜர் நூற்றந்தாதி திருவரங்கத்து அமுதனார்
- **வைணவ சமய மறுமலர்ச்சிக்கு உறுதுணை இராமானுஜர்**

**நளவெண்பா**

- **புகழேந்திப்புலவர்**
- ஆதரித்தவன் சந்திரன் சுவர்க்கி 100 பாடல்களுக்கு ஒரு முறை வள்ளலைப் பாடியுள்ளார் (கம்பர் 1000 பாடலுக்கு ஒருமுறை)
- நளவெண்பா மூன்று காண்டங்கள் - சுயம்வரக் காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்- மொத்தம்-425 பாடல்கள்

**நளனின் வரலாற்றைக் கூறுவது இரண்டு**

- **நளவெண்பா**
- நைடதம் அதிவீரராம பாண்டியன் (நைடதம் புலவர்க்கு ஔடதம்)

**கம்பர்:**

- தேரழுந்தூரில் பிறந்தார்
- நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது கம்பரின் தந்தையார் ஆதித்தன்
- இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர்.
- திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தார்
- காலம் 12ம் நூற்றாண்டு
- செய்நன்றி மறவா இயல்பினர். சடையப்ப வள்ளலை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல்கள் என்று பாடியுள்ளார்.
- சடகோபராந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகியன கம்பர் இயற்றிய பிற நூல்கள்.
- சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோர் இவர் காலத்துப் புலவர்கள் கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். வெண்பா பாடுவதில் வல்லவர். விருத்தப்பா பாடுவதில் வல்லவர்.
- கல்வியிற் பெரியவர் கம்பர்.
- நூல்குறிப்பு: யாமறிந்த புலவரிலே - பாரதியார்
- இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.
- வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார்.
- கம்பர் இதற்கு இராமாவதாரம் என பெயரிட்டார். காண்டம் பெரும்பிரிவு, படலம் என்பது அதன் உட்பிரிவு
- கம்பராமாயணம், **பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது. 113 படலங்களையும் 10569 பாடல்களையும் கொண்டது.**
- **திருக்குறளையும், கம்பராமயணத்தையும் தமிழர்க்குக் கதி என்பர்.**
- **பெருங்காப்பியத்திற்குரிய** இலக்கணம் பெற்றது பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்தது.

RADIAN IAS ACADEMY

**வீரமாமுனிவர்**

- இத்தாலி நாட்டவர் சுப்ரதீபக் கவிராயர் இடம் தமிழ் பயின்றவர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி இயற்பெயர் - தேம்பாவணி - ஏசுவின் வளர்ப்புத்தந்தை - தூயவளனார்
- சிற்றிலக்கியம் திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அடைக்கல நாயகி, வெண்கலிப்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கருணாகரப் பதிகம். இவரது இயற்பெயரினை கான்ஸ்டாண்டின் என்ற இலத்தின் மொழிக்கு இணையான தைரியநாதர் என்று மாற்றிக் கொண்டார். தமிழ் அறிஞர்கள் இதனை வீரமாமுனிவர் என்று மாற்றினர்.

**உரைநடை**

- **வாமன் கதை, பரமார்த்த குரு கதை (தமிழின் முதல் ஏளன நூல்)**

**இலக்கணப்பணி**

- தொன்னூல் விளக்கம் - குட்டித் தொல்காப்பியம் ஐந்து இலக்கண நூல்
- கொடுந்தமிழ் இலக்கணம் (பேச்சுத்தமிழ்)
- கால்டுவெல்லின் ஒப்பிலக்கண முன்னோடி
- சதுரகராதி-96 வகை சிற்றிலக்கியங்கள் தமிழ் அகராதியின் தந்தை
- எழுத்துச் சீரமைப்பு - எ, ஒ எழுத்துக்கள்

**சீகன் பால்கு**

- ஜெர்மன் நாட்டினர் தமிழ் கற்பித்தவர் எல்லய்யா
- தரங்கம்பாடியில் சமயப்பணி - முதல் அச்சகம் தொடங்கியவர்
- தம்பிரான் வணக்கம் என்ற நூல்
- ஐரோப்பா சென்ற போது மலையப்பர் என்பவரை உடன் அழைத்துச் சென்றார்.

**கால்டுவெல்**

- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (அயர்லாந்து நாட்டுக் காரர்) நெல்லை வரலாறு
- 77 வயதில் கொடைக்கானலில் உயிர் நீத்தவர்

**எல்லிஸ்**

- 1796-ல் சென்னை மாவட்ட ஆட்சியர் திருவள்ளூரின் படம் உள்ள தங்க நாணயம் வெளியிட்டவர்.

**ஜி.யு.போப்**

- பிரான்ஸ் நாட்டினர் - 19வது வயதில் தமிழகம் வந்தார். மகாவித்துவான். இராமானுஜக் கவிராயரிடம் தமிழ் பயின்றார்.
- Poet **of Tamil land, The lives of Tamil Saints** என்னும் நூல்களை இயற்றினார்.
- **Elementory Tamil Grammer** திரு.வி.க. இதன் மூலம் தமிழ் இலக்கணம் பயின்றுள்ளார்.
- மணிமேகலை, சிவஞானபோதம் ஆங்கிலம் மொழிபெயர்ப்பு
- கல்லறையில் தமிழ் மாணவன் என்று எழுதக் கூறியவர்.

**பெர்சிவல்**

- 2000 தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டி அகராதியை வெளியிட்டவர்.

**ஈழம்**

- நல்லூர் ஞானப்பிரகாசர்
- தனிநாயர் அடிகளார் - Tamil Culture என்ற ஆங்கில இதழ்
- தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள்
- வேதநாயக சாஸ்திரிகள்
- பெத்லகேம் குறவஞ்சி, ஞானதச்சன் நாடகம்

**மாயூரம் வேதநாயகம் பிள்ளை**

- பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம்
- சர்வசமய சமரசக் கீர்த்தனை

**H.A. கிருஷ்ணப்பிள்ளை**

- **ஜான் பனியன் எழுதிய The Pilgrims Progress என்னும் நூலைத் தமிழில் 'இரட்சண்ய யாத்ரிகம்' என்ற பெயரில் வெளியிட்டார்.**
- **இவரைக் கிறித்தவக் கம்பர் என்பர்.**
- **இவர் எழுதிய இரட்சண்ய மனோகரம் - கிறித்தவர் தேவாரம்**

**தஞ்சை ஆபிரகாம் - பண்டிதர்**

- **கருணாமிர்தசாகரம்** - தமிழர்கள் 103 பண்களைக் கண்டறிந்தனர்.

**ஆ.வரகுண பாண்டியன்**

- பாணர்கை வழி எனப்படும் யாழ் நூல்

**தேவநேயப் பாவாணர்**

- 23 மொழி வல்லுனர் - இந்தியாவில் தமிழ் எவ்வாறு கெடும்? தமிழ்மொழி வரலாறும் வடமொழி வரலாறும், செம்மொழி (ஆங்கில நூல்) தமிழ் வரலாறு

RADIAN IAS ACADEMY

- ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் **தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.**
- **எனக்கு** மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உன்டென்றால் அது கலிங்கத்துபரணியே என்றார் பேரறிஞர் அண்ணா.
- **கொப்பத்துப்பரணி:** இப்போது கிடைக்கின்ற பரணி நூல்களுள் தொன்மையானது கொப்பத்துப் பரணி. பரணி நூல்களுள் மிகப் பழமையானது முதல் குலோத்துங்கன் மீது பாடப் பெற்ற கலிங்கத்துப் பரணியாகும். அதற்கும் முந்தையது கொப்பத்துப் பரணி. இரண்டாம் இராசேந்திர சோழன் (கி.பி.1051-63), மேலைச் சாளுக்கிய மன்னனான ஆகவமல்லனுடன் கொப்பம் என்ற இடத்தில் போரிட்டு வென்றான். இப்போர் பற்றிக் கீழ்க்கண்ட நூல்களில் காணப்படுகின்றன.
- கலிங்கத்துப்பரணி (194)
- விக்கிரம சோழனுலா (19-20)
- வீர சோழியம் (உரை மேற்கோள், பன்னிரு ஆசிரியர் சந்த விருத்தம்) இவ்வாறு போர் வென்ற இராசேந்திரன் மீது ஒரு பரணிப் பிரபந்தம் பாடப்பெற்ற செய்தி இராசராசன் உலாவிலும் உள்ளதாக மு. அருணாசலம் கூறுகிறார்.

**முத்தொள்ளாயிரம்**

- மூவேந்தர்களைப் **பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டது.** ஆயினும் இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக 108 வெண்பாக்களும் பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொண்ட முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன. **சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.**

**மேற்கோள்:**

- சேரன் - பல்யானை மன்னீர் படுநிறை தந்துய்மின்
- சோழன் - சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
- பாண்டியன் - மருப்பூசியாக மறங்கனல்வேல் மன்னர்

**சொற்பொருள்:**

**தமிழ்விடுதூது**

- 96 சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று, **வெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அஃறிணைப் பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்.**
- **தொடை வாங்கி வா என்று கூறும் இலக்கியம் தூது** (தொடை-மாலை)
- **எகினம்** (அன்னம்) மயில். கிள்ளை (கிளி), மேகம், பூவை (நாகண வாய்ப்பறவை) பாங்கி (தோழி) குயில், நெஞ்சம், தென்றல், பிரமரம் (வண்டு) போன்ற பத்தையும் தூதாக அனுப்புவர்.
- **பத்து தூதையும் பாடியவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.**
- **தமிழின் முதல் தூது உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய நெஞ்சு விடுதூது.** தமிழ் விடுதூது என்ற நூல் இரண்டு உண்டு. ஒரு நூலை எழுதியவர் அமிர்தம் பிள்ளை. இன்னொரு நூலை எழுதியவர் பெயர் தெரியவில்லை.
- ஆசிரியர் பெயர் தெரியாத தமிழ்விடுதூதில் தலைவி ஒருத்தி மதுரைச் சொக்கநாதரிடம் தமிழைத் தூது அனுப்புகிறாள்.

**நந்திக்கலம்பகம்**

**கலம்பகம்:**

- பல்வகைப் **பாக்களையும் கலந்து** பாடப்படும் **சிற்றிலக்கியம் கலம்பகம்.**
- **அந்தாதித் தொடை அமையப் பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்.**
- **அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து பாடப்படும் இலக்கியம் கலம்பகம்.**
- கலம்-12, பகம்-6-18 உறுப்புகள் இடம் பெறும். ஊசல், பாண், மதங்கு, மடங்கு, கைக்கிளை, சித்து, களி, மறம், காலம், இரங்கல், சம்பிரதம், கார், தூது போன்ற 18 உறுப்புகளைக் கொண்டது கலம்பகம்.
- பாடல் எண்ணிக்கை ஒவ்வொருவரைப்பாடும் போதும் மாறுபடும்.
- தேவர்-100 பாடல் அமைச்சர் - 70 பாடல்
- முனிவர்-95 பாடல் வணிகர் - 50 பாடல்
- மன்னர்-90 பாடல் வேளாளர் - 30 பாடல்
- அரசர் மீது 100 பாடல்கள் கொண்டு பாடப்பட்ட நூல் நந்திக் கலம்பகம்.
- மூன்றாம் நந்திவர்மனின் பெருமையைப் போற்றும் நூலான இந்நூல் நந்திக்கலம்பகம் எனப் பெயர் பெற்றது. இந்நூலின் காலம் கி.பி 9ம் நூற்றாண்டு.
- முதல் **கலம்பக நூல் நந்திக்கலம்பகமே**
- இதனை எழுதியவர் பெயர் தெரியவில்லை.
- நந்திக் **கலம்பகத்தில் தெள்ளாற்றுப்போர் வெற்றி மிகுதியாகப் பாடப்பட்டுள்ளது.**
- கலம்பகத்தால் **இறந்த மன்னன் மூன்றாம் நந்திவர்மன்.**
- அறம் **வைத்துப்** பாடப்படும் **இலக்கியம்.**

RADIAN IAS ACADEMY

- *கூத்தனூரில்* கலைமகளுக்கு கோயில் கட்டியவர்.
- **கவிராட்சதன், காளக்கவி ஆகிய பட்டங்களை பெற்றவர்.**

**முக்கூடற்பள்ளு:**

**பள்ளு:**

- 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று
- உழவர் வாழ்வைக் கூறுவது
- மருதநில நூல்
- ஏசல் இடம்பெறும் இலக்கியம்
- உழத்திப்பாட்டு என்ற வேறுபெயரும் உண்டு.
- முதற்பள்ளு நூல் முக்கூடற்பள்ளு.
- தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை வனப்பில் புலன் என்னும் இலக்கிய வகை பள்ளுவிற்குப் பொருந்தும் என்பர்.
- **திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கில் தன்பொருணை (தாமிரபரணி), சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகளும் கலக்கும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர் முக்கூடல்.** இதற்கு ஆசூர் வடகரை நாடு என்ற பெயர் உண்டு. மூத்தபள்ளியின் ஊர் இது. தெற்குப் பகுதியில் மருதசீர் வீற்றிருக்கும் ஊர் மருதூர். இளையபள்ளியின் ஊர். இதனால் சைவம், வைணவம் என இருமனைவிகளைத் திருமணம் செய்த பள்ளன் அழகர் குடும்பன் அவன் பெருமை கூறல், நாட்டு வளம், குறிகேட்டல், மழை வேண்டி வழிபடல், மழைக்குறியோர்தல், ஆற்றில் நீர்வரவு முதலான பல உறுப்புகளைக் கொண்டது பள்ளு இலக்கியம்.
- **இந்நூலை** இயற்றியவர் யார் என்று தெரியவில்லை இதன் நாடக வடிவ ஆசிரியர் என்னாயினாப்புலவர்.

**காவடிச்சிந்து:**

- இதனைப் பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்.
- இவர் எழுதிய மற்ற நூல்கள்: வீரை அந்தாதி, கோமதி அந்தாதி, வீரைப்பிள்ளைத் தமிழ் முதலியன. காவடிச் சிந்து இசைப் பாவகைகளில் ஒன்றாகிய சிந்துப் பாவகை வடிவங்களில் ஒன்று. கலம்பக உறுப்பாக வரும் சிந்து வேறு.
- சிந்து என்பது இசைத்தமிழ் பாகுபாடுகளில் ஒன்றாகும். அது ஐந்து இசை உறுப்புகளால் ஆன யாப்பு. எடுப்பு 1, தொடுப்பு 1, உறுப்பு 3 என்று 5 உறுப்புகளைக் கொண்டது 'சிந்து' பாடல். (அவை பல்லவி, அநுபல்லவி, மூன்று கண்ணிகள் அடங்கிய சரணம் ஆகும்).
- காவடிச் சிந்து பல்லவியும் அநுபல்லவியும் இன்றிச் சரணங்களுக்குரிய கண்ணிகளை மாத்திரம் பெற்று வரும். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து என்னும் சிற்றிலக்கியத்தில் பலராலும் போற்றப்படும் நூலாகும்.
- இது காவடி ஆட்டத்திற்குப் பாடப்படும் இசைப் பாவகையாகும். தமிழ் நாட்டிலே பண்டைக்காலம் தொடக்கம் பேணப்பட்டு வரும் ஒரு நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச் சிந்து எனலாம். முற்காலத்திலே முருகப் பெருமானின் வழிபாட்டிற்காக பால் எடுத்து வருபவர்கள் ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வது வழக்கம். அப்படிச் செல்லும் பொழுது அவர்களின் ஆட்டத்திற்குப் பாடப்படும் பாடல் வகைகளிலிருந்து இக்காவடிச் சிந்து என்ற பாவடிவம் தோன்றி உருவாகியது.
- சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்.

**திருவேங்கடத்தந்தாதி:**

- சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று அந்தாதியாகும். அந்தம் என்ற சொல்லுக்கு இறுதி என்றும் ஆதி என்ற சொல்லுக்கு முதல் என்றும் பொருள். ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ சீரோ அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும். இதனைச் சொற்றொடர் நிலை என்றும் வழங்குவர்.
- திருவேங்கடத்தில் கோயில் கொண்டிருக்கும் திருமாலின் அருளை வேண்டிப் பாடப்பெற்ற அந்தாதி நூல்.
- இந்நூலைப் பாடியவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார். 17ம் நூற்றாண்டில் தோன்றிய இவர் அழகிய மணவாள தாசர் எனவும் அழைக்கப்பட்டார். தெய்வக்கவி என்று பொருள்படும் "திவ்வியகவி" என்ற பெயராலும் இவரை அழைத்தனர். இவர் இயற்றிய எட்டு நூல்களை அஷ்ட பிரபந்தங்கள் என்பர். "அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப்பண்டிதன்" என்பர். 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்த இவர் பின்னர் இறைத்தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

**முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்**

- எழுதியவர் - குமரகுருபரர்
- இயற்றிய நூல்கள் - கந்தர் கலிவெண்பா மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்

பெற்றது. இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது. **இடையே சிவகாமி சரிதம் என்ற துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.**

- **இந்நூலின்** ஆசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை

நூல்கள்

- **நூல்** தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி.

**மேற்கோள்:**

- **அந்தணர்** வளர்க்குஞ் செந்தழல் தன்னிலும்
  நாட்டாபி மானமுள் மூட்டிய சினத்தீ,

**பாஞ்சாலி சபதம்:**

- இந்திர மாநகரை ஆண்டு வந்த பாண்டவர் மண்டபம் ஒன்றைக் கட்டி, அதில் வேள்வி நடத்தினர். அவ்வேள்வியில் கலந்து கொண்ட பேரரசர்களும் சிற்றரசர்களும் அன்பளிப்புகள் வழங்கியதைக் கண்டு பொறாமைக் கொண்டான் அத்தினாபுர மன்னன் துரியோதனன்.
- மேலும் அவன், பாஞ்சாலியின் நகைப்புக்கும் ஆளானதால் பாண்டவர் வாழ்வை எப்படியாவது அழிக்க வேண்டும் என எண்ணினான் அதற்காக துரியோதனன் தன் மாமனான சகுனியின் உதவியை நாடினான்.
- சகுனி, நாமும் ஒரு மண்டபம் அமைத்து அதனைக் காண பாண்டவரை அழைப்போம் : தருமனைச் சூதாடச் செய்து நாம் நினைத்ததை முடிப்போம் என்றான் அதில் கௌரவர்கள் வென்றதும் பாஞ்சாலியை அவமரியாதை செய்ததும் அதற்குப் பாஞ்சாலி செய்த சபதத்தையும் பாரதியார் எழுதியுள்ளார்.
- பாஞ்சாலி சபதம் பாரதியாரின் முப்பெரும் காப்பியங்களுள் ஒன்று. இது வியாசர் எழுதிய மகாபாரதத்தை தழுவி எழுதப்பட்டது. பாஞ்சாலி சபதம் இரு பாகங்களால் கொண்டது. இது சூழ்ச்சி சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகலிரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்களையும் 412 பாடல்களையும் கொண்டது.

**குயில் பாட்டு**

- பாரதியாரின் முப்பெரும் காவியங்களுள் ஒன்று குயில்பாட்டு (பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கு இலக்குமி அம்மையாருக்கும் மகனாக பிறந்தவர்.
- தேசிய கவி, மகாகவி என்றும் போற்றப்பட்டவர்.
- இந்தியா, விஜயா என்ற இதழ்களை வெளியிட்டவர்.
- சுதேச மித்திரன் ஆசிரியராக சில காலம் விளங்கினார்.
- பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய கவிதைகளை மட்டுமின்றி ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை நூல்களையும் எழுதியவர். **இவருடைய வசனக் கவிதைகள் வால்ட் விட்மன், கலீல் கிப்ரான் முதலிய கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிடத்தக்கவை.**

**மேற்கோள்:**

- கானப்பறவை கலகலெனு மோசையிலும்
  காற்று மரங்களிடைக் காட்டு மிசையினிலும்

**காளமேகப் புலவர்:**

- கும்பகோணத்தின் அருகில் உள்ள நந்திக்கிராமம் எனவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் அவர் பிறந்த ஊரைக் குறிப்பிடுவர்.

இயற்பெயர்: வரதன்

- திருவரங்கக் கோவில் மடப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தில் இருந்து சைவ சமயத்திற்கு மாறினார். கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் காளமேகம் என அழைக்கப் பெற்றார். இவர், **இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.**

**மேற்கோள்:**

- ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச்

**இரட்டுறமொழிதல்:**

- ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது சிலேடை எனப்படும். இதனை 'இரட்டுற மொழிதல்' எனவும் கூறுவர்.
  இரண்டு+உற+மொழிதல் - இரட்டுற மொழிதல்.

**அழகிய சொக்கநாதப் புலவர்**

- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தச்சநல்லூரில் பிறந்தவர். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தனிப்பாடல்களை இயற்றியவர் இவர் தம் காலம் கி.பி.19ம் நூற்றாண்டு.

மேற்கோள்:

- பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது.

RADIAN IAS ACADEMY

**திரிகூட ராசப்பக் கவிராயர்**:

- திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றால மாலை, திருக்குற்றால உலா, திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ்

**குமர குருபர சுவாமிகள்**:

- முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம் (குறவஞ்சியின் முன்னோடி), காசிக் கலம்பகம், சகலகலா வல்லி மாலை, சிதம்பரச் செய்யுட் கோவை, நீதிநெறி விளக்கம்

**உமறுப்புலவர்**:

- சீறாப்புராணம், முதுமொழிமாலை, திருமண வாழ்த்து, சீதக்காதி நொண்டி நாடகம்

**மீனாட்சி சுந்தரம் பிள்ளை**:

- சேக்கிழார் பிள்ளைத் தமிழ், அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், தலபுராண வேந்தர்.

**கச்சியப்பர்**: கந்தபுராணம்

**சேக்கிழார்**: பெரியபுராணம்

**புகழேந்தி**: நளவெண்பா

**வில்லிப்புத்திரர்**: வில்லிபாரதம்

**ஆண்டாள்**: திருப்பாவை, நாச்சியார் திருமொழி

**அருணகிரிநாதர்**:

- மயில்விருத்தம், திருப்புகழ், கந்தனலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம்

**கொங்குவேளிர்**: பெருங்கதை

**உலகநாதர்**: உலக நீதி

**அதிவீரராமப் பாண்டியர்**: வெற்றிவேற்கை, நைடதம்

**வீரமாமுனிவர்**:

- உரைநடை நூல்கள், ஞான உபதேசம், வாமன் கதை, பரமார்த்த குருகதை (தமிழின் முதல் எள்ளல் நூல்), பர்வத காண்டம், தேம்பாவணி (காப்பியம்), வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகம் மறுத்தல், திருக்காவலூர்க் கலம்பகம், கலிவெண்பா, அடைக்கல மாலை அந்தாதி, அன்னை அழுங்கல் அந்தாதி, தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், சதுர அகராதி, ஆங்கில தமிழ் அகராதி

**சுப்பிரமணிய பாரதியார்**:

- கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, விநாயகர், நான்மணிமாலை, வேதாந்த பாடல்கள், ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு, திண்டிம சாஸ்திரி, சொர்ண குமாரி.

**பாரதிதாசன்**:

- பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இளைஞர் இலக்கியம், அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், மணிமேகலை வெண்பா, இசையமுது, கண்ணகி புரட்சிக் காப்பியம், பிசிராந்தையார், தமிழச்சியின் கத்தி, குறிஞ்சி திரட்டு, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சௌமியன், கலை கூத்தாடியின் காதல்

.

**H.A.கிருஷ்ணபிள்ளை**:

- இரட்சணிய யாத்திரிகம், இரட்சணியமனோகரம் (கிறித்துவ தேவாரம்), இரட்சணிய குறம்.

**சுந்தரம் பிள்ளை**: மனோன்மணியம்

**புலவர் குழந்தை**:

- குழந்தை பாடல்கள், உலக பெரியோர் கென்னடி, இராவண காவியம், அரசியல் அலங்காரம், காமஞ்சரி, கொங்குநாடு

**கவிமணிய தேசிய விநாயகம் பிள்ளை**:

- மலரும் மாலையும், இளந்தென்றல், உறைமணிகள், பசுவும் கன்றும், குழந்தைச் செல்வம், மருமக்கள் வழி மான்மியம், உமர் கய்யாம் பாடல்கள், ஆசிய ஜோதி

**திரு.வி.கல்யாண சுந்தரனார்**:

- மனித வாழ்க்கையும், காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், புதுமை வேட்டல், பொதுமை வேட்டல், வாழ்க்கை துணை நலம், சீர்திருத்தம் (அ) இளமை விருந்து, கிருஷ்துவின் அருள் வேட்டல், தேசபக்தன் (நாளிதழ்), நவசக்தி (கிழமையிதழ்)

**நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை**:

- என்கதை (தன்வாழ்க்கை வரலாறு), தேமதுரத்தமிழே, சங்கொலி, தமிழ்த்தேன், மலைக்கண்ணன், கவிதாஞ்சலி, தமிழன் இதயம், அவனும் அவளும்.

RADIAN IAS ACADEMY

**பம்மல் சம்பந்த முதலியார்**:

- மனோகரா, சபாபதி, மேகபதி, வாணிபுரத்து வணிகன், அமலாதித்தன்

**சங்கரதாஸ் சுவாமிகள்**:

- அபிமன்யு, சுந்தரி, பவளக்கொடி, சதி அனுசூயா, பிரகலாதன், சிறுதொண்டர் புராணம், வள்ளி திருமணம்

**பி.எஸ். இராமையா**:

- டாக்டருக்கு மருந்து, தேரோட்டியின் மகன், தழும்பு, மலரும் மணமும், பார்கடல்.

**கே.பாலச்சந்தர்**:

- நீர்க்குமிழி, மெழுகுவர்த்தி, நாணல், எதிர் நீச்சல், சர்வர் சுந்தரம், மேஜர் சந்திர காந்த், நவகிரகம்

**சோ. இராமசாமி**:

- யாருக்கும் வெட்கமில்லை, உண்மையே உன் விலை என்ன?, இரவில் சென்னை, முகமது பின் துக்ளக், மனம் ஒரு குரங்கு

**ஜெயகாந்தன்**:

- சில நேரங்களில் சில மனிதர்கள், உதயம், ஒரு பிடிச்சோறு, இனிப்பும் கசப்பும்

**கே. சுந்தரம்**: வியட்நாம் வீடு

**நா. பார்த்தசாரதி**:

- வலம்புரிச் சங்கு, நெருப்புக் கனிகள், குறிஞ்சி மலர், பாண்டியன் தேவி, சமுதாய வீதி, சத்திய வெள்ளம், துளசி மாடம்.

**மாணிக்கவாசகர்**:

- திருவெம்பாவை, திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவை (என்ற) திருக்கோவையார், சிவன் திருப்பள்ளி எழுச்சி

**சிவப்பிரகாச சுவாமிகள்**:

- நால்வர் நான்மணிமாலை, நன்னெறி, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கைக் கோவை, பிரபுலிங்க லீலை, திருவெங்கை உலா.

**இராஜாஜி**: வியாசர் விருந்து, சக்கரவர்த்தி திருமகன்

**கு.ப. இராஜகோபாலன்**:

- காணாமலே காதல், புனர் ஜென்மம், கனகாம்பரம், விடியுமா?

**புதுமைபித்தன்**:

- அகல்யை, சாபவிமோசனம், அன்று இரவு, கடவுளும் கந்தசாமி பிள்ளையும், காலனும் கிழவியும், கயிற்றரவு, துன்பக்கேணி, வழி, நினைவுப்பாதை, பொன்னகரம், ஆண்மை

**கி.வா.ஜகந்நாதன்**: பவளமல்லிகை

**தி.ஜ.ர**: மரத்தடிக் கடவுள், சந்தானக் காவடி

**பண்டித நடேச சாஸ்திரி**: திராவிட நாட்டுக் கதைகள்

**மலர்மன்னன்**: அற்ப ஜீவிகள்

**மாயாவி**: அகதி

**மு.மு. இஸ்மாயில்**:

- இலக்கிய மலர்கள், சமுத்திரம், வேரில் பழுத்த பலா

**வ.வே.சுப்பிரமணிய அய்யர்**: குளத்தங்கரை அரசமரம்

**தமிழ் ஒளி (விஜயரங்கம்)**:

- மாதவி காவியம், புத்தர் காவியம்

**பட்டுக்கோட்டை பிரபாகர்**:

- காதல் ஒத்திகை, மூன்றாம் கை

**மு. மேத்தா**:

- சோழநிலா, கண்ணீர்ப்பூக்கள், விடியல் பொழுதுகள், சூரியப் பறவைகள், ஆகாசத்துக்கு அடுத்த வீடு, (சாகித்ய அகாடமி விருது-2006)

**அழ. வள்ளியப்பா**:

- சிரிக்கும் பூக்கள், வெற்றிக்கு வழி, நேருவும் குழந்தைகளும்

**ஜெகச்சிற்பி**: சொர்க்கத்தின் நிழல் ஞானக்குயில்

**மணியன்**: சொல்லத்தான் நினைக்கிறேன்

**விந்தன்**: முல்லைக் கொடியன்

RADIAN IAS ACADEMY

**மு.கதிரேச செட்டியார்**: பண்டிதமணி

**அறிஞர் அண்ணா**:
- பேரறிஞர், தென்னாட்டு பெர்னாட்ஷா, தென்னாட்டு காந்தி

**மு. வரதராசன்**: தமிழ்நாட்டு பெர்னாட்ஷா

**பம்மல் சம்பந்த முதலியார்**: நாடக தந்தை

**சங்கரதாஸ் சுவாமிகள்**:
- நாடகத் தலைமையாசிரியர், நாடக இமயமலை

**இராசா அண்ணாமலை செட்டியார்**:
தனித்தமிழ் இசைக்காவலர்

**வாணிதாசன்**:
- தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வெர்த், கவிஞரேறு, பாவலர்மணி

**தேசிய விநாயகம் பிள்ளை**: கவிமணி

**அழ. வள்ளியப்பா**: குழந்தைக் கவிஞர்

**ஜெயகாந்தன்**: தென் இந்தியாவின் மாப்பஸான்

**வால்ட்டர் ஸ்காட்**: உலக சிறுகதையின் தந்தை

**டேவிட் விர்த் கிரடித்**: உலக சினிமாவின் தந்தை

**தாதா சாகிப் பால்கே**: இந்திய சினிமாவின் தந்தை

**கி.ஆ.பெ.விஸ்வநாதன்**: முத்தமிழ்க் காவலர்

**அண்ணாமலை ரெட்டியார்**: சிந்து கவிதை பாடியவர்

**H.A. கிருட்டிணப்பிள்ளை**: கிறித்துவக் கம்பர்

**நாமக்கல் கவிஞர்**: ஆஸ்தான கவிஞர்

**ராமலிங்கம் பிள்ளை**: காந்தியக் கவிஞர்

**மீனாட்சி சுந்தரம் பிள்ளை**: மகாவித்துவான்

**இரா.பி.சேதுபிள்ளை**:
- சொல்லின் செல்வர் (இலக்கியம்)

**ஈ.வெ.கி.சம்பத்**: சொல்லின் செல்வர் (அரசியல்)

**ஈ.வெ.ராமசாமி**:
- பெரியார், பகுத்தறிவு பகலவன், சுயமரியாதைச் சுடர்

**இராஜாஜி**: மூதறிஞர்

**வ.உ.சிதம்பரனார்**:
- செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், தென்னாட்டுத் திலகர்

**க. சுப்பிரணியப் பிள்ளை**: க.சு. பிள்ளை

**வெங்கடாசலம் பிள்ளை**: கரந்தை கவியரசு

**M.S. சுப்புலட்சுமி**: இசைக்குயில்

**வேத இரத்தினப் பிள்ளை**: சர்தார்

**வி. முனுசாமி**: திருக்குறளார்

**செய்குத்தம்பியார்**: தசாவதானி

**அப்துல் இரகுமான்**: கவிக்கோ

**ம.பொ.சிவஞானம்**: சிலம்புச் செல்வர்

**தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்**:
- பன்மொழிப்புலவர், காமராசர் பல்கலைக்கழக முதல் துணை வேந்தர்

**சுல்தான் அப்துல் காதர்**: குணங்குடி மஸ்தான்

**கனக சுப்புரத்தினம்**: பாரதிதாசன்

**மருணீக்கியார்**: திருநாவுக்கரசர்

**முத்தையா**: கண்ணதாசன்

**ஜோசப்பெஸ்கி**: வீரமாமுனிவர்

**இராபர்ட்-டி-நொபிலி**: தத்துவபோதகர்

RADIAN IAS ACADEMY

**நூல்கள்:**

- மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், காந்தளூர் சாலை, தேவியின் கீர்த்தனைகள், உமர் கய்யாம் பாடல்கள்.
- ஆர்னால்ட் எழுதிய "லைட் ஆப் ஆசியா" என்ற நூலின் மொழிபெயர்ப்பு ஆசிய ஜோதி.
- பாரசீக மொழியில் உமர் கய்யாம் பாடிய ரூபாயதின் மொழிபெயர்ப்பு எட்வர்ட் பாட்ஸ் ஜெரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பு அதனைத் தழுவி எழுந்தது உமர்கய்யாம் பாடல்கள். 1940 ல் 'கவிமணி' பட்டம் பெற்றார்.
- **நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை (அக்டோபர் 19, 1888 - ஆகஸ்ட் 24, 1972)** தமிழறிஞரும், கவிஞரும் ஆவார். கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது போன்ற தேசபக்தி பாடல்களைப் பாடிய இவர் தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றியவர் அரசவைக் கவிஞர் பதவியும் 'பத்ம பூஷண்' பட்டமும் பெற்றவர். சாகித்ய அகாடமியின் தமிழ் பிரதிநிதியாய் பணியாற்றியவர்.

**புகழ்பெற்ற மேற்கோள்கள்**

- கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
- தமிழன் என்றோர் இனமுன்று தனியே அவற்கோர் குணமுண்டு
- தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள். கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

**எழுதிய நூல்கள்**

- மலைக்கள்ளன் (நாவல்)
- காணாமல் போன கல்யாணப் பெண் (நாவல்)
- பிரார்த்தனை (கவிதை)
- நாமக்கல் கவிஞர் பாடல்கள்
- திருக்குறளும் பரிமேலழகரும்
- திருவள்ளுவர் திடுக்கிடுவார்
- திருக்குறள் புது உரை
- கம்பனும் வால்மீகியும்
- கம்பன் கவிதை இன்பக் குவியல்
- என்கதை (சுயசரிதம்)
- அவனும் அவளும் (கவிதை)
- சங்கொலி (கவிதை)
- மாமன் மகள் (நாடகம்)
- அரவணை சுந்தரம் (நாடகம்)

**நாமக்கல் கவிஞர்**

- இவரால் வரையப்பட்ட முதல் ஓவியம் (இராமகிருஷ்ண பரமஹம்சர்)
- உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்று சிறை சென்றவர்
- தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர்
- தமிழக அரசின் சட்ட மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தவர்
- ஆஸ்தான கவி மற்றும் காந்திய கவிஞர் இவரின் சிறப்புப் பெயர்.

## 39) மரபுக்கவிதை

**முடியரசன்**

- இயற்பெயர்: துரைராஜ் திராவிட இயக்கக் கவிஞர்
- தமிழகத்தின் வானம்பாடி என அழைக்கப்பட்டவர்.
- பாரதிதாசன் பரம்பரைக் கவிஞரில் மூத்தவர் இவர். காரைக்குடி மீ.சு. உயர்நிலை பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- **இவரது கவிதைகளைச் சாகித்ய அகாடமி (இந்தி மற்றும் ஆங்கிலத்திலும்) மொழிபெயர்த்துள்ளது.**
- **பறம்புமலையில் நடைபெற்ற விழாவில் குன்றக்குடியாரிடம் "கவியரசு" பட்டம் பெற்றவர்.**
- சாதி மறுப்பு திருமணம் செய்த கவிஞர்

**நூல்கள்:**

- முடியரசன் கவிதைகள், காப்பியப் பாவை, பூங்கொடி (தமிழ் இயக்கப் போராட்ட வரலாறு)
- **நாடகம்**: ஊன்றுகோல் (பண்டிதமணி கதிரேச செட்டியார் பற்றியது) பூங்கொடி தமிழக அரசின் விருது பெற்றது..

**வாணிதாசன்:**

- **இயற்பெயர்** எத்திராஜ் (எ) அரங்கசாமி
- **பாரதிதாசன்** பரம்பரை, ரமி என்று புனைப்பெயர் உண்டு தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த் பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக்கல்வி கற்றவர்.

**நூல்கள்:**

- தமிழச்சி, கொடி முல்லை, எழிலோவியம், தீர்த்தயாத்திரை, இன்ப இலக்கியம், பொங்கல்பரிசு, இரவு வரவில்லை, சிரித்த நுணா, இனிக்கும் பாட்டு எழில் விருத்தம், தொடுவானம்.
- கவிஞரேறு, பாவலர் மணி பாவலர் மன்னன் என்ற பட்டம் பெற்றவர்.

**சுரதா:**

- (நவம்பர் 23, 1921 - ஜீன் 19, 2006) தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். புரட்சிக் கவிஞர்

RADIAN IAS ACADEMY

- திராவிட இயக்கக் கவிஞர்.

**கவிராயர் பட்டம் பெற்றவர் - பகுத்தறிவுக் கவிஞர்.**

- சீர்திருத்த கருத்தை முதன் முதலில் திரைப்பட பாடலில் புகுத்தியவர்.
- திருக்குறள் கருத்துகளை மிகுதியாக பயன்படுத்தியவர்.

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்:**

- பொது உடைமைக் கருத்துக்களைத் திரைப்படப் பாடலில் புகுத்தியவர்.
- எனது **வலதுகை என்று பாரதிதாசனால் புகழப்பட்டவர்**. அவர் கோட்டை நான் பேட்டை என்று வேடிக்கையாகச் சொன்னவர் உடுமலை நாராயணகவி.
- **காலம்: 13.04.1930-08.10.1959**
- மக்கள் கவிஞர் என்று புகழப்பட்டவர்.
- **பெற்றோர்:** அருணாச்சலம் பிள்ளை - விசாலாட்சி அம்மாள்
- **ஊர்:** செங்கப்படுத்தான் காடு, புதுக்கோட்டை தாலுக்கா, பாரதியாரால் நடத்தப்பட்ட குயில் பத்திரிக்கையில் பணியாற்றினார். **பொதுவுடைமைக் கவிஞர், மக்கள் கவிஞர் என்று அழைக்கப்பட்டவர்.** 56 திரைப்படப் பாடல் பாடினார். நாட்டுப்புறப் பாடல் மெட்டில் நாட்டம் கொண்டவர்.

**மருதகாசி**

- இவரின் ஆசிரியர் பாபநாசம் சிவனின் சகோதரர் ராஜகோபாலையர்.
- திரை இசைப்பாடல்கள் எழுதுவதில் புகழ் பெற்றவர். மாடர்ன் தியேட்டரின் இரட்டைக் கவிஞர்கள் மருதகாசி - கா.மு.ஷெரிப்

**திரைக்கவித் திலகம் என்ற பட்டம் பெற்றவர்.**

- முதல் முதலில் எழுதிய படம் "மாயாவதி" 1968-ல் கலைமாமணி விருது. சம்பூர்ண ராமாயணப் படப் பாடல் முழுவதும் எழுதியவர்.

## 40) புதுக்கவிதை

- "விருந்தே தானும்
- புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"என்ற தொல்காப்பியர் கூறும் வனப்பின் 8ல் ஒன்றான விருந்தின் கீழ் கூறுவர்.
- **முதன் முதலில் புதுக்கவிதை எழுதியவர் வால்ட் விட்மன் (புல்லின் இதழ்கள் என்ற நூல்)**
- **தமிழில் முதல் முயற்சி - பாரதியார் - வசனக் கவிதை என்பர்.**
- **தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை ந.பிச்சமூர்த்தி முதலில் புதுக் கவிதையை வெளியிட்ட இதழ் மணிக்கொடி.**

**ந. பிச்சமூர்த்தி:**

- **இயற்பெயர்** ந.வேங்கட மகாலிங்கம்
- **ஊர்:** கும்பகோணம்
- **காலம்: 15.08.1900-04.12.1976** வரை
- வழக்கரிஞராகவும் கோவில் நிர்வாக அலுவலராகவும் பணியாற்றினார்.அனைவராலும் பாராட்டப்பட்ட இவரது கவிதை "பெட்டிகடை நாராயணன்"

**நூல்கள்:**

- கிளிக்குஞ்சு, பூக்காரி, வழித்துணை, கிளிக்கூண்டு
- தமிழ்ப்புதுக் கவிதையின் தந்தை, முன்னோடி மணிக்கொடியில் எழுதியவர். புதுக்கவிதை மரபில் திருப்பத்தை ஏற்படுத்தியவர்.

**சி.சு.செல்லப்பா:**

- மணிக்கொடி இதழில் எழுதியவர்
- எழுத்து இதழை 1959-ல் தொடங்கினார்.
- நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- காந்திய கொள்கை மீது பற்றும் ஈடுபாடும் கொண்டவர். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர். இவரின் சிறுகதை (சரசாவின் பொம்மை) அனைவராலும் புகழப்பட்டது.

**நூல்கள்:**

- மாற்று இதயம், நீ இன்று இருந்தால், புதுக்குரல்

**தருமு சிவராமு**

- **இயற்பெயர்** "தருமு அருப் சிவராமு"
- **புனைபெயர்கள்:** பானுசந்திரன், தருமு, பிரமிள்
- இலங்கை திரிகோண மலையைச் சேர்ந்தவர்.
- **தமிழின் மாமேதை என டி.ஜானகிராமனால் பாராட்டப்பட்டவர்.**
- எழுத்து காலகட்டம், மறுமலர்ச்சி கால புதுக்கவிஞர், கைப்பிடியளவு கடல், மேல் நோக்கிய பயணம், கண்ணாடியுள்ளிருந்து - படைப்புகள்.

**எழுத்துகால கவிஞர்கள்:**

- பிச்சமூர்த்தி, தருமு சிவராமு, வைதீஸ்வரன், க.நா. சுப்பிரமணியம், பசுவய்யா, வேணுகோபாலன், சி.சு.செல்லப்பா, நகுலன்.

**பசுவய்யா:**

- இயற்பெயர் சுந்தர ராமசாமி. இவரின் படைப்புகள்-

RADIAN IAS ACADEMY

திரைப்பட சங்கம் ஒன்றையும் நடத்தி வந்தார்.

- தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக்கழக விருது பெற்றவர்.
- தேவதேவனைப் பற்றி ஜெயமோகன் முழுமையான திறனாய்வு நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். நவீனத்துவத்திற்குப் பின் தமிழ்க் கவிதை - தேவதேவனை முன்வைத்து என்ற அந்நூல் கவிதா பதிப்பகத்தால் 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
- தமிழினி வெளியீடாக ஜெ.பிரான்ஸிஸ் கிருபா இயக்கத்தில் தேவதேனைப்பற்றி யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற செய்திப்படம் 2007ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.
- இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

**சாலினி இளந்திரையன்:**

- **இயற்பெயர்** கனகசவுந்தரி
- **படைப்புகள்:** இரண்டு குரல்கள், தமிழ்க் கனிகள், தமிழனே தலைமகன், தமிழ் தந்த பெண்கள், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், பண்பாட்டின் படுகுழி, எந்திரக்கலப்பை, புதிய தடங்கள், சங்கத்தமிழரின் மனித நேய மணிநெறிகள்.

**மு. மேத்தா:**

- முழுப்பெயர் முகம்மது மேத்தா படிமக் கவிஞர் புதுக்கவிதை, வரலாற்று நாவல் எனப் பலதுறைகளிலும் புகழ் பெற்றவர்.
- கண்ணீர் பூக்கள், நாயம் ஒரு காவியம் முதலிய தொகுப்புகளைத் தந்தவர். வானம்பாடி இயக்கத்தவர்.
- **ஆகாசத்துக்கு அடுத்தவீடு என்ற படைப்புக்கு சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ளார் (2006)**
- சென்னை மாநில கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். திரைப்பட பாடலாசிரியராகவும் இருப்பவர்.

**நூல்கள்:**

- கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், மனச்சிறகு, முகத்துக்கு முகம், வெளிச்சம் வெளியே இல்லை, அவர்கள் வருகிறார்கள், நடந்த நாடகம், காத்திருந்த காற்று, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், நந்தவன நாட்கள், ஒரு வானம் இரு சிறகு, இதயத்தின் நாற்காலி. வரலாற்று நாவல்: சோழ நிலா

**ஈரோடு தமிழன்பன்**

- இயற்பெயர்: ஜெகதீசன்
- மரபில் **பூத்துப் புதுமையில் கனிந்தவர்**
- சிறந்த ஓவியர் ஆவார்.
- தமிழ்நாடு இயல், இசை, நாடக இயக்க நிர்வாக குழு இயக்குனராக பணியாற்றினார். சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றினார்.
- 1988-**ல் சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.**

**படைப்புகள்**

- தோணி வருகிறது, விடியல் பொழுதுகள், சூரியப் பறவைகள், நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், காலத்திற்கு ஒரு நாள் முந்தி, ஒரு வண்டி சென்ரியூ வணக்கம் வள்ளுவ இவரின் படைப்புகள். வணக்கம் வள்ளுவ புதுக் கவிதையில் சாகித்ய அகாதமி விருது பெற்ற முதல் நூல் (2004-ம் ஆண்டு)

**அப்துல்ரகுமான்:**

- வானம்பாடிக் கவிஞர்
- வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரிப் பேராசிரியராக விளங்கியவர். **மரபில் வேர் பார்த்து புதுமையில் கனி பார்த்தவர்.**
- **கவிக்கோ என்ற பட்டம் பெற்றவர். படிமக் கவிஞர் 1999-ல் சாகித்ய அகாடமி விருது பெற்றவர் (ஆலாபனை)** எனும் கவிதை தொகுப்பிற்காக. மாணவர்களைப் புதுக்கவிதை எழுதத் தூண்டியவர். தமிழக அரசின் "பாரதிதாசன்" விருது பெற்றவர்.

**நூல்கள்:**

- பால்வீதி, நேயர் விருப்பம், சுட்டுவிரல், ஆலாபனை, சொந்தச் சிறைகள், பித்தன், முட்டைவாசிகள், அவளுக்கு நிலா என்று பெயர். 1999-ஆலாபனை சாகித்ய அகாதமி விருது.

**சாலை இளந்திரையன்:**

- **இயற்பெயர்:** மகாலிங்கம்
- **பெற்றோர்:** இராமையா - அன்னலட்சுமி
- **ஊர்:** திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாலை நயினார் பள்ளிவாசல்
- தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராக தமிழ்த்துறை தலைவராய் பணியாற்றினார்.

**காலம்: 06.09.1930 - 04.10.1998**

- 1991 -ல் தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றார் திருப்புமுனை சிந்தனையாளர் எழுச்சி சான்றோன் என அனைவராலும் பாராட்டப்படுபவர். தமிழக அரசின் பாவேந்தர் விருதைப் பெற்றவர். கருத்துக்குப் பெரியாரையும், கவிதைக்குப் புரட்சிக் கவிஞரையும் வழிகாட்டியாகக் கொண்டவர்.

RADIAN IAS ACADEMY

**இலக்கியங்களில் நாடகம் பற்றிய குறிப்புகள்:**

- தொல்காப்பிய மெய்ப்பாட்டில், நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்து இருக்கிறது. கூத்தாட்டவைக் குழாத்தற்றே என்னும் குறள் வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி தெரிய வருகிறது.
- சிலப்பதிகாரத்தில் 'நாடகமேத்தும் நாடகக் கணிகை' என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிடுகிறார்.

**நாடக இலக்கண நூல்கள்:**

- முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடகநூல்கள் நாட்டியத்திற்கும் நாடகத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளன.
- **சிலப்பதிகாரம் நாடகத்தின் திரைச்சீலைகள் பற்றிக் குறிப்பிடுகிறது.**
- **ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்ற திரைச்சீலைகள் பற்றிக் குறிப்பிடுகிறது.**
- **சுவாமி விபுலானந்தரின் மதங்க சூளாமணியும் மறைமலையடிகளின் சாகுந்தலமும் நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.** நாடக ஆசிரியர் பம்மல் சம்மந்தனார் தம் நாடகத் தமிழ் என்னும் நூலில் தொழில்முறை அரங்குகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**காலம் தோறும் நாடகக் கலை**

- ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்மனின் மத்த விலாசம் என்னும் நூல். பதினோறாம் நூற்றாண்டில் இராசராசசோழன் ஆட்சிக்காலத்தில் இராசராசேச்சுர நாடகம். மராத்திய மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் தஞ்சையில் நாடகங்கள் நடத்தப்பட்டன. நாயக்க மன்னர்களின் காலத்தில் குறவஞ்சி, பள்ளு நாடகங்கள் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முஸ்லீம் மதத்தின் தாக்கத்தினால் நொண்டி நாடகங்கள். 18ம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் ராம நாடகம், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரம்.
- **காசி விசுவநாத முதலியாரின் டம்பாச்சாரி விலாசம் தமிழின் முதல் சமூக நாடகம்.**
- **லிட்டன் எழுதிய மறைவழியைத் தழுவி சுந்தரனார் அவர்களால் இயற்றப்பட்ட மனோன்மணியம்.**
- **கதரின் வெற்றி தமிழகத்தில் நடத்தப்பட்ட முதல் தேசிய சமுதாய நாடகம் (கிருஷ்ணசாமிப் பாவன்)**

**சங்கரதாசு சுவாமிகள்: 1867-1922 வரை:**

- **நாடக உலகின் இமயமலை, தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்.**
- **பிரகலாதன்**, சிறுத்தொண்டர், இலவகுசா, பவளக்கொடி அபிமன்யு சுந்தரி, வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி சமரச சன்மார்க்க சபை, பாய்ஸ் கம்பெனி - நாடகக் குழுக்கள் திருமணம் இன்றி துறவு வாழ்க்கை மேற்கொண்டவர்.
- "ஞானப்பழத்தைப் பிழிந்து" எனும் புகழ்பெற்ற பாடலை இயற்றியவர்.
- **இவரால் ஒரே நாளில் எழுதி முடிக்கப்பட்ட நாடகம்..... "அபிமன்யு சுந்தரி"**

**இயற்றிய நாடகங்கள்:**

- அல்லி அர்ஜீனா, கோவலன், இலங்கா தகனம், சதி அனுசியா, சத்தியவான் சாவித்திரி, சதிசுலோசனா, சிறுத்தொண்டர், சிந்தாமணி, சீமந்தினி, பவளக்கொடி, பிரகலாதா, இலவகுசா, சிம்பலின், பார்வதி கல்யாணம், ரோமியோ ஜீலியட் போன்ற 40 நாடகங்கள். இவரின் புராண நாடகங்கள் புகழ் வாய்ந்தவை.இவர் நாடகங்கள் இவர் காலத்தில் அச்சேறவில்லை.யாழ்பாணம் சென்று நாடகம் நடத்தினார். யாழ்ப்பாண நாடகக் குழுவுக்கு ஆசிரியராக இருந்தார். நடிகர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வலியுறுத்தியவர்.

**பம்மல் சம்பந்தனார்:**

- முழுப்பெயர் திருஞானசம்பந்தம்
- **தமிழ் நாடகத் தந்தை சேக்ஸ்பியரின் நாடகங்களை மொழி பெயர்த்துள்ளார்.**
- **கூத்தாடிகள் என்ற பெயர் கலைஞர்கள் என்று மாறக் காரணமானவர்.**
- சுகுண விலாச சபை - நாடகக் குழு
- வாழ்க்கை 1873-1919
- மாநில கல்லூரி மாணவர்
- நீதிபதியாகப் பணியாற்றியவர்.
- **இவரின் முதல் நாடகம் "புஷ்பவல்லி"**

**இயற்றிய நாடகங்கள்**

**பிறமொழித் தழுவல்:**

- காளிதாசனின் சாகுந்தலை, மாளவிகாக்னிமித்ரம், ஹர்ஸவர்த்தனரின் இரத்தினாவளி, சேக்ஸ்பியரின் ஹேம்லெட் - அமலாதித்தனாக, மேக்பத் - மேகபதியாக வெனிஸ் மெர்ச்சன்ட் - வாணிபுரத்து வணிகன் ஆக வந்தது.

RADIAN IAS ACADEMY

- யாழின் உறுப்புகளாக பச்சை செறிதுளை, போர்வை வறுவாலய், கவைகடை, நரம்பு, கோடு, திவ்வு என்ற எட்டு உறுப்புகளைக் குறிப்பிடுகின்றனர்.

**சிலம்பில் இசை:**

- ஆற்றுவரி, கானல் வரி, ஊசல் வரி, வேட்டுவ விரிப்பாடல்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.

**பல்லவர் காலத்தில் இசை:**

- மகேந்திரவர்மன் சங்கீரணம் என்னும் தாளத்தைக் கண்டறிந்ததால் சங்கீரண சாதி எனப்பட்டான். பரிவாதினி என்னும் வீணையிலும் வல்லவனாக விளங்கினான்.
- குடுமியான் **மலையில் மகேந்திரவர்மனின் இசைக் கல்வெட்டு உள்ளது.**
- இராசசிம்மன் வீணா நாரதன், வாத்திய வித்தியாதரன் எனப் புகழப்பட்டான்.

**சோழர் காலத்தில் இசை:**

- ஆனாய நாயனாரின் இசையைக் கேட்டு மரங்களும், மலையருவிகளும் கான்யாறும் கடலும், இடியும் முகிலும் கூட அசைவற்று நின்றதாகச் சேக்கிழார் கூறுகிறார்.
- சீவகசிந்தாமணியில் சுரமஞ்சரி இலம்பகமும் காந்தவருதத்தையார் இலம்பகம் இசை நுட்பங்களை விவரிக்கின்றன.

**மராட்டியர் காலத்தில் இசை:**

- திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர் 1008 மேளகர்த்தா பண்களுக்கும் திருப்புகழ் பாடியுள்ளார்.

**கீர்த்தனைகளில் இசை:**

- முத்துத் தாண்டவரின் தில்லைத் திருத்தலக் கீர்த்தனை, அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை, பழமையான கீர்த்தனைகள். கோபால கிருஷ்ண பாரதியாரின் திருநீலகண்ட நாயனார் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனைகள்.அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து. மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் சர்வ சமய சமரசக் கீர்த்தனை.

**இசைத்தமிழ் சான்றோர்:**

- தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம். அவரது மகன் வரகுணபாண்டியனின் 'பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்' விபுலானந்தரின் யாழ்நூல்
- **தமிழிசை இயக்கம்**: 1943-ல் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் தமிழிசைச் சங்கம் வெள்ளை வாரணனார் தற்கால அகத்தியர்.

**மறைந்து போன இசை நூல்கள்**

- இறையனார் களவியல் உரையின் மூலம், முதுநாரை, முதுகுருகு, பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், சிற்றிகை, பேரிசை, இசை நுனுக்கம் போன்ற நூல்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது.

## 43) தமிழில் சிறுகதைகள்

**சிறுகதைக்கான இலக்கணம்**

- அமர்ந்து ஒரே மூச்சில் படிக்கக் கூடியன.
- தொடக்கமும் முடிவும் விறுவிறுப்பாக இருக்கும்.
- தேவையற்ற சொற்கள் கூடாது
- மனித வாழ்வின் சிறிய பகுதியைக் காட்டும். ஒருவரின் மனதை சன்னல் மூலம் வெளியே இருந்து பார்ப்பது போல் இருக்க வேண்டும். **சிறுகதையின் முன்னோடி எட்கர் ஆலன்போ. தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி வீரமாமுனிவர்**

**வ.வே.சு.ஐயர்**

- வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர். தமிழில் முதல் சிறுகதையான "குளத்தங்கரை அரச மரம்" 1913-ல் எழுதினார். இது மங்கையர்க்கரசியின் காதல் என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. லைலா மஜ்னு, அனார்க்கலி காதலை முதலில் தமிழில் எழுதியவர். தமிழ் சிறுகதையின் தந்தை.

**புதுமைப்பித்தன்**

- **இயற்பெயர்** சோ. விருத்தாசலம்
- **சிறுகதைத் தொகுதிகள்**: கபாடபுரம், புதிய ஒளி, சித்தி, ஆண்மை, அன்று இரவு, புதுமைப்பித்தன் சிறுகதைகள்

**சிறுகதைகள்**

- **கடவுளும்** கந்தசாமிப் பிள்ளையும், அகல்யை, சாப விமோசனம், துன்பக் கேணி, மனிதயந்திரம், சிற்பியின் நரகம், தியாக மூர்த்தி, பொன்னகரம், கயிற்றரவு, கல்யாணி, நினைவுப்பாதை, வேதாளம் சொன்ன கதை.
- நனவோடை உத்தியைப் பயன்படுத்தியவர். **தமிழகத்தின் மாப்பசான் சிறுகதை மன்னன்**

**ஜெயகாந்தன்**

- உதயம், ஒரு பிடிச் சோறு, இனிப்பும் கரிப்பும்,

RADIAN IAS ACADEMY

மக்களின் உருவங்கள் மற்றும் விலங்கினங்கள் பறவையினங்கள் ஆகியவற்றின் உருவங்களாகும். விலங்கினங்களில் குறிப்பாக **யானைகளின் உருவத்தைச் செதுக்குவதில் பல்லவர் காலச் சிற்பிகள் கை தேர்ந்தவர்களாக விளங்கியிருக்கின்றனர்.**

- பல்லவர் காலச் சுதைக் கோயில்களில் சுதைச் சிற்பங்கள் இருந்தன (சுதை சிற்பங்கள் என்பது சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புசாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காயின் சாறு முதலியவற்றை ஊற்றி வச்சிரம் போல் செய்து அதைக் கொண்டு உருவம் செய்தல்.
- செங்கற்களால் சுவர்களை எழுப்பி அவற்றின் புறங்களில் சுதையாலான உருவங்களை அமைப்பது மரபு.
  (உ.ம்) திருவதிகைக் கோயில்.

**கற்சிற்பங்கள்**

- சங்ககாலத்தில் இறந்த வீரர்களுக்குக் கல்லில் உருவம் செதுக்கி வழிபட்டனர் (நடுகல்) கண்ணகி உருவச் சிலை அமைக்கப்பட்டது பற்றி சிலப்பதிகாரம் கூறுகிறது.
- தமிழகத்தில் **கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமை பல்லவர்களுக்கு உரியது.**
- பல்லவர்கள் கட்டிய குடைவரைக் கோயில்களிலும் கட்டுமானக் கோயில்களிலும் எண்ணற்ற சிற்ப உருவங்கள் உள்ளன. கட்டிடம் வேறு சிற்பம் வேறு என்று பிரித்தறிய முடியாத தன்மை இக்காலச் சிறப்பு (புடைப்புச் சிற்பங்கள்) மகேந்திரவர்மனால் செய்யப்பட்ட குகைக்கோயில்களில் உள்ள வாயிற்காவலர் உருவங்கள், சிங்கம் சுமந்த தூண்கள் இக்காலச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டுகள்.

**மாமல்லபுரச் சிற்பங்கள்**

- முதலாம் நரசிம்மவர்மன் காலம், மகிடாசுரமர்த்தனி குகை, ஆதிவராகர் மண்டபம், மும்மூர்த்தி மண்டபவம், வராகர் குகை ஆகியவை புகழ்பெற்றவை. பாறைச் சிற்பங்களில் அர்ச்சுனன் அல்லது பகீரதன் தவம் சிறப்பானது.

**கோவில்களில் சிற்பம்:**

- காஞ்சிபுரம் இரண்டாம் நரசிம்மன் (எ) ராஜசிம்மன் கைலாசநாதர் கோவிலில் சிவன் பல்வேறு தோற்றங்களோடு உள்ளார். தேவியர்களின் பல்வண்ணத்தோற்றமும், திருமால், நான்முகன், முருகன், கொற்றவை உருவங்களின் பல்வண்ணத் தோற்றங்களும் இங்குள்ளன. இதுபோன்ற கலை அமைப்பு வைகுந்தப் பெருமாள், இரண்டாம் நந்திவர்மன் கோவிலும் உள்ளது.

**பாண்டியர் காலச் சிற்பம்:**

- கி.பி. 6, 7, 8ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட திருமெய்யம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் எனும் இடங்களில் இவற்றைக் காணலாம். கி.பி.8ம் நூற்றாண்டில் கழுகுமலை ஒற்றைக் கல் கோயில் பாண்டியர் கால உன்னத தன்மையைக் காணலாம். அதியமான் கவின் சிற்பத்தை நாமக்கல் குடைவரைக் கோவிலில் காணலாம்.

**சோழர் காலச் சிற்பங்கள்:**

- குடந்தைக் கீழ்க்கோட்டம், சீனிவாச நல்லூர், அரங்கநாதர் கோவில், பசுபதி கோவில், திருவாரூர் அறநெறிச்சரம் ஆகியவற்றில் இவர்கள் காலச் சிற்பங்கள் உள்ளன.
- பல்லவர்கள் காலத்தில் சிற்பங்கள் கோயிற் சுவர்களிலேயே புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டன. ஆனால் சோழர் காலத்தில் சிற்பங்கள் தனியே செய்யப்பட்டு அவற்றுக்கென சுவரில் அமைந்த கோட்டத்தில் பொருத்தப்பட்டன.
- இராஜராஜன் வானளாவும் கட்டிடத்தை கருங்கல்லால் கட்டினான் அவன் கட்டுவித்த கோபுரங்களையும் விமானங்களையும் ஏராளமான சிற்பங்கள் அலங்கரித்த போதிலும் அவை கட்டிடத்திற்கு அங்கமாக கட்டிடத்தின் பெருமிதத்தில் மறைந்து காணப்படுகின்றன. இதே நிலை தான் அவன் மகன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பங்களுக்கும். எனினும் கங்கை கொண்ட சோழபுரத்துப் பெரிய கோவிலில் கலைமகள் சிற்பமும், சண்டிக்குச் சிவன் அருள்புரியும் சண்டிகப்பதம் பற்றிய சிற்பங்களும் தனித்தன்மை கொண்டு திகழ்கின்றன.
- தாராசுரத்து ஐராவதீஸ்வரர் கோயில் சிற்பங்கள் தில்லைக் கோபுரச் சிற்பங்களும் அழகுடையன எனினும் கட்டிடத்தின் அழகில் மயக்கம் பெறுகின்றன.

**விசயநகரத்தார் காலச் சிற்பங்கள்:**

- ஆயிரங்கால் மண்டபங்களும் கல்யாண மண்டபம் புகழ் பெற்றது. குதிரையின் முன் காலைத் தூக்கும் நிலையில் உள்ள சிற்பங்கள்.பெண்களின் மார்பகங்கள் இந்தக் காலத்தில் துணியால் போர்த்தப்பட்ட நிலையில் அமைவதைக் காணலாம்.
- அரியநாத முதலியார் கட்டிய ஆயிரங்கால்

RADIAN IAS

போதுமானது ஆனால் மேடைப் பேச்சிலோ உணர்ந்ததை உணர்த்தும் வகையில் தெரிவிக்க வேண்டும்.

- பேச்சாளரின் நெஞ்சில் உள்ள கருத்து கேட்பாரின் நெஞ்சில் பாய வேண்டும். மின்சாரம் பாயக் கம்பி கருவியாக உள்ளது போல கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது. சொல்லை ஆராய்ந்து தெளிவாகப் பேச வேண்டும்.

**முக்கூறுகள்:**

- பேசும் பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுபடுத்தித் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்து பேசுவதையே பேச்சுமுறை என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

**எடுத்தல்:**

- பேச்சை தொடங்குவது எடுப்பு, பேச்சின் தொடக்கம் நன்றாக இருந்தால் தான் கேட்கிறவரின் உள்ளங்களைக் கவரும்.

**தொடுத்தல் முறை:**

- தொடக்க உரைக்குப் பிறகு, பொருளை விரித்து பேசும் முறை தொடுத்தல் எனப்படும். அன்றலர்ந்த மலரை அழகுபட மாலையாகத் தொடுத்தது போன்று இடையிடையே சுவை மிக்க சொற்களும் குணமிக்க கருத்துக்களும் பிணைத்துப் பேசுவதே தொடுத்தல் எனப்படும்.

**பேசசின் அணிகலன்கள்**

- ஒரு பேச்சுக்குக் கருத்துப் பொலிவும் குரலோசையும் மட்டுமே போதியன அல்ல. இடையிடையே கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு வகையான நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும்.

**உணர்த்தும் திறன்:**

- சொல்லக் கருதும் செய்தியைச் சுவைபட, நிரல்பட, திறம்பட மற்றும் தெளிவாகவும் சொல்ல வேண்டும். உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். அப்பேச்சே கேட்போர் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று, கேட்பவர்களுடைய உள்ளத்தைப் பணிக்கும் ஆற்றல் வாய்ந்ததாக அமையும்.

**முடித்தல்:**

- பேச்சைத் தொடங்குவதிலும் பொருளை விரிப்பதிலும் செலுத்தும் கவனத்தை அழகுறப் பேச்சை முடிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.
- **மேடைப்பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த் தென்றல் திரு.வி.க பேரறிஞர் அண்ணா, ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.**

**திரைப்படக் கலை**

- ஒளிப்படம் எடுக்கும் கருவி 1830ல் கண்டறியப்பட்டது. **எட்வர்டு மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றி பெற்றார்.**
- **ஈஸ்ட்மன் என்பவர் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டறிந்தார்.**
- **எடிசன் ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டறிந்தார்.**
- **பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் 1894ல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்.**
- **திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்ற பொருளால் ஆனது.** படம் எடுக்கப் பயன்படும் சுருள், எதிர்ச்சுருள் எனப்படும். ஒலி, ஒளிப் பதிவுகளைத் தனித் தனி சுருள்களில் அமைப்பர்.
- படப்பிடிப்புக்கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருளில் பதினாறு படங்கள் வீதம் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக எடுக்கப்படும்.

**கருத்துப்படம்:**

- **முதலில் கருத்துப்படம் அமைத்தவர் வால்ட் டிஸ்னி.**

**செய்திப் படம்:**

- **உலகில்** பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சியைப் படமாக்கிக் காட்டுவது செய்திப்படம்.

**விளக்கப் படம்:**

- ஒரு குறிப்பிட்ட நிகழ்வை மட்டும் எடுத்துக் கொண்டு, அதைப்பற்றி முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும்.

**கல்விப்படம்:**

- இவை மாணவ மற்றும் மாணவிகளின் கல்வி கற்பிப்பதற்காக உருவாக்கப்படும் படங்கள் இவை. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை மற்றும் மக்களின் பண்பாடு வாழ்க்கை முறை பற்றியதாகும்.

RADIAN IAS ACADEMY

அடங்குவன.

- இந்தியாவில் ஆயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட மொழிகளும் அதன் கிளை மொழிகளும் பேசப்படுகின்றன. ஆதலால் **இந்தியாவை மொழிகளின் காட்சிச் சாலை என்று குறிப்பிடுகிறார் ச. அகத்தியலிங்கம்.**

**திராவிட மொழிக் குடும்பங்கள்**

- 23-க்கு மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன. இம்மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூவகையாய்ப் பிரிப்பார்.

**தென்திராவிட மொழிகள்:**

- தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடர், கோத்தா, கொரகா, இருளா

**நடுத்திராவிட மொழிகள்:**

தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, ஜதபு

**வடதிராவிட மொழிகள்**

- குருக், மால்தோ, பிராகுய் திராவிட என்ற சொல்லைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் கால்டுவெல். தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளை ஒரு காலத்தில் தமிளியின் அல்லது தமுலிக் என்று அழைத்தனர்.
- திராவிடம் என்ற சொல்லே தமிழிலிருந்து உருவானது என்கிறார் ஈராஸ் பாதிரியார்.
- தமிழ் - திரமிள - திராவிட - திராவிடம் என்று உருவாயிற்று என்கிறார் ஈராஸ் பாதிரியார்.
- திராவிடம் - திராவிட - திரமிள - தமிழ் என்று உருவானது என்கிறார் கால்டுவெல்

## 46) உரைநடை

**மறைமலையடிகள்: (1870-1950)**

- சுவாமி வேதாசலம் என்ற பெயரைத் தமிழ் பற்றின் காரணமாக மறைமலையடிகள் என மாற்றி வைத்துக் கொண்டார்.
- தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்தவர்.
- முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞானபோத ஆராய்ச்சி, மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், தமிழர் மதம், திருவாசக விரிவுரை முதலான நூல்களை எழுதியுள்ளார்.
- கோகிலாம்பாள் கடிதம், நாகநாட்டரசி முதலான புதினங்கள் சிறப்பு மிக்கன. தாம் நடத்திய ஞானசேகரம் என்ற பத்திரிக்கையை அறிவுக் கடல் என்று மாற்றி அமைத்துக் கொண்டார்.

**பரிதிமாற்கலைஞர் (1878-1903)**

- வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற பெயரை பரிதிமாற்கலைஞர் என்று மாற்றி அமைத்துக் கொண்டார். (தாம் இயற்றிய தனிப்பாசுரத் தொகை என்ற நூலில் மாற்றினார்)
- பிறப்பு: மதுரையை அடுத்த விளாச்சேரி
- பெற்றோர்: கோவிந்த சிவனார் - இலட்சுமி அம்மாள்
- மதுரை 4ம் தமிழ்ச்சங்கம் பாஸ்கரசேதுபதி தலைமையில் பாண்டித்துரைத் தேவர் முன்னிலையில் உருவானது. பரிதிமாற்கலைஞர் உ.வே.சா. இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் உதவி செய்தனர்.
- யாழ்ப்பாணம் சிவை. தாமோதரனார் - திராவிட சாஸ்திரி என்ற பட்டத்தை வழங்கினார்.
- ரூபாவதி, கலாவதி முதலிய நாடகங்களை இயற்றியவர்.
- சித்திரக்கவி **என்னும் நூலை இயற்றினார்.குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கத்தின் 51 பாடல்களுக்கு உரை எழுதியவர்.**
- பரிதிமாற்கலைஞர், **மு.சி.பூர்ணலிங்கத்தினால் தொடங்கி நடத்தப்பட்ட ஞானபோதினி என்னும் இதழை நடத்தினார்.** ஞானபோதினியிலும் - விவேக சிந்தாமணியிலும் தான் எழுதியவற்றை தமிழ் வியாசங்கள் என்ற பெயரில் வெளியிட்டார்.

**ந.மு.வேங்கடசாமி நாட்டார் (1884-1964)**

- சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, திருவிளையாடற்புராணம் ஆகிய நூல்களுக்கு உரை. நக்கீரர், அகத்தியர், கபிலர் ஆய்வு நூல்கள் கள்ளர் சரித்திரம் என்ற உரைநடை நூல்.

**ரா.பி.சேதுப்பிள்ளை (1896-1961):**

- **சொல்லின் செல்வர் என அழைக்கப்படுகிறார்.** ஊரும் பேரும், செந்தமிழும் கொடுந்தமிழும், தமிழின்பம், திருவள்ளுவர் நூல்நயம், சிலப்பதிகார நூல்நயம், தமிழ் விருந்து, வேலும் வில்லும், தமிழ்நாட்டு நவமணிகள்.
- **தமிழ் இன்பம் சாகித்ய அகாதமி விருது பெற்ற முதல் நூல் (1955)**

**தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்:**

- (காலம் 1901-1981) தென்பட்டினம், காஞ்சிபுரம் மாவட்டம், தந்தை-பொன்னுசாமி கிராமணி

**படைப்புகள்:**

- கானல்வரி, குலசேகரர், குடிமக்கள் காப்பியம், பிறந்தது எப்படியோ முதலான இவரது நூல்கள்.
- மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் (1966-1971)
- 1976ல் பத்மபூசன் விருது பெற்றார். மொழி விளக்க இயல் துறையிலும் ஒப்பிலக்கிய துறையிலும் ஈடுபட்டார்.

**சி. இலக்குவனார்**

- இயற்பெயர்: சி. இலட்சுமணன்
- பிறப்பு: 17.11.1909-03.09.1973
- பெற்றோர்: சிங்காரவேலர் - இரத்தினம் அம்மையார்
- பிறந்த இடம்: வாய்மேடு, வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்

**பெற்ற பட்டங்கள்:**

- **செந்தமிழ்** மாமணி, பயிற்சி மொழிக் காவலர் தமிழர் தளபதி, இலக்கணச் செம்மல், தமிழ் அரிமா, இருபதாம் நூற்றாண்டு தொல்காப்பியர், இரண்டாம் நக்கீரர், இருபதாம் நூற்றாண்டு இளங்கோவடிகள், குறள் நெறிக்காவலர்.

**இதழ்கள்:**

- சங்க இலக்கியம், சிறுகதை வடிவிலும் ஓரங்க நாடகங்களாகவும் சங்கப்பாடல்களை அறிமுகம் செய்தார்.

**படைப்புகள்:**

- இலக்குவனாரின் தொல்காப்பிய ஆய்வும் மொழிபெயர்ப்பும்.
- சங்க இலக்கிய ஆய்வு
- குறளுரை இலக்குவனாரின் கவிதைப் படைப்புகள்

## 48) தேவநேயப் பாவாணர் - அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்

**தேவநேயப் பாவாணர்**

- **தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் கால்டுவெல், தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர் தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் மறைமலையடிகள். தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் தேவநேயப் பாவாணர்.**
- மொழி ஞாயிறு, தனித்தமிழ் ஊற்று, செந்தமிழ் ஞாயிறு, இலக்கியப் பெட்டகம், இலக்கணச் செம்மல், தமிழ் மானங்காத்தவர் என்ற அடைமொழிகளால் அழைக்கப்படுகிறார்.
- உலக முதன்மொழி தமிழ்: இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ், திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என நிறுவியவர்.
- உலகின் முதல் மாந்தன் தமிழன்: தமிழன் தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்பதும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம், பழந்தமிழர் நாகரிகம் என்பதும் பாவாணரின் கூற்று.
- **தமிழை வடமொழி வல்லாண்மையிலிருந்தும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறினார்.**
- **பெற்றோர்:** ஞானமுத்து-பரிபூரணம்
- **ஊர்: சங்கரன் கோவில்**
- **வாழ்க்கை:** 07.02.1902 முதல் 15.01.1981 வரை
- **செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப்பெருங்காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்.**

தேவநேயப் பாவாணரின் படைப்புகள்:

- **தமிழ்** வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், உயர்தரக் கட்டுரை இலக்கண சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் பரப்புரை.
- சொற்பிறப்பியல் அகர முதலி தொகுப்புகளை வெளி கொணர்ந்தார்.
- தேவநேயப் பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் மாவட்ட மைய நூலகம் செயல்படுகிறது.
- பாவாணர் கோட்டம், அவர் முழு உருவச் சிலை, அவர் பெயரில் நூலகம் போன்றவை அவர் பணியாற்றிய இராச பாளையத்திற்கு அருகில் முறம்பு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.
- 05.**01.1981 அன்று மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்ற தலைப்பில் அவர் ஆற்றிய சொற்பொழிவு அவரின் கடைசி சொற்பொழிவு.**

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

- இயற்பெயர்: துரை மாணிக்கம்
- ஊர்: சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்

RADIAN IAS ACADEMY

**அண்ணா:**

- **திராவிட** முன்னேற்றக் கழகத்தை தொடங்கியவர் 1967 முதல் 1969 வரை முதலமைச்சர்

**சிறுகதைகள்:**

- பலாபலன், சுடுமூஞ்சி, அன்னதானம், பேய் ஓடிப்போச்சு, இரு பரம்பரைகள், சூதாடி, செவ்வாழை, தஞ்சை வீழ்ச்சி, பிடி சாம்பல், புலி நகம், ராஜாதி ராஜா சொர்க்கத்தில் நரகம்.

**நாவல்கள்:**

- குமரிக்கோட்டம், பார்வரி பி.ஏ, ரங்கோன் ராதா, கபோதிபுரக் காதல், குமாஸ்தாவின் பெண், கலிங்கராணி.

**நாடகங்கள்:**

- நீதி தேவன் மயக்கம், சந்திரமோகன், ஓர் இரவு, வேலைக்காரி, சந்திரோதயம், இன்ப ஒளி, சொர்க்க வாசல், கண்ணாயிரத்தின் உலகம். கடித இலக்கியம் - தம்பிக்கு (மு.வ.வும் தம்பிக்கு என கடித இலக்கியம் எழுதியவர்)
- ஆய்வு நூல்கள் சொற்பொழிவுகள்: ஏ தாழ்ந்த தமிழகமே, தமிழரின் மறுமலர்ச்சி, சூரிய மாயை, ரோமாபுரி ராணிகள், கம்பரசன், தீ பரவட்டும். இதழ்கள்: திராவிட நாடு, காஞ்சி

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்**

- பெற்றோர்: உக்கிர பாண்டியன் - இந்திராணி அம்மையார்
- காலம்: 30.10.1908 முதல் 30.10.1963
- ஆசிரியர்: குறைவற வாசித்தான் பிள்ளை
- தமிழ், ஆங்கிலம் வல்லமை பெற்றவர், சிலம்பம் குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்றவற்றைக் கற்றறிந்தவர்.
- நிலக்கிழார் ஒழிப்பு, ஆலய நுழைவு போராட்டத்தில் முன்னின்றவர். சமபந்தி முறையை ஊக்கமளித்தார். குற்றப்பரம்பரைச் சட்டத்தை நீக்கப் பாடுபட்டார். ஆங்கிலேய அரசு வட இந்தியாவில் திலகருக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது போல் தென்னாட்டில் இட்டது. தேசியம் காத்த செம்மல் என்று திரு.வி.க இவரைப் பாராட்டியுள்ளார். 1937, 1946, 1952, 1957, 1962 தேர்தல்களில் வெற்றி பெற்றவர்.
- தெய்வீகம், தேசியம் என இரண்டையும் இரு கண்களாகப் போற்றியவர்.
- வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம் இந்து புத்த சமய மேதை எனப் பாராட்டு பெற்றவர்.
- விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக சத்திய சீலராக, முருக பக்தராக, ஆன்மீக புத்தராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக நீதி வழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக வலிமையில் கரிகாலனாக கொடையில் கர்ணனாக பக்தியில் பரமஹம்சராக இந்தியத் தாயின் நன்மகனாக வாழ்ந்தவர் முத்துராமலிங்கர்.
- **மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிடுகிறார்.**

**அம்பேத்கர்**

- **இயற்பெயர்**: பீமாராவ் ராம்ஜீ
- **பெற்றோர்**: இராம்ஜி சக்பால் - பீமாபாய்
- காலம்: 14.4.1891 - 6.12.1956

**முதல் உரிமைப் போர்:**

- 1927 மார்ச் 20 மராட்டியத்தில் மகாமத்துக் குளத்தில் நடத்தப்பட்ட தண்ணீர் எடுக்கும் போராட்டம்.

**வட்டமேசை மாநாடு:**

- 1930 முதல் மாநாட்டில் அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினராக நான் பேசுகிறேன். என்று தன் கருத்தைத் தொடங்கினார். **மூன்று வட்டமேசை மாநாடுகளில் கலந்து கொண்டார்.**
- **அரசியல் சட்டத்தை உருவாக்கும் எழுவர் குழுவின் தலைவராக இருந்து இந்தியாவிற்கான சட்டத்தை உருவாக்கினார்.**
- 1946ல் **மக்கள் கல்விக் கழகத்தைத் தொடங்கினார்.** இன்று சித்தார்த்தா உயர் கல்வி நிலையமாக வளர்ச்சி அடைந்துள்ளது.
- **இவர் எழுதிய "இந்தியாவின் தேசிய பங்கு வீதம்" என்ற நூல் பொருளாதாரத்தில் இவருக்கு உள்ள புலமையை வெளிப்படுத்தியது.**
- அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர். பகுத்தறிவுச் செம்மல். ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி என்று பெரியார் பாராட்டியுள்ளார்.
- 1990ம் **ஆண்டு இந்திய அரசு பாரத ரத்னா விருது வழங்கியது.**

**காமராஜர்**

- பெற்றோர்: குமாரசாமி சிவகாமி அம்மையார்
- காலம்: 15.07.1903 முதல் 2.10.1972
- **மெய்கண்டான் புத்தகசாலை என்ற நூல் நிலையம் சென்று இலெனின், கரிபால்டி, நெப்போலியன்**

RADIAN IAS ACADEMY

தென்னை சூழ்ந்த பகுதி தெங்கூர் புளியமரங்கள் சூழ்ந்த பகுதி புளியங்குடி, புளியங்குளம், புளியம்பட்டி என்று உள்ளது.

- குளம், ஏரி, ஊருணி முதலிய நீர் நிலைகளை உருவாக்கி அவற்றோடு ஊர்ப் பெயர்களையும் இணைத்தனர். சீவலப்பேரி, புளியங்குளம், பேராவூரணி, மாங்குளம், வேப்பேரி என்பன சில.

**நெய்தல் நில ஊர்கள்:**

- கடற்கரையில் உருவான பேரூர்கள் பட்டினம் எனவும் சிற்றூர்கள் பாக்கம் எனவும் பெயர் பெற்றிருந்தன. நெடிய கடற்கரையை உடைய நகர்கள் கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை எனப் பெயர் பெற்றன. மீனவர் வாழுமிடங்கள் குப்பம் என்னும் பெயரைப் பெறுகின்றன.

**அரசும் ஊர்களும்:**

- கோட்டை, சூழவிருந்த ஊர்களே கந்தர்வக் கோட்டை, தேவக்கோட்டை, நாட்டரசன் கோட்டை, நிலக் கோட்டை, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை எனப் பல ஊர்கள் உள்ளன.

**திசை**

- திசையின் படி கீழுர், மேலூர், தென்பழஞ்சி, வடபழஞ்சி

**பாளையங்கள்:**

- **நாயக்க மன்னர்கள் 72 பாளையங்களாக நாட்டை ஆண்டனர்.** அதன்படி ஆரப்பாளையம், இராசப்பாளையம், கணக்கம் பாளையம், குமார பாளையம், மேட்டுப்பாளையம் எனவும் பல. காலப்போக்கில் பெயர்கள் பல சிதைந்து போயுள்ளன. கல்வெட்டுகளில் உள்ள மதிரை மருதையாக மாறி மதுரையாக மாறியது. கோவன்புத்தூர் கோயம்புத்தூர் ஆக மாறி இன்று கோவையாக மாறியுள்ளது.

## 52) உலகளாவிய தமிழர்களின் சிறப்பும்-பெருமையும்-தமிழ்ப் பணியும்

- கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி - புறப்பொருள் வெண்பாமாலை
- 154 நாடுகளில் தமிழினம் பரவியுள்ளது 20 நாடுகளில் இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர்.

**தமிழர் புலம் பெயரக் காரணங்கள்**

- திரைக்கடலோடியும் **திரவியம் தேடு என்றார் ஔவையார் சாதுவன் வாணிபம் செய்யும் பொருட்டு கடல் கடந்து சென்ற குறிப்பு மணிமேகலையில் உள்ளது.** ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் தமிழர்களை அடிமைகளாக்கிக் கூலிகளாகப் பல நாடுகளுக்கும் அழைத்துச் சென்றனர். பஞ்சத்தின் காரணமாகவும் அந்நிலப் படையெடுப்பின் காரணமாகவும் தமிழகத்தை விட்டுச் சென்றார்கள்.

**பண்பாட்டு நிலை:**

- சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத்தீவு ஆகிய தீவுகளில் கோவில்கள் கட்டி வழிபாடு செய்கின்றனர். **சிறிய யூனியன் தீவில் பெரும்பான்மை தமிழர்களே** அவர்களால் பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் இருந்து குடியமர்த்தப்பட்டவர்கள்.

**மொழிநிலை:**

- இலங்கையில் 95% பேர் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர்.
- புதுச்சேரி, சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித்தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.
- அமெரிக்க நாட்டுப் பேராசிரியர்கள் வி.எஸ்.இராஜன். ஜார்ஜ் எல்.ஹார்ட், கௌசல்யா ஹார்ட், சிம்.லிண்ட் ஹோம், இந்திரா, நார்மன், ஹால் சிப்மேன், டபிள்யூ, குளோத்தி, ஜேம்ஸ் பிராங்கோ, மறைந்த பேராசிரியர் ஏ.கோ. இராமனுஜம் முதலியோர் தமிழுக்குத் தொண்டாற்றி உள்ளனர்.

**தமிழ் ஆட்சிமொழி:**

- இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவில் ஆட்சி மொழியாக உள்ளது.

## 53) தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்

- **ஆன்ம இயல் பேசும் திருவாசகம் விண்ணியலையும் பேசுகிறது.**

*அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்*
*அளப்பருந்த தன்மை வளப்பெருங்காட்சி*
*ஒன்றனுக் கொன்று நீன்றெழில் பகான்*

- *நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.* இந்தப் பாடலில் பெருவெடிப்புக் கொள்கையின் படி பேரண்டம் விரிந்து நிற்பதை மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.
- உலகம் என்ற சொல் உலவு என்பதன் அடியாகப் பிறந்தது. **உலவு என்றால் சுற்றுதல் என்று பொருள்**

RADIAN IAS ACADEMY

## 54) தமிழ் மகளிரின் சிறப்பு

- தமிழ் மகளிரின் சிறப்பு: அன்னி பெசண்ட் அம்மையார், மூவலூர் இராமாமிர்தம்மாள், டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி விடுதலைப் போராட்டத்தில் மகளிர் பங்கு (தில்லையாடி வள்ளியம்மை, ராணி மங்கம்மாள்).

தில்லையாடி வள்ளியம்மை:
பெற்றோர்: முனுசாமி-மங்களம்
முனுசாமி - புதுச்சேரியில் வாழ்ந்தவர்
மங்களம் - தில்லையாடியில் பிறந்தவர்

- முனுசாமி - மங்களம் ஜோகன்ஸ்பர்க், தென் ஆப்பிரிக்கா பிழைப்புத் தேடிச் சென்று காய்கறி கடை நடத்தினர். இவர்களுக்கு மகளாக 1898ல் வள்ளியம்மை பிறந்தார்.
- கிறித்தவ மத சட்டப்படி நடைபெறாத திருமணங்கள் செல்லுப்படியாகாது என்று தென்னாப்பிரிக்க நீதிமன்றம் 1913ல் ஒரு தீர்ப்பை வெளியிட்டது. இதனால் அங்கிருந்த இந்தியர்கள் பாதிக்கப்பட்டனர். இதனை எதிர்த்து நடந்த போராட்டத்தைக் காந்தியடிகள் தலைமையேற்று நடத்தினார். **23.12.1913-ல் வாலக்ஸ்ரஸ்ட் என்ற இடத்தில் நடைபெற்ற போராட்டத்தில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டு மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்றார். 1914 பிப்ரவரி 22 அன்று தனது 16 வயதில் மரணம் அடைந்தார்.**
- இந்த மரணம் பற்றி காந்தி குறிப்பிடும் போது **என்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.**
- **சத்தியத்திற்காக** உயிர்நீத்த அவருடைய உருவம் என் கண்முன் நிற்கிறது. நம்பிக்கை தான் அவரது ஆயுதம் என்று **தில்லையாடி வள்ளியம்மை குறித்து இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.**
- **தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், தென்னாப்பிரிக்க சத்தியா கிரகம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.**

### இராணி மங்கம்மாள்

- தமிழ்நாட்டில் நாயக்கர் மரபில் பெண்கள் முடி சூடி ஆட்சி செய்யவில்லை. ஆனால் காப்பாட்சியளராக ஆட்சிபுரிந்து உள்ளனர். இதற்குச் சான்றாக உள்ளவர் இராணி மங்கம்மாள். மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். தனது மகன் அரங்க கிருஷ்ணமுத்து வீரப்பனுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காக கணவன் இறந்த பின்பு உடன் கட்டை ஏறாமல் இருந்தார்.
- இவரது மகன் இறந்த பின்பு கி.பி.1688-ல் பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான் பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.

### மங்கம்மாள் அறச் செயல்கள்:

- மக்கள் நலம்பேணும் நல்ல பணிகளை மங்கம்மாள் செய்துள்ளார். மதுரையில் அன்னச் சத்திரம் கட்டினார். புதிய சாலைகள் பல அமைத்தார். **கன்னியகுமாரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது.** குதிரைகள், பசுக்கள், காளைகள் முதலியன நீர் அருந்துவதற்கு வசதியாகச் சாலையோரங்களில் தண்ணீர் தொட்டி திறக்க ஆணையிட்டார்.
- மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆனித் திங்களில் ஊஞ்சல் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தார்.
- மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம் முதலியவற்றை மங்கம்மாள் கட்டியதாகக் கூறுவர்.

### தமிழகத்தின் அன்னிபெசண்ட்

- அறிஞர் அண்ணா அவர்களால் தமிழகத்தின் அன்னிபெசன்ட் என்று அழைக்கப்பட்டவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
- காலம் - பிறப்பு - 1883
- இறப்பு - 27.06.1982
- தேவதாசிகள் குடும்பத்தில் பிறந்தவர். தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்டார். சுயம்பு என்பவரை மணந்தார்.
- 1917ல் முதல் போராட்டம் - மயிலாடுதுறையில் தேவதாசி முறையை ஒழிக்க போராட்டம்.
- **தேவதாசி முறையை ஒழிக்க இவருடன் பெரியார், திரு.வி.க. வரதராஜீலு, தருமாம்மாள், நீலாம்பிகை, மலர் முகத்தம்மையார், தாமரைக் கண்ணியம்மையார் போன்றோர் இணைந்து பாடுபட்டனர்.**
- 1938ல் மொழிப்போர் பேரணியில் உறையூர் (திருச்சி) முதல் சென்னை வரை கலந்து கொண்ட ஒரே பெண் (42 நாள் நடைபயணம்)
- **1989 முதல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையின் பெயரில் ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

RADIAN IAS ACADEMY

- “மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது **அற்றது போற்றி உணின்”**
- தமிழகத்து உணவு தொன்று தொட்டு மருத்துவ முறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டு அன்றாடச் சமையலில் கூட்டுவனவற்றுள் **மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்தமல்லி பித்தத்தைப் போக்கும். சீரகம் வயிற்றுச் சூட்டைத் தணிக்கும். மிளகு, தொண்டைக் கட்டைத் தொலைக்கும். பூண்டு வளியகற்றி (வாயுவை போக்கும் - பசியை மிகுக்கும்) வெங்காயம் குளிர்ச்சியை உண்டாக்கிக் குருதியைத் (இரத்தத்தைத்) தூய்மையாக்கும்.**
- பெருங்காயம் வளியை வெளியேற்றும் **(வாயுவைப் போக்கும்) இஞ்சி பித்தத்தை ஒடுக்கி காய்ச்சலைக் கண்டிக்கும் தேங்காய் நீர்க்கோவையை நீக்கும். கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத் தெளிவும் உண்டாக்கும். சீரகம் பூண்டு கலந்த நீர் சூட்டை தணித்துச் செரிமான ஆற்றலை அதிகரிக்கும். உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகற்றவும் கீரை நல்லது குளிர்ச்சி தந்து பித்தம் போக்கும் எலுமிச்சை ஊறுகாயை மோர்ச் சோற்றுடன் உண்ணலாம்.**

**தவிர்க்க வேண்டியவை:**

- உப்பு குறைவாக சேர்க்க வேண்டும். உப்பு நிறைந்த பொருட்களான ஊறுகாய், அப்பளம், வடாம், கருவாடு, முந்திரிப் பருப்பு, வறுத்த உருளைச் சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்த மோர் முதலானவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும்.
- கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் **கரு**, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக் கட்டி ஆகியவற்றை நீக்க வேண்டும்.
- **-நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு**
  **-நொறுங்கத்தின்றால் நூறு வயது**
- நீரின்றமையாது உலகு என்பது வள்ளுவம். இதன்படி உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மை அடைவதற்கும் உடலிலுள்ள கழிவுப் பொருள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமையாதது (நாளொன்றுக்குக் குறைந்தது மூன்று லிட்டர்) உணவு உண்ணும் போது இடையில் தண்ணீர் அருந்தக் கூடாது.

**சமச்சீர் உணவு:**

- புரதம், கொழுப்பு, மாவுச்சத்து (கார்போஹைட்ரேட்), கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு.
- உணவின் அளவில் சோறும், காய்கறியும், அரைவயிறு பால், மோர், நீர் கால்வயிறு, கால் வயிறு வெற்றிடமாக இருக்க வேண்டும். வயிறு புடைக்க உண்ணக் கூடாது. எனவே **ஔவையார் "மீதூன் விரும்பேல்" என்கிறார்.**

**நோய் தீர்க்கும் மூலிகைகள்:**

**துளசி:**

- இதன் இலைகளை நீரிலிட்டு கொதிக்க விட்டு ஆவி பிடித்தால் மார்புச் சளி, நீர்க்கோவை, தலைவலி நீங்கும் இதன் இலைகளை எலும்பிச்சைப் பழச் சாறுடன் அரைத்துப் போட படை நீங்கும். இதன் விதைகளைப் பொடி செய்து ஒன்று அல்லது இரண்டு கிராம் உண்டால் உடற்சூடு, நீரெரிச்சல் முதலானவை நீங்கும்.

**கீழ்க்காய் நெல்லி**

- கீழாநெல்லி, கீழ்வாய் நெல்லி என்றும் இதனை அழைப்பர். மஞ்சள் காமாலைக்கு நல்ல மருந்து இதனை கற்கண்டுடன் சேர்த்து அரைத்து உண்ணும் போது சிறுநீர் தொடர்பான நோய்கள் நீங்கும்.

**தூதுவளை:**

- இது ஒரு கொடி வகை. இது தூதுளை, சிங்க வல்லி என்ற பெயர்களில் வழங்கப்படும். இதனை நல்லெண்ணையுடன் சமைத்து உண்டால் சுவாசகாசம் அகலும் (21 நாள்) இளைப்பு இருமல் போகும் **ஞானப்பச்சிலை என வள்ளலார் இதனைப் போற்றுகிறார்.** இது குரல் வளத்தை மேம்படுத்தும்.

**குப்பைமேனி:**

- நச்சுகடிகளுக்கு நல்ல மருந்து. படுக்கைப்புண் இதன் இலைகளைக் காய வைத்து பொடியாக்கிப் பூசினால் குணமாகும்.
- -இதன் இலைகளை உண்டால் மலப்புழுக்கள் வெளியேறும்.
- -இலைகளுடன் மஞ்சள், உப்பு சேர்த்து அரைத்து பூசினால் சொறி, சிரங்கு நீங்கும். மேனி துலங்க குப்பை மேனி என்பது பழமொழி.

**கற்றாழை**

- சோற்றுக் கற்றாழையே மருந்தாகப் பயன்படுகிறது. முடி வளர மூலச்சூடு குறைய மருந்தாகப் பயன்படுகிறது. இதற்கு குமரி என்ற வேறு பெயரும் உண்டு. கருப்பை சார்ந்த நோய்களை நீக்கும் குமரி

RADIAN IAS ACADEMY

- **உமாசந்திரன்:** அன்புள்ள அஜிதா, ஆகாயம் பூமி, தாரணி, பரிகாரம், முள்ளும் மலரும்
- **பிரேமானந்தகுமார்:** புயல் நிலைப்பதில்லை, அழுத்தத் துளி உதிர்ந்தது, ஒரு நாள் பொழுது
- **சு. சமுத்திரம்:** மனங்கொத்தி மனிதர்கள், சோற்றுப் பட்டாளம், இன்னொரு உரிமை, அவனுக்காக, வாடா மல்லி (திருநங்கை பற்றியது)
- **தி. ஜானகிராமன்:** அமிர்தம், மோகமுள், அன்பே ஆரமுதே, அம்மா வந்தாள், உயிர்த்தேன், செம்பருத்தி, மலர் மஞ்சம், மரப்பசு
- **ஜீவா:** உயிரோவியம், சீமான் சுயநலம், தரங்கணி

## தழுவல் நாவல்கள் (மொழிப் பெயர்ப்பு)

- **மாக்ஸிம் கார்க்கி:** தாய்
- **டால்ஸ்டாய்:** போரும் அமைதியும்
- **ஹெமிங்வே:** கடலும் கிழவனும்
- **விக்டர் ஹ்யூகோ:** ஏழைபடும் பாடு
- **வால்டர் ஸ்காட்:** ஐவன்ஹோ
- **மாஸ்தி வேங்கடேச ஐயங்கார்:** சுப்பண்ணா
- **தகழி சிவசங்கர்:** செம்மீன்
- **நாடகக் காவலர் ஆர்.எஸ்.மனோகர்:** மாலிக்கபூர், காடக முத்தரையன், இலங்கேசுவரன், வேங்கையின் மார்பன்
- **கோமல் சுவாமிநாதன்:** தண்ணீர் தண்ணீர்
- **சக்தி. கிருஷ்ணசாமி:** வீரபாண்டிய கட்டபொம்மன்

### ஐஞ்சிறு காப்பியங்கள்

- **உதயண குமாரகாவியம்:** ஆசிரியர் தெரியவில்லை. 6 காண்டங்கள், 367 பாடல்களை உடையது
- **நாககுமார காவியம்:** சமணக் காப்பியம் என்பது தவிர வேறு விபரமில்லை
- **யசோதர காவியம்:** 'வெண்ணாவலுடையார்' இயற்றியது 5 சருக்கம், 320 பாடல்களை உடையது. உயிர்க்கொலையின் தீமையை விளக்குகிறது.
- **சூளாமணி:** ஐஞ்சிறுங்காப்பியங்களில் மிகச் சிறப்பானது. ஆசிரியர் தோலாமொழித் தேவர், 12 சருக்கங்கள், 2131 பாடல்களை உடையது. திவிட்டன், சுயம்பிரவை பாத்திரங்கள்.
- **நீலகேசி: 'நீலகேசி திரட்டு'** என்ற சிறப்புப் பெயர் உண்டு. குண்டலகேசிக்கு எதிரான நூல் 10 சருக்கங்கள் 894 பாடல்கள்

## 57) தொடரால் குறிக்கப் பெறும் சான்றோர்கள்

- **ஆர்.எஸ்.மனோகர்:** நாடகக் காவலர்
- **டி.கே.எஸ்.சகோதரர்கள்:** நாடக மறுமலர்ச்சி தந்தை
- **அநுத்தமா:** தமிழ் நாட்டின் ஜேன் ஆஸ்டின்
- **அ.மாதவையா:** தமிழ் நாட்டின் தாக்கரே
- **மாயூரம் வேதநாயகம் பிள்ளை:** தமிழ் நாவலின் தந்தை
- **நம்பியாண்டார் நம்பி:** தமிழ் வியாசர்
- **நம்மாழ்வார்:** சடகோபர், காரிமாறன், வகுளாபரணன், பராங்குசன், குருகைக் காவலன், தமிழ்மாறன், திருக்குருகூர்
- **பெரியாழ்வார்:** விஷ்ணு சித்தன், பட்டர் பிரான், புதுவை மன்னன், வேயர் குலத்துச் சிற்றரசர்
- **பேயாழ்வார்:** பேயர்
- **திருமங்கையாழ்வார்:** கலிநாடன், குறையலாளி, மங்கையர் கோன், மங்கை வேந்தன், அருள்மாரி, பரகாலன், கலிகன்றி, திருமங்கை மன்னர்
- **தொண்டரடிப் பொடியாழ்வார்:** விப்ரநாயணர்
- **திருமழிசை ஆழ்வார்:** பக்திசாரர், சொன்ன வண்ணம் செய்த பெருமாள்
- **குலசேகர ஆழ்வார்:** கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கொல்லிக் கோன்
- **சேக்கிழார்:** அருண்மொழித் தேவர், தொண்டர் சீர் பரவுவார், அநபாயன், உத்தம சோழப் பல்லவராயன்
- **ஒட்டக் கூத்தர்:** கூத்த முதலியார், கவிராட்சசன், காளகவி, சர்வஞ்சக் கவி, பாடற்பெரும்பரணி, தேடற்கருங்கவி
- **திருஞானசம்பந்தர்:** திராவிட சிசு, ஆளுடைபிள்ளை, ஞானத்திரு உரு, பாலாறவாயன், காழிவள்ளல், ஞானசம்மந்தன், தோடுடைய செவியன் (பதிகம்), கவுணியர், சந்தத்தின் தந்தை
- **திருநாவுக்கரசு:** மருள் நீக்கியார், தருமசேனர், தாண்டக வேந்தர், ஆளுடை அரசு, வாகீசர், அப்பர்
- **சுந்தரர்:** நம்பி ஆருரர், தம்பிரான் தோழர், வன்தொண்டர், ஆளுடை நம்பி, திருநாவலூரார், சேரமான் தோழர்
- **மாணிக்கவாசகர்:** திருவாதவூரர், தென்னவன் பிரம்மராயன், வாதவூர் அடிகள்
- **திருவெண்காடர்:** பட்டினத்தார், பட்டினத்துப் பிள்ளையார்
- **மீனாட்சி சுந்தரம்பிள்ளை:** நவீன கம்பர், தலபுராணவேந்தர், மகாவித்துவான்
- **எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை:** கிறித்துவக் கம்பர்
- **ராஜப்பா:** கம்பதாசன்
- **வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்:** உரையாசிரியர்ச் சக்கரவர்த்தி

RADIAN IAS ACADEMY

**எட்டுத்தொகை நூல்கள்**

- **நற்றிணை (அகம்):** தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி, மொத்த பாடல்கள் 400
- **குறுந்தொகை (அகம்):** தொகுத்தவர் பூரிக்கோ, மொத்தப் பாடல்கள் 400
- **ஐங்குறுநூறு (அகம்):** தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார், தொகுப்பித்தவர் யானைக்கட் மாந்தரஞ் சேரலிரும்பொறை, மொத்தப் பாடல்கள் 500
- **பதிற்றுப்பத்து (புறம்):** மொத்தப் பாடல்கள் 100 (கிடைப்பவை 80)
- **பரிபாடல் (அகம், புறம் இரண்டும்):** மொத்தப் பாடல்கள் 70 (கிடைப்பவை 22)
- **கலித்தொகை (அகம்):** தொகுத்தவர் நல்லந்துவனார், மொத்தப் பாடல்கள் 150
- **அகநானூறு (அகம்):** தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர், தொகுப்பித்தவர் உக்கிரப்பெருவழுதி, மொத்தப் பாடல்கள் 400
- **புறநானூறு (புறம்):** மொத்தப் பாடல்கள் 400

- கலித்தொகை குறிஞ்சிக்கலி பாடியவர் - **கபிலர்**
- முல்லைக்கலியைப் பாடியவர் - **சோழன் நல்லுருத்திரன்**
- மருதக்கலியைப் பாடியவர் - **மருதனிள நாகனார்**
- நெய்தற்கலியைப் பாடியவர் - **நல்லந்துவனார்**
- பாலைக்கலியைப் பாடியவர் - **பெருங்கடுங்கோ**

## 58) அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்கள்

- **அகத்தியம்:** தமிழ் மொழியின் மூலநூல், முதல் நூல்
- **தொல்காப்பியம்:** தமிழின் உயிர் நூல்
- **மணிமேகலை:** மணிமேகலைத் துறவு, தமிழரின் முதல் காப்பியம்
- **மணிமேகலை, குண்டலகேசி:** பௌத்த காப்பியங்கள்
- **குறுந்தொகை:** நல்ல குறுந்தொகை
- **நற்றிணை:** நல்+திணை=நற்றிணை
- **அகநானூறு:** நெடுந்தொகை, அகம், அகப்பாட்டு, பெருந்தொகை நானூறு
- **கலித்தொகை:** நூற்றைம்பது கலி, இசைப்பாட்டு, வெண்பா நடைத்து, கற்றறிந்தோர் ஏத்தும் தொகை
- **பரிபாடல்:** இசைப்பாட்டு, ஓங்கு பரிபாடல், பொருட்கலவை நூல், பரிப்பாட்டு
- **புறநானூறு:** நந்தா விளக்கம், இன்னொரு திருக்குறள், தமிழர் வரலாற்றுக் களஞ்சியம், புறப்பாட்டு, புறம், புறம்பு நானூறு
- **திருமுருகாற்றுப்படை:** புலவராற்றுப்படை, முருகாற்றுப்படை
- **பெரும்பாணாற்றுப்படை:** பாணாறு, புறப்பாட்டு
- **கூத்தராற்றுப்படை:** மலைபடுகடாம்
- **நாலடியார்:** வேளாண் வேதம், நாலடி நானூறு
- **இனியவை நாற்பது, இன்னா நாற்பது:** இரட்டை அற நூல்கள்
- **பழமொழி:** முதுமொழி, மூதுரை, உலக வசனம், பழமொழி நானூறு
- **முல்லைப்பாட்டு:** நெஞ்சாற்றுப்படை, இல்லிருத்தல் முல்லை
- **மதுரைக்காஞ்சி:** கூடற்றமிழ், காஞ்சிப்பாட்டு
- **பட்டினப்பாலை:** வஞ்சி நெடும்பாட்டு, பாலைப்பாட்டு
- **பெரியபுராணம்:** திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் புராணம், எடுக்கும் மாக்கதை, வழிநூல், அறுபத்து மூவர் புராணம்
- **சீவகசிந்தாமணி:** மணநூல்
- **மூதுரை:** வாக்குண்டாம்
- **தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம்:** குட்டித் தொல்காப்பியம்
- **திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி:** குட்டித் திருவாசகம்
- **நாலடியார்:** குட்டித் திருக்குறள்
- **நேமிநாதம்:** சின்னூல்
- **நம்பியகப்பொருள்:** அகப்பொருள் விளக்கம்
- **திருவாய்மொழி:** திராவிட வேதம்
- **வெற்றிவேற்கை:** நறுந்தொகை
- **பிள்ளைத்தமிழ்:** பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு, குழந்தை இலக்கியம்
- **சீறாப்புராணம்:** சிந்தையள்ளும் சீறா
- **உலா:** உலாப்புறம், புற உலா, பவனி உலா, உலா மாலை
- **கலம்பகம்:** பல பூ நிறைந்த பாடலைக்கண்ணி, கலம்பக மாலை
- **நாட்டுப்புறப் பாடல்கள்:** வாய்மொழி இலக்கியம், நாடோடிப் பாடல், நாட்டுப்புறப்பாடல், நாட்டுப்புறவியல்
- **குறவஞ்சி:** குறவஞ்சி நாடகம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி நாடகம்
- **பள்ளு இலக்கியம்:** உழத்திப்பாட்டு
- **பதிற்றுப்பத்து:** இரும்புக் கடலை
- **பண்டார மும்மணிக் கோவை:** சைவ சித்தாந்த சிறுகாப்பியம்
- **திருவிசைப்பா:** திருப்பல்லாண்டு
- **வச்சணந்தி மாலை:** வெண்பாப் பாட்டியல்
- **தாயுமானவர் பாடல்கள்:** தமிழ் மொழியின் உபநிடதம்
- **காப்பியப்பாட்டு:** குறிஞ்சிப் பாட்டு, பெருங்குறிஞ்சி

RADIAN IAS ACADEMY

5. இளமையில் சிறந்த வளமையும் இல்லை
6. சாதல் அஞ்சேன் அஞ்சுவல்
சாவில் பிறப்பு பிரிது ஆகுவதாயின்
7. நம்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினர் புன்னையது சிறப்பே

**குறுந்தொகை**

1. "இம்மை மாறி மறுமையாகினும்
நீயாகியர் என் கணவனை
யானாகிய நின்னெஞ்சு நேர்பவளே"
2. சிறு கோட்டுப் பெரும்பியம் தூங்கியாங்கியவன்
உயர் தவச் சிறிது காமமோ பெரிதே
3. யாருமில்லை தானே கள்வன் தானது
பொய்ப்பின்யான் என் செய்கோ

**ஐங்குறுநூறு**

1. பச்சூன் பெதே பைந்நிணவல்சி
பொலம்புனை கலத்திற் தருகுவென் மாதோ
2. வெஞ்சின விறல் வேற் காளையாடு
அஞ்சிலோதியை வரைக்கரைந்தீமே
3. எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையர் தோன்றும் நாட
4. நன்மனை வதுவை அயர இவன்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே

**பதிற்றுப்பத்து**

1. தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த

**பரிபாடல்**

1. "தமிழ் வேலி"
2. "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையஞ் சீருர்"
3. பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அறனும் அன்பும் மூன்றும்

**கலித்தொகை**

1. செறிவு எனப்படுவது கூறியது மறவாமை0
2. நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
3. முறை எனப்படுவது மண்ணோடாது உயிர் வவ்வல்
4. பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
5. போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

**மதுரைக் காஞ்சி**

1. விளைந்து முதிர்ந்து விழுமுத்து

**பெரும்பாணாற்றுப்படை**

1. பசுந்திணை மூரல் பாலொடும் பெறுகுவீர்

**அகநானூறு**

1. பாணன் வந்தனன் தூதே
2. பசைபடு பச்சை நெய் தோய்த்தன்ன
சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
3. வெள்ளி வீதியைப் போல ஒன்றுஞ்
செலவயர்ந்திசினால்
4. அறுகோட்டு உழைமான் ஆண்குரல் வாக்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை

**புறநானூறு**

1. தமிழ்கெழுகூடல்
2. உறுமடத்துதவா உவர்நிலம்
3. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
4. எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே
5. நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
6. யான் உயிர் என்பது அறிகை
வேன் மிகு தானை வேந்தர்க்கு கடனே
7. உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே
8. வளைகதிர் வல்சி கொண்டளை மல்க
9. கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்
10. நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்
11. செல்வத்துப் பயனே ஈதல்
12. உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் தமியர்
உண்டலும் இலரே

**நாலடியார்**

1. நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கணியராயினும்
2. சேய்த்தானும் சென்று கொளல் வேண்டும்
செய்விளைக்கும்
வாய்க்கால் அணையர் தொடர்பு
3. தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே
நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து
4. நல்லார் எனத்தான் நனிவிரும்பி கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கி கொளல் வேண்டும்
5. நெல்லுக்கு உமியுண்டு நீருக்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு

**முதுமொழிக்காஞ்சி**

1. ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை

RADIAN IAS ACADEMY

## 59) புலவரின் மேற்கோள்கள்

**ஔவையார்**

- அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது.
- நல்ல மகனாய் பிறந்தும் சும்மா திரியாதே
  சான்றோன் எனத் திரி.
- சங்கத் தமிழ் மூன்றும் தா.
- சாதி இரண்டொழிய வேறில்லை
- எவ்வழி நல்லவர் ஆடவர்
  அவ்வழி நல்லை வாழிய நிலனே
- மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்
- ஊருடன் கூடி வாழ்
- எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.
- பசித்துப் புசி.
- இளமையில் கல்.
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
- அறம் செய விரும்பு
- ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்.
- சீரைத் தேடின் ஏரைத் தேடு.
- உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
- ஆத்திச்சூடி முழுவதும்.
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
- ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
- "நூல்பல கல்", "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு"
- ஓடுமீன் ஓட உறுமின் வருமளவும்
  வாடி இருக்குமாம் கொக்கு
  அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல்
  உற்றுழித் தீர்வார் உறவல்லர்
- சோழன் வழிவந்த பாண்டியா நின்னாடு உடைத்து
  நல்ல தமிழ்

**இராமலிங்க சுவாமிகள் - இராமலிங்க அடிகளார் (வள்ளலார்)**

- எல்லோரும் வாழ்க இசைந்து
- கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக
- வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் உளம்
  வாடினேன்.
- பசித்திரு, தனித்திரு, விழித்திரு
- அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை
- உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு
  கலவாமை வேண்டும்.

**திருமூலர்**

- உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
- என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
  தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே
- யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
- உள்ளம் பெருங்கோயில் ஊண் உடம்பு ஆலயம்
  கள்ளப் புலன் ஐந்தம் காளாமணி விளக்கே
- ஒன்றே குலம் ஒருவனே தேவன்
- தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ
  வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
- அன்பே சிவம்
- உடம்பால் அழியின் உயிரார் அழிவர்
- அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
  அன்பே சிவம் என்பதை ஆகும் அறிகிலார்.

**கணியன் பூங்குன்றனார்**

- யாதும் ஊரே யாவரும் கேளிர்
- தீதும் நன்றும் பிறர் தர வாரா
  நோதலும் தணிதலும் அவற்றோரன்ன.
- பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை
  இகழ்தல் அதனினுமிலமே

**பிசிராந்தையார்**

- யாண்டு பலவாயினும் ஆன்றவிந்து அடங்கிய
- கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.

**நக்கீரர்**

- "உண்பது நாழி உடுப்பது இரண்டே"
  " செல்வத்துப் பயனே ஈதல்"

**தாயுமானவர்**

- எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
  அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே
- நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்
  அன்பே! மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய்
- அரும்பொன்னே, மணியே, அன்பே, அறிவே,
  ஆனந்த வெள்ளமே.
- அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு
  விட்டால் இன்பநிலை தானாக வந்தெய்தும்.

**கோவூர்க்கிழார்**

- ஒருவீர் தோற்பினும் தோற்பதுங்குடியே
  இருவீர் வேறலும் இயற்கையுமன்றே.

**திருநாவுக்கரசர் - ஆருடை அரசு, (அப்பர்)**

- என் கடன் பணி செய்து கிடப்பதே.
- மாசில் வீணையும் மாலை மதியமும்.
- இன்பமே எந்நாளும் துன்பமே இல்லை.
- ஈசன் எந்தை இணையடி நிழலே.
- குறிக்கோளிலாது கெட்டேன்.
- நாமர்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்

**திருஞான சம்பந்தர் - ஆளுடை பிள்ளை**

தோடுடை செவியன் நல்ல விடையேறி

**சுந்தரர்**

RADIAN IAS ACADEMY

வெகு கொடியோர் செயல் அறவே
- ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவர், உணரப்பா - நீ
- புதியதோர் உலகம் செய்வோம்
- தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.
- பசியென்று வந்தவருக்கும் புசியென்று ஒரு பிடி கொடு.
- இவ்வுலகு உழைப்பாளருக்கு உரியது.
- தாய்ப் பாலில் நஞ்செனவே வடமொழி சேர்த்தார்.
- ஒரு கடவுள் உண்டென்போம்
  உரு வணக்கம் ஒப்போம்.
- இருட்டறையில் உள்ளதடா உலகம்
- மதங்கள் மக்களின் மாற்று சட்டைகள்.
- பாரடா உன் மானிட சமுத்திரத்தை.
- உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே
- பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின் மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே.
- சங்கே முழங்கு, சங்கே முழங்கு
  எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காதத்
  தமிழேயென்று சங்கே முழங்கு.
- எங்கெங்கு காணினும் சக்தியடா
- என் சாம்பலிலும் தமிழ் மணந்து சாக வேண்டும்.
- திங்களொடும், செம்பரிதி தன்னொடும், மங்குல் கடல் உடுக்கல் இவற்றொடும் பிறந்த தமிழ்

**திரு.வி.கல்யாணசுந்தரனார்**
- எந்தப் பொருளையும் சிந்தனை செய்க.
- அறிவாளி புகழ்ச்சிக்கு அடிமையாவதில்லை.
- கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி ......

- பொதுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை செல்கின்றன.
- வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்
  - தலையில் சிறகு வளர்தல்
  - இறகுகளின் நிறம் மாறுதல்
  - உடலில் கற்றையாக முடி வளர்தல்
- கப்பல் பறவை சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை (Frigate Bird). இது தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும். இது கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.
- 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சத்திமுத்தப்புலவர் *"நாராய், நாராய், செங்கால் நாராய்"* என்னும் பாடலை எழுதியுள்ளார். அப்பாடலில் உள்ள *"தென்திசைல் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயிர்"* என்னும் அடிகள் பறவைகள் வலசை வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.
- ஐரோப்பாவில் இருந்து தமிழகத்திற்குச் செங்கால் நாரைகள் வருவது தற்போதைய ஆய்விலும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.
- வெளிநாட்டுப் பறவைகளுக்கும் புகலிடமாகத் திகழ்கிறது தமிழ்நாடு.
- தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் சிட்டுக் குருவி.
- சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது. கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டுக் கொண்டே இருக்கும், கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.
- சிட்டுக்குருவியின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் ஆகும்.
- காக்கைகுருவி எங்கள் சாதி - என்று பாரதியார் பாடினார்.

  இந்தியாவின் பறவை மனிதர்
- இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி *டாக்டர் சலீம் அலி.*
- தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் அவற்றைப் படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார். அதனால், அவர் "இந்தியாவின் பறவை மனிதர்" என்று அழைக்கப்படுகிறார்.
- பறவைகள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் 'சிட்டுக்குருவியின் வீழ்ச்சி" (The fall of Sparrow) என்று பெயரிட்டுள்ளார்.
- *மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழமுடியும்!*

  *பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழமுடியாது!*

  \- என்கிறார் பறவையியல் ஆய்வாளர் சலீம் அலி
- ஆர்டிக் ஆலா - உலகிலேயே நெடுந்தொலைவு 22,000 கி.மீ. பயணம் செய்யும் பறவையினம்.
- பறவை பற்றிய படிப்பு ஆர்னித்தாலஜி (ORNITHOLOGY) எனப்படும்.
- உலகச் சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் – 20
- கிழவனும் கடலும் (The Oldman and the Sea) என்னும் ஆங்கிலப் புதினம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு படக்கதையாக இங்குச் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் 1954 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றது. இந்நூலின் ஆசிரியர் *எர்னெஸ்ட் ஹெமிங்வே.*

## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும், இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்
- முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள், இவை பத்து வகைப்படும்.

1. உயிர் மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

ஆய்தம்:

- முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.

ரோபோவின் பெயர் "சோபியா". மேலும் ஐக்கிய நாடுகள் சபை "புதுமைகளின் வெற்றியாளர்" என்னும் பட்டத்தைச் சோபியாவுக்கு வழங்கியுள்ளது. உயிரில்லாத ஒரு பொருளுக்கு ஐ.நா.சபை பட்டம் வழங்குவது இதுதான் முதல் முறை.

இயல் – 3 ஒளி பிறந்தது

- குழந்தைகளிடமும் மாணவர்களிடமும் மிகுந்த அன்பு காட்டியவர் மறைந்த மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல் கலாம். மாணவர்கள் முன்னேற பல வழிகளை எடுத்துச் சொன்னவர். எதிர்காலம் பற்றிக் கனவுகண்டு, அதை அடைய வேண்டும் என்பது அவர் கனவாக இருந்தது.
- தமிழில் திருக்குறள் எனக்கு மிகவும் பிடித்த நூலாகும்.

"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்."
- என்னும் குறள் என் வாழ்க்கைக்கு வலுசேர்த்தது. அதுபோல் லிலியன் வாட்சன் எழுதிய, விளக்குகள் பல தந்த ஒளி (lights from many lamps) என்னும் நூலையும் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றேன்.

- பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை அக்னி மற்றும் "பிரித்வி" ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.
- மூன்று சிறப்புகளைப் பெற்றிருக்கும் என நம்புகிறேன்.

1. ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நாளந்தா பல்கலைக்கழகத்தில் இருந்ததைப் போல வலுவான கல்வி முறை இருக்கும்.
2. அனைத்து இயற்கை வளங்களும் தீர்ந்து போயிருக்கும். ஆயினும் நாம் தயாரித்து அனுப்பிய செயற்கைக்கோள்கள் சூரிய சக்தியைப் பெற்று நமக்கு அளிக்கும்.
3. செவ்வாய்கோளில் மனித இனம் குடியேறி இருக்கும்.

மொழி முதல், இறுதி எழுத்துகள்

- மொழி என்பதற்குச் சொல் என்னும் பொருளும் உண்டு.
- சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதல் எழுத்தாக வரும்.
- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
- க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும், சொல்லின் முதலில் வரும்.
- ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.
- ங - வரிசையில் "ங" என்னும் ஓர் எழுத்து மட்டுமே சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது. எ.கா - ஙனம்

(இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது.

- ஞ - வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ய - வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- வ - வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை, ஆகிய ஏழு எழுத்துக்ளும் சொல்லின் முதலில் வரும்.
- மெய்யெழுத்துகள் பதினெட்டும் சொல்லின் முதலில் வராது.
- டமாரம், ரம்பம், லண்டன், ஃப்ரான்ஸ், டென்மார்க், போன்றவை பிறமொழிச் சொற்கள். இவற்றைத் தமிழில் ஒலி பெயர்த்து எழுதுகிறோம்.

மொழி இறுதி எழுத்துகள்

- சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.
- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்.
- ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன், ஆகிய மெய் யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும்.

மொழி இறுதியாகா எழுத்துகள்

- சொல்லின் இறுதியில் உயிரெழுத்துகள் தனித்து வருவதில்லை.
- உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே சொல்லின் இறுதியில் வரும்.
- அளபெடை எழுத்துகளில் இடம் பெறும் போது உயிர் எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்
- ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.
- க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளு சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- உயிர்மெய் எழுத்துகளுள் "ங" எழுத்து வரிசை சொல்லின் இறுதியில் வராது.

தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.

காமராசருக்குத் தமிழக அரசு செய்த சிறப்புகள்

- மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.
- நடுவண் அரசு 1976 - இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் மற்றும் விருதுநகர் இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.
- சென்னை மெரினா கடற்கரையில் சிலை நிறுவப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இயல் – 4 நூலகம் நோக்கி

- ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் நம் தமிழ்நாட்டில் உள்ளது.
- அண்ணா நூற்றாண்டு நூலகம்.
- ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம்.
- முனைவர் இரா. அரங்கநாதன். நூலக விதிகளை உருவாக்கியவர். இவர் இந்திய நூலக அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய நூலகம் சீனாவில் உள்ளது.

அண்ணா நூலகத்தின் எட்டுத் தளங்கள்

- தரைத்தளம் - சொந்த நூல் படிப்பகம், பிரெய்லி நூல்கள்.
- முதல் தளம் - குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள்
- இரண்டாம் தளம் - தமிழ் நூல்கள்
- மூன்றாம் தளம் - கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள்.
- நான்காம் தளம் - பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி
- ஐந்தாம் தளம் - கணிதம், அறிவியல், மருத்துவம்.
- ஆறாம் தளம் - பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை.
- ஏழாம் தளம் - வரலாறு, சுற்றுலா.
- எட்டாம் தளம் - நூலகத்தின் நிர்வாகப் பிரிவு.
- நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சிலர். அறிஞர் அண்ணா, ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ்
- சிறந்த நூலகர்களுக்கு டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கப்படுகிறது.

இன எழுத்துகள்:

- குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும்.
- தமிழ் எழுத்துகளின் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.

இயல் – 5 ஆசாரக்கோவை

| | |
|---|---|
| நன்றியறிதல் | பிறர் செய்த உதவியை மறவாமை |
| ஒப்புரவு | பிறருக்கு உதவி செய்தல் |
| நட்டல் | நட்புக் கொள்ளுதல் |

- ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் பிறந்த ஊர் வண்கயத்தூர். ஆசாரக்கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.

கண்மனியே கண்ணுறங்கு

சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| நந்தவனம் | பூஞ்சோலை |
| பார் | உலகம் |
| பண் | இசை |
| இழைத்து | செய்து |

தொகைச்சொற்களின் விளக்கம்

- முத்தேன் - மொம்புத்தேன், பொந்துத்தேன், கொசுத்தேன்
- முக்கனி - மா, பலா, வாழை
- முத்தமிழ் - இயல், இசை, நாடகம்.
- தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு (தால் + ஆட்டு) என்று பெயர்பெற்றது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.

## தமிழர் பெருவிழா

- உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். தைத்திங்களில் அறுவடை செய்து பயன் அடைவர்.
- தைத்திங்களின் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே, இத்திருவிழாவை அறுவடைத்திருவிழா என்றும் அழைப்பர்.

- ர - மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது.

  இது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

- ற - மேல் அண்ணத்தில் மையப் பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது

  இது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

பொருள் வேறுபாடு உணர்க

| | |
|---|---|
| ஏரி | குளம் |
| ஏறி | மேலே ஏறி |
| கூரை | வீட்டின் கூரை |
| கூறை | புடவை |

தமிழ்ச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| நல்வரவு | Welcome |
| சிற்பங்கள் | Sculptures |
| சில்லுகள் | Chips |
| ஆயத்த ஆடை | Readymade Dress |
| ஒப்பனை | Makeup |
| சிற்றுண்டி | Tiffin |

- உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் சிறப்பான அறங்களை வலியுறுத்தியவர் திருவள்ளுவர்.

## இயல் – 6 நானிலம் படைத்தவன்

சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| மல்லெடுத்த | வலிமைபெற்ற |
| சமர் | போர் |
| நல்கும் | தரும் |
| கழனி | வயல் |
| மறம் | வீரம் |
| எக்களிப்பு | பெருமகிழ்ச்சி |
| கலம் | கப்பல் |
| ஆழி | கடல் |

- முடியரசனின் இயற்பெயர் துரைராசு, பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார். திராவிட நாட்டின் வானம்பாடி என்றும் கவியரசு என்றும் பாராட்டப்பெற்றவர்.
- இப்பாடல் புதியதொரு விதி செய்வோம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.
- *வெள்ளிப் பனிமலையின் மீதுஉலாவுவோம் - அடி*
  *மேலைக் கடல்முழுவதும் கப்பல் விடுவோம்*

  *கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்*
  *காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்*
  *சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு*
  *சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்*

  \- பாரதியார்

## இயல் – 6 கடலோடு விளையாடு

சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| கதிர்ச்சுடர் | கதிரவனின் ஒளி |
| மின்னல்வரி | மின்னல் கோடுகள் |
| அரிச்சுவடி | அகரவரிசை எழுத்துகள் |

- மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள் மீன்வர்கள். அவர்களுக்கு விண்மீங்களே விளக்குகள். விரிந்த கடலே பள்ளிக்கூடம். கடல் அலையே தோழன். மேகமே குடை வெண்மையான மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை, விண்ணின் இடி அவர்கள் காணும் கூத்து.
- சீறிவரும் புயலே விளையாடும் ஊஞ்சல். பனிமூட்டம்தான் உடலைச் சுற்றும் போர்வை. அனல் வீசும் கதிரவனின் ஒளிச்சுடர்தான் மேற்கூரை. கட்டுமரம்தான் அவர்கள் வாழும் வீடு. மின்னல் கோடுகளே அடிப்படைப் பாடம் வலைவீசிப் பிடிக்கும் மீன்களே அவர்களது செல்வம். முழு நிலவுதான் கண்ணாடி. மூச்சடக்கிச் செய்யும் நீச்சலே அவர்கள் செய்யும் தவம். இவற்றிற்கு இடையே மீனவர்கள் மன உறுதியோடு தொழில் செய்கின்றனர்.

நெய்தல் திணை

- நிலம் - கடலும் கடல் சார்ந்த இடமும்
- மக்கள் - பரதர், பரத்தியர், எயினர், எயிற்றியர்
- தொழில் - மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்
- பூ - தாழம்பூ
- உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே நாட்டுப்புறப் பாடலாகும். காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் இதனை வாய்மொழி இலக்கியம் என்பர். ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு முதலான தொழில்பாடல்களும் விளையாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் முதலியனவும் நாட்டுப்புறப் பாடல்களுள் அடங்கும். இப்பாடல் சு. சக்திவேல் தொகுத்த நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

## இயல் – 6 வளரும் வணிகம்

- பண்டமாற்றும் வணிகம் நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர்.

(எ.கா) எதும் யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகளுக்குப் பொருள் இல்லை.

புறவினா

- வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருமானால் அது புறவினா எனப்படும்.

(எ.கா.) அவனா, வருவானோ இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| பண்டம் | Commodity |
| பயணப்படகுகள் | Ferries |
| பாரம்பரியம் | Hertiage |
| நுகர்வோர் | Consumer |
| கடற்பயணம் | Voyage |
| தொழில் முனைவோர் | Entrepreneur |
| கலப்படம் | Adulteration |
| வணிகர் | Merchant |

இயல் – 7 பாரதம் அன்றைய நாற்றங்கால்

- மெய் - உண்மை தேசம் - நாடு
- பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகின்றது. உண்மைகலைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன.
- குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.
- அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கின்றது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்றுகோலாக காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகின்றது.
- தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும். இப்பாடல் தாராபாரதியின் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

இயல் – 7 தமிழ்நாட்டில் காந்தி

- 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் முதன்முறையாகச் சென்னைக்கு வந்தார். அப்போது ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனை எதிர்த்துப் பெரிய போராட்டத்தை நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். அதைப் பற்றிய ஆலோசனைக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது.
- இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர், தமிழ்நாட்டின் சொத்து "என்றார் இராஜாஜி". இல்லை இல்லை, இவர் இந்திய நாட்டின் சொத்து. இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்றார் காந்தியடிகள். (பாரதியார்)
- 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார்.
- காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
- காந்தியடிகள் ஒருமுறை காரைக்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது கானாடுகாத்தான் என்னும் ஊரில் ஒரு பணக்காரர் வீட்டில் தங்கி இருந்தார்.
- தென்னாபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாகக் கூறியுள்ளார். ஜி.யு.போப் எழுதிய தமிழ்க்கையோடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார். திருக்குறள் அவரைக் கவர்ந்த நூலாகும்.
- 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றுது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே..சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

எனப் போற்றுவர். இப்பாடல்கள், "பராபரக் கண்ணி" என்னும் தலைப்பில் உள்ளன. "கண்ணி" என்பது இரண்டு அடிகளால் பாடப்படும் பாடல்வகை.

இயல் – 8 நீங்கள் நல்லவர்

- சுயம் - தனித்தன்மை
- உள்ளீடுகள் - உள்ளே இருப்பவை
- லெபனான் நாட்டைச் சேர்ந்தவர் கலீல் ஜிப்ரான், கவிஞர் நாவலாசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர்.
- இப்பாடப்பகுதி கவிஞர் புவியரசு மொழிபெயர்த்த தீர்க்கதரிசி என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

இயல் – 8 பசிப்பிணி போக்கிய பாவை

- தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதியார்.
- கோமுகி என்னும் பெயர். "கோ" என்றால் பசு. முகி என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் இப்பொய்கை கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.
- வைகாசித் திங்கள் முழு நிலா நாளில் இப்பொய்கை நீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் தோன்றும். அஃது ஆபுத்திரன் கையிலிருந்த "அமுதசுரபி" என்னும் பாத்திரம் ஆகும்.
- எஸ். ராமகிருஷ்ணன் தற்காலத் தமிழ் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைத் தொகுப்புகள், சிறுவர் இலக்கியங்கள் என இவருடைய படைப்புகள் நீள்கின்றன. உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள் முதலிய ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இக்கதை தாவரங்களின் உரையாடல் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

பெயர்ச்சொல்

- பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவையாவன
  1) பொருட்பெயர்
  2) இடப்பெயர்
  3) காலப்பெயர்
  4) சினைப்பெயர்
  5) பண்புப்பெயர்
  6) தொழிற்பெயர்

பொருட்பெயர்

பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

(எ.கா) மரம், செடி, மயில், பறவை

இடப்பெயர்

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா) சென்னை, பள்ளி, பூங்கா, தெரு

காலப்பெயர்

காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா) நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு.

சினைப் பெயர்

பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா) கண், கை, இலை, கிளை

பண்புப்பெயர்

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

(எ.கா) வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

தொழிற்பெயர்

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்

(எ.கா) படித்தல், ஆடுதல், நடித்தல்.

அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கான சான்றுகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுவோம்.

காவியா வந்தாள் - பொருட்பெயர்

காவியா பள்ளிக்குச் சென்றாள் - இடப்பெயர்

பள்ளித் தொடங்கும் நேரம் காலை 9 மணி - காலப்பெயர்

காவியா தலையை அசைத்தாள் - சினைப்பெயர்

பயிர்கள் பசுமையாக இருந்தன - பண்புப்பெயர்

நடனம் ஆடுதல் சிறந்த கலை - தொழிற்பெயர்

இடுகுறிப்பெயர்

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் சில பெயர்களை இட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.

(எ.கா) மண், மரம், காற்று

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறி சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

இடுகுறிப் பொதுப்பெயர்

நம் முன்னோர் காரணம் ஏதுமின்றி, பொதுத்தன்மை கருதி ஒரு பொருளுக்கு இட்டு வழங்கிய பெயர் இடுகுறிப் பொதுப் பெயர் எனப்படும்.

(எ.கா) மரம், பழம்

இடுகுறிச் சிறப்புபெயர்

# 6வது தமிழ் பாடத்தின் முக்கிய குறிப்புகள்

## திருவருட்பா - இராமலிங்க அடிகளார்

- ✓ இராமலிங்க அடிகளார், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்.
- ✓ இவர் கடலூர் மாவட்டம் மருதூரில் பிறந்தவர். பெற்றோர் இராமையா, சின்னம்மையார்.
- ✓ ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்டவாசகம் ஆகிய நூல்கள் இவர் எழுதியவை.
- ✓ இவர் பாடல்கள் அனைத்தும் 'திருவருட்பா' எனத் தொகுக்கப்பட்டுள்ளன.
- ✓ அனைத்து மதங்களின் நல்லிணக்கத்திற்காகச் சன்மார்க்க சங்கத்தையும், பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க அறச்சாலையையும் அமைத்தவர்.
- ✓ அறிவு நெறி விளங்க ஞானசபையையும் நிறுவியவர்.
- ✓ வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய கருணை மனம் இவருடையது.
- ✓ வடலூர் அறச்சாலையில், பசியால் வாடும் மக்களுக்குச் சோறிட இவர் அன்று மூட்டிய அடுப்பு இன்றும் அணையாமல், தொடர்ந்து பசிப்பிணி தீர்த்து வருகிறது.
- ✓ இவர் வாழ்ந்த காலம் 05.10.1823 முதல் 30.01.1874 வரை.

## திருக்குறள் - அன்புடைமை

**சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| ஆர்வலர் | - | அன்புடையவர் |
| புன்கணீர் | - | துன்பம் கண்டு பெருகும் கண்ணீர் |
| பூசல் தரும் | - | வெளிப்பட்டு நிற்கும் |
| என்பு | - | எலும்பு |
| ஈனும் | - | தரும் |
| ஆர்வம் | - | விருப்பம், |

(வெறுப்பை நீக்கி விருப்பத்தை உண்டாக்கும் என்பது பொருள்)

| | | |
|---|---|---|
| நண்பு | - | நட்பு |
| வையகம் | - | உலகம் |
| என்ப | - | என்பார்கள் |
| மறம் | - | வீரம், |

(கருணை வீரம் இரண்டுக்குமே அன்பு தான் அடிப்படை என்பது பொருள்)

| | | |
|---|---|---|
| என்பிலது | - | எலும்பில்லாதது (புழு) |
| அன்பிலது உயிர்கள் | - | அன்பில்லாத |
| தளிர்த்தற்று | - | தளிர்த்தது போல |
| வற்றல் மரம் | - | வாடிய மரம் |
| புறத்துறுப்ப, | - | உடல் உறுப்புகள் |
| எவன் செய்யும் | - | என்ன பயன்? |
| அகத்துறுப்பு அன்பு | - | மனத்தின் உறுப்பு, |

**ஆசிரியர் குறிப்பு**

- ✓ திருவள்ளுவர் காலம் கி.மு.31 , இதைத் தொடக்கமாகக் கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.
- ✓ செந்நாப்போதார், தெய்வப் புலவர், நாயனார் என வேறு பெயர்களாலும் போற்றப்படுகிறார்.

**நூல் குறிப்பு**

- ✓ இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால். இந்நூலில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.
- ✓ இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலை முப்பால், பொதுமறை, தமிழ்மறை என்றும் கூறுவர்.
- ✓ திருக்குறள் 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது.
- ✓ திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடும் முறை
- ✓ கிறித்து ஆண்டு (கி.பி.) + 31 = திருவள்ளுவர் ஆண்டு
- ✓ (எடுத்துக்காட்டு) 2010 + 31 = 2041 (கி.பி. 2010 ஐத் திருவள்ளுவர் ஆண்டு 2041 என்று கூறுவோம்.

## தமிழ்த்தாத்தா உ.வே.சா

- ✓ பிறந்த ஊர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம்.
- ✓ அவருடைய இயற்பெயர் வேங்கடரத்தினம்.
- ✓ ஆசிரியரின் பெயர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.
- ✓ ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர் சாமிநாதன்.
- ✓ அதனால் அவர்,உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகனான சாமிநாதன் என்பதன் சுருக்கமாக உ.வே.சா. என்றழைக்கப்பட்டார்.
- ✓ 19.021855 ஆம் ஆண்டு பிறந்த அவர், 28.04.1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- ✓ தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்த விகடன் இதழில் தொடராக எழுதினார். அது 'என் சரிதம்' என்னும் பெயரில் நூலாக வெளி வந்தது.
- ✓ உ.வே.சா. அவர்களின் பெயரால் 1942 இல் நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் இன்றும் சென்னையில் உள்ள பெசன்ட் நகரில் தொடர்ந்து வருகிறது.
- ✓ இவரது தமிழ்ப்பணிகளை வெளிநாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.
- ✓ நடுவண் அரசு, தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் 2006 ஆம் ஆண்டு அஞ்சல் தலை வெளியிட்டது.

## கடைசிவரை நம்பிக்கை

- ✓ காகிதத்தில் உருவங்கள் செய்யும் கலையை ஜப்பானியர் 'ஓரிகாமி' என்று கூறுவர்.

## இலக்கணம்

- ✓ 'ங்' என்ற எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும் 'ங்' 'க' இரண்டும் நண்பர்கள். (எ.கா.) சிங்கம், தங்கை.
- ✓ அதே போல் 'ஞ்ச' இரண்டும் நண்பர்கள். இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ.கா.) மஞ்சள், அஞ்சாதே.

RADIAN IAS ACADEMY

✓ ஒரு பாம்பைக் கொன்றால், அதன் இணைப்பாம்பு பழி வாங்கும் என்று சொல்வதுண்டு.

✓ இது உண்மையன்று, கொல்லப்பட்ட பாம்பின் உடம்பிலிருந்து வெளியேறும் ஒரு வகை வாசனைத் திரவியம் மற்றப் பாம்புகளையும் அந்த இடம் நோக்கி வரவழைக்கிறது.

✓ பாம்பு தன் நாக்கை அடிக்கடி வெளியே நீட்டும். சுற்றுப்புரத்தின் வாசனையை அறிந்து கொள்ளத்தான் பாம்பு அவ்வாறு செய்கிறது.

✓ நல்ல பாம்பின் நஞ்சு கோப்ராக்சின் (Cobroxin) எனும் வலி நீக்கி மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.

✓ இந்திய அரசு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972 இன்படி, தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்படுவதைத் தடுக்க சட்டம் நிறைவேற்றி உள்ளது.

**தமிழிலுள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது**

✓ உயிர் எழுத்துகள் பன்னிரண்டு.

✓ மெய்எழுத்துகள் பதினெட்டு ஆக மொத்தம் முப்பது.

✓ உயிரும் மெய்யும் சேர்ந்து 216.

✓ அடிப்படையான தமிழ் எழுத்துகள் முப்பது மட்டுமே.

**குறில் நெடில்**

✓ அ இ உ எ ஒ – ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள். இவை மெய் எழுத்துக்களோடு சேரும்போது, உயிர்மெய்க்குறில் எழுத்து உண்டாகின்றன. (எ.கா.) கடல், கிளி, குரங்கு, சென்னை, சொல்.

✓ ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ – ஏழும் நெடில் எழுத்துகள். (எ.கா.) காளை, கீற்று, கூடல், கேள்வி, கை, கோயில், கௌதாரி.

**நான்மணிக்கடிகை – விளம்பிநாகனார்**

**சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| மடவார் | - | பெண் |
| தகைசால் | - | பண்பில் சிறந்த |
| மனக்கினிய | - | மனத்துக்கு இனிய |
| ஓதின் போது | - | எதுவென்று சொல்லும் |
| புகழ்சால் | - | புகழைத் தரும் |
| உணர்வு | - | நல்லெண்ணம் |

**நூல் குறிப்பு**

✓ நான்மணிக்கடிகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

✓ கடிகை என்றால் அணிகலன் (நகை).

✓ நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது இதன் பொருள்.

✓ ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக் கருத்துக்களைக் கூறுகின்றன.

**ஆசிரியர் குறிப்பு**

✓ விளம்பி என்பது ஊர்ப்பெயர்.

✓ நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.

**நாட்டுப்புறத் தமிழ்**

**சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| ஆனம் | - | குழம்பு |
| நாழி | - | தானியங்களை அளக்கும் படி |
| அகவிலை | - | தானிய விலை |
| திறவு கோல | - | சாவி |

✓ கொழும்பில கூடாரம், மதுரையில கூடாரம்

✓ **கூடாரம்** இடுவது என்றால் **தங்குவது** என்று பொருள்.

**இசையமுது - புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்**

**சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| வானப்புனல் | - | வானத்து நீர் |
| புனல் | - | நீர் |
| அமுது | - | பூமியின் அமுதம் |
| வையம் | - | உலகம் |
| தழை | - | செடி |
| தழைக்கவும் | - | குறையவும் |

**ஆசிரியர் குறிப்பு**

✓ 'புரட்சி கவிஞர்' என்றும் 'பாவேந்தர்' என்றும் புகழப்படுபவர் பாரதிதாசன்.

✓ இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம்

✓ பாரதியின் கவிதை மீது கொண்ட காதலால் தம்முடைய பெயரைப் பாரதிதாசன் என இவர் மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு முதலியன இவரின் கவிதை நூல்கள்.

**பழமொழி நானூறு – முன்றுறை அரையனார்**

**சொற்பொருள்**

| | | |
|---|---|---|
| ஆற்றவும் | - | நிறைவாக |
| நாற்றிசை | - | நான்கு + திசை |
| தமவேயாம் ஆகும் | - | தம்முடைய நாடே |
| ஆற்றுணா | - | ஆறு + உணா |
| ஆறு | - | வழி |
| உணா | - | உணவு, வழி நடை உணவு. இதனைக் 'கட்டுச் சோறு' என்று இக்காலத்தில் சொல்வோம். |

**நூல் குறிப்பு**

✓ பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு.

✓ நானூறு பாடல்களைக் கொண்ட நூல் இது.

✓ ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம் பெற்றுள்ளது.

✓ இப்பாடலில் வரும் பழமொழி 'ஆற்றுணா வேண்டுவது இல்' என்பது.

✓ இதற்குக் 'கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டாம்' என்பது பொருள்.

**ஆசிரியர் குறிப்பு**

✓ முன்றுறை என்பது ஊர்ப்பெயர்.

✓ அரையன் என்ற சொல் அரசனைக் குறிக்கும் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசனாக இருக்கலாம் அல்லது அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம்

**மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்**

✓ 1922 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டுவரை 42 ஆண்டுகள் தம் மகளுக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டே இருந்தார் நேரு.

✓ நேரு வெளி நாடு சென்ற பொழுது இந்தியாவில் இருந்த பொழுதும் மகளுக்குக் கடிதம் எழுதினார்.

RADIAN IAS ACADEMY

**ஆசிரியர் குறிப்பு:**

- ✓ ஔவையார் சங்கப் புலவர்; அதியமானின் நண்பர். அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர்.
- ✓ சங்க காலத்தில் பெண் கவிஞர் பலர் இருந்தனர். அவர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஔவையார். சங்கப்பாடல் பாடிய ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர்; வேறு வேறானவர்.

**திண்ணையை இடித்துத் தெருவாக்கு ! - தாராபராதி**

**தேசியம் காத்த செம்மல்**

- ✓ இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் பிறந்தவர் முத்துராமலிங்கத் தேவர்.
- ✓ இவருடைய தந்தையார் திரு. உக்கிரபாண்டித் தேவர், தாயார் திருமதி இந்திராணி அம்மையார்.
- ✓ இவர் அன்னையை இளம் வயதில் இழந்தார்.
- ✓ பாட்டியின் வீட்டில் வளர்ந்த நாள்களில் இவருக்குக் கற்பித்த ஆசிரியர் குறைவறவாசித்தான் பிள்ளை ஆவார்.
- ✓ முத்துராமலிங்கத் தேவர் தம் தொடக்கக் கல்வியைக் கமுதியிலுள்ள தொடக்கப்பள்ளியில் கிறித்துவப் பாதிரியார்களிடம் பெற்றார்.
- ✓ பசுமலை உயர்நிலைப்பள்ளியில் சில ஆண்டுகள் பயின்றார். பின்னர், ஐக்கியக் கிறித்துவப்பள்ளியில் படித்தார். இராமநாதபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்தார்.
- ✓ இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது அந்நகரில் பிளேக் நோய் பரவியது. இவருடைய கல்வியும் நின்றது.
- ✓ தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வல்லமை பெற்றார். அம்மொழிகளில் சொற்பொழிவாற்றும் திறன் பெற்றார்.
- ✓ சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியனவற்றைக் கற்றறிந்தார். இளமையிலேயே அரசியலில் ஆர்வங்கொண்டார்.
- ✓ 32 சிற்றூர்களில் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை உழுபவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். அவற்றைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்து மகிழ்ந்தார்.
- ✓ இவர் நிலக்கிழார் ஒழிப்பிலும், ஆலய நுழைவுப் போராட்டத்திலும் முன்னின்ற வீரர் ஆவார்.
- ✓ சமபந்தி முறைக்கும் ஊக்கமளித்த பெருமகனாவார்.
- ✓ இவர், “சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை;
- ✓ ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிரச் சாதியையும் நிறத்தையும் அல்ல;
- ✓ சாதியும் நிறமும் அரசியலுக்குமில்லை;
- ✓ ஆன்மீகத்திற்கும் இல்லை”என்று சாதியைப் பற்றிக் கூறியுள்ளார்.
- ✓ வங்கச் சிங்கமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைத் தம் அரசியல் வழிகாட்டியாகக் கொண்டார்; தமிழகத்தின் சிங்கமானார்.
- ✓ விடுதலைப் போர் கடுமையாக இருந்த நாள்களில் ஆங்கில அரசு, வட இந்தியாவில் திலகருக்கும் தென்னிந்தியாவில் முத்துராமலிங்கத் தேவருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது.
- ✓ இவர். ‘தேசியம் காத்த செம்மல்’ என்று திரு.வி.க அவர்கள் இவரைப் பாராட்டியுள்ளார்.
- ✓ தேர்தலில் போட்டியிட்ட ஐந்து முறைகளிலும் வெற்றிவாகையினையே சூடினார்.
- ✓ 1937, 1946, 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் இவர் பெற்றிருந்த மக்கட் செல்வாக்கைக் காட்டின.
- ✓ தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் இரு கண்களாகப் போற்றியவர் பசும்பொன்னார்.
- ✓ இவர் வீரமில்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகுமென எடுத்துரைத்தவர்.
- ✓ இவர் சமயச் சான்றோராகவும் கருதப்பட்டார்.
- ✓ “பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு” என்று கூறியுள்ளார்.
- ✓ 55 ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இப்பெருமகனார் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் நாளில் இயற்கை எய்தினார்.
- ✓ தமிழ்நாடு அரசு இப்பெருமகனாரைப் போற்றும் வகையில் சென்னை மாநகரில் இவருடைய உருவச் சிலையினை நிறுவியுள்ளது.
- ✓ முத்துராமலிங்கத் தேவரின் விருப்பத்திற்கிணங்க 6.9.1939இல் மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வருகை தந்தார்.
- ✓ நடுவண் அரசு 1995இல் முத்துராமலிங்கத் தேவருடைய அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.
- ✓ முத்துராமலிங்கத் தேவர் தம் சொத்துக்கள் முழுவதையும் 17 பாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை மட்டும் தனக்கு வைத்துக்கொண்டு மீதி 16 பாகங்களையும் 16 பேர்களுக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.

**திருக்குறள் இனியவை கூறல்**

**சொற்பொருள்**

ஈரம் - அன்பு; அளைஇ - கலந்து; படிறு – வஞ்சம்; செம்பொருள் - சிறந்த பொருள்

(அகன் – அகம், உள்ளம்; அமர் – விருப்பம்; அமாந்து–விரும்பி; முகன் - முகம்; இன்சொல் - இனிய சொல்; இன்சொலன் - இனிய சொல்; இன்சொலன் - இனிய சொற்களைப் பேசுபவன்)

அமர்ந்து – விரும்பி; அகத்தான் ஆம்-உள்ளம் கலந்து; இன்சொல்லினதே - இனிய சொற்களைப் பேசுதலே)

துன்புறூஉம் - துன்பம் தரும்; இன்புறூஉம் - இன்பம் தரும்; யார்மாட்டும் - யாரிடத்தும் துவ்வாமை – வறுமை.

அணி – அழகுக்காக அணியும் நகைகள்; ஒருவற்கு – ஒருவனுக்கு

RADIAN IAS ACADEMY

மனிதர் உயர்திணை ஆவர். மனிதர் அல்லாத உயிருள்ளவையும் உயிரற்றவையும் அஃறிணை ஆகும்.

வீரன், அம்மா, நடிகன், கண்ணகி – உயர்திணைப் பெயர்கள்

பூ, மரம், பூனை, குருவி – அஃறிணைப் பெயர்கள்

**தனிப்பாடல் - இராமச்சந்திரக் கவிராயர்**

**சொற்பொருள்**

இரட்சித்தானா? - காப்பாற்றினானா?

அல்லைத்தான் - அதுவும் அல்லாமல்

ஆரைத்தான் - யாரைத்தான்

பதுமத்தான் - தாமரையில் உள்ள பிரம்மன்

புவி - உலகம்

குரைகடல் - ஒலிக்கும் கடல்; (அசுரர்கள் கடல் வடிவில் வந்தார்கள் என்பது கதை) மரங்குன்னுளான் - திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன்.

**நூல் குறிப்பு**

- ✓ புலவர்கள் பலர், அவ்வப்போது பாடிய பல பாடல்கள் தொகுக்கப்படாமல் இருந்தன.
- ✓ அவற்றைத் ‘தனிப்பாடல் திரட்டு’ என்னும் பெயரில் தொகுத்துள்ளனர்.
- ✓ பெரும்பாலான பாடல்கள் இருநூறுமுதல் முந்நூறு ஆண்டுகளுக்குள் பாடப்பட்டவை.
- ✓ **இராமச்சந்திரக்கவிராயர் துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவா்**

**அந்தக் காலம் இந்தக் காலம் - உடுமலை நாராயணகவி**

**ஆசிரியர் குறிப்பு**

- ✓ உடுமலை நாராயணகவி தமிழ்த் திரைப்படப்பாடல் ஆசிரியரும், நாடக எழுத்தாளரும் ஆவார்.
- ✓ பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர்.
- ✓ **‘பகுத்தறிவுக் கவிராயர்’** எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்.
- ✓ இவர் வாழ்ந்தகாலம் 25.9.1899 முதல் 23.5.1981 வரை.

| **ஆங்கிலம்** | | **தமிழ்** |
|---|---|---|
| டிவி | - | தொலைக்காட்சி |
| ரேடியோ | - | வானொலி |
| டிபன் | - | சிற்றுண்டி |
| டீ | - | தேநீர் |
| கரண்ட் | - | மின்சாரம் |
| டெலிபோன் | - | தொலைபேசி |
| ஃபேன் | - | மின்விசிறி |
| சேர் | - | நாற்காலி |
| லைட் | - | விளக்கு |
| தம்ளர் | - | குவளை |
| சைக்கிள் | - | மிதிவண்டி |
| பிளாட்பாரம் | - | நடைபாதை |
| ஆபீஸ் | - | அலுவலகம் |
| சினிமா | - | திரைப்படம் |
| டைப்ரைட்டர் | - | தட்டச்சுப்பொறி |
| ரோடு | - | சாலை |
| பிளைட் | - | விமானம் |
| பேங்க் | - | வங்கி |
| தியேட்டர் | - | திரை அரங்கு |
| ஆஸ்பத்திரி | - | மருத்துவமனை |
| கம்ப்யூட்டர் | - | கணினி |
| காலேஜ் | - | கல்லூரி |
| யுனிவர்சிட்டி | - | பல்கலைக்கழகம் |
| டெலஸ்கோப் | - | தொலைநோக்கி |
| தெர்மா மீட்டர் | - | வெப்பமானி |
| இண்டர்நெட் | - | இணையம் |
| ஸ்கூல் | - | பள்ளி |
| சயின்ஸ் | - | அறிவியல் |
| மைக்ரோஸ்கோப் | - | நுண்ணோக்கி |
| நம்பர் | - | எண் |

**நாடும் நகரமும்**

- ✓ நாடு என்னும் சொல் ஆதியில் மக்கள் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது.
- ✓ அந்த முறையில் தமிழர் வாழ்ந்த நாடு தமிழ்நாடு என்று பெயர் பெற்றது.
- ✓ மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்ட தமிழ்நாட்டின் பகுதிகள் அவரவர் பெயராலேயே சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று அழைக்கப்பட்டன.
- ✓ நாளடைவில் முந்நாடுகளின் உட்பிரிவுகளும் ‘நாடு’ என்று அழைக்கப்பட்டன.
- ✓ கொங்கு நாடு, தொண்டை நாடு முதலியன இதற்குச் சான்றாகும்.
- ✓ முன்னாளில் முரப்புநாடு என்பது பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளுள் ஒன்று.
- ✓ இப்பொழுது அப்பெயர் பொருநை யாற்றின் கரையிலுள்ள ஒரு சிற்றூரின் பெயராக நிலவுகின்றது.
- ✓ மாயவரத்திற்கு அணித்தாகவுள்ள ஓரூர் கொரநாடு என்று அழைக்கப்படுகிறது.
- ✓ கூறைநாடு என்பதே கொரநாடென மருவிற்று பட்டுக்கோட்டை வட்டத்தில் கானாடும், மதுராந்தக வட்டத்தில் தொன்னாடும் உள்ளன.
- ✓ நாட்டின் தலைமைசான்று நகரம் தலைநகரம் எனப்படும்.
- ✓ ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் பிறந்த இடம் குருகூர் என்னும் பழம்பெயரைத் துறந்து, ஆழ்வார்த் திருநகரியாகத் திகழ்கின்றது.
- ✓ பாண்டிநாட்டிலுள்ள விருதுப்பட்டி, வர்த்தகத்தால் மேம்பட்டு இன்று விருதுநகராக விளங்குகின்றது.
- ✓ திருமயிலைக்கு அருகேயுள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்றது.
- ✓ அவ்வூரின் பெயர் அல்லிக்கேணி என்பதாகும்.
- ✓ அல்லிக்கேணி என்பது அல்லிக்குளம். அல்லி மலர்கள் அழகுற மலர்ந்து கண்ணினைக் கவா்ந்த கேணியின் அருகே எழுந்த ஊர் அல்லிக்கேணி என்று பெயர் பெற்றது.
- ✓ அங்கே பெருமாள், கோவில் கொண்டமையால் திரு என்னும் அடைமொழி சேர்ந்து திருவல்லிக்கேணியாயிற்று.

**புரம்**

RADIAN IAS ACADEMY

**ஆசிரியர் பெயர்**: திரு.வி. கலியாணசுந்தரனார் (திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார் என்பதன் சுருக்கமே திரு.வி.க என்பது.

**பெற்றோர்** : விருத்தாசலானார் – சின்னம்மையார்

**பிறந்த ஊர்** : காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள துள்ளம். இவ்வூர், தற்பொழுது தண்டலம் என அழைக்கப்படுகிறது. இவ்வூர் சென்னையை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே உள்ளது.

**சிறப்பு** : மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். இவரின் தமிழ்நடையைப் போற்றித் தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

**படைப்புகள்** : மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், உரிமை வேட்கை, முருகன் அல்லது அழகு முதலியன.

**காலம்** : 26.081883 - 17.09.1953

**நூல் குறிப்பு** : நாடு, மதம், இனம் மொழி, நிறம் அனைத்தையும் கடந்து உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுவதே பொதுமை வேட்டல். தெய்வநிச்சயம் முதலாகப் போற்றி ஈறாக உள்ள நாற்பத்து நான்கு தலைப்புகளில், நானூற்றி முப்பது பாக்களால் ஆனது இந்நூல்.

திரு.வி.க. சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

## திருக்குறள்

**ஆசிரியர் குறிப்பு** : சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர். இவருக்கு நாயனார், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

**நூல் குறிப்பு** : குறள் வெண்பாக்களால் அமைந்த நூல் திருக்குறள். இது, திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறள் என வழங்கப்பெறுகிறது. மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்குக் கூறிய அறவுரைதான் திருக்குறள். திருக்குறள், உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் 'உலகப் பொதுமறை' என வழங்கப்பெறுகிறது. இது தமிழ்மொழியிலுள்ள அறநூல்களுள் முதன்மையானது. இந்நூல் நூற்றேழு மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

**நூல் பயன்** : திருக்குறள் கற்பதனால் மனித வாழ்க்கை செம்மையுறும்; பண்புகள் வளரும்; உலகெலாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும்; மனிதர்களிடையே வேறுபாடுகள் மறையும்; எல்லா உயிரிடத்தும் அன்பு தழைக்கும்.

## செம்மொழித் தமிழ்

- ✓ திருந்திய செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள் செம்மொழிகள் எனப்படும்.
- ✓ கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகியவற்றைச் செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியல் அறிஞர் **ச. அகத்தியலிங்கம்.**
- ✓ கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் ஆகிய மொழிகள் இன்று பேச்சுவழக்கில் இல்லை.
- ✓ உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பாகவே எண்ணற்ற இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டதாக விளங்கியது தமிழ்மொழி.
- ✓ தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள் ஆகிய செவ்வியல் இலக்கியங்கள், தமிழைச் செம்மொழி என நிலைநாட்டுவதற்கு உரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.
- ✓ **டாக்டர் கிரௌல், தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது;குறளோ என்னை இழுத்தது என்று மொழிந்து இன்புற்றார்.**
- ✓ உலகின் மிகப்பழைமையான நிலப்பகுதி குமரிக்கண்டம்.அந்நிலப்பகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது. அத்தொன்னிலத்தில்தான் தமிழ் தோன்றியதெனத் தண்டியலங்கார மேற்கொள் செய்யுள் கூறுகிறது.
- ✓ தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமன்றித் தழைத்தோங்கவும் செய்யும் என்று கூறினார் கால்டுவெல்.
- ✓ மக்களுக்கு ஒழுக்க வரம்பு தேவையானது போலவே மொழிக்கு இலக்கண வரம்பும் சொற்களின் திருந்திய வடிவும் இன்றியமையாதன. இவற்றைத் தமிழில் உள்ளதுபோல், வேறு செம்மொழியிலும் காண இயலாது. அதனாலேயே தமிழ், செந்தமிழ் எனப்பட்டது.
- ✓ எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பிய நூற்பா, தமிழில் இடுகுறிப் பெயர்கள் மிகவும் குறைவு. ஒருமை, பன்மை என்னும் இருவகை எண் மட்டுமே தமிழில் உண்டு. ஆனால், வடமொழியில் ஒருமை, இருமை, பன்மையென மூவகை எண் உள்ளன. தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு; பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை. ஆனால், பிறமொழிகளில் இத்தகைய பகுப்புமுறை இல்லை.

**குறிஞ்சி நில ஊர்கள்**

- ✓ மலையின் அருகே உள்ள ஊர்களுக்கு நாகமலை, ஆனைமலை, சிறுமலை, திருவண்ணாமலை, விராலிமலை, வள்ளிமலை எனப் பெயர்கள் வழங்குவதைக் காணலாம்.
- ✓ ஓங்கியுயர்ந்த நிலப்பகுதி மலை எனவும், மலையின் உயரத்தில் குறைந்ததைக் குன்று எனவும், குன்றியுலும் உயரத்தில் குறைந்ததைக் காடு எனவும், பாறை எனவும் பெயரிட்டு அழைத்தனர்.
- ✓ குன்றை அடுத்துள்ள ஊர்கள் குன்றூர், குன்றத்தூர், குன்றக்குடி என வழங்கப் பெற்றன. பூம்பாறை, சிப்பிப்பாறை, மட்டப்பாறை, வால்பாறை,

RADIAN IAS ACADEMY

அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.

## மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

- ✓ உ.வே.சாமிநாதரை, உருவாக்கிய பெருமை அவர்தம் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரையே சாரும்.
- ✓ மீனாட்சிசுந்தரனார் 1815 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் நாளன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணெய்க்கிராமத்தில் பிறந்தார்.
- ✓ அவரது பெற்றோர் சிதம்பரம் - அன்னத்தாச்சியார் ஆவர். மீனாட்சிசுந்தரனார் இளமையில் தமது தந்தையாரிடம் தமிழ் கற்றார்;
- ✓ இலக்கிய இலக்கண நூல்களில் நன்கு புலமை பெற்றார். சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார்.
- ✓ மீனாட்சிசுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் திரிசிரபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) வாழ்ந்தார். அதனால், அவரைத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார் என்றே அழைத்தனர். அவரிடம், 'கற்கவேண்டும்' என்ற வேட்கை தணியாததாக இருந்தது.
- ✓ மீனாட்சிசுந்தரனார் அதிக வசதிபடைத்தவர் இல்லை என்றாலும், மாணவர் சிலருக்கு உண்டியும், உறையுளும் அளித்துக் கற்பித்திருக்கிறார். குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர் ஆகியோர், அவர்களுள் குறிப்பிடத்தக்க மாணவர்கள்.
- ✓ திருவாவடுதுறையில் ஆதீன வித்துவானாக இருக்க வேண்டுமென்று ஆதீனத் தலைவர், மீனாட்சிசுந்தரனாருக்கு அழைப்பு விடுத்தார். மீனாட்சிசுந்தரனார் அப்பதவியில் சிலகாலம் இருந்து அரும்பணி ஆற்றினார். இவர் திருவாடுதுறையில் வாழ்ந்த காலத்தில் தான் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார்.
- ✓ தம்வாழ்வின் பெரும்பகுதியை, மாணவர்களுக்குக் கற்பிப்பதிலேயே செலவழித்தார்.
- ✓ கற்பித்ததால் அவருடைய அறிவும் வளர்ந்தது. மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்பொழுது அவர் ஏடுகளைப் பார்க்கவே மாட்டார். அவற்றிலுள்ள அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகவே இருந்தன. அவர் பேச்சுத் திறமையில் சிறந்திருந்தார். பிறருக்கு விளக்கும் போது, மிகத் தெளிவாக நல்ல தமிழில் பேசி விளக்கும் திறமை பெற்றிருந்தார். ஆகையால், அவருடைய மாணாக்கர்கள், அவரிடம் கற்பதை மிகவும் விரும்பினார்கள்.
- ✓ தமிழகத்திலுள்ள பல்வேறு கோவில்களுக்கு நடைப்பயணம் மேற்கொண்டு அக்கோவில்களைப் பற்றிப் பாடித் தலபுராணங்கள் பல இயற்றியுள்ளார். அத்தல புராணங்களில் கோவில் வரலாறு, சிறப்புகள், இறைவனின் பெருமைகள் முதலியன இடம்பெற்றுள்ளன.
- ✓ ஒரு முறை அவரது நண்பர் ஆறுமுகம் என்பவர், தம்முடைய குடும்பத்தொடர்பாகக் கும்பகோணத்தில் ஒருவருக்குப் பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்தார். அதில் சாட்சிக் கையொப்பமிட வந்த ஒருவருடையை இருப்பிடம் கும்பகோணத்திலுள்ள சுண்ணாம்புக்காரன் தெரு என்பது. அதனை நீற்றுக்காரத் தெரு எனவும் வழங்குவர். இந்த இரண்டில் எதனைப் தெருக்கு முன்னால் சேர்க்கலாம் என்று அவர் கேட்டபொழுது, மீனாட்சிசுந்தரனார் இரண்டும் வேண்டாம், மூன்றாவது தெரு என்று போட்டுவிடும் என்ற சொன்னார். அதிலுள்ள நகைச்சுவை உணர்வை அனைவரும் அறிந்து மகிழ்ந்தனர். மூன்றாவது என்பது சுண்ணாம்பைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். (வெற்றிலை + பாக்கு + சுண்ணாம்பு)
- ✓ ஒரு நாள் அவர், காய்ச்சலுற்றுத் துன்புற்றார். அப்பொழுது மாணவர் ஒருவரை நூல் முழுவதையும் தொடர்ந்து படிக்குமாறு கேட்டார். உடல்நிலை சரியில்லாதபோது சற்ற ஒய்வெடுத்தால் நல்லதென்று மற்றவர் கூற, நோய்க்கு மருந்து இலக்கியம் என்றார். இதன்மூலம் அவர் தமிழ்மீது கொண்ட பற்றை அறியலாம் இவர் 01.12.1876 அன்று இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

## கோவூர்கிழார்

- ✓ கோவூர்கிழார் உறையூருக்கு அருகிலுள்ள கோவூரில், வேளாளர் மரபில் பிறந்தார்;
- ✓ நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் இவரின் பதினெட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- ✓ நலங்கிள்ளி என்ற மன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இம்மன்னன், கோவூர்கிழாரின் அரசு அவைக்களத் தலைவர் ஆக்கினான்.
- ✓ சோழர் மரபில் தோன்றிய நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நெடுங்காலம் பகைமை இருந்து வந்தது. ஒருமுறை இருவருக்கும் போர் மூண்டது உறையூருக்கு அருகில் ஆவூர்க்கோட்டை இருந்தது. நலங்கிள்ளியின் படையினர் அக்கோட்டையை முற்றுகையிட்டனர். நெடுங்கிள்ளி, ஆவூர்க்கோட்டையைத் திறந்துவிட்டு உறையூர்க்கோட்டைக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டான். செய்தியறிந்த நலங்கிள்ளி வெகுண்டெழுந்தான்; உறையூர்க்கோட்டையை முற்றுகையிட்டான். கோவூர்கிழார் இருவரையும் அமைதிப்படுத்த எண்ணினார். பனம்பூ மாலையணிந்த சேரனும் அல்லன்; வேப்பம்பூ மாலையணிந்த பாண்டியனும் அல்லன்; சோழருக்குரிய ஆத்திமாலையணிந்தவனே. உம் இருவருள் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியே. இருவரும் வெற்றி பெறுவது உலக இயற்கையன்று. ஆதலின் போரை ஒழிமின் என்றார். கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி உறையூர்க்கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினான்.

## உயிர்மெய், ஆய்தம்

- ✓ உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்தானது தோன்றும், ஐயா. (க் + அ = க; க் + ஆ = கா; க் + இ = கி) மெய்யெழுத்துகள்

RADIAN IAS ACADEMY

- ✓ இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் 1918 பிப்ரவரியின் தங்கள் கழகத்தில் உறுப்பினராக்கி எஃப்.ஆர்.எஸ். பட்டம் வழங்கியது.
- ✓ எஃப்.ஆர்.எஸ் பட்டம் பெற்ற இராமானுஜத்தைத் திரினிட்டி கல்லூரி பாராட்டிச் சிறப்பித்தது. கல்விக்குழுவின் சிறப்பு உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் 250 பவுண்டுத் தொகையை ஆறு ஆண்டுகளுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தது.
- ✓ கார்டியின் பரிந்துரையின்பேரில் சென்னைப் பல்கலைக்கழகமும் 250 பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுக்குக் கொடுக்க முன்வந்தது. ஆனால், இராமானுஜம் 50 பவுண்டைத் தம் பெற்றோருக்கும் 200 பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும் வழங்கி வருமாறு கடிதம் எழுதினார்.
- ✓ அவருக்குக் காசநோய் ஏற்பட்டது அவரைக் காணவந்த ஹார்டி, நான் 1729 என்ற எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூற $1^3 + 12^3$ என்றோ $10^3 + 9^3$ என்றோ 7 x 13 x 19 என்றோ பிரிக்கலாமே என உடனடியாகப் பதில் கூறினார். ஹார்டி, மிகவும் மகிழ்ந்து அவரது கணிதத் திறனை வெகுவாகப் பாராட்டினார்.
- ✓ 1919 மார்ச் 27 ஆம் நாள் மும்பைக்குக் கப்பலில் வந்து இறங்கினார்; ஏப்ரலில் ... சேர்ந்தார்.
- ✓ 1920 ஏப்ரல் 26 ஆம் நாள் மூன்று ஆண்டாகத் தராத நோயுடன் போராடிய இராமா... பிரிந்தது. அப்போது அவருக்... மூன்று.
- ✓ 1962 திசம்பர் 22 ஆம் நாளன்று ... பிறந்தநாளை முன்னிட்டு நடுவணரசு ... காசு அஞ்சல்தலை இருபத்தைந்து இலட்சம் வெளியிட்டது.
- ✓ 1971 ஆம் ஆண்டு, பேராசி... அனைத்துலக நினைவுக்கு... அமைக்கப்பட்டது.
- ✓ 1972 ஆம் அக்டோபர் 3 ஆம் நாள் முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்களால் இ... ஆராய்ச்சி நிறுவனம் திறந்து வை...
- ✓ இராமானுஜன் சாதாரண ... இறைவன் தந்த பரிசு – பேரா.ஈ.டி...
- ✓ இராமானுஜன் முதல்தரமான ... இலண்டன் ஆளுநர் லார்... இராமானுஜன்தான் இந்த 20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை – பேராசிரியர் சூலியன் கக்கலி.
- ✓ அவர் பணியாற்றிய சென்னைத் துறைமுகம் சார்பில் புதிதாக வாங்கிய குடிநீர்க்கப்பலுக்கு சீனிவாச இராமானுஜம் எனப் பெயர் சூட்டப்பட்டது.
- ✓ அமெரிக்காவின் விசுகன்சீன் ... பேராசிரியர்கள் ரிச்சர்ட்டும் ஆ... 1984 இல் அவரது மார்பளவு செ... இந்தியாவிற்கு கொண்டு வந்து ...
- ✓ கணிதக் குறிப்புகள் அடங்கிய 3 குறிப்பேடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் விட்டுச் சென்றுள்ளார். அவரது குறிப்பேடுகளில் 3000 முதல் 4000 தேற்றங்களை 1957 ஆம் ஆண்டு ‘டாடா’ அடிப்படை ஆராய்ச்சி நிலையம், அப்படியே ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்டுள்ளது.

## நால்வகைச் சொற்கள்

- ✓ பெயரையும் இடத்தையும் குறித்து வந்ததால் பெயர்ச்சொற்கள் எ.கா அம்மா, மாநகர மதுரை.
- ✓ ஒரு பொருளின் செயலைக் (இயக்கத்தைக்) குறிப்பது வினைச்சொல் எ.கா வந்தான்.
- ✓ தம்பியும் - தம்பி + உம். இதிலுள்ள ‘உம்’ என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை இடைச்சொல் என்பர்.
- ✓ மாநகர் என்னும் சொல்லிலுள்ள மா என்பது உரிச்சொல் ஆகும். இதன் பொருள் பெரிய பலவகைப்பட்ட பண்புகளைக் கொண்டு பெயர்ச் சொற்கள், வினைச்சொற்களைவிட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள்.
- ✓ இவ்வாறு இலக்கணவகைச் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

### தனிப்பாடல் இரட்டுறமொழிதல் – காளமேகப்புலவர்

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| சுழி | - உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி; |
| துன்னலர் | - பகைவர் |
| பரிவாய் | - அன்பாய்; |
| சாடும் | - தாக்கும், இழுக்கும் |
| ஆடுபரி | - ஆடுகின்ற குதிரை |

**ஆசிரியர் பெயர்** : காளமேகப்புலவர்

**பிறந்த ஊர்** : கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திக்கிராமம் எனவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் கூறுவர்.

**இயற்பெயர்** : வரதன்

**பணி** : திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார். கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் காளமேகப்புலவர் என அழைக்கப் பெற்றார். இவர், இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.

**நூல் குறிப்பு :** புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு. இதனை, இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி வேண்டுதலுக்கிணங்க, சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தமிழகம் முழுவதும் சென்று தேடித் தொகுத்தார்.

**நூல் பயன்** : தனிப்பாடல்களைக் கற்பதனால், தமிழ்மொழியின் பெருமையையும் புலவர்களின் புலமையையும் சொல்லின்பம் பொருளின்பம் கற்பனைஇன்பம் முதலியவற்றையும் பெறலாம்.

- ✓ மதுரைக்குக் கூடல் எனவும், ஆலவாய் எனவும் வேறு பெயர்கள் வழங்குகின்றன.
- ✓ நான்மாடக்கூடல் என்னும் பெயரே கூடல் என மருவியுள்ளது.
- ✓ திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு திருக்கோவில்கள சேர்ந்தமைந்ததால், நான்மாடக்கூடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர்.
- ✓ 'கன்னிகோவில்', 'கரியமால் கோவில்', 'காளிகோவில்', 'ஆலவாய்க் கோவில்' ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்ததால், நான்மாடக்கூடல் என்னும் பெயரமைந்தது என்பாரும் உளர்.
- ✓ வருணன், மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பினான். அதைப்பற்றி இறைவனிடம் பாண்டியன் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால் நான்மாடக்கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகப் பரஞ்சோதியார் கூறியுள்ளார்.
- ✓ எந்நாட்டவரும் எவ்வூரினரும் வந்துகூடும் வளமான நகர் என்பதால், கூடல் என்னும் பெயர் பெற்றது என்பர். சங்கம் வைத்துச் செந்தமிழை வளர்க்க, புலவர் எல்லாரும் கூடியதால், கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் அறிஞர் கூறுவர்.
- ✓ தென்மதுரையகத்தே சிறந்து நின்ற முதற்சங்கம் கடற்கோளால் அழிந்துபட, கபாடபுரத்தின்கண் இடைச்சங்கம் அமைந்தது. பின்னர், மற்றமொரு கடற்கோளால் அந்நகரும் விழுங்கப்பட, கடைச்சங்கம் நிறுவப்பட்ட நிலப்பகுதியே இன்றைய மதுரை என்பர்.
- ✓ மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் மருதை என வழங்கிய இடம், காலப்போக்கில் மதுரை என்றாகியதாம். கல்வெட்டில் மதிரை என்று பெயர் காணப்படுகிறது.
- ✓ சங்கப்புலவர்களுள் கணக்காயனார் மகனார் நக்கீரனார், குமரனார், நல்லந்துவனார், மருதனிளநாகனார், இளந்திருமாறன், சீத்தலைச் சாத்தனார், பெருங்கொல்லனார், கண்ணகனார், கதங்கண்ணாகனார், சேந்தம்பூதனார் முதலியோர் அன்றைய மதுரையில் வாழ்ந்தோராவர்.

**மதுரை வீதிகளின் பெயர்**

| | | |
|---|---|---|
| அறுவை வீதி | - | ஆடைகள் விற்கும் கடைப்பகுதி |
| கூலவீதி | - | தானியக்கடை |
| பொன்வீதி | - | பொற்கடைகள் |
| மன்னவர்வீதி | - | மன்னர் வாழும் பகுதி |
| மறையவர்வீதி | - | அந்தணர்வீதி |

**மதுரையின் மாண்பு**

- ✓ அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக மாணிக்கவாசகர் திகழ்ந்தார்.
- ✓ திருஞானசம்பந்தர் கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச் சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தார்.
- ✓ பாண்டிய நாட்டை ஆண்ட மன்னருள் பலர், சிறந்த புலவர்களாகவும் விளங்கினார்கள்.
- ✓ அவர்களுள் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், வரகுண பாண்டியன், அதிவீரராம பாண்டியன் முதலியோர் நற்காவலர்களாகவும் சிறந்த பாவலர்களாகவும் திகழ்ந்தார்கள்.

**திருமலை நாயக்கரின் திருப்பணிகள்**

- ✓ திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார். மீனாட்சிக் கோவிலுக்குத் திருப்பணிகள் பல செய்தார்; கலைநயமிக்க நகரமாக மதுரையைக் கவினுற அமைத்தார்;
- ✓ கலை நயத்தில் 'தாஜ்மகாலை' யொத்த திருமலை நாயக்கர் மகாலையும் அமைத்து மதுரையை விழா மல்கு நகரமாக விளக்கமுறச் செய்தார் ;

**நிகழ்வுகள்**

- ✓ பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம் தருமிக்கு இறைவன் தண்டமிழ்ப் பாடல் தந்தமை பற்றிக் கூறுகிறது. மதுரையைச் சுற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் நாலடியார் இயற்றப் பெற்றது.
- ✓ குமரகுருபரருக்கு மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து முத்துமணி மாலையைப் பரிசளித்தது. முதலியன மதுரையில் நடைபெற்ற நிகழ்வுகளாகும்.

**கல்வி வளர்க்கும் மதுரை**

- ✓ வள்ளல் பாண்டித்துரை தேவர், மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்தார். மதுரை காமராசர் பல்கலைக் கழகம் , மதுரை மருத்துவக் கல்லூரி இவற்றோடு கலைக் கல்லூரிகள் இன்று கல்விப்பணி ஆற்றிவருகின்றன. ஆயிரங்கால் மண்டபம், அட்டசத்தி மண்டபம், புதுமண்டபம், நகரா மண்டபம் என்பன இந்நகருக்கு அணி சேர்ப்பன. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் **கோவலன் பொட்டல்** என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களிடம் வழங்கப்படுகிறது.
- ✓ பழங்கால மதிலின் எஞ்சிய ஒரு சிறுபகுதி மேலவெளி வீதியில் மாநகராட்சித் தென்மண்டல அலுவலகமாக இயங்கி வருகிறது. கையிற் சிலம்புடன் உட்கார்த்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில், செல்லத்தம்மன் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.
- ✓ மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழைமையானது கிழக்குக் கோபுரம் உயரமானது தெற்குக் கோபுரம்;
- ✓ இது 160.9 அடி உயரமும் 1511 சுதை உருவங்களும் உடையது.
- ✓ கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரமே மதுரை மூதூர்எனக் குறிப்பிடுவதால் மதுரையின் பழைமை பெறப்படும்.
- ✓ மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது நாயக்கர் மகால். இதன் ஒவ்வொரு தூணும் 82 அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.

**அறுவகைப் பெயர்ச்சொற்கள்**

- ✓ பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர்.
- ✓ இந்த பொருட்பெயர் இருவகைப்படும்.

RADIAN IAS ACADEMY

- ✓ சங்கரதாசு சுவாமிகள் வள்ளி திருமணம், கோவலன் சரித்திரம், சதி சுலோசனா, இலவகுசா, பக்தப் பிரகலாதா, நல்லதங்காள், சதி அனுசுயா, வீர அபிமன்யு, பவளக்கொடி முதலிய நாற்பது நாடகங்களை இயற்றியுள்ளார்.
- ✓ “மா என்பது அலைமகளையும் பா என்பது கலைமகளையும் வி என்பது மலைமகளையும் குறிக்கிறது.

**பம்மல் சம்பந்தனார் (1875-1964)**

- ✓ பம்மல் சம்பந்தனார், 1891 ஆம் ஆண்டு தனது பதினெட்டாம் வயதில் சுகுணவிலாச சபையைத் தொடங்கித் தமிழ் மக்களின் சிந்தனையை நாடகக்கலை நோக்கித் திசை திருப்பினார்.
- ✓ பம்மல் சம்பந்தனார், கட்டுக்குலையாத நாடகக்குழுவை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்; அதனால், நடிகர்களால், கலைஞர் என மதிக்கப்பட்டார்.
- ✓ இவர், தொண்ணூற்றுநான்கு நாடகங்களைத் தழிழன்னைக்குப் படைத்தளித்தார்.
- ✓ மனோகரா, யயாதி, சிறுத்தொண்டன், கர்ணன், சபாபதி, பொன்விலங்கு என்பன அவற்றுள் சில.
- ✓ இவர், சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தழுவி ‘வாணிபுரத்து வணிகன்,’ ‘விரும்பிய விதமே, ’ ‘அமலாதித்தியன்’ முதலிய தமிழ் நாடகங்களைப் படைத்தார்.
- ✓ பம்மல் சம்பந்தனார் சிறந்த நாடக இயக்குநராகவும் திறமையான நடிகராகவும் அறிவுமிக்க ஆசிரியராகவும் விளங்கினார்.
- ✓ இவரது படைப்பான சபாபதி நாடகப்பாத்திரம் இன்றளவும் மறக்க முடியாத நகைச்சுவைப் பாத்திரமாகும்.
- ✓ பரிதிமாற் கலைஞரைத் தமிழ் நாடகப் பேராசிரியர்
- ✓ சங்கரதாசு சுவாமிகளைத் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்
- ✓ பம்மல் சம்பந்தனாரைத் தமிழ் நாடகத் தந்தை

**வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்**

- ✓ செயல் முடிந்ததைக் குறிக்கும் சொல்லே வினைமுற்று ஆகும். இது மூன்று காலங்களில் ஒன்றை உணர்த்தும் திணை, பால், எண் இடம் ஆகியவற்றைக் காட்டும். **எ.கா வந்தான்.**
- ✓ ஒரு பெயரைக் கொண்டு முடியும் முற்றுப் பெறாத வினைச்சொல்லே பெயரெச்சம் ஆகும். இது முக்காலத்திலும் வரும். **எ.கா பழுத்த பழம்**
- ✓ வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் முக்காலத்தையும் உணர்த்தும். **எ.கா எடுத்து வந்தான்**

**மரபுச்சொற்கள்**

- ✓ நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு எனப்படும்.
- ✓ மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை யானைக்கன்று என்பதே மரபுச்சொல். இதனை யானைக்குட்டி எனக் கூறுவது மரபுப்பிழை.

RADIAN IAS ACADEMY

**இளமை மரபுச்சொற்கள்**

**தாவரங்கள் : காய்களின் இளமை மரபு**

| | | |
|---|---|---|
| அவைரப்பிஞ்சு | முருங்கைப்பிஞ்சு | கத்தரிப்பிஞ்சு |
| வாழைக்கச்சல் | வெள்ளரிப்பிஞ்சு | கொய்யாப்பிஞ்சு |
| பலாமூசு | தென்னங்குரும்பை | மாவடு |

**விலங்குகள் : இளமை மரபு**

| | | |
|---|---|---|
| குருவிக் குஞ்சு | கோழிக் குஞ்சு | ஆட்டுக் குட்டி |
| கழுதைக்குட்டி | எருமைக்கன்று | குதிரைக்குட்டி |
| பன்றிக் குட்டி | குரங்குக்குட்டி | மான்கன்று |
| நாய்க்குட்டி | பூனைக் குட்டி | யானைக்கன்று |
| சிங்கக் குருளை | புலிப்பறழ் | கீரிப்பிள்ளை |

**ஒலி மரபுச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| குயில் கூவும் | மயில் அகவும் | சேவல் கூவும் |
| காகம் கரையும் | கிளி கொஞ்சும் | கூகை குழறும் |
| வானம்பாடி பாடும் | ஆந்தை அலறும் | கோழி கொக்கரிக்கும் |
| குதிரை கனைக்கும் | சிங்கம்முழங்கும் (கர்ச்சிக்கும்) | நரி ஊளையிடும் |
| நாய் குரைக்கும் | பன்றி உறுமும் | யானை பிளிறும். |

**வினை மரபுச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| அப்பம் தின் | காய்கறி அரி | இலை பறி |
| நெல் தூற்று | களை பறி | பழம் தின் |
| நீர் பாய்ச்சு | பாட்டுப் பாடு | மலர் கொய் |
| கிளையை ஒடி | மரம்வெட்டு | விதையை விதை |
| நாற்று நடு | படம் வரை | கட்டுரை எழுது |
| தீ முட்டு | விளக் கேற்று | உணவு உண் |

**திருக்குறள் கல்வி**

**சொற்பொருள் :** கசடு – குற்றம்; உவப்ப – மகிழ; தலைக்கூடி – ஒன்று சேர்ந்து;

கொடுத்துக் கூற வேண்டும். இவ்வாறு பொருள்களை இனம்பிரித்தறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழி எனப்படும்.

- ✓ வெண்ணிலவு, கருங்காக்கை, செங்கதிரோன் இவற்றுக்கெல்லாம் இனமாகக் கூறவேண்டுமானால், கருநிலவு, வெண்காக்கை, கருங்கதிரோன் எனக் கூற வேண்டும். அவ்வாறு ஒன்று இல்லாததால் இவை போன்றவற்றை இனமில்லா அடைமொழிகள் எனக் கூறுவர்.

**பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை அறிவோம்**

| பிறமொழிச் சொல் | | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | | |
|---|---|---|---|---|---|
| அனுமதி | - | இசைவு | உபயம் | - | திருப்பணியாளர் |
| ஆதவன் | - | ஞாயிறு | உஷார் | | |
| ஆரம்பம் | - | தொடக்கம் | ஏதார்த்தம் | | |
| ஆஸ்தி | - | சொத்து | ஐதிகம் | - | உலக வழக்கு |
| இம்சை | - | துன்பம் | காகிதம் | - | தாள் |
| இருதயம் | - | நெஞ்சகம் | கிரீடம் | - | மணிமுடி |
| ஈசன் | - | இறைவன் | குபேரன் | - | பெருஞ்செல்வன் |

1. ஆகாசத்தில் பட்சி பறந்தது – விண்ணில் பறவை பறந்தது? பறவை
2. புஷ்பமின்றி, அபிஷேகம் உண்டா - மலரின்றி நன்னீராட்டு உண்டா?

**தனிப்பாடல் - அந்தகக்கவி வீரராகவர்**

**யானைக்குரிய வேறுபெயர்கள் :** களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா முதலியன. இச்சொல் ஒவ்வொன்றுக்கும் வேறு பொருளும் உண்டு.

களபம் - சந்தனம்; மாதங்கம் - பொன்; வேழம் - கரும்பு; பகடு – எருது; கம்பமா – கம்பு மாவு.

**ஆசிரியர் குறிப்பு :** அந்தகக்கவி வீரராகவர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பூதூரில் பிறந்து. பொன் விளைந்த களத்தூரில் வாழ்ந்தார். இவர் தந்தையாரின் பெயர் வடுகநாதர். இவர் சீட்டக்கவி பாடுவதிலும் நகைச்சுவை ததும்பப் பாடல் இயற்றுவதிலும் வல்லவர்; சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

**நூல் குறிப்பு :** இப்பாடல் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல். இதில் நூற்றுப்பத்துப் புலவர் பாடிய ஆயிரத்து நூற்றுப் பதின்மூன்று பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

**தாலாட்டுப் பாடல்**

மலையருவி (நாடோடிப்பாடல்கள்) என்னும் நூலில், இந்நாட்டுப்பாடல்களைத் தொகுத்தளித்துள்ளார். கி.வா. ஜகந்நாதன். இந்நூலில் தெம்மாங்கு, தங்க ரத்தினமே ராசாத்தி, ஆண் பெண் தர்க்கம், தொழிலாளர் பாட்டு, கள்ளன்பாட்டு, குடும்பம், தாலாட்டு, சிறுவர் உலகம், புலம்பல், கும்பி, தெய்வம், பல கதம்பம் எனப் பதின்மூன்று தலைப்புகளில் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

**தமிழகத்தின் அன்னிபெசண்ட்**

- ✓ தேவதாசி மரபில் பிறந்து. அம்முறையை ஒழிப்பதற்குக் குரல் கொடுத்தவர்;
- ✓ அறிஞர் அண்ணா அவர்களால் தமிழகத்தின் அன்னிபெசண்ட் எனப் புகழப்பட்டவர்.
- ✓ அவர்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
- ✓ இவர் கி.பி. 1883 ஆம் ஆண்டு பிறந்தார்.
- ✓ தனக்கு இசையும் நாட்டியமும் கற்றுத் தந்த சுயம்பு என்பவரை மணந்தார்.
- ✓ கணவர், அம்மையாரின் அனைத்துப் போராட்டங்களுக்கும் துணையாய் நின்றார்.
- ✓ அம்மையார், 1917 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் தமது முதல் போராட்டத்தைத் தொடங்கினார்.
- ✓ காந்தியத்தை ஏற்றோர் குடிசையில் வாழ வேண்டும் என்னும் காந்தியடிகளின் கட்டளையை ஏற்றுத் தாம் இருந்த ஓட்டுவீட்டை விடுத்துக் குடில் அமைத்து வாழ்ந்தார்.
- ✓ அக்குடிலின் வெளியில் வியப்பூட்டும் விளம்பரப் பலகை ஒன்று தொங்கியது.
- ✓ அப்பலகையில் கதர் அணிந்தவர்கள், உள்ளே வரவும் என எழுதப்பட்டிருந்தது.
- ✓ பெரியார், திரு.வி.க., வரதராசுலு, தருமாம்பாள், நீலாம்பிகை, மலர்முகத்தம்மையார். தாமரைக்கண்ணியம்மையார் முதலானோர் மூவலூர் அம்மையாரோடு இணைந்து தேவதாசி முறையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டனர்.
- ✓ அம்மையார், சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தார். இவர், 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போர் பேரணியில் உறையூர் (திருச்சி) முதல் சென்னைவரை நாற்பத்திரண்டு நாள், ஐந்நூற்று ஏழுபத்தேழு மைல் நடைப்பயணம் மேற்கொண்டார்.
- ✓ இந்நடைப்பயணத்தின்போது எண்பத்தேழு பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். அப்பேரணியில் நடந்து வந்த ஒரே பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- ✓ பொதுவாழ்வில் ஐம்பதாண்டுகள் ஈடுபட்டுத் தமது எண்பதாம் வயதில் 27.06.1962 அன்று இவ்வுலக வாழ்கை நீத்தார்.
- ✓ 1989 ஆம் ஆண்டு மூவலூர் அம்மையாரின் நினைவைப் போற்றும் வகையில், அவரது பெயரால், ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித்திட்டத்தினைத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

**மூவகைப்போலிகள்**

- ✓ ஒரு சொல்லில், முதலிலுள்ள எழுத்தோ இடையில் உள்ள எழுத்தோ, இறுதியிலுள்ள எழுத்தோ மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பின், அது போலி எனப்படும்.

RADIAN IAS ACADEMY

**போற்றியவர்** : சடையப்ப வள்ளல்

**இயற்றிய நூல்கள்** : கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்.

**சிறப்பு** : கல்வியில் பெயர் கம்பர், கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.

**காலம்** : பன்னிரண்டாம் நூற்றாண்டு.

**ஓவியக்கலை**

- ✓ தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன. தாம் வரைந்த ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்றே வழங்கியுள்ளனர்.
- ✓ தமிழ் இலக்கயத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் இருந்ததனைப் பரிபாடல், குறுந்தொகை செய்யுள் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.
- ✓ ஓவியம் வரைதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோட முதலியன அடிப்படையாகும்.இவ்வாறு வரையப்படுபவை கோட்டோவியங்கள் எனப்படும்.
- ✓ தொல் காப்பியம் நடுகல் வணக்கம் பற்றிக் கூறுகிறது. ஓவியக்கலை ஒவு, ஒவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி எனப்பல பெயர்களால் வழங்கப்பெற்றது.
- ✓ ஓவியக் கலைஞர் ஓவியர், ஓவியப்புலவன், கண்ணுள் வினைஞன், சித்திரகாரர், வித்தக வினைஞன், வித்தகர், கிளவி வல்லோன் என அழைக்கப்பட்டார்.
- ✓ ஒவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்ற ஆசிரியர் ஓவியப் புலவன் எனப் போற்றப்பட்டார். ஓவியக் கலைஞர் குழுவை ஓவிய மாக்கள் என்றழைத்தனர்.
- ✓ ஆண் ஓவியர் சித்திராங்கதன் எனவும், பெண் ஓவியர் சித்திரசேனா எனவும் பெயர் பெற்றிருந்தனர்.

**வரைகருவிகள்**

- ✓ வண்ணந்தீட்டும் கோல் தூரிகை, துகிலிகை, வட்டிகை எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு வட்டிகைப் பலகை எனப் பெயரிட்டிருந்தனர்.

**வரைவிடங்கள்**

- ✓ ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம் , சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதொழில் அம்பலம் என வழங்கப்பட்டன.
- ✓ இறை நடனம் புரிவதற்கே சித்திர சபை ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். புறநானூற்றில், ஒவத்தனைய இடனுடை வனப்பு என வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார்.
- ✓ சுடுமண் சுவர்மீது வெண்சுதை (சுண்ணாம்பு) பூசிச் செஞ்சாந்துகொண்டு ஓவியங்கள் தீட்டினர். வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதைப் புனையா ஓவியம் என்றழைத்தனர்.
- ✓ கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன், கலையார்வம் மிக்கவன்.
- ✓ மகேந்திரவர்மன் காலத்தில் ஓவியக்கலை எழுச்சியுற்று உயர்நிலையை எட்டியது.இம்மன்னனே சிறந்த ஓவியனாகப் புகழ்கின்றன.
- ✓ தட்சிணசித்திரம் என்னும் ஒவிய நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான்.

**சித்தன்னவாசல்**

- ✓ பல்லவர் கால ஓவியங்கள், பனமலை, திருமலை, மாமல்லபுரக் குகைக்கோவில், மாமண்டூர், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலிய இடங்களில் ஓவியங்கள் சிதைந்த தோற்றத்தோடு காணப்படுகின்றன. பார்வதி உருவம், கின்னார், கின்னரி, கந்தர்வர் ஓவியங்கள் காண்போரை மயக்குவன. திருநந்திக்கரையில் சேரர் கால ஓவியங்கள் கிடைத்துள்ளன.
- ✓ புதுக்கோட்டைக்கு அருகே சித்தன்னவாசல் என்னும் குகைக்கோவில் ஓவியங்கள் ஓவியக் கருவூலங்களாக வைத்துப் போற்றத்தகுந்தன.
- ✓ கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் அவனிப சேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில், மதுரை ஆசிரியர் இளம்கௌதமன் இவ்வோவியங்களை வரைந்தார் என்று கல்வெட்டுச் செய்தி அறிவிக்கின்றது. அங்குள்ள தாமரைத்தடாகம், ஆடல் அணங்குகள், அரசன், அரசி ஓவியங்கள் நம் கண்ணைக் கவர்வன.
- ✓ சோழர்கால வனப்புமிக்க ஓவியங்களைத் தஞ்சைப் பெரியகோவிலில் கண்டு மகிழலாம். திருவரங்கம், திருப்பதி, தில்லை, திருவாரூர், குடந்தை, மதுரை, காஞ்சி முதலிய பல இடங்களில் விசயநகர, நாயக்க மன்னர்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன.
- ✓ கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி பெற்றது.

**அணியிலக்கணம்**

- ✓ அணி என்றால் அழகு என்பது பொருள்.
- ✓ புலவர்கள் செய்யுளை அழகுபடுத்துவதை, ‘அணி’ என்றே வழங்கினர். அவ்வாறான அணிகள் இயல்பு நவிற்சி’ , ‘உயர்வு நவிற்சி முதலியன.
- ✓ ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறு கூறுவது இயல்பு நவிற்சியணி எனப்படும். ஒரு பொருளின் தன்மையை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி எனப்படும்.
- ✓ உயரமான மலையை ‘விண்ணைத் தொடும் மலை என வருணித்தல்;
- ✓ உயரமான வைக்கோல் போரை ‘வானை முட்டும் வைக்கோல்போர்’ என உயர்த்திக் கூறுதல்.

RADIAN IAS ACADEMY

- ✓ தமிழ்த்தொண்டு திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.
- ✓ எண்பத்தாறாம் அகவையில் 1900 ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார்.
- ✓ புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.
- ✓ 1908 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினொன்றாம் நாள் தம் இன்னுயிரை நீத்தார். இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என எழுதப்பட்டது.

**குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்**

- ✓ குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். குறுமை என்றால் குறுகிய என்பது பொருள். இயல் என்றால் ஓசை. உகரம் என்றால் உ என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய உகரம் **குற்றியலுகரம்.**
- ✓ குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, மெய்க்கு அரை மாத்திரை என்னும் கால அளவில்தான் எழுத்துகளை ஒலிக்க வேண்டும். (க் + உ = கு, ச் + உ = சு, ட் + உ = டு, த் + உ = து, ப் + உ = பு, ற் + உ = று) வரும்போது உகரம் அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.
- ✓ கு, சு, டு, து, பு, று ஆகிய இந்த ஆறு எழுத்துகளில் சொல்லின் இறுதியில் வரும்.
- ✓ கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போது, பல எழுத்துகளைச் சார்ந்து சொல்லின் இறுதியில் வரும்போதும் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் **குற்றியலுகரம்** எனப்படும்.
- ✓ உயிர்நெடில், உயிர்மெய் நெட்டெழுத்துகளை அடுத்து வரும் உகரமேறிய வல்லின எழுத்துகள் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும். எ.்.கு, க.்.சு, அ.்.து இந்தச் சொற்களை ஒலித்துப் பாருங்கள்.
- ✓ கு, சு, து என்னும் வல்லின மெய்கள் மேல், ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தைத் (∴) தொடர்ந்து வந்துள்ளதால் அது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.
- ✓ நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளை ஈற்றில்கொண்டு ஏடு, காசு என ஈரெழுத்துச் சொல்லாகவே வரும்.
- ✓ உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளுக்குமுன் இரண்டு முதலாகப் பல எழுத்துகளைப் பெற்று வரும். சங்கு, மஞ்சு, நண்டு, சந்து – மென்றொடர்க் குற்றியலுகரம்.
- ✓ 1.நெடில் தொடர்க் குற்றியலுகரம், 2. ஆய்தத் தொடர் குற்றியலுகரம், 3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், 4. வன்றொடர்க் குற்றியலுகரம், 5. மென்றொடர்க் குற்றியலுகரம், 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் என ஆறு வகைப்படும்.
- ✓ குறுமை + இயல் + இகரம் என பிரிக்கலாம். குறுமை என்றால் குறுகிய, இயல் என்றால் ஓசை, இகரம் என்றால் இ. குற்றியலுகரத்தின் உகரம் தன் ஒருமாத்திரையில் குறைந்து ஒலிப்பதுபோலவே குற்றியலிகரத்தில் வரும் இகரமும், தன் ஒருமாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்.
- ✓ நாகு + யாது = நாகியாது. வீடு + யாது = வீடியாது. நாகு, வீடு என்பன நெடில்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். நிலைமொழியாய் நிற்க, வருமொழியின் முதல் எழுத்து யகரமாக இருப்பின், உகரம் இகரமாகும். இந்த இகரம் தான் **குற்றியலிகரம்** எனப்படும்.
- ✓ நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யகரம் வரின், நிலைமொழி உகரம், இகரமாகத் திரிந்து தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும். வண்டு + யாது = வண்டியாது, வரகு + யாது = வரகியாது.
- ✓ கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் மியா என்னும் அசைச்சொல்லில் உள்ள இகரமும் (மி = ம் + இ) தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். இதுவும் **குற்றியலிகரம்** எனப்படும்.
- ✓ தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் **முற்றியலுகரம்.**
- ✓ பகு, பசு, படு, அது, தபு, பெறு - இவை தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரம் (கு, சு, டு, து, பு, று) பெற்ற முற்றியலுகரங்கள்.
- ✓ காணு, உண்ணு, உருமு - இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் (மு,ளு,வு) முற்றியலுகரங்கள்.

**நான் விரும்பும் கவிஞர்**

- ✓ தமிழ்க்கவி, தமிழரின் கவி, தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி, தமிழரின் புகழ் மேதினியோங்க வேண்டுமெனப் பிறந்த கவி பாரதிதாசன்.

**இனியவை நாற்பது**

**சொற்பொருள்** : சலவர் – வஞ்சகர், மன்னுயிர் – நிலைபெற்ற உயிர்., குவை – குவியல், மாரன் – மன்மதன்

**ஆசிரியர் பெயர்** - மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்

**ஊர்** - மதுரை

**காலம்** - கி.பி.இரண்டாம் நூற்றாண்டு

**நூல் குறிப்ப** : இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நன்மைதரும் இனிய கருத்துகளை நாற்பது பாடல்களில் தொகுத்துரைப்பதால் இனியவை நாற்பது எனப் பெயர்பெற்றது. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மூன்று அல்லது நான்கு நற்கருத்துகளை இனிமையாகக் கூறும். இந்நூலின் 12, 20 ஆம் பாடல்கள் நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

**தமிழ்ப்பசி**

**ஆசிரியர் இயற்பெயர்** - க. சச்சிதானந்தன்

**ஊர்** - இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை

RADIAN IAS ACADEMY

- ✓ அவை, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன ஆகும். இவ்வாறு பொருள் விளக்கும் வகையில் இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் **இயற்சொல்** எனப்படும்.
- ✓ இது பெயர் இயற்சொல் , வினை இயற்சொல் என இருவகைப்படும்.
- ✓ காற்று, நிலவு, ஞாயிறு, பலகை - இவை எளிதில் பொருள் விளங்கும் பெயர்ச்சொற்கள். இவற்றைப் பெயர் இயற்சொற்கள் என்பர்.
- ✓ படித்தான், தூங்கினான், வந்தான் - இவை எளிதில் பொருள் தரும் வினைச்சொற்கள். இவற்றை வினை இயற்சொற்கள் என்பர்.
- ✓ கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் இருக்கின்றன. இவற்றைத் திரிசொல் என்பர். பீலி – மயில்தோகை, உகிர் – நகம், ஆழி – கடல், சக்கரம்.
- ✓ திரிசொல்லும் பெயர்ச் திரிச்சொல், வினைத் திரிசொல் என இருவகையாக வரும்.
- ✓ எயிறு, வேய், மடி, நல்குரவு - என்பன பெயர்த் திரிசொல் (எயிறு – பல், வேய் - மூங்கில், மடி – சோம்பல், நல்குரவு - வறுமை) வினவினான், விளித்தான், நோக்கினார் - இவை வினைத் திரிச்சொல்.
- ✓ வினவினான் – கேட்டான், விளித்தான் – அழைத்தான், நோக்கினார் – பார்த்தார்.
- ✓ தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள பிறபகுதிகளிலிருந்து தமிழில் வழங்கும் திசைச்சொற்கள்.

  **சொற்பொருள் :** கேணி – கிணறு, பெற்றம் – பசு.
- ✓ தமிழில் வந்து வழங்கினாலும் தமிழ்ச்சொற்கள் அல்ல, வடமொழிச் (சமற்கிருதம்) சொற்கள் ஆகும்.

  கமலம் - தாமரை
  விஷம் (விடம்) - நஞ்சு
  புஷ்பம் (புட்பம்) - மலர்
- ✓ வடமொழிச் சொற்கள் திரிந்தும் திரியாமலும் தமிழ்மொழியில் வந்து வழங்குமானால் அவை வடசொல் எனப்படும்.

**நேர்க்கூற்று அயற்கூற்றுத் தொடர்கள்**

- ✓ வேல்விழி, நன்றாகப் படித்துத்தேர்வில் முதன்மை பெறு என்று ஆசிரியர் அறிவுரை கூறினார். இது நேர்க்கூற்றுத்தொடர். ஒருவர் நேரே கூறுவதுபோல் கூறுவது **நேர்க்கூற்று** எனப்படும். நேர்க்கூற்று, தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் வரும்.
- ✓ அயற்கூற்று நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறுமாறு ஆசிரியர் வேல்விழிக்குக் கூறினார்.
- ✓ நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்ற நினைவில் கொள்ள வேண்டியவை.
- ✓ நேர்க்கூற்றில் உள்ள மேற்கோள், காற்புள்ளி இவற்றை எடுத்துவிட வேண்டும்.
- ✓ என்று, என என்ற செய்தியினை முடிக்கும் சொல்லை நீக்க வேண்டும்.
- ✓ முன்னிலையிடத்தைத் தன்மையாகவோ படர்க்கையாகவோ மாற்ற வேண்டும்.
- ✓ தன்மையிடத்தைப் படர்க்கையாக மாற்ற வேண்டும்.
- ✓ கட்டளைச் சொல்லோடு ஆறு, ஆக என்னும் சொல்லைச் சேர்க்க வேண்டும்.
- ✓ நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றம்போது மாறும் சொற்கள்

| **நேர்க் கூற்று** | **அயற் கூற்று** | **நேர்க் கூற்று** | **அயற் கூற்று** |
|---|---|---|---|
| இன்று | அன்று | நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னநாள் | இப்பொழுது | அப்பொழுது |
| இது | அது | இவை | அவை |
| இதனால் | அதனால் | நான் | தான் |
| நாம், நாங்கள் | தாம், தாங்கள் | நீ | அவன், அவள் |
| நீங்கள் | அவர்கள் | | |

**திருவள்ளுவமாலை**

**சொற்பொருள் :** வள்ளை - நெல் குத்தும்போது பெண்களால் பாடப்படும் ஒருவகைப் பாட்டு, அளகு – கோழி.

**ஆசிரியர் பெயர்** - கபிலர்

**காலம்** - கி.பி.2-ம் நூற்றாண்டைச் சார்ந்தவெரென்றும், சங்கக் காலத்திற்குப் பின் வாழ்ந்தவரென்றும் குறிப்பிடுவர்.

**நூல்குறிப்பு:** திருக்குறளின் சிறப்பினை உயர்த்த திருவள்ளுவமாலை என்னும் தனிநூல் எழுந்தது. இந்நூலில் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன. ஐம்பத்துமூன்று புலவர்கள் பாடியுள்ளார்கள். நம் பாடப்பகுதி திருவளளுவமாலையில் உள்ள மூன்றாவது பாடலாகும். இப்பாடல் அறிவியல் அணுகுமுறையைச் சார்ந்தது.

- ✓ **உவமை:** சிறுபுல்லின் தலையில் தினையளவினும் சிறுபனிநீர் நெடிதுயர்ந்த பனை மரத்தின் உருவத்தைத் தன்னுள் தெளிவாகக் காட்டும்.
- ✓ வள்ளுவரின் குறள்வெண்பாக்கள் அரும்பெரும் கருத்துகளைத் தம்மகத்தே அடக்கிக் காட்டும்.
- ✓ ஒளியைக் கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் தோன்றும்படி செய்யலாம் என்று கண்டவர் கலீலியோ கலிலி.
- ✓ நெடுந்தொலைவிலுள்ள பெரிய பனைமரத்தின் உருவத்தைப் புல் நுனியில் தேங்கிய சிறுபனித்துளி மிகத்தெளிவாகக் காட்டும் என்ற கபிலரின் சிந்தனை அன்றைய தமிழரின் அறிவியல் கருத்தை வெளிப்படுத்தகிறது.

**நளவெண்பா**

(நளவெண்பா) சுயம்வர காண்டம் – புகழேந்திப்புலவர்

**சொற்பொருள் :**ஆழி – கடல், வடிஅம்பு - வடிக்கப்பட்ட அம்பு, விசும்பு - வானம், செற்றான் – வென்றான்., அரவு - பாம்பு, பிள்ளைக்குருகு-

RADIAN IAS ACADEMY

**விலங்குகளின் வாழிடங்கள்**

| | |
|---|---|
| ஆட்டுப்பட்டி | கோழிப்பண்ணை |
| யானைக்கூடம் | |
| குதிரைக்கொட்டில் | மாட்டுத்தொழுவம் |
| வாத்துப்பண்ணை | |

**விலங்கு பறவை இனங்களின் ஒலிமரபு**

| | |
|---|---|
| ஆந்தை அலறும் | குதிரை கனைக்கும் |
| நரி ஊளையிடும் | |
| கழுதை கத்தும் | குயில் கூவும் |
| புலி உறுமும் | |
| காக்கை கரையும் | கோழி கொக்கரிக்கும் |
| மயில் அகவும் | |
| கிளி கொஞ்சும் | சிங்கம் முழங்கும் |
| யானை பிளிறும் | |

**தாவர உறுப்புப் பெயர்கள்**

| | |
|---|---|
| ஈச்ச ஓலை | தாழை மடல் |
| பனையோலை | |
| சோளத்தட்டை | தென்னங்கீற்று |
| பலாஇலை | |
| மாவிலை | மூங்கில் இலை |
| வாழைஇலை | |
| வேப்பந்தழை | கமுகங்கூந்தல் |
| நெற்றாள் | |

**காய்களின் இளநிலை**

| | |
|---|---|
| அவரைப்பிஞ்சு | மாவடு |
| முருங்கைபபிஞ்சு | |
| தென்னங்குரும்பை | வாழைக்கச்சல் |
| வெள்ளரிப்பிஞ்சு | |

**செடி கோடி மரங்களின் தொகுப்பிடம்**

| | |
|---|---|
| ஆலங்காடு | சவுக்குத்தோப்பு |
| தென்னந்தோப்பு | |
| கம்பங்கொல்லை | சோளக்கொல்லை |
| தேயிலைத்தோட்டம் | |
| பனந்தோப்பு | பலாத்தோப்பு |
| பூஞ்சோலை | |

**பொருள்களின் தொகுப்பு**

| | |
|---|---|
| ஆட்டுமந்தை | கற்குவியல் |
| சாவிக்கொத்து | |
| திராட்சைக்குலை | வேலங்காடு |
| பசுநிரை | |
| மாட்டுமந்தை | யானைக்கூட்டம் |
| வைக்கோற்போர் | |

**பொருளுக்கேற்ற வினைமரபு**

| | |
|---|---|
| சோறு உண் | நீர் குடி |
| பால் பருகு | |
| பழம் தின் | பாட்டுப்பாடு |
| கவிதை இயற்று | |
| கோலம் இடு | தயிர் கடை |
| விளக்கை ஏற்று | |
| தீ மூட்டு | படம்வரை |
| கூரை வேய் | |

**விவேகசிந்தாமணி**

**சொற்பொருள் :** மது – தேன், தியங்கி – மயங்கி, சம்பு - நாவல், மதியம் – நிலவு

**பாரதத்தாய் - அசலாம்பிகை அம்மையார்**

**சொற்பொருள் :** வாய்மை – உண்மை, களையும் – நீக்கம், வண்மை – வள்ளல் தன்மை, துலங்குதல் – விளங்குதல், சேய்மை – தொலைவு, தவம் – பெரும்பேறு

**ஆசிரியர் பெயர்** - அசலாம்பிகை அம்மையார்

**பிறந்த ஊர்** - திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இரட்டணை

**இயற்றிய நூல்கள்** - ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம்.

- ✓ சிறந்த பேச்சாளர், இவரை இக்கால ஔவையார் என்று திரு.வி.க. பாராட்டுவார்.
- ✓ இவர் பல காலம் திருப்பாதிரிப் புலியூரில் (கடலூர்) வாழ்ந்தார்.
- ✓ இறுதிக்காலத்தில் சில ஆண்டுகள் வடலூரில் வாழ்ந்தார்.
- ✓ அப்போது, நானூற்று ஒன்பது பாடல்களைக் கொண்ட இராமலிங்க சுவாமிகள் சரிதம் என்னும் செய்யுள் நூலை இயற்றினார்.

**நூல் குறிப்பு:** காந்திபுராணம், ஈராயிரத்து முப்பத்து நான்கு பாடல்களைக் கொண்டது. இந்நூல் காந்தியடிகளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது.

**இந்திய விடுதலைப் போரில் தமிழகப்பெண்களின் பங்கு**

- ✓ வேலு நாச்சியார், வீரமும் நுட்பமான அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி.
- ✓ இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்கும் கி.பி.1730-ஆம் ஆண்டு ஒரே பெண் மகளாகத் தோன்றியவர் வேலு நாச்சியார்.
- ✓ சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் வேலூர் நாச்சியாரை மணந்துகொண்டார்.
- ✓ ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர்.
- ✓ ஆங்கிலேயேருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார்.
- ✓ வேலு நாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியை சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார். அவருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.
- ✓ மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலு நாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று 1780 ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

RADIAN IAS ACADEMY

அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது **அன்மொழித்தொகை** ஆகும்.

**பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்கள்**

| சமற்கிருதம்- உருது - | தமிழ் தமிழ் |
|---|---|
| அகங்காரம் - | செருக்கு |
| பஞ்சாயத்து - | ஐம்பேராயம் |
| அதிர்ஷ்டம் - | நற்பேறு |
| பதில் - | விடை |
| அபூர்வம் - | புதுமை |
| பேட்டி - | நேர்காணல் |
| ஆராதனை - | வழிபாடு |
| பைசா - | காசு |
| ஆனந்தம் - | மகிழ்ச்சி |
| அசல் - | முதல் |
| சபதம் - | சூளுரை |
| கச்சேரி - | அரங்கம் |
| தினசரி - | நாள்தோறும் |
| குமாஸ்தா - | எழுத்தர் |
| தைரியம் - | துணிவு |
| கைது - | தளை |
| பூஜை - | வழிபாடு |
| குஷி - | மகிழ்ச்சி |

| போர்த்துக்கீசியம் - | தமிழ் |
|---|---|
| பாரசீகம் - | தமிழ் |
| அலமாரி - | நெடும்பேழை |
| ஜமக்காளம் - | விரிப்பு |
| கிராம்பு - | இலவங்கம் |
| ஜமீன் - | நிலபுலம் |
| சாவி - | திறவுகோல் |
| மாலுமி - | நாவாயோட்டி |
| சன்னல் - | பலகணி |
| பஜார் - | கடைத்தெரு |
| மேஸ்திரி - | தலைமைத்தொழிலன் |
| மைதானம் - | திறந்தவெளித் திடல் |
| **அரபி** - | **தமிழ்** |
| **ஆங்கிலம்** - | **தமிழ்** |
| தகவல் - | செய்தி |
| லைசென்ஸ் - | உரிமம் |
| வக்கீல் - | வழக்குரைஞர் |
| இண்டர்வியூ - | நேர்காணல் |
| பாக்கி - | நிலுவை |
| கெஸ்ட்ஹவுஸ் - | விருந்தகம் |
| மக்கர் - | இடைஞ்சல் |
| எலாஸ்டிக் - | நெகிழி |
| மாமூல் - | பழையபடி |
| புனல் - | வடிகுழலி |
| மிட்டாய் - | தீங்கட்டி |
| பீரோ - | இழுப்பறை |
| **மராத்தி** - | **தமிழ்** |
| அட்லஸ் - | நிலப்படத் தொகுப்பு |
| காகிதம் - | தாள் |
| ஆயுசு - | வாழ்நாள் |
| கில்லாடி - | கொடியோன் |
| உயில் - | இறுதிமுறி |
| அபாண்டம் - | வீண்பழிக்கூற்று |
| கவுன்சில் - | மன்றம் |
| அட்டவணை - | பொருட்குறிப்புப் |
| பட்டியல் ரயில் - | தொடர்வண்டி |
| பேட்டை - | புறநகர் |
| பேனா - | தூவல் |
| ரப்பர் - | தேய்ப்பம் |

**காவடிச்சிந்து – அண்ணாமலையார்**

**சொற்பொருள் :** கலாபம் – தோகை, விவேகன் – ஞானி, கோல – அழகிய, இசைந்த – பொருத்தமான, வாவி – பொய்கை, மாதே – பெண்ணே.

**ஆசிரியர் பெயர்** - அண்ணாமலையார்

**ஊர்** - திருநெல்வேலி மாவட்டத்துச் சென்னிகுளம்

**பெற்றோர்** - சென்னவர் – ஒவுஅம்மாள்

**நூலகள்** - காவடிச்சிந்து, வீரை அந்தாதி, கோமதி அந்தாதி, வீரைப்பிள்ளைத்தமிழ் முதலியன.

**சிறப்பு** - இளமையிலேயே நினைவாற்றலும் படைப்பாற்றலும் மிக்கவர்.

**காலம்** - 1861 – 1890

**நூல்குறிப்பு:** தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகிலுள்ள வளமான ஊர் கழுகுமலை, இங்கு கோவில் கொண்டுள்ள முருகனின் சிறப்பை எளிய இனிய இசைப்பாடல்களால் போற்றிப் பாடப் பெற்றது இந்நூல்.

**விக்கிரமசோழன் உலா – ஒட்டக்கூத்தர்**

- ✓ குடகு மலையை ஊடறுத்து அலைமோதும் காவிரியைத் தந்தவன் கவேரன்.
- ✓ பொன்னியாகிய காவிரியின் இருகரைகளையும் உயர்த்திக் கட்டியவன் சோழன் கரிகாலன்.
- ✓ பொய்கையாரின் களவழி நாற்பது பாடலுக்குப் பரிசாகச் சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைவீடு செய்தவன் சோழன் செங்கணான். போரில் பெருமையாக எண்ணத்தக்க விழுப்புண்கள் தொண்ணூற்றாறும் பெற்றவன் சோழன் விசயாலயன்.
- ✓ சிவபெருமான் ஆடலரசராய்க் காட்சிதரும் தில்லைக்குப் பொன்வேய்ந்தவன் சோழன் முதல் பராந்தகன்.
- ✓ பதினெட்டுச் சிற்றூர்களையும் கைப்பற்றி மலைநாடு வென்றவன் சோழன் முதல் இராசராசன் வடக்கே படையெடுத்துக் கங்கையும் கிழக்கில் கடாரமும் வென்று கைக்கொண்டவன்.
- ✓ சேரர் கப்பற்படை முழுவதையும் அழித்தவன் சோழன் இராசேந்திரன்.
- ✓ சாளுக்கியர்களின் தலைநகரான கல்யாணிபுரத்தின்மீது படையெடுத்து மும்முறை போரிட்டு வென்றவன் சோழன் இராசாதிராசன்.

RADIAN IAS ACADEMY

வினையெச்சத்தொடர், 6. வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், 7. இடைச்சொற்றொடர், 8. உரிச்சொற்றொடர், 9. அடுக்குத்தொடர்.

- ✓ முதல் தொடர் பாம்பு பாம்பு என்பது அடுக்குத்தொடர்.
- ✓ இரண்டாம் தொடர் கலகல என்பது இரட்டைக்கிளவி.
- ✓ பாம்பு, பாம்பு என்பது அடுக்கத்தொடர், இதனைப் பிரித்தால் பொருள்தரும்.
- ✓ இரண்டு, மூன்று, நான்கு முறையும்கூட அடுக்கிவரும்.
- ✓ கலகல என்பது இரட்டைக்கிளவி. இஃது இரட்டைச்சொல்லாகவே வரும், பிரித்தால் பொருள் தராது. அடுக்குத்தொடர் (விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வரும்.

| | பேச்சுவழக்கு | - | எழுத்துவழக்கு |
|---|---|---|---|
| 1. | கோர்த்து | - | கோத்து |
| 2. | சுவற்றில் | - | சுவரில் |
| 3. | நாட்கள் | - | நாள்கள் |
| 4. | மனதில் | - | மனத்தில் |
| 5. | பதட்டம் | - | பதற்றம் |
| 6. | சிலவு | - | செலவு |
| 7. | அருகாமையில் | - | அருகில் |

| | பிழை | சரி |
|---|---|---|
| 1. | ஓர் மாவட்டம் | ஒரு மாவட்டம் |
| 2. | ஒரு அமைச்சர் | ஓர் அமைச்சர் |
| 3. | அவரது மகனோடு | அவருடைய மகனோடு |
| 4. | மேற்க்கொண்டார் | மேற்கொண்டார் |
| 5. | அந்த சுற்றுலா | அந்தச்சுற்றுலா |
| 6. | கண்டதை கூறவே | கண்டதைக் கூறவே |
| 7. | அவர்தான் | அவர்தாம் |

## திருமந்திரம் – திருமூலர்

**சொற்பொருள் :** திடம் – உறுதி, மெய்ஞ்ஞானம் – மெய்யறிவு, உபாயம் – வழிவகை

**ஆசிரியர் பெயர் :** மூலன் என்னும் பெயர், திரு என்னும் பெயரை பெற்று, அத்துடன் அர் என்னும் மரியதைப்பன்மையும் பெற்று, திருமூலர் என ஆயிற்று.

காலம் ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி

**நூல்குறிப்பு:**

- ✓ சைவத் திருமறைகளில் பத்தாவது திருமுறை திருமந்திரம்.
- ✓ இதற்குத் தமிழ் மூவாயிரம் என்னும் வேறுபெயரும் உண்டு.
- ✓ இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.
- ✓ நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல் மூன்றாம் மந்திரத்தில் எழுநூற்று இருபத்து நான்காவது பாடலாகும்.
- ✓ ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது இந்நூலின் புகழ்பெற்ற தொடாராகும்.

### தேம்பாவணி – வீரமாமுனிவர்

- ✓ **சொற்பொருள் :** நகை – புன்னகை, முகை – மொட்டு, மேனி – உடல்.
- ✓ **ஆசிரியர் பெயர்:** வீரமாமுனிவர்
- ✓ **இயற்பெயர் :** கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி
- ✓ **பெற்றோர் :** கொண்டல் போபெஸ்கி – எலிசபெத்
- ✓ **பிறந்தஊர் :** இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன்
- ✓ **அறிந்தமொழிகள் :** இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்.
  தமிழ்க் கற்பித்தவர் மதுரைச் சுப்பிரதீபக் கவிராயர்
- ✓ **சிறப்பு :** முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தவர்
- ✓ **இயற்றிய நூல்கள் :** ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம்.
- ✓ **காலம் :** 1680-1747
- ✓ **நூற்குறிப்பு:** தேம்பாவணி = தேம்பா + அணி = வாடாதமாலை. தேம்பாவணி = தேன் + பா + அணி = தேன் போன்ற இனிய பாடல்களாலான மாலை. இந்நூல், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டது. இந்நூல் கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மூன்று காண்டங்களும், முப்பத்தாறு படலங்களும் உள்ளன. பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள இப்பாடல் மகவருள் படலத்தில் உள்ளது.

RADIAN IAS ACADEMY

### நாடகக் கலை

- ✓ தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாடகப்பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறது.
- ✓ சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், நாடகமேத்தும் நாடகக் கணிகை என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிடுகிறார்.
- ✓ சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கூத்து வகைகளைப் பற்றியும், நாடகநூல்கள் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கணம் வகுத்த நாடக நூல்கள்**

- ✓ பரிதிமாற்கலைஞர், செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் எனும் நூலில் நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
- ✓ சுவாமி விபுலானந்தர் எழுதிய மதங்க சூளாமணியும் மறைமலையடிகள் எழுதிய சாகுந்தலமும் நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும்.
- ✓ நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார், நாடாகத்தமிழ் என்ற தம்நூலில் தொழில்முறை நாடக அரங்குகளைப் பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.

**காலம்தோறும் நாடகக்கலை**

- ✓ ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசம் என்ற நாடக நூலை எழுதியுள்ளான்.

- **ஊர்** - சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர்
- **சிறப்புப்பெயர்கள்** - திருவருட்பிரகாச வள்ளலார்
- **சிறப்பு** - வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சத்திய தருமச்சாலை ஆகியவற்றை நிறுவினார்.
- **இயற்றிய நூல்கள்** - திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலியன.
- **காலம்** - 1823-1874
- **நூல் குறிப்பு :** திரு+அருள்+பா=திருவருட்பா. இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல் என்றும், இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என்றும் இருவகையாகப் பொருள் கூறலாம். இ∴து ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல் கொண்டது. நம் பாடப்பகுதி பிள்ளைப் பெரு விண்ணப்பம் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

## தமிழர் வானியல் அறிவு

- தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் முதலிய நூல்களின் மூலம் பழந்தமிழர்கள் கையாண்ட அறிவியல் நுணுக்கங்களைக் காணலாம்.
- தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் பற்றிய அறிவாகும்.
- ஞாயிறு, திங்கள் என்று ஆராய முற்பட்டபோதே வானியல் ஆய்வு தோன்றிவிட்டது.
- உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் ஆதலின்… (தொல்காப்பியம், பொருள்.635)**

இதுபோன்றதொரு குறிப்பை,
மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும் வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும்பூதத்து இயற்கை போல்…..(புறம்,2)
இப்புறநாநூற்றுப் பாடல்வழி அறிகிறோம்.

- பதினைந்தாம் நூற்றாண்டில்தான் போலாந்து நாட்டைச் சார்ந்த நிக்கோலஸ்கிராப்ஸ் என்பவர் உலகம் தட்டை இல்லை உரண்டையானது என்று சரியாகக் கணித்துக் கூறினார்.
- ஆனால், அதனை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.
- பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலியோ, உலகம் உருண்டையானது என்பதைத் தம் தொலைநோக்கியால் கண்டுபிடித்துச் சொன்ன பிறகுதான் மக்கள் ஏற்றுக் கொண்டனர்.
- மேலை நாட்டினர் கண்டறிந்ததற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சொல்லியது ஒரு தமிழ்க்குரல். அந்தக்குரலுக்கு உரியவர் திருவள்ளுவர்.இவர்.

சுழன்றும் ஏர்ப்பினது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை
என்னும் குறட்பாவில் உலகம் சுழல்கிறது என்று கூறுகின்றார்.

**ஞாயிற்றுக்காட்சி**

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என ஞாயிற்றைப் போற்றியுள்ளமையைக் காணலாம். ஞாயிற்றைச் சுற்றிய பாதையை ஞாயிறு வட்டம் என்றனர் பழந்தமிழ் எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

**செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**

இப்பாடலின் வரியிலாக ஞாயிறு வட்டம், அதன் இயக்கம், அந்தரமாய் நிற்கும் வான்வெளி மண்டலம் என்பன பற்றிய வானியல் அறிவை உணரமுடிகின்றது.

**திங்கள் தோற்றம்**

தானே ஒளிவிடக்கூடிய ஞாயிற்றை நாள்மீன் என்றும், ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளிவிடக்கூடியவற்றை கோள்மீன் என்றும் பண்டைத்தமிழர் குறிப்பிட்டுள்ளனர். திங்கள், தானே ஒளிவீசுவதில்லை. இந்த வானியல் உண்மையைத் திருக்குறள் வெளிப்படுத்துகிறது.

**மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி.**

இக்குறளில் திங்களுக்குத் தானாக ஒளிவிடும் தன்மை இல்லை என்னும் வானியல் உண்மையை அறியலாம். திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள், 1146) என்னும் குறள் தொடர் திங்கள் மறைப்பு (சந்திரகிரகணம்) பற்றியதாகும். திங்களின் நிலையைக் கருதித் தேய்பிறை, வளர்பிறை என்றும் குறித்துள்ளனர்.

**கோள்கள் பற்றிய தமிழரின் கருத்து**

- செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என்றனர்.
- வெண்மை நிறமுடைய கோள் வெள்ளி எனப்பட்டது.
- ஞாயிறு உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடியலை உணர்த்துவதால் இதனை விடிவெள்ளி என்றனர். புதிதாகக் கண்டறிந்த கோள் புதன் என வழங்கப்பட்டது.
- வியா என்றால் பெரிய, நிறைந்த எனப் பொருள்படும்.
- வானில் பெரிய கோளாக வலம் வருவதையே வியாழன் என்றனர்.
- சனிக்கோளைக் காரிக்கோள் என்றழைத்தனர். இக்கோளில் கந்தகம் இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது. இதனால் கோள்களின் நிறம், வடிவம், அதன் தன்மை முதலியவற்றைத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது.
- தூமகேதுவை வால்நட்சத்திரம் என்றும் கூறுவர். தமிழ் இலக்கியங்களில் தூமகேது பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

**வான்வழிப் பயணம்**

- வலவன் ஏவா வானவூர்தி (புறம், 27:8) என்னும் புறப்பாடல் வரி, சங்க காலத்திலேயே ஓட்டுநர் இல்லா வானவூர்தி இருந்தது என்கிற வியக்கத்தக்க செய்தியைத் தருகிறது.

RADIAN IAS ACADEMY

- ✓ அவர்களின் பிடிவாதத்தால் 1616 ஆம் ஆண்டில் வீட்டில் சிறை வைக்கப்பட்டார்.
- ✓ பல்வேறு துன்பங்களுக்கு இடையிலும் 1632 ஆம் ஆண்டில் உலகத்தின் முதன்மையான இரு முறைமைகளைப் பற்றிய உரையாடல் என்னும் தலைப்பிலும், 1638 ஆம் ஆண்டில் கண்பார்வை பெரிதும் மங்கிய நிலையில், புதிய அறிவியலைச் சார்ந்த இரு உரையாடல் என்னும் தலைப்பிலும் மிகச்சிறந்த நூல்களை எழுதி வெளியிட்டார்.
- ✓ அந்நூல்களை அடிப்படையாகக் கொண்டே அறிவியல் மேதை ஐசக் நியூட்டன் தம்முடைய கொள்கைகளை உருவாக்கினார்.
- ✓ இறுதிக்காலம் முழுவதும் துன்பத்துடன் கழித்த கலீலியோ 1642 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## வேற்றுமை

1. முருகன் வந்தான்
2. முருகனைப் பார்த்தான்
3. முருகனால் வரையரயப்பட்டது.

- ✓ முதல் தொடரில் முருகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் முருகனைப் பார்த்தான் என்னும் தொடரில் முருகன் செயப்படுபொருள்.
- ✓ மூன்றாம் தொடர் முருகனால் வரையப்பட்டது என்பதில், முருகன் என்னும் எழுவாயைச் செயப்படுபொருளாகவும், கருத்தாவாகவும் வேறுபடுத்தின. பெயரை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.
- ✓ அவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.
- ✓ முகிலன் வந்தான் என்பது ஒரு தொடர். இத்தொடரில் முகிலன் என்பது எழுவாய், இந்த எழுவாய், வந்தான் என்னும் பயனிலையை ஏற்று இயல்பாக வருகிறது.
- ✓ இந்த எழுவாய் வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றுள் ஒன்றைப் பயனிலையாகக் கொண்டு முடியும். இவ்வாறு வருவது எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை எனப்படும். இதற்கு உருபு இல்லை.

(எ-டு) 1. மாடு வந்தது – வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

2. வளவன் என் தம்பி – பெயர்ப்பயனிலையைக்கொண்டு முடிந்தது.
3. வளர்மதி யார்? - வினாப் பெயர்ப்பயனிலையைக்கொண்டு முடிந்தது.

- ✓ முருகேசன் செடியை நட்டான் இத்தொடரில் முருகேசன் என்பது எழுவாய். செடி என்பதும் பெயர்ச்சொல்லே. அஃது ஐ என்னும் உருபை ஏற்றுச் செயப்படுபொருளை உணர்த்துகிறது. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை எனப்படும்.
- ✓ இதனைச் செயப்டுபொருள் வேற்றுமை எனவும் வழங்குவர். இதன் உருபு ஐ.
- ✓ **ஆக்கல், அழித்தல், அடைதல், நீக்கல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பொருள்களில் வரும்.**

வளவன் பள்ளியைக்கட்டினான் - ஆக்கல்

சோழன் பகைவரை அழித்தான் - அழித்தல்

தேன்மொழி கோவிலை அடைந்தாள் - அடைதல்

குழகன் சினத்தை விடுத்தான் - நீக்கல்

கயல்விழி குயிலைப் போன்றவள் - ஒத்தல்

கண்ணன் செல்வத்தை உடையவன் - உடைமை

- ✓ மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன் ,ஒடு, ஓடு
- ✓ இவை தம்மையேற்ற பெயர்ப்பொருளைக் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளாக வேறுபடுத்தும். இவற்றுள் ஆல், ஆன் உருபுகள் கருவி, கருத்தா ஆகிய இருபொருள்களிலும் வரும். கருவி முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.
- ✓ (எ-டு) நாரால் கயிறு திரித்தான்
- ✓ முதற் கருவி (காரியமாக மாறி அஃதாகவே இருப்பது)
- ✓ கையால் கயிறு திரித்தான்
- ✓ துணைக்கருவி (காரியம் செயல்படும்வரை துணையாக இருப்பது.) இதேபோல் கருத்தாவும் இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இருவகைப்படும்.

2. கோவில் அரசனால் கட்டப்பட்டது – ஏவுதல் கருத்தா (தான் செய்யாமல் பிறரைச் செய்ய வைப்பது)

- ✓ ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றானது செயலும் உடனிகழ்வது உடனிகழ்ச்சிப் பொருள் எனப்படும்.

(எ-டு) தாயோடு குழந்தை சென்றது.

- ✓ நாயோடு குட்டியும் சென்றது.
- ✓ கருவிப்பொருளில் கொண்டு என்னும் சொல்லும் உடனிகழ்ச்சிப் பொருளில் உடன் என்னும் சொல்லும் சொல்லுருபுகளாக வரும்.

(எ-டு) நூல்கொண்டு தைத்தான்.

- ✓ ஆறுமுகனுடன் வள்ளி மயிலில் சென்றாள்.
- ✓ நான்காம் வேற்றுமை உருபு கு. இது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும்.

(எ-டு) 1. புலவர்க்குப் பரிசு கொடுத்தார் - கொடை

2. நோய்க்குப் பகை மருந்து - பகை

3. பாரிக்கு நண்பர் கபிலர் - நட்பு

4. வீட்டுக்கு ஒரு பிள்ளை - தகுதி

5. வளையலுக்குப் பொன் - அதுவாதல்

6. கூலிக்கு வேலை. - பொருட்டு

7. அனிதாவுக்கு மகன் அன்பரசு - முறை

8. திருத்தணிக்கு வடக்கு வேங்கடம் - எல்லை

RADIAN IAS ACADEMY

ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர்.

✓ உலகின் முதல் மாந்தன் தமிழன். தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்பதும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் பாவாணரது ஆய்வுப்புலத்தின் இரு கண்களாம்.

✓ **பெற்றோர்** - ஞானமுத்து – பரிபூரணம்

✓ **ஊர்** - சங்கரன்கோவில்

✓ **கல்வி** - பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பி.ஓ.எல்.,

✓ **காலம்** - 07-02-1902 – 15-01-1981

✓ **சிறப்புபெயர்கள்** - செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு தமிழ்ப்பெருங் காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்.

✓ தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறினார். ஒருமுறை ஆசிரிய நண்பர்கள் சிலருடன் தாரைமங்கலம் (தாரமங்கலம்) என்னும் ஊருக்குச் சென்று, அங்கே இரவு தங்கியிருந்துவிட்டு மறுநாள் காலையில் திரும்பினார். அவரை அன்பர் சிலர் சூழ்ந்துகொண்டு, ஊர்சென்று வந்ததைப் பற்றிக் கேட்டனர். அவருள் ஒருவர், ஐயா பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன? என்று கேட்டார். பாவாணர் பகல் உணவு, பகல் உணவாகவும், இரா உணவு இரா உணவாகவும் இருந்தன என்றார்.

✓ பகல் உணவு என்பதில், பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்ததெனவும், இரா உணவு என்பதில், அனைவரும் உணவின்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்ததெனவும் உணர்ந்து கொண்டனர். தமிழ் வளர்த்தால் பசியும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என்று எண்ணியவர் பாவாணர்.

**தேவநேயப் பாவாணரின் படைப்புப் பணி**

✓ தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், உயர்தரக்கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை முதலான நாற்பத்துமுன்று நூல்களைப் படைத்துள்ளார்.

✓ பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக 08-05-1974 அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சில தொகுதிகளை வெளிக்கொணர்ந்தார்.

✓ இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

✓ தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்ற இயலாத சூழல் சேர்ந்தபோது, எனக்கு வறுமையும் உண்டு.

✓ மனைவி மக்களும் உண்டு, அவற்றோடு மானமும் உண்டு என்று வெளியேறினார் தன் மானமிக்க பாவாணர்.

✓ தேவநேயப் பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் நூலகம் செயல்பட்டு வருகிறது.

✓ இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையததிற்கு அருகிலுள்ள முறம்பில், பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

✓ அவை, பாவாணரின் புகழ்பேசும் மையமாகத் திகழ்கின்றன. மதுரையில் 05-01-1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தது.

## புணர்ச்சி: இயல்பு,விகாரம்

✓ வாழைமரம், வாழைப்பழம். இவ்விரு சொற்களையும் நோக்குங்கள். முதல் சொல்லில் வாழை + மரம் = வாழைமரம் என இருசொற்கள்.

✓ இணைந்து எத்தகைய மாற்றமும் இல்லாமல் அப்படியே சேர்ந்துள்ளன.

✓ இரண்டாவது சொல்லில் வாழை + பழம் = வாழைப்பழம் என வல்லின மெய்(ப்) சேர்ந்து வந்துள்ளது. இவ்வாறு இரண்டு அல்லது பல சொற்கள் இணைவதற்குப் புணர்ச்சி என்பது பெயர்.

✓ முதல் தொடரில் இயல்புப் புணர்ச்சியும் இரண்டாவது தொடரில் விகாரப் புணர்ச்சியும் இடம் பெற்றுள்ளன. நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென்றால் அது இயல்புப் புணர்ச்சியாகும்.

✓ பொன் + வளையல் = பொன்வளையல், மலர் + மாலை = மலர்மாலை, பனை + மரம் = பனைமரம்

✓ இணையும் இருசொற்களில் முதல் சொல் நிலைமொழி எனப்படும். நிலைமொழியின் இறுதி எழுத்துப் புள்ளியாக (மெய்யாக) இருந்தால் மெய்யீறு எனச் சொல்ல வேண்டும். உயிர்மெய்யாக இருந்தால், உயிரீறு எனச் சொல்ல வேண்டும்.

✓ பொன் + வளையல் – நிலைமொழியில் ன் மெய்யீறு

✓ பனை + மரம் – நிலைமொழியில் (ன்+ஐ=னை) உயிரீறு

✓ ஓர் எழுத்துச் சொல்லில் மட்டும் உயிர் ஈறு வெளிப்படையாகத் தெரியும் (ஈ + பறந்தது=ஈபறந்தது)

✓ ஓர் எழுத்துச் சொல்லாக உயிர்மெய் எழுத்து வரும்போது (ப்+ஊ) எனப் பிரித்து உயிர் ஈற்றைக் காண வேண்டும் . பூ (ப்+ஊ)+பூத்தது=பூப்பூத்தது

✓ வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தால், மெய் முதல் எனச் சொல்ல வேண்டும். உயிராக இருந்தால் உயிர்முதல் எனச் சொல்ல வேண்டும்.

(எ-டு) பொன் + வளையல் = பொன் வளையல் (வ்+அ) இங்கு வ் மெய்முதல். கண் + அழகு = கண்ணழகு (இங்கு அ உயிர்முதல்) நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் நன்றாகத் தெரிந்து கொண்டால்தான் புணர்ச்சியைப் புரிந்துகொள்ள இயலும்.

உள்ளதோடு, வனவிலங்குகளுக்குப் புகலிடமாகவும் உள்ளன.

- ✓ இந்தியக் காட்டுவாழ் உயிரிகள் வாரியம். அக்டோபர் முதல் வாரத்தை அரசு வனவிலங்கு வாரமாகக் கொண்டாடி வருகிறது. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.
- ✓ இச்சட்டம், வனவிலங்குகளை வேட்டையாடுவதைத் தடுக்கிறது.
- ✓ அழிந்துவரும் விலங்குகளை முற்றழிவிலிருந்து பாதுகாக்க வழி செய்கிறது. நமது நாட்டில் பதினேழு வனவிலங்குப் பாதுகாப்பு இடங்களும், அறுபத்தாறு தேசிய வனவிலங்குப் பூங்காக்களும், முந்நூற்று அறுபத்தெட்டுப் புகலிடங்களும் அமைந்துள்ளன.
- ✓ ஒவ்வோராண்டும் அக்டோபர்த் திங்கள் நான்காம் நாள் உலக வனவிலங்கு நாள் கொண்டாடப்படுகிறது.

**சென்னை அருங்காட்சியகம்**

- ✓ அருங்காட்சியகம் என்பது அரிதான பழம்பொருள்களைத் தொகுத்து வைத்துள்ள இடமாகும்.
- ✓ சென்னை எழும்பூரில் அருங்காட்சியகம் அமைந்துள்ளது.
- ✓ இது கி.பி.1851 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ✓ இக்காட்சியகம் முதலில் மைய அருங்காட்சியகம் என்றழைக்கப்பட்டது.
- ✓ அருங்காட்சியகத்தில் பதின்மூன்று காட்சியகங்கள் உள்ளன.
- ✓ இவை அனைத்தும் ஆறு கட்டடங்களில் வைக்கப்பட்டுள்ளன.ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனிப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவை, தலைமைக் கட்டம், முன் கட்டடம், வெண்கலக் காட்சிக்கூடம், சிறுவர் அருங்காட்சியகம், தேசிய ஓவியக் காட்சிக்கூடம் மற்றும் சமகால ஓவியக் காட்சிக்கூடம் என்பன.
- ✓ தலைமைக் கட்டடம் இரண்டு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ கீழ்த்தளத்தில் சிற்பங்கள், அமராவதி கற்சிலைகள், தஞ்சாவூர்த் தளவாடங்கள், தாமிரத்தகட்டுச் சாசனங்கள் உள்ளன. ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் முதலிய விலங்கினங்கள் உயிருடன் இருப்பதைப்போலப் பதப்படுத்தப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
- ✓ மேல்தளத்தில் அஞ்சல்தலைகள்,தாவரவியல் தொடர்பானவை, பவளப்பாறைகள், முதுகெலும்பற்ற உயிரினங்கள், மீன்கள், கல்வெட்டியல், சிந்துவெளி நாகரிகம் தொடர்பானவற்றைக் காணலாம்.
- ✓ முன் கட்டடப் பகுதிக்குள் மானிடவியல் பகுதி அமைந்துள்ளது. தொல்லியல் பகுதியில் ஆதிகால மனிதனின் தோற்றம், வளர்ச்சி, பயன்படுத்திய கற்கருவிகள், வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ள மன்னர்களின் படைக்கருவிகள், பழங்கால இசைக்கருவிகள், கலை, பண்பாட்டை விளக்கும் பொருள்களும் இடம்பெற்றுள்ளன.
- ✓ வெண்கலக் காட்சிக்கூடத்தில் தொல்லியல், நாணயவியல், வேதிக்காப்புப் பகுதிகளில் சைவ, வைணவ, பௌத்த சமண மதங்களுக்கான வெண்கலச் சிற்பங்களைக் காணலாம்.
- ✓ ஒவ்வொரு காலத்திலும் பயன்படுத்தப்பட்டு வந்து நாணயங்கள், பதக்கங்கள், சிறுவர் அருங்காட்சியகத்தில், அறிவியல், போக்குவரத்து, தொழில்நுட்பம், பல்வேறுவகை ஆடைகளுடன்கூடிய பொம்மைகள் முதலானவற்றைப் பார்க்கலாம்.
- ✓ தேசிய ஓவியக் காட்சிக்கூடத்தில் மிகச் சிறந்த ஓவியங்கள், மரபு ஓவியங்கள், சிற்றோவியங்கள், தஞ்சாவூர் ஓவியம் முதலானவற்றையும் காணலாம்.
- ✓ சமகால ஓவியக் காட்சிக்கூடத்தில் பிரித்தானிய ஓவியங்களும், தற்கால ஓவியங்களும் உங்கள் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

## புணர்ச்சி : உயிரீறு, உடம்படுமெய், மெய்யீற்று

- ✓ உயிர் ஈற்றுச் சொல்முன் வல்லின எழுத்துகள் வந்தால், அதன் மெய்பெயழுத்து மிகும்.

(எ-டு) 1. பலா + சுளை = பலாச்சுளை

- ✓ பனி + போர் = பனிப்போர்
- ✓ தினை + துணை = தினைத்துணை
- ✓ உயிர்முன் உயிர் வரின் உடம்படுமெய்
- ✓ மணி + அடி இங்கு மணி எண்பது நிலைமொழி. இதன் ஈறு (ண் + இ) உயிர். அடி என்பது வருமொழி. அதன் முதல் எழுத்து அ – உயிர். இவ்விரண்டும் ஒன்றாகச் சேரும்போது மணி + அடி = மணி + ய் + அடி = மணியடி என இணையும்போது இடையில் ய் என்னும் மெய் வருகிறது.
- ✓ பூ + அழகு. பூவழகு என வரும்
- ✓ பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு இடையில் அங்கு வ் என்னும் மெய் எழுத்து வருகிறது.
- ✓ சே + அடி.. சேவடி என வரும். இங்கே வ் என்னும் மெய் வந்துள்ளது. சே + அடி = சே + வ் + அடி = சேவடி, சே + ய் + அடி = சேயடி எனவும் வரும்.

1. கிளி + அலகு = கிளி + ய் + அலகு = கிளியலகு
2. தீ + எரிகிறது = தீ + ய் + எரிகிறது = தீயெரிகிறது
3. பனை + ஓலை = பனை + ய் + ஓலை= பனையோலை

இ, ஈ, ஐ ஆகியன முன் உயிர்வரின் ய் தோன்றும்.

1. குண + அழகி = குண + வ் + அழகி = குணவழகி
2. பலா + இலை = பலா + வ் + இலை = பலாவிலை
3. திரு + ஆரூர் = திரு + வ் + ஆரூர் = திருவாரூர்
4. பூ + அழகி = பூ + வ் ரூ அழகி = பூவழகி
5. கோ + இல் = கோ + வ் + இல் = கோவில்

அ,ஆ,உ,ஊ,ஓ முன் வ் தோன்றும்.

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

அவனே + அரசன் = அவனே+ய]+அரசன்]=அவனேயரசன்

ஏ முன் உயிர்வரின் வ்,ய் இரண்டும் வரும்.

RADIAN IAS ACADEMY

திங்களில் நிகழ்வது, தளர்நடையிட்டு வரும் குழந்தையின் சிறப்புகளை எடுத்துக்கூறி, அருகில் வருக வருக என வாய்குளிர, மனங்குளிர அழைக்கும் பாடல்களைக் கொண்டதாய் இப்பருவம் அமைந்துள்ளது.

## இலக்கியத்தில் நகைச்சுவை

- ✓ நகைச்சுவையை உணர்ந்து போற்றுவதற்குத் தனி ஆற்றல்வேண்டும். தொல்காப்பியம் எள்ளல், இளமை, அறியாமை, மடமை ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்கிறது.
- ✓ நகைச்சுவையின் இன்றியமையாமையைப் புலப்படுத்த வந்த வள்ளுவர்.

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்

- ✓ என நகைச்சுவையுணர்வு இல்லாதவர்க்குப் பகலும் இருளாகத் தோன்றும் என்கின்றார். காந்தியடிகள், நகைச்சுவை உணர்வு மட்டும் தனக்கு இல்லையெனில், எப்பொழுதோ தனது வாழ்கையை இழந்திருக்கக்கூடும் எனக் கருதினார்.

**நகைச்சுவையின் தேவை**

- ✓ கூத்துகளில் கோமாளிகளும், அரசவைகளில் விகடகவிகளும் நகைச்சுவைக்காகவே படைக்கப்பட்டார்கள். நகைச்சுவையுணர்வு ஒன்றுதான் மனிதர்களை, முழுமையானவர்களாக மாற்றும் ஆற்றல் கொண்டது.
- ✓ நகைக்கத் தெரியாதவர்கள் அரைமனிதர்களாகக் கருதப்படுவார்கள்.
- ✓ பிறர் மனம் புண்படாதவகையில் நகைச்சுவை அமைதல் வேண்டும். உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும், எழுச்சிக்கும் நகைப்பு ஓர் அறிகுறி என மேனாட்டு அறிஞர்கள் கூறுவது சிந்தனைக்குரியது.
- ✓ பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நகைக்சுவையுணர்வு ததும்பும் படைப்புகள் பல காணப்படுகின்றன. கம்பரின் நகைச்சுவை உணர்வினை அவர்தம் பாடல்வழி

**அஞ்சலை அரக்க! பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி, மீளான் வாலும்போய் வீழ்ந்ததன்றே….. கம்பராமாயணம்**

- ✓ சிற்றிலங்கிங்களுள் ஒன்றான கலிங்கத்துப் பரணியில் சயங்கொண்டார் நகைச்சுவையுணர்வு தோன்ற, பல பாடல்களைப் பாடியுள்ளார். கவி காளமேகம் இருபொருள் தருமாறு சொற்களைப் பாட்டில் அமைத்துப் பாடுவதில் வல்லவர். நாங்கள் கவிராயர்கள் என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும்படி, கவி என்பதற்குக் குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு

வாலெங்கே? நீண்டுஎழுந்த வல்லுகி ரெங்கே? நாலு
காலெங்கே? ஊன்வடிந்த கண்ணெங்கே? -சாலப்
புவராயர் போற்றும் புலவர்கள்! நீங்கள்
கவிராயர் என்றிருந்தக் கால். எனும் பாடலைப் பாடினார்.

- ✓ அழகிய சொக்கநாதர் என்பவரும் நகைச்சுவையாகப் பாடுவதில் வல்லவர். ஒருபாடலில், ஒருவன் மிருதங்கம் வாசிப்பதை நகைப்புடன் கூறுகிறார், கவிஞர் பாரதிதாசன் மயிலின் கழுத்து நீண்டு இருப்பதை நகைச்சுவையாக விளக்குகிறார்.

அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை யன்னை இப்பெண் கட்கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தான், உனக்கோ
கறையொன் றில்லாக் கலாப மயிலே!
நிமிர்ந்து நிற்க நீள் கழுத்து அளித்தான்.

- ✓ நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனாரின் மருமக்கள்வழி மான்மியம் ஒரு நகைச்சுவைக் களஞ்சியம் என்பர்.
- ✓ நாட்டுப்புறப்பாடல்களிலும் நகைச்சுவையுணர்வு மிகுந்திருப்பதைக் காணலாம். முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன். எனத் தொடங்கும் நாட்டுப்புறப்பாடல் நகைச்சுவை உணர்வுமிக்கது.

## யாப்பு, அணி

**யாப்பிலக்கணம்:**

- ✓ யாப்பு என்றால் கட்டுதல் என்பது பொருள். யாக்கை – யாத்தல் = யாப்பு.
- ✓ எலும்பு, தசை, நரம்பு முதலியவற்றால் உடல் கட்டப்பட்டு இருப்பதுபோல்ச் செய்யுளுக்கு உரிய உறுப்புகளைக்கொண்டு பாடலை உருவாக்குதலே யாப்பு எனப்படும்.
- ✓ எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் யாப்பின் உறுப்புகளாகும்.
- ✓ ஓரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலிப்பது அசை.
- ✓ அது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைகள் பல சேர்ந்து அமைவது சீர் எனப்படும்.
- ✓ சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்த அமைவது தளை எனப்படும். இரண்டு அல்லது பல சீர்கள் சேர்ந்து அமைவது அடி எனப்படும்.
- ✓ அடிகள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து அடுக்கிப் பாடுவது பா எனப்படும். இவ்வண்ணம், செய்யுள் இலக்கணத்தைக் கூறுவது யாப்பிலக்கணம் எனப்படும். பா வின் வகைகள் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகியன பாவின் வகைகள், ஓசைநயத்தை வேறுபடுத்தி அறிவதற்காக நால்வகைப்பாக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ✓ ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறளும் வெண்பாதான். ஆனால், இரண்டடிகள் மட்டும் வருவதால், குறள் வெண்பா என அழைப்பர்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - **இது குறள் வெண்பா**

கண்அமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் – எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்

RADIAN IAS ACADEMY

- 1856 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் **கால்டுவெல்**, திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து **வேறுபட்டவை** எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

| தென் திராவிடம் | நடுத்திராவிடம் | வட திராவிடம் |
|---|---|---|
| தமிழ்<br>மலையாளம்<br>கன்னடம்<br>குடகு (கொடகு)<br>துளு<br>கோத்தா<br>தோடா<br>கொரகா<br>இருளா | தெலுங்கு<br>கூயி<br>கூவி (குவி)<br>கோண்டா<br>கோலாமி (கொலாமி)<br>நாய்க்கி<br>பெங்கோ<br>மண்டா<br>பர்ஜி<br>கதபா<br>கோண்டி<br>கோயா | குருக்<br>,மால்தோ<br>பிராகுய் (பிராகுயி) |

- திராவிட மொழிகள் மொத்தம் - 28 எனக் கூறுவர்
- தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக் குடும்பத்திற்கு உரியமொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி; தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம். - **கால்டுவெல்**

சான்று

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குருக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

- திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன

| | |
|---|---|
| மூன்று | தமிழ் |
| மூணு | மலையாளம் |
| மூடு | தெலுங்கு |
| மூரு | கன்னடம் |
| மூஜி | துளு |

### பால்பாகுபாடு

- திராவிட,மொழிகளில் **பொருள்களின் தலைமையை ஒட்டிப்** பால்பாகுபாடு அமைந்துள்ளது.
- வடமொழியில் இவ்வாறு அமையவில்லை. உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள் களும் கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன.
- இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன. **ஜெர்மன் மொழி**யிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது.
- வாய் - ஆண்பால், மூக்கு - பெண்பால், கண் - பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது

### வினைச்சொற்கள்

- ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை.
- திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.
- இவ்வியல்புக்கு மாறாக மலையாள மொழி மட்டுமே அமைந்துள்ளது. அம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லை.

சில திராவிட மொழிகளின் பழமையான இலக்கிய **இலக்கணங்கள்**

| மொழி | இலக்கியம் | காலம் | இலக்கணம் | காலம் | ஆதாரம் |
|---|---|---|---|---|---|
| தமிழ் | சங்க இலக்கியம் | பொ.ஆ.மு 5- பொ.ஆ.பி 2 ஆம் நூற்றாண்டு அளவில் | தொல்காப்பியம் | பொ.ஆ.மு 3 ஆம் நூற்றாண்டு அளவில். | தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ.) சாகித்திய அகாதெமி |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ.பி 9 ஆம் நூற்றாண்டு | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ.பி 9 ஆம் நூற்றாண்டு | இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் செ.வை. சண்முகம் |
| தெலுங்கு | பாரதம் | பொ.ஆ.பி 11 ஆம் நூற்றாண்டு | ஆந்திர பாஷா பூஷணம் | பொ.ஆ.பி 12 ஆம் நூற்றாண்டு | |
| மலையாளம் | ராம சரிதம் | பொ.ஆ.பி. 12 ஆம் நூற்றாண்டு | லீலா திலகம் | பொ.ஆ.பி 15 ஆம் நூற்றா | மலையாள இலக்கிய வரலா |

- மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை பசுமை என ஐந்திற்குமேல் இல்லை.
- நாவின் மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை.

**இலக்கணக் குறிப்பு**

- முத்திக்கனி - உருவகம்
- தெள்ளமுது - பண்புத் தொகை
- குற்றமிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நா - ஒரெழுத்து ஒரு மொழி
- செவிகள் உணவான - நான்காம் வேற்றுமைத் தொகை
- சிந்தாமணி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **கொள்வார்** - கொள் + வ் +ஆர்
- **கொள்** - பகுதி
- **வ்** - எதிர்கால இடைநிலை
- **ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி
- **உணர்ந்த** - உணர் + த்(ந்) + த் + அ
- **உணர்** - பகுதி
- **த்** - சந்தி, த் -ந் ஆனது விகாரம்
- **த்** - இறந்த கால இடைநிலை
- **அ** - பெயரெச்ச விகுதி
- தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று, இது 'வாயில் இலக்கியம்' 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியர்களுள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக மாலையை வாங்கி வருமாறு 'அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பா' வால் இயற்றப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை 1930 இல் உ.வே.சா.முதன் முதலில் பதிப்பித்தார். இதன் ஆசிரியர் யார் என அறிந்துகொள்ள இயலவில்லை.
- "காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
  மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
  போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
  நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க" - **கவியோகி சுத்தானந்த பாரதியார்**

**இயல் ஒன்று - வளரும் செல்வம்**

| | |
|---|---|
| சாப்ட்வேர் (Software) | மென்பொருள் |
| ப்ரௌசர் (browser) | உலவி |
| க்ராப் (Crop) | செதுக்கி |
| கர்சர் (Cursor) | ஏவி அல்லது சுட்டி |
| சைபர்ஸ்பேஸ் (Cyberspace) | இணையவெளி |
| சர்வர் (Server) | வையக விரிவு வலை வழங்கி |
| ஃபோல்டர் (Folder) | உறை |
| லேப்டாப் (laptop) | மடிக்கணினி |

| பெயர் | எண் அளவு |
|---|---|
| முந்திரி | 1/320 |
| அரைக்காணி | 1/160 |
| அரைக்காணி முந்திரி | 3/320 |
| காணி | 1/80 |
| கால் வீசம் | 1/64 |
| அரைமா | 1/40 |
| அரை வீசம் | 1/32 |
| முக்காணி | 3/80 |
| முக்கால் வீசம் | 3/64 |
| ஒருமா | 1/20 |
| மாகாணி (வீசம்) | 1/16 |
| இருமா | 1/10 |
| அரைக்கால் | 1/8 |
| மூன்றுமா | 3/20 |
| மூன்று வீசம் | 3/16 |
| நாலுமா | 1/5 |

- தமிழ்ச்சொல்லாகிய **நாவாய்** என்பதே ஆங்கிலத்தில் **நேவி** என ஆகியுள்ளது
- உலகின் தொன்மையான மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது **கிரேக்க மொழியாகும்.** இம்மொழியின் கடல் சார்ந்த சொற்களில்
- எறிதிரை [எறுதிரான்]
- கலன் [கலயுகோய்]
- நீர் [நீரியோஸ்] [நீரிய]
- [நாவாய் [நாயு]
- தோணி [தோணீஸ்]
- போன்ற தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.
- தமிழில் பா என்றால் என்னவென்று உனக்குத் தெரியும், இச்சொல் கிரேக்க மொழியின்

- ஒலியன் - Phoneme
- ஒப்பிலக்கணம் - Comparative Grammar
- பேரகராதி - Lexicon
- **விறகுநான்;** வண்டமிழே! உன்னருள் வாய்த்த
  பிறகுநான் வீணையாய்ப் போனேன்;- சிறகுநான்
  சின்னதாய்க் கொண்டதொரு சிற்றீசல்;செந்தமிழே!
  நின்னால் விமானமானேன் நான்!

  தருவாய் நிழல்தான் தருவாய்; நிதம்என்
  வருவாய் எனநீ வருவாய்; - ஒருவாய்
  உணவாய் உளதமிழே! ஒர்ந்தேஎன்; நீ பாட்டுக்
  கணவாய் வழிவரும் காற்று!

  - **கவிஞர் வாலி**

**இயல் இரண்டு நீரின்றி அமையாது உலகு**

- அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, அணை, ஏரி, குளம், ஊருணி, கண்மாய், கேணி - எனப் பல்வேறு பெயர்களில் நீர் நிலைகள் உள்ளன.

**தலைமையுரை - மாணவர் வெண்மதி**

- ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 5 ஆம் நாள் **உலகச் சுற்றுச்சுழல் நாளாகக்** கொண்டாடப்படுகிறது.
- **மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழ வேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன** என்று **மாங்குடி மருதனார்** கூறியதைப் புரிந்து கொள்ள வேண்டும்.
- காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதன்மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறைகளில் பூசி இரண்டையும் ஒட்டிக்கொள்ளும் விதமாகச் செய்தனர். இதுவே கல்லணையைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பமாகக் கருதப்படுகிறது.

**ஆமினா**

- பாண்டிய மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் **கண்மாய்** என்று அழைப்பர், **கம்மாய்** என்பது வட்டார வழக்கு சொல்லாகும்.
- மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு **உறைகிணறு** என்றும் மக்கள் பருகுநீர் உள்ள நீர் நிலைக்கு **ஊருணி** என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.
- தமிழக வரலாற்றில் கரிகால்சோழன் காலத்தில் கட்டப்பட்ட **கல்லணையே** விரிவான பாசனத்திட்டமாக இருந்துள்ளது.
- கல்லணையின் நீளம் 1080 அடியாகவும் அகலம் 40 முதல் 60 அடியாகவும் உயரம் 15 முதல் 18 அடியாகவும் இருக்கிறது.
- இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை என அறியப்படும் **சர் ஆர்தர் காட்டன்** என்ற ஆங்கிலப் பொறியாளர் கல்லணையைப் பல ஆண்டுக்காலம் ஆராய்ந்தார்.
- கல்லணை பலகாலம் மணல் மேடாகி நீரோட்டம் தடைப்பட்டது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் தொடர்ச்சியாக வெள்ளத்தாலும் வறட்சியாலும் வளமை குன்றியது. இந்தச் சூழலில் 1829 இல் காவிரிப் பாசனப் பகுதிக்குத் தனிப் பொறுப்பாளராக ஆங்கிலேய அரசால் சர் ஆர்தர் காட்டன் நியமிக்கப்பட்டார்.
- இவர்தான் பயனற்று இருந்த கல்லணையைச் சிறு சிறு பகுதியாய்ப் பிரித்து மணல் போக்கிகளை அமைத்தார். அப்போது, கல்லணைக்கு அமைக்கப்பட்ட அடித்தளத்தை ஆராய்ந்த அவர் பழந்தமிழரின் அணை கட்டும் திறனையும் பாசன மேலாண்மையையும் உலகுக்கு எடுத்துக் கூறினார். கல்லணைக்கு கிராண்ட் அணைக்கட் என்ற பெயரையும் சூட்டினார்.
- மேலும் கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டுதான் 1873 ஆம் ஆண்டு கோதாவரி ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

**முகிலன்**

- நாம் வாழும் தமிழ்நாடு **வெப்ப மண்டலப் பகுதியில்** உள்ளது.
- தமிழ் மரபில் **நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன**. என்பார் பேராசிரியர் தொ.பரமசிவன்.
- **குளித்தல்** என்ற சொல்லுக்கு **உடம்பினைத் தூய்மை செய்தல்** அல்லது **அழுக்கு நீக்குதல்** என்பதல்ல பொருள்.சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருளாகும் **குளிர்த்தல் என்பதே குளித்தல்** என்று ஆயிற்று என்பது அவரது விளக்கம்.**குள்ளக் குளிரக் குடைந்து நீராடி** என்கிறார் **ஆண்டாள். தெய்வச்சிலைகளைக் குளிர்(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல்** என்று கூறுவர்.
- திருமணமானபின் **கடலாடுதல்** என்னும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகிறது.
- **சனி நீராடு** என்பது ஔவையின் வாக்கு
- அதிகாலையில் விவசாய நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் **நீராகாரம்** குடிப்பார்கள். வீட்டிற்கு வரும்

மக்களுக்காகப் பல படைப்புகளை உருவாக்கியவர், நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் முதலானவை இவரின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை.

**இயல் இரண்டு பெரியபுராணம்**

- வரப்புயர நீர் உயரும்; நீருயர நெல் உயரும்; நெல்லுயரக் குடி உயரும் உயர்ந்த குடியாக. நாடெல்லாம் நீர் நாடாகச் சோழ நாடு திகழ்கிறது.. காவிரியின் பாதையெல்லாம் பூவிரியும் கோலத்தை அழகாக விவரித்துரைக்கிறது பெரியபுராணம்.

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| வளர் முதல் | நெற்பயிர் |
| தராளம் | முத்து |
| பணிலம் | சங்கு |
| வரம்பு | வரப்பு |
| கழை | கரும்பு |
| கா | சோலை |
| குழை | சிறு கிளை |
| அரும்பு | மலர், மொட்டு |
| மாடு | பக்கம் |
| நெருங்கு வளை | நெருங்குகின்ற சங்குகள் |
| கோடு | குளக்கரை |
| ஆடும் | நீராடும் |
| மேதி | எருமை |
| துதைந்து எழும் | கலக்கி எழும் |
| கன்னி வாளை | இளமையான வாளைமீன் |
| சூடு | நெல் அரிக்கட்டு |
| சுரிவளை | சங்கு |
| வேரி | தேன் |
| பகடு | எருமைக்கடா |
| பாண்டில் | வட்டம் |
| சிமயம் | மலையுச்சி |
| நாளிகேரம் | தென்னை |
| நரந்தம் | நாரத்தை |
| கோளி | அரசமரம் |
| சாலம் | ஆச்சா மரம் |
| தமாலம் | பச்சிலை மரங்கள் |
| இரும்போந்து | பருத்த பனைமரம் |
| சந்து | சந்தன மரம் |
| நாகம் | நாகமரம் |
| காஞ்சி | ஆற்றுப்பூவரசு |

**இலக்கணக்குறிப்பு**

- கருங்குவளை, செந்நெல் - பண்புத்தொகைகள்
- விரிமலர் - வினைத்தொகை
- தடவரை - உரிச்சொல் தொடர்

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **பாய்வன** - பாய் + வ் + அன் + அ
- **பாய்** - பகுதி
- **வ்** - எதிர்கால இடைநிலை, அன்- சாரியை
- **அ** - பலவின்பால் வினைமுற்று விகுதி

- சுந்தரின் திருத்தொண்டத் தொகை அடியவர் பெருமையை ஓர் அடியில் கூறுகிறது. இதைச் சிறிது விரித்து நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதி ஒவ்வொரு பாடலிலும் அவ்அடியார்களின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ளது. இந்த இரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு சேக்கிழாரால் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வோர் அடியாராக அறுபத்துமூவரின் சிறப்புகளை விளக்கிப் பாடப்பட்டது திருத்தொண்டர் புராணம். இதன் பெருமை காரணமாக இது பெரியபுராணம் என்று அழைக்கப்படுகிறது
- கி.பி.12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேக்கிழார் சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராக இருந்தார். பக்திச்சுவை நனி சொட்டப் பாடிய கவிவலவ' என்று இவரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பாராட்டுகிறார்.
- வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
  கானலின் நீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ?
  போனதெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே
  போனதனால் நானும் ஓர் கனவோ? - இந்த
  ஞாலமும் பொய்தானோ? - **பாரதியார்**

**இயல் இரண்டு - புறநானூறு**

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| யாக்கை | உடம்பு |
| புணரியோர் | தந்தவர் |
| புன்புலம் | புல்லிய நிலம் |
| தாட்கு | முயற்சி, ஆளுமை |
| தள்ளாதோர் இவண் தள்ளாதோரே | குறைவில்லாது நீர் நிலை அமைப்பவர்கள் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள் |

**இலக்கணக்குறிப்பு**

- மூதூர், நல்லிசை, புன்புலம் - பண்புத்தொகை
- நிறுத்தல் - தொழிற்பெயர்
- அமையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நீரும் நிலமும், உடம்பும் உயிரும் - எண்ணும்மைகள்
- அடுபோர் - வினைத்தொகை

| | | |
|---|---|---|
| | | காட்டினார் |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல் | படித்தபடி நடந்து காட்ட வேண்டும் |

- தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது. அதாவது, தமிழில் துணைவினையாக வரும் வேர்ச்சொல் சில தொடர்களில் முதல்வினையாகவும் வரும்.
- கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
  காடும் செடியும் கடந்துவந்தேன்;
  எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
  இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்
  ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
  ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்
  ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
  ஒடைகள் பொங்கிட ஒடிவந்தேன்
  - **கவிமணி**

**கலைச்சொல் அறிவோம்**

- குமிழிக்கல் - Conical Stone
- நீர் மேலாண்மை - Water management
- பாசனத் தொழில் நுட்பம் - Irrigation Technology
- வெப்ப மண்டலம் - Tropical Zone

**1)** அழகின் சிரிப்பு - பாவேந்தர் பாரதிதாசன்
**2)** தண்ணீர் தண்ணீர் - கோமல் சுவாமிநாதன்
**3)** தண்ணீர் தேசம் - வைரமுத்து
**4)** வாய்க்கால் மீன்கள் - வெ.இறையன்பு
**5)** மழைக்காலமும் குயிலோசையும் - மா. கிருஷ்ணன்

**மறை நீர் (Virtual Water)**

- கண்ணுக்குத் தெரியாமல் நாம் இரண்டு வகையில் நீரைப் பயன்படுத்துகிறோம். முதல் வகை நாம் பயன்படுத்தும் பொருள்கள் வழியாக; இரண்டாவது வகை நாம் உண்ணும் உணவின் வழியாக, புலப்படாத் தண்ணீர் என்பது உணவுப் பொருள்களின் உற்பத்தி குறித்தும் அதனை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட தண்ணீர்த் தேவை குறித்தும் பேசுவது ஆகும். ஒரு கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 822 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ அரிசியை உறபத்தி செய்ய 2500 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ காப்பிக்கொட்டையை உற்பத்தி செய்ய 18,900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகின்றது. நீர்வளத்தைப் பாதுகாக்க நாட்டின் மேல்புற நீர்வளம் மற்றும் நிலத்தடி நீர்வளம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து தேவைக்கேற்ப இறக்குமதி செய்து கொள்ள வேண்டும், இதனால் நாட்டின் நிலத்தடி நீரும். ஆற்று நீரும் சேமிக்கப்படும்.
- (மா,அமரேசன் - கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும்)

**இயல் மூன்று ஏறு தழுவுதல்**

**இலக்கியங்களில் ஏறு தழுவுதல்**

- சங்க இலக்கியமான **கலித்தொகையில்,** ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முல்லைக்கலியில் ஏறு தழுவுதல் களம் குறித்த அடிகள், காட்சியை நம் கண்முன்னே நிறுத்துகின்றன. காளைகளின் பாய்ச்சல் பற்றியும் கலித்தொகை கூறுகிறது
- கலித்தொகை தவிர, **சிலப்பதிகாரம்** முதலான இலக்கியங்களிலும் **புறப்பொருள் வெண்பாமாலை** என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
- ஏறு தழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான **பள்ளு இலக்கியத்திலும்** குறிப்புகள் உள்ளன. **எருதுகட்டி** என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் **கண்ணுடையம்மன் பள்ளு** பதிவு செய்துள்ளது.
- எகிப்தில் உள்ள பெனி - ஹாசன் சித்திரங்களிலும், கிரீட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் காளைப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**தொல்சான்றுகள்**

- சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் **கல் முத்திரை** ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

**பண்பாட்டு அடையாளம்**

- ஏறு தழுவுதல், **முல்லை நிலத்து** மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் **பாலை நிலத்து** மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது.
- தமிழக உழவர்கள் தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணை நின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே **மாட்டுப் பொங்கல்.**
- சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று **ஜல்லிக்கட்டு** என அழைக்கப்படுகிறது.
- சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற **வளையத்தினைக்** குறிக்கும் புளியங்கொம்பினால்

RADIAN IAS ACADEMY

- அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல் **(மணிமேகலை** 25; 228-231)

**இயல் மூன்று அகழாய்வுகள்**

## முத்து

- அறிவை விரிவுசெய் எனப் பாவேந்தர் கூறினார்.
- 150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863 ஆம் ஆண்டு **இராபர்ட் புரூஸ்புட்** என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் **பல்லாவரம்** செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் **கற்கருவி**தான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்பே ரோமானியர்களின் **பழங்காசுகளைக்** கோவையில் கண்டெடுத்தோம்.
- **அரிக்கமேடு** அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த **வணிகத் தொடர்பு** உறுதிப்படுத்தப்பட்டது.
- 1914 ஆம் ஆண்டு **ஆதிச்ச நல்லூரில்** நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான **முதுமக்கள் தாழிகள்** கண்டுபிடிக்கப்பட்டன.

**பட்டிமண்டபம்**

- பட்டிமண்டபம் என்பதுதான் இலக்கியவழக்கு ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள்.பேச்சுவழக்கையும் ஏற்றுக்கொள் கிறோம்.
- மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் என்று சிலப்பதிகாரத்திலும் (காதை 5, அடி 102)
- பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் என்று மணிமேகலையிலும் (காதை 1, அடி 16)
- பட்டி மண்டபம் ஏற்றினை, ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே என்று திருவாசகத்திலும் (சதகம் 41)
- பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் என்று கம்பராமாயணத்திலும் (பாலகாண்டம், நகரப் படலம் 154) பட்டிமண்டபம் என்ற சொல் பயின்றுவருகிறது.

**இயல் மூன்று வல்லினம் மிகும் இடங்கள்**

- தோன்றல், திரிதல், கெடுதல், என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்
- வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின்பாற்படும்.
- சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

**வல்லினம் மிகும் இடங்கள்**

- தற்கால உரை நடையில் வல்லினம் மிக வேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| 1 | அச்சட்டை<br>இந்தக்காலம்<br>எத்திசை?<br>எந்தப்பணம்? | **அ,இ** என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், **அந்த, இந்த** என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், **எ** என்னும் வினாவெழுத்தின் பின்னும், **எந்த** என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும் |
| 2 | கதவைத்திற<br>தகவல்களைத்<br>திரட்டு<br>காட்சியைப்பார் | **ஐ** என்னும் இரண்டாம் வேற்றுமை உருப்பு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் |
| 3 | முதியவருக்குக்கொடு<br>மெட்டுக்குப்பாட்டு<br>ஊருக்குச்செல் | **கு** என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் |
| 4 | எனக்கேட்டார்<br>வருவதாகக் கூறு | **என, ஆக** போன்ற சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும் |

**மேலும் சில வல்லினம் மிகும் இடங்களை அறிந்து கொள்வோம்.**

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு இதற்கு எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும் |
| இனிக் காண்போம்<br>தனிச் சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும் |
| மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும் |
| எட்டுத் தொகை<br>பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும் |
| தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும் |
| கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும் |

- பிற அறநூல்களைப் போல் அல்லாமல் பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்கு நாயனார். தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி செந்நாப் போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

**திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகள்**

- திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812
- திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது
- திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - குன்றிமணி
- திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்
- திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - தஞ்சை ஞானப்பிரகாசர்
- திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் மணக்குடவர்
- திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது
- ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப் பட்டுள்ளது
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - ஜி,யு,போப்
- திருக்குறள் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளி வந்துள்ளது.

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| அகழாய்வு | Excavation |
| கல்வெட்டியல் | Epigraphy |
| நடுகல் | Hero stone |
| பண்பாட்டுக் குறியீடு | Cultural Symbol |
| புடைப்புச் சிற்பம் | Embossed sculpture |
| பொறிப்பு | Inscription |

**இயல் நான்கு இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்**

- குறுஞ்செய்தியின் வருகைக்குப்பின் **தந்தி** விடைபெற்றுக் கொண்டது.

**ஒளிப்படி இயந்திரம் (Photo Copier)**

- நகல் எடுக்கப் பயன்படுகின்ற முக்கியமான இயந்திரம் இது. அனைவரும் ஜெராக்ஸ் (Xerox) என்று பொதுவாகக் கூறுவது வழக்கத்தில் உள்ள சொல்.
- நியூயார்க்கைச் சேர்ந்த காப்புரிமைச் சட்ட வல்லுநரும் பகுதிநேர ஆய்வாளருமான செஸ்டர் கார்ல்சன் (Chester Carlson).
- கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக் கொண்டு, 1938 இல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தார்.
- கிரேக்க மொழியில் சீரோகிராஃபி (Xerography) என்றால் உலர் எழுத்துமுறை (dry writing) என்று பொருள்.
- அவரால் 1959 இல் இந்த இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

**தொலை நகல் இயந்திரம் (Fax)**

- தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஒரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகிறது
- 1846 இல் ஸ்காட்லாந்துக் கண்டுபிடிப்பாளர் அலெக்சாண்டர் பெயின் (Alexander Bain) என்பார் குறியீடுகளை மின்னாற்றல் உதவியுடன் அச்சிடுவதில் வெற்றிகண்டு அதற்குரிய காப்புரிமையைப் பெற்றார்.
- இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் ஜியோவான்னி காசில்லி (Giovanni Caselli) பான்டெலிகிராஃப் (Pantelegraph) என்ற தொலைநகல் கருவியை உருவாக்கினார், அவருடைய கண்டுபிடிப்பைக்கொண்டு 1865 இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொகைநகல் சேவை தொடங்கப்பட்டது.
- **1985** இல் அமெரிக்காவின் **ஹாங்க் மாக்னஸ்கி** (Hank Magnuski) என்பவர் கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தார். அந்த இயந்திரத்திற்கு **காமா ஃபேக்ஸ்** (Gamma Fax) என்று பெயரிட்டு விற்பனைக்குக் கொண்டுவந்தார்.

**தானியக்கப் பண இயந்திரம் (Automated Teller Machine)**

- நான் இங்கிலாந்திலோ உலகின் எந்த மூலையிலோ இருந்தாலும் என் வங்கிப் பணத்தை எடுத்துப் பயன்படுத்துவதற்கொரு வழியைச் சிந்தித்தேன். சாக்லேட்டுகளை வெளித்தள்ளும் இயந்திரத்திலிருந்து யோசனை கிடைத்தது. அங்கு சாக்லேட்; இங்கே பணம். - **ஜான் ஷெப்பர்டு பாரன்**
- இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான **ஜான் ஷெப்பர்டு பாரன்** (John Shepherd Barron) என்பவர் தலைமையிலான குழுவொன்று பார்க்லேஸ்

அறிஞர்களும் வியந்து போற்றுகின்றனர். இது தமிழர்களின் அறிவாற்றலுக்குச் சிறந்த சான்றாகும்.

**இயல் நான்கு விண்ணையும் சாடுவோம்**

- தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் **சிவன்,** இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர், இந்தப் பதவியை ஏற்றிருக்கும் **முதல் தமிழர்** என்னும் சிறப்புகளுக்கு உரியவர். 2015 ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மைத்தின் இயக்குநராக இருந்து. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்

**தங்களுடைய ஆரம்பகாலப் பணி பற்றிக் கூறுங்களேன்....**

- 1983 ஆம் ஆண்டு, முதன் முதலில் பி.எஸ்.எல்.வி. (Polar Satellite launch vehicle) திட்டத்தைத் தொடங்க, அரசாங்கம் இசைவு தந்தது.

**விக்ரம் சாராபாய்**

- இவர் 'இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். ஆரியபட்டா என்ற முதல் செற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர். செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். இவரின் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் திருவனந்தபுரத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு வானூர்தியியல் (Aeronautics), வான் பயண மின்னணுவியல் (Avionics) கூட்டமைப் பொருள்கள் (Composites), கணினி - தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஆராய்ச்சிகளும் வடிவமைப்புகளும் மேற்கொள்ளப்படு கின்றன. இவருடைய முயற்சியால் தான் இஸ்ரோ தொடங்கப்பட்டது.
- நான் இரவு பகலாக முயற்சி செய்து, ஒரு செயலியை உருவாக்கினேன், அதற்குப் பெயர் 'சித்தாரா' (SITARA - Software for Integrated Trajectory Analysis with Real time Appliccation). இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் (Digital) சேகரிக்கும். அதைப் பயன்படுத்தி வாகனத்தின் செயல்பாடு எப்படி இருக்கும் என்பதை முன் கூட்டியே கணிக்கலாம்.
- இதைப் பயன்படுத்தித்தான் பி.எஸ்.எல்.வி.ஏவப்பட்டது.
- இப்போதுவரை நம்முடைய நாட்டிலிருந்து ஏவப்படும் அனைத்துச் செயற்கைக்கோள் ஏவு ஊர்திகளும் 'சித்தாரா' செயலியைப் பயன்படுத்தித்தான் விண்ணில் ஏவப்படுகின்றன.

**அப்துல்கலாம்**

- இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர். தமிழ் நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர். ஏவுகணை மற்றும் ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில் நுட்ப வளர்ச்சியில் கலாமின் ஈடுபாட்டினால் அவர் இந்திய ஏவுகணை நாயகன், என்று போற்றப்படுகின்றார்.பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார். இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியைத் தமிழ் வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தற்போது உங்கள் முன் உள்ள அறைகூவல்கள் எவை?**

- இது வரை இந்தியாவுக்காக 45 **செயற்கைக்கோள்கள்** செலுத்தப்பட்டுள்ளன. ஆனால் நம்முடைய தேவைகளுக்கு மேலும் 45 செயற்கைக்கோள்கள் தேவை!

**வளர்மதி**

- அரியலூரில் பிறந்த இவர், 2015 இல் தமிழ் நாடு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர். இஸ்ரோவில் 1984 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். 2012 இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் (RISAT -1) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இவர் இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் ஆவார்.

**சந்திரயான் - 1 நம் விண்வெளித் துறைக்குப் பெரிய புகழைக் கொடுத்தது. சந்திரயான் - 2 இன் பணிகள் என்ன?**

- சந்திரயான் - 1 நிலவின் புறவெளியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது.

**அருணன் சுப்பையா**

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளர் மற்றும் திட்ட இயக்குநர் ஆவார். திருநெல்வேலி மாவட்டத்தின் ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இயந்திரப் பொறியியலில் பட்டம் பெற்று, 1984 இல் திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம்சாராபாய் விண்வெளி மையத்தில் பணியில் சேர்ந்து, தற்போது பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணிபுரிகிறார். 2013 இல் மங்கள்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநராக இருக்கின்றார்.

| | |
|---|---|
| வாழ்த்துகள் | வல்லினம் மிகாது. (மிகும் என்பர் சிலர்) |
| பைகள் கைகள் | ஐகார வரிசை உயிர்மெய் ஒரெழுத்திச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும் போது வல்லினம் மிகாது. |

**அறிவை விரிவு செய்**

**1)** அக்கினிச் சிறகுகள் - அப்துல் கலாம்

**2)** மின்மினி - ஆயிஷா நடராஜன்

**3)** ஏன், எதற்கு, எப்படி? - சுஜாதா

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| ஏவு ஊர்தி | Launch Vehicle |
| ஏவுகணை | Missile |
| கடல்மைல் | Nautical Mile |
| காணொலிக் கூட்டம் | Video Conference |
| பதிவிறக்கம் | Download |
| பயணியர் பெயர்ப் பதிவு | Passenger Name Record (PNR) |
| மின்னணு கருவிகள் | Electronic devices |

**இயல் ஐந்து கல்வியில் சிறந்த பெண்கள்**

- சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் சிலர் ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்,

**பெண்மை - புரட்சி (முத்துலட்சுமி (1886-1968)**

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர், சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
- தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

**பெண்மை - துணிவு மூவலூர் இராமாமிர்தம் (1883-1962)**

- தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர். தமிழக அரசு 8 ஆம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

**பெண்மை - உயர்வு பண்டித ரமாபாய் (1858 - 1922)**

- இவர் சமூகத் தன்னார்வலர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

**பெண்மை - சிறப்பு ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் (1870 - 1960)**

- பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவராகி, தமிழகத்திற்கு வந்து, வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்

**பெண்மை - அறிவு சாவித்திரிபாய் பூலே (1831 - 1897)**

- 1848 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர் இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.
- பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997)

**பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்**

- ஈ.வெ.ரா - நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்ட மேற்படிப்பிற்கு உரியது
- சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் - கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது காண்க (tavikaspedia.in)

**தனித் தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903-1943)**

- மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

**கோத்தாரி கல்விக் குழு**

- 1964 ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் புரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது

சாரதா சட்டம்

- பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம், எனவே, அதைத் தடுக்க 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

**ஈத இராஜஸ்வரி அம்மையார் (1906-1955)**

- தமிழ் இலக்கியம் அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப்

RADIAN IAS ACADEMY

- உம் - பெயரெச்ச விகுதி
- தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதி நூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.இப்பாடல்கள் நன்மை தருவன. தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.
- சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.
- 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.
- 11 ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்
- 15 ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ
- 16 ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்
- 17 ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் விஞ்ஞானி கலீலியோ.

**இயல் ஐந்து வீட்டிற்கோர் புத்தகசாலை**

- நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்" என்பவர் ஆபிரகாம் லிங்கன்.
- 2009 ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது. 2010 ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

**இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில**

- மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
- கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு, வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்
- எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
- சட்டம் ஒரு இருட்டறை - அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
- மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை; தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை
- நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
- இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை
- இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்
- நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.
- பேரறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின. தம்முடைய திராவிட சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள். திரைப்படங்கள் மூலமாக முதன் முதலில் பரப்பியவர் இவரே. 1935 இல் சென்னை, பெத்த நாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஒராண்டு பணியாற்றினார். ஹோம்ரூல், ஹோம் லேண்ட், நம்நாடு திராவிட நாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார். முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தைத் தமிழ் நாடு என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்.

**புகழுக்குரிய நூலகம்**

- ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச் சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன
- உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது. திருவனந்தபுரம் நடுவண் நூலகம்
- கல்கத்தாவில் 1836 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953 இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக்

RADIAN IAS ACADEMY

- எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது

**உரிச்சொற்கள்**

- உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியனஎன்று நன்னூலார் கூறுகிறார்.

| | |
|---|---|
| கடி மலர் - மணம் மிக்க மலர்<br>கடி நகர் - காவல் மிக்க நகர்<br>கடி விடுதும் - விரைவாக விடுவோம்<br>கடி நுனி - கூர்மையான நுனி | ஒரு சொல் பல பொருளுக்கு உரியது |
| உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.<br>உறு பசி: தவச் சிறிது; நன்று | பல சொல் ஒரு பொருள் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

**பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்**

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லின் ஏவலாகவும், பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும் |
| விகுதி (இறுதி நிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை,பால்,எண், இடம் காட்டும் |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும் |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடை நிலைக்கும் இடையில் வரும் |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடை நிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றும் |

**பகுதி:**

| | |
|---|---|
| ஊரன் | ஊர் |
| நடிகன் | நடி |
| பார்த்தான் | பார் |
| வரைந்தான் | வரை |
| மடித்தார் | மடி |
| மகிழ்ந்தாள் | மகிழ் |

**விகுதி**

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் - ஆண்பால் வினை முற்று விகுதி | அன்,ஆன் |
| பாடுகிறாள் | ஆள் - பெண்பால் வினை முற்று விகுதி | அள்,ஆள் |
| பெற்றார் | ஆர் - பலர்பால் வினை முற்று விகுதி | அர்,ஆர் |
| நீந்தியது | து - ஒன்றன்பால் வினை முற்று விகுதி | து.று |
| ஓடின | அ - பலவின்பால் வினை முற்று விகுதி | அ,ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என்,ஏன் |
| உண்டோம் | ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம்,ஆம், எம்,ஏம்,ஓம் |
| செய்தாய் | ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ,ஆய்,இ |
| பாரீர் | ஈர்-முன்னிலைப், பன்மை வினைமுற்று விகுதி | இர்,ஈர் |
| அழகிய,பேசும் | அ,உம் - பெயரெச்ச விகுதிகள் | அ,உம் |
| வந்து,தேடி | உ,இ - வினையெச்ச விகுதிகள் | உ,இ |
| வளர்க | க- வியங்கோள் வினைமுற்று விகுதி | க,இய,இயர் |
| முளைத்தல் | தல்- தொழிற்பெயர் விகுதி | தல்,அல்,ஐ, கை,சி,பு... |

**இடைநிலைகள்**

| | | |
|---|---|---|
| வென்றார் | ற்- இறந்தகால இடை நிலை | த்,ட்,ற்,இன் |
| உயர்கிறான் | கிறு - நிகழ்காலஇடை நிலை | கிறு,கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ்,க்,- எதிர்கால இடைநிலை | ப்.வ்.க் |
| பறிக்காதீர் | ஆ-எதிர்மறை இடைநிலை | இல்.ஆல்.ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச்,ஞ்-பெயர் இடைநிலைகள் | ஞ்.ந்.வ்.ஸ்த் |

**சந்தி**

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த்-சந்தி | த்.ப்.க் |
| பொருந்திய | ய்-உடம்படுமெய் சந்தி | ய்.வ் |

**சாரியை**

- முசிறித் துறைமுகத்தில் பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலிய பொருள்கள் யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்டன,.
- **முசிறி - அலெக்சாண்டிரியா ஒப்பந்தம்** என்பது முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகன் ஒருவனுக்கும் எகிப்தின் நைல் நதிக்கரையிலுள்ள அலெக்சாண்டிரியா நகரில் வாந்த கிரேக்க வணிகன் ஒருவனுக்கும் பொ.ஆ.பி. 150 அளவில் ஏற்படுத்தப்பட்டதாகும்.
- "நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்" (பாடல் 55, அடி: 47)
- "பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்" (பாடல் 67, அடி: 2)
- "பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்" (பாடல் 74, அடி: 6)

**பதிற்றுப்பத்து**

- தமிழ் வணிகன் ஒருவன், கப்பலில் ஒருமுறை கொண்டு சென்ற வணிகப் பொருள்களின் பண மதிப்பீடு 2,98,84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று எகிப்து நாடு உரோமப் பேரரசின் கீழ் இருந்தது.

**காவிரிப்பூம்பட்டினம்**

- சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின் மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம். பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. கடற்கரை ஓரமாகக் காவிரியாற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது.
- அக்காலத்திலேயே துறைமுகங்களுக்கு அருகில் ஏற்றுமதி. இறக்குமதிப் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க நல்ல அகன்ற கிடங்குகள் அமைக்கப் பட்டிருந்தன என்றும் பொருள்களுக்குச் சுங்கத் தீர்வைகள் அங்கேயே வசூலிக்கப்பட்டன என்றும் பட்டினப்பாலை தெரிவிக்கிறது
- புகார் நகரத்தில் காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருக்கும் சாலையில், சுங்கத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, சோழப் பேரரசின் இலச்சினையான புலிச்சின்னத்தை அடையாளமிட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும்" என்கிறது பட்டினப்பாலை.
- பொ.ஆ.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமாபுரியிலிருந்து வந்த யவனர்களும் கிழக்கிலிருந்து வந்த சாவக நாட்டினரும் வட இந்தியரும் இங்கு வணிகம் செய்தார்கள். சோழ நாட்டு வணிகர் இந்தத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சாவக நாடு, காழகம், கங்கைத் துறைமுகம் முதலான இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தனர்.
- காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் காப்பியங்களின் தலைமை மாந்தர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை, ஆகியோர் இளவரசன் கிள்ளிவளவன் ஆட்சிக்காலத்தில் இப்பட்டினத்தில் வாழ்ந்திருந்தனர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**கொற்கை**

- தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை
- பாண்டியர்களில். ஆளும் மன்னரை அடுத்து அரசாள வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிருவாகம் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செஞ்செழியன் உயிர்துறந்த பின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்ள
- கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் (அடி:127)
- மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின் (அடி:134)
- மாலைத் திங்கள் வழியோன் ஏறினன் (அடி:138)
- ஆகிய அடிகள் குறிப்பிடுகின்றன.
- பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாகவும் கொற்கை விளங்கியது.

| | |
|---|---|
| வெளி நாடுகளில் இருந்து கடல்வழி வந்தவை | குதிரைகள் |
| உள் நாட்டிலே இருந்து தரைவழியில் வந்தவை | கறி (மிளகு) |
| வட மலையில் இருந்து வந்தவை | மெருகிடப்பட்ட பொன், மணிக் கற்கள் |
| மேற்கு மலையில் இருந்து வந்தவை | சந்தனம், ஆரம் |
| தென் கடலில் இருந்து கிடைத்தவை | முத்து |
| கீழ்க்கடலில் விளைந்தவை | பவளம் |

- பொ.ஆ.பி,.முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்னும் பெயர் கொண்ட கிரக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும்

RADIAN IAS

மூலமாக மதுரையில் வனவிலங்கு சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| புரிசை | மதில் |
| அணங்கு | தெய்வம் |
| சில்காற்று | தென்றல் |
| புழை | சாளரம் |
| மாகால் | பெருங்காற்று |
| முந்நீர் | கடல் |
| பணை | முரசு |
| கயம் | நீர் நிலை |
| ஒவு | ஓவியம் |
| நியமம் | அங்காடி |

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| ஓங்கிய | பெயரெச்சம் |
| நிலைஇய | சொல்லிசை அளபெடை |
| குழாஅத்து | செய்யுளிசைஅளபெடை |
| வாயில் | இலக்கணப் போலி |
| மா கால் | உரிச்சொல் தொடர் |
| இமிழிசை, முழங்கிசை | வினைத்தொகைகள் |
| நெடுநிலை, முந்நீர் | பண்புத் தொகைகள் |
| மகிழ்ந்தோர் | வினையாலணையும் பெயர் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **ஆழ்ந்த** - ஆழ் +த் (ந்) + த் + அ
- **ஆழ்** - பகுதி;
- **த்** - சந்தி (ந் ஆனது விகாரம்)
- **த்** - இறந்தகால இடை நிலை
- **அ** - பெயரெச்ச விகுதி
- **ஓங்கிய** - ஓங்கு + இ(ன்) + ய் + அ
- **ஓங்கு** - பகுதி
- **இ(ன்)** - இறந்தகால இடைநிலை
- **ய்** - உடம்படுமெய்
- **அ** - பெயரெச்சவிகுதி
- **மகிழ்ந்தோர்** - மகிழ் +த் (ந்) + த் + ஒர்
- **மகிழ்** - பகுதி
- **த்** - சந்தி (ந் ஆனது விகாரம்)
- **த்** - இறந்த கால இடை நிலை
- **ஒர்** - பலர்பால் வினைமுற்று விகுதி
- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக் காஞ்சி எனப்பட்டது. இந் நூல்; 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் **பெருகுவள மதுரைக்காஞ்சி** என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.
- மதுரைக் காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.
- தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின.

**இயல் ஆறு சந்தை**

- பகலில் செயல்படும் கடைவீதிகளை நாளங்காடி என்றும் இரவில் செயல்படும் கடைவீதிகளை 'அல்லங்காடி' என்றும் சொல்வாங்க. நாள் என்றால் பகல்; அல் என்றால் இரவு.
- மக்கள் நாகரிகம் குறிஞ்சி நிலத்துல வேரூன்றி, முல்லை நிலத்துல வளர்ந்து மருதத்துல முழுமையும் வளமையும் அடைஞ்சுது.
- மதுரைப்பக்கம் மாட்டுச் சந்தைய 'மாட்டுத்தாவணி ன்னு சொல்லுவாங்க. தாவணின்னா சந்தைன்னு பொருளாம்.
- கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள், விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாய்ப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்பட மில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.
- மணப்பாறைன்னு சொன்னா மாட்டுச்சந்தை, அய்யலூர்னா ஆட்டுச் சந்தை, ஒட்டன் சத்திரம்னா காய்கறிச் சந்தை நாகர்வோவில் தோவாளைன்னா பூச்சந்தை, ஈரோடுன்னா ஜவுளிச் சந்தை, கடலூருக்குப் பக்கமா இருக்கிற காராமணி குப்பம்னா கருவாட்டுச் சந்தை, நாகபட்டினம்னா மீன் சந்தை

**இயல் ஆறு ஆகுபெயர்**

- தொல்காப்பியர் ஆகுபெயர்களை ஏழாகவும் நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளனர் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில-

RADIAN IAS ACADEMY

**அறிவை விரிவு செய்**

- நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் - முனைவர் சு.சக்திவேல்
- தரங்கம்பாடி தங்கப் புதையல் - பெ.தூரன்
- இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) - ச. தமிழ்ச்செல்வன்

**இயல் ஏழு - கலை பல வளர்த்தல்**

- "ஒவிய விதானத்து, உரைபெறு நித்திலத்து
  மாலைத்தாமம் வளையுடன் நாற்றி
  விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்"
  **- சிலப்பதிகாரம்**

**இயல் ஏழு - சிற்பக்கலை**

- 'கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
  மண்ணும் சிதையும் தந்தமும் வண்ணமும்
  கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
  பத்தே சிற்பத் தொழிற்கு உறுப் பாவன"
- என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. மணிமேகலையிலும் இத்தகு குறிப்புகள் காணப்படுகின்றன.
- தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள் கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.
- சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால் அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.
- தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும், அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தின் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.

**பல்லவர் காலச் சிற்பங்கள்**

- பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும்.
- அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.
- காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன.
- மாமல்லபுரம், காஞ்சிபுரம் திருச்சி, மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

**பாண்டியர் காலச் சிற்பங்கள்**

- பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி., குன்றக்குடி திருப்பரங்குன்றம். முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான் கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

**சோழர் காலச் சிற்பங்கள்**

- முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவர் கோவில், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.
- தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுமக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.
- புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாச நல்லூரில் உள்ள குரங்க நாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை.
- சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.
- தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியிலிருந்து

- பிடிபசி - வேற்றுமைத் தொகை
- பைங்கிளி - பண்புத்தொகை
- பூவையும் குயில்களும், முதிரையும், சாமையும், வரகும் - எண்ணும்மைகள்
- பெருங்கடல், முதுவெயில், இன்னிளங்குருளை - பண்புத்தொகை
- அதிர்குரல் - வினைத்தொகை
- மன்னிய - பெயரெச்சம்
- வெரீஇ - சொல்லிசை அளபெடை
- கடிகமழ் - உரிச்சொற்றொடர்
- மலர்க்கண்ணி - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- எருத்துக்கோடு - ஆறாம் வேற்றுமைத் தொகை
- கரையொரு - இரண்டாம் வேற்றுமைத் தொகை
- மரைமுகம் - உவமைத்தொகை
- கருமுகில் - பண்புத்தொகை
- வருமலை - வினைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **பருகிய** = பருகு + இன் + ய் + அ
- **பருகு** - பகுதி
- **இன்** - இறந்த கால இடை நிலை (ன் கெட்டது விகாரம்)
- **ய்** - உடம்படுமெய்
- **அ** - பெயரெச்ச விகுதி
- **பூக்கும்** = பூ + க் + க் + உம்
- **பூ - பகுதி**
- **க்** - சந்தி
- **க்** - எதிர்கால இடை நிலை
- **உம்** - வினைமுற்று விகுதி
- **கோர்வை / கோவை** : கோ என்பது வேர்ச்சொல், கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி (எ.கா) ஆசாரக்கோவை
- ஊசியில் நூலைக் கோத்தான்
- இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம், இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது, இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பதிகாரம் தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கு மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
- இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

**இயல் ஏழு நாச்சியார் திருமொழி**

**சொல்லும் பொருளும்**

- தீபம் - விளக்கு
- கதிர் - நடனம்
- தாமம் - மாலை
- பெண்ணின் திருமண வயது 18: ஆணின் திருமண வயது 21 என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது

**இலக்கணக் குறிப்பு**

- கொட்ட - வினையெச்சம்
- முத்துடைத்தாமம் - இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

- தொட்டு - தொடு (தொட்டு) + உ
- தொடு - பகுதி, தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது - விகாரம்
- உ - வினையெச்ச விகுதி
- கண்டேன் - காண் (கண்) + ட் + ஏன்
- காண் - பகுதி ('கண்' எனக் குறுகியது விகாரம்), ட் - இறந்தகால இடைநிலை
- ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஆகும். இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன. நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைத் கொண்டது. நம் பாடப்பகுதியின் இரு பாடல்கள் ஆறாம் திருமொழியில் இடம் பெற்றுள்ளன. திருமாலை வழிபட்டுச் சிறப்பு நிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார். இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என அழைக்கப்பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்.

**இயல் ஏழு செய்தி - தி, ஜானகி ராமன்**

- சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள்
- 1970 - அன்பளிப்பு (சிறுகதைகள்) - கு.அழகிரிசாமி
- 1979 - சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) - தி. ஜானகி ராமன்
- 1987 - முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) - ஆதவன்
- 1996 - அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) - அசோகமித்ரன்

இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென் தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு,அஃது | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குற்றியலுகரம் |

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| குடைவரைக் கோவில் | Cave temple |
| கருவூலம் | Treasury |
| மதிப்புறு முனைவர் | Honorary Doctorate |
| மெல்லிசை | Melody |
| ஆவணக் குறும்படம் | Document short film |
| புணர்ச்சி | Combination |

**அறிவை விரிவுசெய்**

- நட்புக்காலம் - கவிஞர் அறிவுமதி
- திருக்குறள் கதைகள் - கிருபானந்தவாரியார்
- கையா, உலகே ஒரு உயிர் - ஜேம்ஸ் லவ்லாக் **- தமிழில் - சா.சுரேஷ்**

**இயல் எட்டு வாழிய நிலனே**

**இயல் எட்டு பழந்தமிழர் சமூக வாழ்க்கை**

**திணை நிலத் தெய்வங்கள்**

- தமிழர் திணைநிலத் தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவற்றைத் தமது வழிபாடுகளாகக் கொண்டிருந்தனர். குறிஞ்சிக்கு முருகனையும் முல்லைக்குத் திருமாலையும் மருதத்திற்கு இந்திரனையும் நெய்தலுக்கு வருணனையும் பாலைக்குக் கொற்றவையையும் தெய்வங்களாகக்கொண்டு வழிபட்டனர்.
- வெற்றியைக் கொண்டாடக் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கும் மரபிருந்தது.
- நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
  பெயரும் பீடும் எழுதி அகர்தொறும்
  பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
  **- அகநானூறு**

**விழாக்கள்**

- தைத்திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திரு நாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா போன்ற விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்பதை அகநானூறு, கலித்தொகை பரிபாடல் முதலிய இலக்கியங்கள் மூலம் அறியலாம்.
- அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்
  மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி - **அகநானூறு 141**
- வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
  வெறியாட்டு அயர்ந்த காந்தளும் - **தொல், புறத்.63**

**ஆடை, அணிகலன்கள்**

- மேற்சட்டையைக் 'கஞ்சுகம்' என்றனர்
- துணி தைப்பவர் 'துன்னக்காரர்' எனப்பட்டார்
- சிறுவர் ;ஐம்படைத்தாலி' என்னும் கழுத்தணி அணிந்தனர்
- புகைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ
  ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம் - **புறம் 398;19 -பெரும்பாணாற்றுப்படை, அடி:469**

**பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுகள்**

- முல்லை நிலத்தின் "ஏறு தழுவுதல்" ஆண்மகனின் வீரத்தைப் புலப்படுத்துவதாக இருந்தது.
- மற்றொரு சிறந்த வீரவிளையாட்டு மற்போரிடல்.
- கிராமப்புறங்களில் கோழிச் சண்டையும் ஆட்டுக்கிடாய்ச் சண்டையும் நடைபெற்றதைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. யானைச்சண்டை நடைபெறுவதும் வழக்கத்தில் இருந்துள்ளது.
- நகர்ப்புற மக்கள் மேடை அமைத்து, இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றைக் காண்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். பெண்கள் கழங்காடல், அம்மானை, பந்தாடுதல், ஒரையாடுதல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டார்கள்.

**தமிழர் உணவு**

- அவைப்பு மாண் அரிசி மலை வெண்சோறு
  கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்
  **- சிறுபாணாற்றுப்படை**

**பண்டைத் தமிழர் திருமண முறை**

- பழந்தமிழர் வாழ்வு அகம், புறம், என இருதிறப்பட்டதாக இருந்தது. அக வாழ்வைப் பாடுவது அன்பின் ஐந்திணை எனப்பட்டது.

**இசைநூல்கள்**

- முதுநாரை, முதுகுருகு, பெருநாரை, பெருங்குருகு. பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு.
- சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணிஎம்
  முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே - **நற்றிணை**

**இல்லறம்**

- இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
  அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்மென
  **- நற்றிணை**

**பழந்தமிழகத்தில் கல்வி**

- பல்கேள்வித் துறை போகிய

சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடாகவும் பாண்டி நாட்டை முத்துடை நாடாகவும் பாடப்பகுதி காட்டுகிறது.

**இயல் எட்டு இந்திய இராணுவத்தில் தமிழர் பங்கு**

- இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள்.விடுதலைப் போராட்டத்தை ஒளி மங்காமல் பாதுகாத்தவர்களுள் ஒருவரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடன் இணைந்து இந்திய தேசிய இராணுவப் படையில் போராடிய தமிழர்களின் பங்கு வியந்து போற்றத்தக்கது.
- இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த 1942 ஆம் ஆண்டு பிபரவரி 15 ஆம் நாள் ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன.
- இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ) என்ற படையை உருவாக்கினர்.
- அக்காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்து மலேயா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பிழைப்பிற்காகச் சென்ற தமிழர் பலர் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தனர்.
- ஜப்பானியர்கள் ஒற்றர்படையில் இருந்த வீரர்களை, இந்தியாவில் உள்ள ஆங்கிலேய இராணுவத்தைப் பற்றி ஒற்றறிய நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவிற்கும் குஜராத்திற்கும் அனுப்பினர்.
- சிலரைத் தரைவழியில், பர்மாக் காடுகள் வழியாக இந்தியாவிற்கு அனுப்பினர்.
- இந்திய இராணுவம் அவர்களைக் கைது செய்து சென்னைச் சிறைக்கு அனுப்பியது. பலருக்கு மரணதண்டனை அளித்தது.

**தூண்களாகத் திகழ்ந்தவர்கள்**

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தில் பொறுப்பை ஏற்க 91 `நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார்.
- 1943 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 9 ஆம் தேதி பதவியேற்றார். அவர் உரையாற்றிய மாபெரும் கூட்டத்தில் "டெல்லி நோக்கிச் செல்லுங்கள் "(டெல்லி சலோ) எனப் போர்முழக்கம் செய்தார்.
- நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். - **பசும்பொன் முத்துராமலிங்கனார்.**
- தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.
- இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான்."இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.
- இந்திய தேசிய இராணுவத்தில் 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான் படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.
- யுத்தச் சூழலுக்கு நடுவில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் டோக்கியோ செல்வது ஒரு சவாலாக இருந்தது. பர்மாவில் இருந்து காட்டுவழியாகப் பயணம் செய்து சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து அங்கிருந்து படகு வழியாகத் தப்பிச் சென்று பழைய கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து முடிவில் ஜப்பானின் "கியூசு" தீவை அடைந்தனர். அந்தத் தீவு கடாற்படையின் வசம் இருந்தது அங்கே, கடற்படைக்கான பயிற்சிகள் நடைபெற்றன.
- காலை 5 மணிக்கு எழுந்து மூன்று மைல் தூரம் ஓட வேண்டும் அப்போது குளிர், பூஜ்யத்திற்குக் கீழ் இருக்கும், உதடுகள் வெடித்து வலி தாங்க முடியாது. பனிப்புகை படர்ந்த மைதானத்தில் ஒடுவார்கள். மூன்று மைல் தூரம் ஒடியதும் ஐந்து நிமிடங்கள், ஒய்வு, பிறகுதான் சிறப்புப் பயிற்சிகள். அதை முடித்துக் கொண்டு அவசரமாகக் குளித்துத் தயாராகி வர வேண்டும்.

**பெண்கள் படை உருவாக்கம்**

- இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி போன்றோர் விளங்கினர்.
- நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள்.
- சிறந்த தலைவர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினர்.
- அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள், அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன்

| | | | |
|---|---|---|---|
| | | தொடுத்தலும் மண்ணாசையுடன் வரும் பகையரசனோடு எதிர் நின்று போரிடுதலும் | உடையது |
| 3 | உழிஞை | பகை மன்னனின் கோட்டையை முற்றுகை இடுதலும் கோட்டையின் உள்ளிருக்கும் வேந்தன் காத்தலும், | எட்டுத் துறைகளை உடையது |
| 4 | தும்பை | தனது வலிமையை நம்பி வந்த மன்னனை எதிர்த்து வலிமையுடன் போரிடுதல் | பன்னிரண்டு துறைகளை உடையது |
| 5 | வாகை | போர்வீரம் மட்டுமல்லாமல் பல்வேறு ஒழுக்கங்களிலும் மற்றவரிலிருந்து மேம்பாடு மிக்கவராகத் தனித்து நிற்றல் | பதினெட்டுத் துறைகளை உடையது |
| 6 | காஞ்சி | நிலையாமையை உணர்த்துவது சிறப்புடைய வீட்டின்பம் காரணமாக பலவழிகளிலும் நிலையற்ற உலகில் பொருந்திய நல்ல நெறியினை மேற் கொள்ளுதல் | இருபது துறைகளை உடையது |
| 7 | பாடாண் | ஒருவர் பெற்ற கல்வி, புகழ், ஈகை, போன்ற மேம்பாடுகளைப் போற்றிப் பாடுதல் | பத்துத் துறைகளை உடையது |

**சுருக்கி வரைந்து பொருத்தமான தலைப்பிடுக**

- பெரியாரின் மனைவி நாகம்மையார் பகுத்தறிவு வாழ்க்கை நெறிக்குள் ஆட்படுத்தப்பட்ட தோடு அவருடன் இணைந்து பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டார். அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் தமிழ் மாநிலத்தின் முதல் பெண் சார்பாளராகத் (பிரதி நிதியாக) தேர்வாகிப் பங்கு பெற்றிருக்கிறார். இவரும் பெரியாருடைய தங்கை கண்ணம்மாவும் தென்னகத்தில் மதுவிலக்குப் போராட்டத்தை மகாத்மா காந்தியின் ஆணையையேற்று முன்னின்று நடத்தினர். அப்போதெல்லாம் கள்ளுக்கடைகள் ஊருக்கு வெளியே பெண்கள் போக முடியாதபடி அமைந்திருக்கும். அங்கேயே சென்று பெண்கள் மறியல் நடத்தியது. ஆங்கில ஆட்சியாளரை அதிர வைத்தது. காந்தியடிகளிடம் மதுவிலக்குப் போராட்டத்தைத் திரும்பப் பெறுமாறு கேட்ட போது மும்பையிலிருந்து அவர் சொன்னார். அது என் கையில் இல்லை ஈரோட்டிலிருக்கும் இரண்டு பெண்கள் கையில்தான் இருக்கிறது. என்று வைக்கம் போராட்டத்தில் பெரியார் சிறை பிடிக்கப்பட்ட பின் அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வைக்கம் சென்றார் அன்னையார். ஆண்களின் போராட்டத்தை எளிதாகக் கையாண்ட ஆங்கிலேய அரசு பெண்களின் இந்தப் போராட்டத்தைக் கண்டு திகைத்தது. பெரியாரின் அனைத்துப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்ததுடன் இயக்கத் தோழர்களை அன்புடன் அரவணைத்து அன்னமிட்ட அன்னையாகத் திகழ்ந்தார். குடியரசு இதழின் பதிப்பாளராகப் பணியாற்றினார்.

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| மற்போர் | Wrestling |
| இந்திய தேசிய இராணுவம் | Indian National Army |
| செம்மொழி இலக்கியம் | Classical Literature |
| நாட்டுப்புற இலக்கியம் | Folk Literature |

**அறிவை விரிவு செய்**

- தமிழர் உணவு - பக்தவச்சல பாரதி (தொ.ஆ)
- ஆகாயத்துக்கு அடுத்த வீடு - மு.மேத்தா
- தமிழ்ப் பழமொழிகள் - கி.வா. ஜகந்நாதன்

## இயல் ஒன்பது பெரியாரின் சிந்தனைகள்

**தந்தை பெரியார்**

- வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம், என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார்,.
- **பெரியார் எதிர்த்தவை**: இந்தித் திணிப்பு குலக்கல்வித் திட்டம் தேவதாசி முறை கள்ளுண்ணல் குழந்தைத் திருமணம் மணக்கொடை.

**எழுத்துச் சீர்திருத்தம்**

- உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும் 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார் (ஐயா- அய்யா. ஔவை - அவ்வை).
- பெரியாரின் இக்கருத்தின் சில கூறுகளை 1978 ஆம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

**பெண்கள் நலம்**

- வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும்

- வாயிலும் சன்னலும் - எண்ணும்மை
- லாவோட்சு, சீனாவில் பொ.ஆ.மு. 2ஆம் நூற்றண்டிற்கு முன் வாழ்ந்தவர். சீனஞானி கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர். அக்காலம் சீனச் சிந்தனையின் பொற்காலமாக இருந்தது. லாவோட்சு "தாவோவியம்" என்ற சிந்தனைப்பிரிவைச் சார்ந்தவர், ஒழுக்கத்தை மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார்/ லாவோட்சுவோ இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன் வைத்தார். தாவோவியம் அதையே வலியுறுத்துகிறது.

## இயல் ஒன்பது யசோதர காவியம்

### சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| அறம் | நற்செயல் |
| வெகுளி | சினம் |
| ஞானம் | அறிவு |
| விரதம் | மேற்கொண்ட நன்னெறி |

### இலக்கணக் குறிப்பு

- ஆக்குக,போக்குக,நோக்குக,காக்க - வியங்கோள் வினைமுற்றுகள்

### பகுபத உறுப்பிலக்கணம்

- **காக்க** = கா + க் + க
- **கா** - பகுதி
- **க்** - சந்தி
- **க** - வியங்கோள் வினைமுற்று விகுதி
- ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம், இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவப் பெற்றதாகும்; இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம், 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது; பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் குறிப்பிடப்படுகிறது.

## இயல் ஒன்பது மகனுக்கு எழுதிய கடிதம்

- கைப்பேசியின் வரவால் இன்று கடிதம் எழுதும் பழக்கம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். கடிதங்களைக் கொண்டு பல வரலாறுகளையும் இலக்கியங்களையும் பரிமாறியிருக்கிறார்கள். கடித வடிவில் புதினங்களும் எழுதப்பட்டுள்ளன. தாகூர் நேரு, டி.கே.சி. வல்லிக்கண்ணன், பேரறிஞர் அண்ணா, மு.வரதராசனார்.கு.அழகிரிசாமி. கி.இராஜ நாராயணன் முதலானோர் கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

## இயல் ஒன்பது யாப்பிலக்கணம்

- **சீர்:** ஈரசைச் சீர்களுக்கு, 'இயற்சீர்' ஆசிரிய உரிச்சீர்' என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### ஓரசைச் சீர்

| அசை | வாய்பாடு |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | ,மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

### ஈரசைச் சீர்

| அசை | வாய்பாடு | |
|---|---|---|
| நேர் நேர் | தேமா | மாச்சீர் |
| நிரை நேர் | புளிமா | |
| நிரை நிரை | கருவிளம் | விளச்சீர் |
| நேர் நிரை | கூவிளம் | |

### மூவகைச் சீர்

| காய்ச்சீர் | | கனிச்சீர் | |
|---|---|---|---|
| அசை | வாய்பாடு | அசை | வாய்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர்நேர் நிரை | தேமாங்கனி |
| நிரைநேர்நேர் | புளிமாங்காய் | நிரைநேர் நிரை | புளிமாங்கனி |
| நிரைநிரைநிரை | கருவிளங்காய் | நிரைநிரைநிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர்நிரை நிரை | கூவிளங்கனி |

- காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று அழைக்கிறோம்.

### தளை ஏழு வகைப்படும்

1) நேரொன்றாசிரியத்தளை - மா முன் நேர்
2) நிரையொன்றாசிரியத்தளை - விளம் முன் நிரை
3) இயற்சீர் வெண்டளை - மா முன் நிரை விளம் முன் நேர்
4) வெண்சீர் வெண்டளை - காய் முன் நேர்
5) கலித்தளை - காய் முன் நிரை
6) ஒன்றிய வஞ்சித்தளை - கனி முன் நிரை
7) ஒன்றா வஞ்சித்தளை - கனி முன் நேர்

- **அடி:** இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது அடி எனப்படும் அவை **ஐந்து** வகைப்படும்.
- இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி; மூன்று சீர்களைக் கொண்டது சிந்தடி; நான்கு சீர்களைக் கொண்டது அளவடி; ஐந்து சீர்களைக் கொண்டது நெடிலடி; ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது கழிநெடிலடி.

RADIAN IAS ACADEMY

**3)** பிரான்சு - 1970 பாரீசு

**4)** இலங்கை - 1974 யாழ்ப்பாணம்

**5)** இந்தியா - 1981 மதுரை

**6)** மலேசியா - 1987 கோலாலம்பூர்

**7)** மொரீசியசு - 1989 மொரீசியசு

**8)** இந்தியா - தஞ்சாவூர்

**9)** செம்மொழி மாநாடு 2010 இல் கோவையில் நடைபெற்றது.

- பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு உரை கண்ட **பரிப்பெருமாள்** பின்வருமாறு கூறியுள்ளார். "பண்புடைமையாவது யாவர்மாட்டும் அவரோடு அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழி நாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை.

**ஒவ்வொருவரும் சான்றோர் ஆகலாம்**

- தமிழ் மக்கள் "சான்றோன்" எனப்படும் குறிக்கோள் மாந்தனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் "Sapens" (அறிவுடையோன்) எனப்படும் இலட்சிய புருஷனைப் போற்றி வந்தனர்.
- உரோமையருடைய சான்றோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர்.
- பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனுக்குக் கூறியது போலத் தமிழ்ச் சான்றோர் பலர் வாழும் ஊரே வாழ்க்கைக்கு இன்பத்தைத் தருவதாகும் (புறம் 191)

**ஒன்றே உலகம்**

- **ஊரோம நாட்டுச் சிந்தனையாளர்களும்** ஏறத்தாழத் தமிழ்ப் புலவர்களைப் போல அதே காலத்தில் ஒன்றே உலகம் என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர்.
- ஸ்டாயிக்வாதிகள் உலகில் ஒற்றுமை உண்டு, ஒன்றே உலகம் என்ற மனப்பான்மையும் கொள்கையும் முதன் முதல் மேலை நாட்டில் ஸ்டாயிக்வாதிகளால் போற்றப்பட்டது.
- **செனக்கா** என்னும் தத்துவ ஞானி கூறியதாவது.எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு என்றும், நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்.
- **மார்க்ஸ் அரேலியஸ்** என்னும் பேரரசர் கூறியதாவது;

"நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோ நீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்" இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத்தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

- மக்கள் அனைவரும் மக்கட்தன்மையே வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள்.
- **ஜி.யு.போப்** திருவள்ளுவரை "உலகப் புலவர்" என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும்.
- தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவப் பெரியார்களுள் தனிநாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவர். அடிகளாரின் சொற்பொழிவுகள் தமிழர் புகழைப் பரப்பும் குறிக்கோளைக் கொண்டவை. இலங்கையில் யாழ் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய பஸ்கர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு பாடமாக இடம்பெற்றுள்ளது. தம் சொற்பொழிவு வாயிலாக உலகம் முழுக்கத் தமிழின் புகழைப் பரப்பினார். அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாகவும் இவர் காரணமாக இருந்தார். இவர் தொடங்கிய தமிழ்ப் புத்தாண்டு என்ற இதழ் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது.

**இயல் பத்து அக்கறை**

- உரைநடையில் கவிதை எழுதுவதைப் பாரதி தம் வசனக் கவிதைகளின் வழியாகத் தொடங்கினார், அவற்றின் தொடர்ச்சியான கவிதைகளே புதுக்கவிதைகள். அவ்வகையில் புதுக்கவிதையின் வரலாறு நூறு ஆண்டுகளை எட்டுகிறது எனலாம், புதுக்கவிதைகள் மனித நேயத்தை வலியுறுத்து வனவாக இருக்கின்றன. பரபரப்பான இந்நூற்றாண்டு வாழ்வின் நெருக்கடியில் மனிதம் நசுங்கிவிடக்கூடாது என்பதைப் புதுக்கவிதை களின் வாயிலாகக் கவிஞர் பலர் பல பரிமாணங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கல்யாண்ஜியின் கவிதைகளிலும் மனிதம் பரவலாக வலியுறுத்தப்படுகிறது.

**இலக்கணக் குறிப்பு**

- **உருண்டது, போனது** - ஒன்றல் பால் வினைமுற்றுகள்
- **சரிந்து** - வினையெச்சம்
- அனைவரும் - முற்றும்மை

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **சரிந்து** = சரி + த் (ந்) + த் + உ
- **சரி** - பகுதி
- **த்** - சந்தி (ந் ஆனது விகாரம்)
- **த்** - இறந்த கால இடைநிலை
- **உ** - வினையெச்ச விகுதி
- **கல்யாண்ஜியின் இயற்பெயர் கல்யாணசுந்தரம்**; சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் எனத் தொடர்ந்து எழுதி வருபவர், வண்ணதாசன் என்ற

| உருவக அணி | Metaphor |
|---|---|

- சிற்பியின் மகள் - பூவண்ணன்
- அப்பா சிறுவனாக இருந்தபோது - அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில். நா.முகமது செரீபு)

## 9வது தமிழ் பாடத்தின் முக்கிய குறிப்புகள்

### வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசர ணாங்களே.

**சொற்பொருள்:** உளவாக்கல் – உண்டாக்குதல், (படைத்தல்) நிலை பெறுத்தல் – காத்தல், நீக்கல் – அழித்தல், நீங்கலா - இடைவிடாது, அலகிலா – அளவற்ற, அன்னவர் – அத்தகைய இறைவர், தலைவர் - இறைவர்.
சரண் – அடைக்கலம்.

**இலக்கணக்குறிப்பு :** யாவையும் – உம் – முற்றும்மை

ஆக்கல், நீக்கல், விளையாட்டு – தொழிற் பெயர்கள்

அலகிலா விளையாட்டு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்:** உடையார் – உடை + ய் + ஆர், உடை – பகுதி, ய் – சந்தி, ஆர் – பலர் பால் வினைமுற்று விகுதி.

**ஆசிரியர் பெயர் :** கம்பர்

**ஆசிரியர் குறிப்பு:-** நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூரில் கம்பர் பிறந்தார்.

- ✓ கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
- ✓ குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவராக விளங்கினார்.
- ✓ திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார்.
- ✓ கவிச்சக்கரவர்த்தி எனவும் கல்வியில் பெரியர் கம்பர் எனவும் போற்றப்படுகிறார்.
- ✓ இவரின் காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

**நூற்குறிப்பு:** வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைக் தழுவித் தமிழில் கம்பர் எழுதியதே கம்பராமாயணம்.

- ✓ கம்பர், இந்நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார்.
- ✓ இது பாலகாண்டம், அயோத்தியகாண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களை உடையது.

### திருக்குறள்

**சொற்பொருள்:** அகழ்வாரை – தோண்டுபவரை
இகழ்வார் - இழிவுபடுத்துவோர்
தலை – சிறந்த பண்பு
பொறுத்தல் – பொறுத்துக்கொள்ளுதல்
இறப்பினை – பிறர் செய்த துன்பத்தை
இன்மை – வறுமை
விருந்து – வீட்டுக்குப் புதியவராய் வந்தவர்
ஒரால் – தவிர்த்தல், நீக்குதல்
மடவார் – அறிவிலிகள்
நிறை – சால்பு
ஒறுத்தாரை – தண்டித்தவரை
ஒன்றாக – ஒரு பொருட்டாக
பொதிந்து வைப்பர் – (மனத்துள்) வைத்துக்கொள்வர்
பொன்றும் – உலகம் அழியும்வரை
திறனல்ல – செய்யத்தகாத
நோநொந்து – துன்பத்திற்கு வருந்தி
மிகுதியான் – மனச்செருக்கால்
மிக்கவை – தீமை(தீங்குகள்)
தகுதியான் – பொறுமையால்.
துறந்தார் – பற்றினை விட்டவர் , பற்றற்றவர்
இறந்தார் – நெறியை கடந்தவர்
இன்னா – தீய
நோற்கிற்பவர் – பொறுப்பவர்
நோற்பார் – நோன்பு மேற்கொள்பவர்
இன்னாச்சொல் – தீய சொல்(இனிமையற்ற சொல் )

**இலக்கணக்குறிப்பு :**
பொறுத்தல் – தொழிற்பெயர்
அகழ்வார், இகழ்வார் – வினையாலணையும் பெயர்கள்
மறத்தல், பொறுத்தல் – தொழிற்பெயர்கள்
நன்று – குறிப்பு வினைமுற்று
விருந்து – பண்பாகு பெயர்
ஒரால் , பொறை – தொழிற்பெயர்கள்
நீங்காமை – எதிர்மறைத் தொழிற்பெயர்
போற்றி – வினையெச்சம்
பொதிந்து – வினையெச்சம்
ஒறுத்தார், பொறுத்தார் – வினையாலணையும் பெயர்கள்.
தற்பிறர் – ஏழாம் வேற்றுமைத் தொகை
செய்யினும் - இழிவுச்சிறப்பும்மை
நொந்து – வினையெச்சம்
அறன், திறன் - ஈற்றுப்போலிகள்
செய்தாரை – வினையாலணையும் பெயர்
விடல் – அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர் – வினையாலணையும் பெயர்கள்
இன்னாச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
உண்ணாது – வினையெச்சம்

RADIAN IAS ACADEMY

(Tamilian) அல்லது தமுலிக் என்று வழங்கினர். அவற்றுள் தமிழ், மிகுந்த சிறப்பும் பழைமையும் வாய்ந்தது.

- ✓ பல திராவிட மொழிகளுள் அதனையும் ஒன்றாகக் கொண்டனர். ஆகவே, இவ்வின மொழிகள் அனைத்தையும் இணைத்துத் திராவிட என்னும் சொல்லைத் தாம் கையாண்டதாகக் கால்டுவெல் கூறியுள்ளார்.
- ✓ திராவிட மொழிகளுள் தமிழுக்குரிய இடம் திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானதாகும்.
- ✓ தமிழ் திரமிள திரவிட திராவிட என உருவாயிற்று எனக் கூறுகிறார் மொழியியல் அறிஞர் ஈராஸ் பாதிரியார். திராவிட மொழி என்றாலே தமிழ்மொழியையேகுறிக்கும்.
- ✓ திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையான, பண்பட்ட மொழி தமிழே. திராவிட மொழிகளுள் மூலத் திராவிட மொழியின் வடிவத்தையும் மொழிக்கூறுகளையும் வேர்களையும் பெருமாளவில் கொண்டுள்ள மொழி தமிழே.
- ✓ ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழ்மொழி வழங்கி வருவதாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.
- ✓ தமிழ்மொழியில் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழைமையான நூல் தொல்காப்பியம்.
- ✓ இந்நூல் ஓர் இலக்கண நூலாகத் திகழ்வதால், இந்நூலுக்கு முன்பே பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு.
- ✓ திராவிட மொழிகள் மூலமான மொழியை, முன்னைத் திராவிட மொழி, மூலத் திராவிட மொழியே தமிழ்மொழி.
- ✓ எண்பது விழுக்காடு அளவிற்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி, தமிழ்.
- ✓ தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே செவ்வியல் மொழி எனப்படும்.
- ✓ செம்மொழிக்கான (Classical Language) கூறுகளாகவும் கருதப்படுகின்றன.

**எழுத்து**

- ✓ மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது மொழி. ஒருவர், தம் கருத்தை வெளியிடவும், அதனைக் கேட்போர் புரிந்து கொள்ளவும் கருவியாக அமைவதும் மொழியே.
- ✓ அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும் கேட்கவும் கற்கவும் எழுதவும் துணை செய்வது இலக்கணம் ஆகும். தமிழிலக்கணம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐவகைப்படும்.
- ✓ எழுத்துக்களின் வகை எழுத்து முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

**முதலெழுத்துக்கள் :** அ முதல் ஔ வரை உள்ள உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகளாகும்.

- ✓ சார்பு எழுத்துக்கள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதால் முதல் எழுத்துக்கள் எனப்படும்.

**சார்பெழுத்துக்கள்** முதல் எழுத்துக்களை சார்ந்து இயங்கும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனப்படும்.

- ✓ இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம் , மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும்.
- ✓ செய்யுளில் ஓசை குறையும்போது ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதை அளபெடை என்கிறோம்.
- ✓ அளபு - மாத்திரை. எடை – எடுத்தல் என்பது பொருள் எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல். அளபெடை இரண்டு வகைப்படும். முதலாவது உயிரளபெடை, இரண்டாவது ஒற்றளபெடை.

**உயிரளபெடை** செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இ∴து, உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் அதன் பக்கத்தில் வரும் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இன எழுத்தாக வரும்.

- ✓ இவ்வுயிரளபெடை மூவகைப்படும்.
- ✓ அவை செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.
- ✓ செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடையைச் **செய்யுளிசை அளபெடை** என்பர்.
- ✓ ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை **இன்னிசை அளபெடை** என்பர்.
- ✓ இவ்விரண்டும் அல்லாமல் ஒரு சொல் மற்றொரு சொல்லாகப் பொருள்படவரும் அளபெடை **சொல்லிசை அளபெடை** யாகும்.
- ✓ செய்யுளில் ஓசை குறையும் இடத்தில் அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், தமக்கு இனமாகிய குறில் எழுத்துகளைப் பெற்று உரிய மாத்திரையிலிருந்து மிகுந்தொலிக்கும். இதனையே செய்யுளிசை அளபெடை எனக் கூறுவர்.

> கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
> விடாஅர் விழையும் உலகு.

- ✓ கெடா என்பது கெடாஅ என இறுதியிலும் விடார் என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்து

- ✓ ப், ம் – மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த இவை தோன்றும்.
- ✓ ய் - இது நாக்கினது அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகிறது.
- ✓ ர், ழ் - இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.
- ✓ ல் - இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவினது ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.
- ✓ ள் - இது மேல்வாயை நாவினது ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது
- ✓ வ் - இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.
- ✓ ற், ன் - இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

**சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு**

- ✓ ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.
- ✓ அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும்.
- ✓ பிற சார்பெழுத்துகள் யாவும், தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தினையும் அவை பிறத்தற்குறிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

**தமிழ் சொல்லறிவோம்**

| | | |
|---|---|---|
| சுவிட்ச் | - | பொத்தான் |
| பிரிஜ் | - | குளிர்பதனப்பெட்டி |
| ஐஸ்வாட்டர் | - | குளிர்நீர் |
| டீ | - | தேநீர் |
| கூல்ட்ரிங்ஸ் | - | குளிர்பானம் |
| வாஷிங்மெஷின் | - | சலவை இயந்திரம் |
| கிரைண்டர் | - | மின் அரைவை |
| டெலிபோன் | - | தொலைபேசி |

**உன்னையே நீ அறிவாய் – சாக்ரடீஸ்**

**இணையான தமிழ்ப் பழமொழி**

1. Bend the tree while it is young.
   ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
2. As is the mother so is her daughter
   தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போல சேலை.
3. A friend in need is a friend indeed.
   உயிர்காப்பான் தோழன்
4. A man of courage never wants weapons
   வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
5. Blood is thicker than water.
   தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

## சிறுபஞ்சமூலம் - காரியாசான்

**சொற்பொருள் :**

கண்ணோட்டம் - இரக்கம் கொள்ளுதல்

எண்வனப்பு - ஆராய்ச்சிக்கு அழகு

வனப்பு - அழகு

கிளர்வேந்தன் – புகழுக்கு உரிய அரசன்

வாட்டான் – வருத்தமாட்டான்

**இலக்கணக்குறிப்பு:**

கண்ணோட்டம், சொல்லாமை , வரைத்தல், என்றால் – தொழிற்பெயர்கள்

கேட்டார், வாட்டான் – வினையாலணையும் பெயர்கள்

**பகுபத உறுப்பிலக்கணம் :** கேட்டார் – கேள் (ட்) + ட் + ஆர். கேள் – பகுதி, ள் – ட் ஆனது விகாரம், ட் - இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**ஆசிரியர் குறிப்பு :** மதுரைத் தமிழாசிரியர்மாக்காயனாரின் மாணவர் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது.

- ✓ சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- ✓ இவரும் கணிமேதாவியாரும் ஒருசாலை மாணாக்கராவர்.
- ✓ பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**நூற்குறிப்பு:** சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

- ✓ இந்நூலில், கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றேழு வெண்பாக்கள் உள்ளன
- ✓ கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல்நோயைத் தீர்ப்பன.
- ✓ இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்துகளும் மக்கள் மனநோயைப் போக்குவன. ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.

## பாஞ்சாலி சபதம்

**சொற்பொருள் :**

எம்பி – என் தம்பி

மடப்பிடி - - பாஞ்சாலி

களிக்க – மகிழ

கோமான் – அரசன் (திருதராட்டிரன்)

நுந்தை – நும் தந்தை

அடவி – காடு

தடந்தோள் – வலியதோள்

மணிநகர் – அழகிய நகரம்

மருங்கு – பக்கம்

கோலமுறு – அழகுமிக்க

செறிந்து – அடர்ந்து

கா – காடு

குலவு - விளங்கும்

ஞாலம் – உலகம்

பண்ணவர் – தேவர்

அரம்பையர் – தேவமகளிர்

ஞானம் – அறிவு, புன்மை - இழிந்த தன்மை

வீறு – வலிமை

சதுரங்கச்சேனை – நால்வகைப் படைகள்

மதுரமொழி - இனிய மொழி

RADIAN IAS ACADEMY

✓ எனத் தொழிலும் தமிழும் வளம்பெற வேண்டுமென விரும்பினார்.

✓ விடுதலை இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் நாமக்கல் கவிஞர்.

✓ இவரது கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன.

✓ தமிழரின் சிறப்பையும் தமிழ்மொழியின் இனிமையையும் சேர்த்துப் பாடினார்.

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்.

✓ சமுதாயத்தின்மீது அக்கறையுள்ள அவர், பின்வருமாறு பாடியுள்ளார்.

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டாம்

✓ வாழ்ககை சிறக்க ஒவ்வொருவரும் ஒரு தொழிலையாவது கற்றுக்கொள்வது நல்லது என வலியுறுத்தும் நாமக்கல்லாரின் கவிதை பின்வருமாறு

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.

✓ புலவர் குழந்தை, முடியரசன் முதலியோர் கவிதைகளில் பகுத்தறிவு நோக்கும் முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும் இலங்கக் காணலாம்.

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடை மனப்போக்கர் வாழும்நாட்டில்
தென்படுமோ? மொழியுணர்ச்சி?

✓ இவ்வரிகள் முடியரசனின் தணியாத தண்டமிழ்க் காதலை வலியுறுத்தும். சுரதாவின் கவிதைகளில் புதிய உவமைகளைக் காணலாம். அதனால், அவர் உவமைக் கவிஞர் என்னும் சிறப்பினைப் பெற்றார்.

முல்லைக்கோர் காடு போலும்
முத்துக்கோர் கடலே போலும்
சொல்லுக்கோர் கீரன் போலும்
தூதுக்கோர் தென்றல் போலும்
கல்விக்கோர் கம்பன் போலும்
கவிதைக்கோர் பரணர் போலும்
வில்லுக்கோர் ஓரிபோலும்
விளங்கினார், வென்றார், நின்றார்.

✓ இவ்வாறு சுரா, மறைமலையடிகளாரை உவமைகளால் பாராட்டியுள்ளார்.

✓ பாரதிதாசனைத் தொடர்ந்து இயற்கையின் அழகை எழிலுறப் படம்பிடித்துக் காட்டுவதில் வாணிதாசன் கவிதைகள் சிறந்து விளங்குகின்றன. சுத்தானந்த பாரதியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், தமிழ்ஒளி என எண்ணற்றோர் மரபுக் கவிதைகள் புனைந்து தமிழன்னைக்கு மேலும் வளமும் பெருமையும் சேர்த்துள்ளனர்.

**புதுக்கவிதை**

✓ அமெரிக்கக்கவிஞர் வால்ட்விட்மனின் சாயலில் பாரதியார் வசன கவிதை எழுதினார்.

✓ பாரதிதாசனின் உரைநடைகள் அனைத்தும் கவிதைநடை கொண்டவை.

✓ புதிய ஆங்கிலக் கவிதைகளைப் படித்த தமிழரது சிந்தனையில் புதுக்கவிதைகள் மலர்ந்து மணம் பரப்பின.

✓ ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.இராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன் முதலியோர் தொடக்கத்தில் மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதை எழுதினார்.

✓ பின்னர் எஸ்.வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு.செல்லப்பா முதலியோர் எழுத்து என்னும் இதழில் புதுக்கவிதைகளைப் படைத்தனர்.

✓ இதற்கடுத்த நிலையில் நா.காமராசன், மீரா (மீ.இராசேந்திரன்), சிற்பி பாலசுப்பிரமணியன், வாலி, இன்குலாப், மு.மேத்தா, வைரமுத்து, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன் முதலிய கவிஞரும், புதுக்கவிதை பாடுவதில் ஈடுபட்டுப் பெருவெற்றி பெற்றனர். கோவை வானம்பாடிக் குழுவினர் புதுக்கவிதையைப் பரவலாக்கப் பாடுபட்டனர்.

✓ புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிப்புத்திரன், சக்திக்கனல், இரவீந்திரன், ஞானி, பா. செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ.ராஜாராம் என வளரும் பெரும்பட்டியலைக் கொண்டது வானம்பாடி இயக்கம்.

✓ இவர்களது வருகைக்குப் பின்னர்ப் புதுக்கவிதை சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் ஓர் இலக்கிய வகையாகச் சிறப்புற்றது. புதுக்கவிதை வளர்ச்சியில் வல்லிக்கண்ணன் பங்கு போற்றத்தக்கது.

ஏழையின் குடிசையில்
அடுப்பும் விளக்கும் தவிர
எல்லாமே எரிகின்றன.

உச்சிமலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது
ஒற்றுமை யில்லா மனிதகுலம்
உயர்வு தாழ்வு வள்ர்க்குது -
**பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்**

## கண்ணதாசன் கவியின்பம்

✓ இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையைப் பதித்தவர் கவியரசு கண்ணதாசன்.

✓ எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றிய பெருமை கண்ணதாசனுக்கு உண்டு.

**தமிழுணர்வு**

செந்தமிழ்ச் சொல்லெடுத்து
இசை தொடுப்பேன் – வண்ணச்
சந்தத்திலே கவிதைச் சரம்தொடுப்பேன்

✓ எனத் தமிழ்க்கவிதை எழுதத் தொடங்கித் தமிழ்த்தாயின் மீது கொண்ட பற்றினால்,

கதிர்வெடித்துப் பிழம்புவிழக்
கடல்கொதித்துச் சூடேற்ற
முதுமைமிகு நிலப்பரப்பில்

RADIAN IAS ACADEMY

10. **உவமையாகு பெயர் :** ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல் இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைப்போன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகிவந்தது. அதனால், இ∴து உவமையாகு பெயராயிற்று.

இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும் – **மனோன்மணியம் பெ. சுந்தரனார்**

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்த பொலிவாகும் – சீருற்ற
செல்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம். – **காளமேகப் புலவர்**

1. Crying child will get milk.
   அழுத பிள்ளை பால் குடிக்கும்
2. Make hay while the sunshines.
   காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
3. The childhood shows the man.
   விளையும் பயிர் முளையிலேயே தெரியும்
4. All is well that ends well.
   முதற்கோணல் முற்றிலும் கோணம்
5. A Good marksman may miss.
   ஆனைக்கும் அடி சறுக்கும்.

## புறநானூறு

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**செல்வத்துப் பயனே ஈதல்** – மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

**சொற்பொருள் :** நிழற்றிய – நிழல் செய்த, நடுநாள் யாமம் – நள்ளிரவு, துஞ்சான் – துயிலான், மா – விலங்கு, கல்லா – கல்வியறிவில்லாத, நாழி – அளவுப்பெயர், ஈதல் – கொடுத்தல், துய்ப்பேம் – நுகர்வோம், தப்புந - இழக்க.

**இலக்கணக்குறிப்பு:** வெண்குடை – பண்புத்தொகை, கல்லா ஒருவற்கும் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்,
நாழி – ஆகுபெயர், ஈதல் – தொழிற்பெயர், துய்ப்போம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

**பகுபத உறுப்பிலக்கணம் :** துஞ்சான் – துஞ்சு + (ஆ) + ஆன். துஞ்சு – பகுதி, (ஆ – எதிர்மறை இடைநிலை ஆ – மறைந்தது), ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி, ஈதல் - ஈ + தல், ஈ - பகுதி, தல் – தொழிற்பெயர் விகுதி, ஏம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

**ஆசிரியர் குறிப்பு:** மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

- ✓ இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்.
- ✓ பத்துப்பாட்டுகள் திருமுருகாற்றுப்படையையும், நெடுநல்வாடையையும் இயற்றியவர்.
- ✓ இப்பாடலில் இவர், உலகியல் உண்மையைக் கூறியுள்ளார்.

**நூற்குறிப்பு:** புறநானூறு = புறம் + நான்கு+ நூறு, புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதனால் புறநானூறு எனப் பெயர் பெற்றது.

- ✓ புறம் என்பது ஒருவரின் வீரம், கொடை, கல்வி முதலிய சிறப்புகளைக் குறிக்கும்.
- ✓ இ∴து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- ✓ இந்நூலிலுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றவை.
- ✓ இப்பாடல்கள் வாயிலாகப ்பண்டைத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, வீரம், கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம்.
- ✓ இந்நூலின் சில பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

## குறுந்தொகை

**சொற்பொருள் :** நீர் – கடல், கருங்கோல் – கருமை நிறமுடைய கொம்பு, உயர்ந்தன்று – உயர்ந்தது,
அளவின்று – அளவினையுடையது.

**இலக்கணக்குறிப்பு :** நிலத்தினும், வானினும், நீரினும் – உயர்வுச்சிறப்பும்மைகள், கருங்கோல்
பெருந்தேன் –பண்புதொகைகள்

**பிரித்தறிதல் :** ஆரளவு = அருமை + அளவு, கருங்கோல் = கருமை + கோல் , பெருந்தேன் = பெருமை + தேன்.

**நூற்குறிப்பு:** குறுமை + தொகை = குறுந்தொகை. குறைந்த அடிவளவால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை.

- ✓ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- ✓ கடவுள் வாழ்த்துடன் நானூற்றொரு பாடல்கள் உள்ளன.
- ✓ அகப்பொருள் பற்றிய பாடல்களைப் பல்வேறு காலங்களில் வாழ்த்துடன் நானூற்றொரு பாடல்கள் உள்ளன.
- ✓ அகப்பொருள் பற்றிய பாடல்களைப் பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்கள் பாடியுள்ளார்கள்.
- ✓ இப்பாடல்கள் குறைந்த அளவாக நான்கடிகளையும் அதிக அளவாக எட்டு அடிகளையும் கொண்டிருக்கின்றன.
- ✓ இந்நலைத் தொகுத்தவர் பூரிக்கோ.

RADIAN IAS ACADEMY

- ✓ கெலன் கெல்லரின் கண்கள் பாரா, காதுகள் கேளா, வாய் பேசாது. பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்தபோது ஏற்பட்ட கொடிய நோயானது, அவரது மூன்று புலனையும் பறித்துக்கொண்டது. ஆறு வயதானபோது அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியால் பெர்கின்ஸ் பள்ளியில் சேர்ந்தார்.
- ✓ அங்குப் பணிபுரிந்த அன்னிசலிவான் என்பவர் கெலனுக்கு ஆசிரியராக வாய்த்தார்.
- ✓ மூன்று புலனற்றவர் என்பது தெரிந்தும், ஆசிரியர் அன்னி, தன்னம்பிக்கையுடன் அவருக்குக் கற்பிக்கத் தொடங்கினார். அவர், முதலில் பொருள்களின் பெயரை ஒவ்வொர் எழுத்தாகக் கெலனின் உள்ளங்கையில் தம் விரல்களால் எழுதிக் கற்பித்தார். கெலனும் அன்னியின் குரல்வளையின்மீது கைவைத்து ஒலி அதிர்வுகளின்மூலம் எழுத்துகளையும் சொற்களையும் அறிந்து கொண்டார். அதன்பின் பாஸ்டனில் உள்ள ஹோரஸ்மான் காதுகேளாதோருக்கான பள்ளியிலும், நியூயார்க்கில் உள்ள ரைட் ஹுமாசன் பள்ளியிலும் முறைப்படி பயின்றார்.
- ✓ பெர்கின்ஸ் பள்ளி பார்வையற்றோருக்கான பள்ளி அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் அமைந்துள்ளது. கெலன், பிரெய்லி முறையில் எழுதவும் படிக்கவும் கற்றார். ஆசிரியை அன்னி அளித்த பயிற்சியின் பயனாக, கேம்பிரிட்ஜ் ரெட் கிளி∴ப் கல்லூரி நுழைவுத் தேர்வில் வெற்றிபெற்று, இளங்கலைப்பட்ட வகுப்பில் சேர்ந்தார், பட்டமும் பெற்றார். இத்தகைய மாற்றுத்திறனாளர்களுள் முதன் முதலில் பட்டம் பெற்றவர் இவரே. போர்களை எதிர்த்து உலக நாடுகள் பலவற்றிற்கும் சுற்றுப்பயணம் செய்தார்.
- ✓ கெலன், தனது வாழ்நாளைக் கண்ணிழந்தோர் மற்றும் காதுகேளாதோர்க்காகச் செலவிட்டார்.
- ✓ கெலன் கெல்லர் நிதி என ஒன்றனைத் தொடங்கி, அதில் சேர்ந்த தொகையான ரூபாய் ஒன்றரைக் கோடியை அப்பள்ளிகளுக்கு வழங்கினார். பார்வையற்றோருக்கெனத் தேசிய நூலகம் ஒன்றனை உருவாக்கி, உலகம் முழுவதிலும் இருந்து நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தார். தன்னைப்போல அவர்களும் மீட்சி பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் தன் எண்பத்தெட்டு வயதுவரை அயராது உழைத்தார்.
- ✓ **வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை, ஒன்றுபோனால், இன்னொன்று வரும்.** அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது. ஆசிரியர் அன்னி 1930 ஆம் ஆண்டு இறந்துவிடத் தனது மொழிபெயர்ப்பாளர் பாலி தாம்சன் என்பாரின் உதவியுடன் வாழ்ந்து வரலானார், ஜப்பான் முதலான நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.
- ✓ கெலன், வாஷிங்டன் நகரின் புகழ்பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார். ஒருநாள் இரவு கெலன் கெல்லர், கடவுளின் அருளால் மூன்று நாள் மட்டுமே தமக்குப் பார்வை கிட்டியதாகக் கனவு கண்டார். அதற்கே அவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். முதல் நாள், கண்ணொளி கிடைத்ததும் முதன்முதலில் பார்த்தது, அவரின் கல்விக்கண் திறந்து வைத்த ஆசிரியரின் முகத்தையே. பெருநகரப் பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றார். அங்கு இடம் பெற்றிருந்த புகழ்பெற்ற கலைஞர்கள், லியனார் டோ டாவின்சி முதலானோர் ஓவியங்களையும் கலைப்பொருள்களையும் கண்டுமகிழ்நதார். பிறகு, கெலன், சேக்ஸ்பியருடைய நாடகமொன்றைப் பார்த்தார்.
- ✓ 1880 சூன் 27இல் அமெரிக்காவிலுள்ள அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பியாவில் பிறந்து, சாதனையாளராகத் திகழ்ந்த கெலன், 1968 ஆம் ஆண்டு சூன் முதல்நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடல் வாஷிங்டனில் அன்னி, பாலி ஆகியோரது உடல்களுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர், உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெறுகிறார். பார்வையற்றோருக்கான எழுத்துமுறையை உருவாக்கியவர் – பிரெய்லி.

## பெயர்ச்சொல்

### தொழிற்பெயர்

மாதவி ஆடல் கண்டு கோவலன் மகிழ்ந்தான்.

மாதவி,கோவலன் - இவை பெயர்ச்சொற்கள்,

கண்டு, மகிழ்ந்தான் - இவை வினைச்சொற்கள்

ஆடல் – என்பது தொழிற் பெயர்.

ஆடல் – என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிப்பதனால், அது தொழிற்பெயர் எனப்பட்டது. ஆடு + அல் = ஆடல், அல் – என்பது தொழிற் பெயர் விகுதி. இவ்வாறு தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள். தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்பன.

**வினைப்பகுதியோடு மேற்குறித்த விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும்.**

| | | |
|---|---|---|
| (எ-டு) பெறுதல் | - | பெறு + தல் |
| கோடல் | - | கோடு + அல் |
| ஆட்டம் | - | ஆடு + அம் |
| வாழ்க்கை | - | வாழ் + கை |
| பறவை | - | பற + வை |
| புளிப்பு | - | புளி + பு |
| போக்கு | - | போ + கு |
| வரவு | - | வர + உ |
| தோற்றரவு | - | தோற்று + அரவு |
| கோட்பாடு | - | கோள் + பாடு |
| பாய்த்து | - | பாய் + து |
| கேளானை | - | கேள் + ஆனை |

**தொழிற்பெயர் வகைகள்**

- ✓ தொழிற்பெயர் இருவகைப்படும். 1. முதனிலைத் தொழிற்பெயர், 2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**1. முதனிலைத் தொழிற்பெயர்**

- ✓ தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப் பெயர்.

RADIAN IAS ACADEMY

5. நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது, நுங்கள், உங்கள் என மாறுபடும்..

✓ நுங்களை, நுங்களால், நுங்களுக்கு, நுங்களின், நுங்களது.

✓ உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது.

**படர்க்கைப் பெயர்கள்**

✓ தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது கீழ்காணுமாறு திரியும்.

6. தான் என்னும் படர்க்கை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபேற்கும்போது,தன் என மாறும்.

| | |
|---|---|
| ஐ | தன்னை |
| ஆல் | தன்னால் |
| கு | தனக்கு |
| இன் | தன்னின் |
| அது | தனது |
| கண் | தன்கண் |

1. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் தம் எனத் திரிந்து வேற்றுமை உருபேற்கும்.

✓ தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தங்கண்.

2. தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர் தங்கள் எனத் திரியும்.

✓ தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கண்

**தொகைச்சொற்களை விரித்தெழுதல்.**

(எ-டு) ஐந்திணை என்னும் சொல் குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை என்னும் ஐந்துதிணைகளின் தொகுப்பு.

1. முக்கனி - மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி.
2. நாற்படை - தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.
3. ஐந்திலக்கணம் - எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம்.
4. அறுசுவை - இனிப்புச்சுவை, கசப்புச்சுவை, புளிப்புச்சுவை, உவர்ப்புச்சுவை, கார்ப்புச்சுவை, துவர்ப்புச்சுவை

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன். – **வள்ளலார்**

1. In fiddler's house all are dancers.
கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.
2. No man can flay a stone.
கல்லிலே நார் உரிக்க முடியுமா?
3. Difficulties give way to diligence.
கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
4. Command your man and do it yourself.
வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்.
5. Charity is a double bessing.
தருமம் தலை காக்கும்.

## திருக்குறள் - கேள்வி

## (சான்றோர் உரைகளைக் கேட்டல்)

**சொற்பொருள் :** செவிச்செல்வம் – கேள்விச்செல்வம்,

தலை – முதன்மை

அவி உணவு - தேவர்களுக்கு வேள்வியின்பொழுது கொடுக்கப்படும் உணவு

ஆன்றோர் – கல்வி, கேள்வி, பண்பு ஆகியவற்றில் சிறந்தோர்

ஒப்பர் – ஒப்பாவர்

ஒற்கம் – தளர்ச்சி

ஊற்று – ஊன்றுகோல்

ஊற்றுக்கோல் – ஊன்றுகோல்,

அற்றே – போன்றதே

எனைத்தானும் – எவ்வளவு சிறிதே ஆயினும்

அனைத்தானும் – கேட்ட அளவிற்கு

ஆன்ற – நிறைந்த

பிழைத்துணர்ந்தும் – தவறாக உணர்ந்திருந்தாலும்

பேதைமை – அறியாமையின் பாற்பட்ட தீயசொற்கள்

இழைத்துணர்ந்து – நுட்பமாக ஆராய்ந்து

ஈண்டிய – ஆய்ந்தறிந்த

தகையவே – தன்மையதே

தோட்கப்படாத – துளைக்கப்படாத

நுணங்கிய – நுட்பமாகிய

வணங்கிய – பணிவான

வாயினராதல் – மொழியினை உடையவர்

வாயுணர்வின் மாக்கள் – உணவுச்சுவை மட்டும் அறிந்தோர்

அவியினும் - இறந்தாலும்

**இலக்கணக்குறிப்பு:** வயிற்றுக்கம் - இழிவுச்சிறப்பும்மை

அவியுணவு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

இழுக்கல், ஒழுக்கம் – தொழிற்பெயர்கள்

ஊற்றுக்கோல் – ஊன்றுகோல் என்பதன் வலித்தல் விகாரம்

ஆன்ற பெருமை – பெயரெச்சம்.

கேளாத் தகையவே - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

அவியினும் வாழினும் – எண்ணும்மை

**பிரித்தறிதல் :** செவிக்குணவு = செவிக்கு + உணவு

RADIAN IAS ACADEMY

- ✓ வரலாற்றுச் செய்திகள், அரசியலமைப்பு, நிருவாகமுறை, பிரெஞ்சுப்படை காரைக்காலைப் பிடிக்கச் சென்று தோல்வியடைந்தது, தில்லியின்மீது பாரசீகப படையெடுப்பு, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கிய செய்திக், இலபூர்தொனே கப்பல் பிரெஞ்சு நாட்டிலிருந்து சென்றது.
- ✓ வெளிநாட்டுப் பயணிகள் வந்துசென்ற நிகழ்வுகள் முதலிய முதன்மையான வரலாற்றுச் செய்திகள் ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் இடம்பெற்றுள்ளதால் அது வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது.
- ✓ ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வாணிகச் செய்திகளையே விவரிக்கின்றன. புதுச்சேரிக்குக் கப்பல்கள் வந்த செய்தியைக் கேட்டதும் மக்கள் மகிழ்ந்தனராம். அது குறித்து, நாட்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற் போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், அவரவர் வளவிலே கல்யாணம் நடப்பது போலவும், நீண்டநாள் தவங்கிடந்து புத்திர பாக்கியம் கிட்டினாற் போலவும் தேவாமிர்தத்தைச் சுவைத்ததுபோலவும் சந்தோஷித்தார்கள். அதைக் காகிதத்தில் எழுத முடியாது என்ற தாம் வியந்ததை நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார். சொஸ்த – தெளிந்த அல்லது உரிமையுடைய என்பது பொருள். லிகிதம் – கடிதம் அல்லது ஆவணம், வளவு - வீடு, துபாசி - இருமொழிப்புலமையுடையவர் (மொழிப்பெயர்ப்பாளர்)

**ஆனந்தரங்கர் பெற்ற சிறப்புகள்**

- ✓ பிரெஞ்சுக்காரர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் இடையே பாலமாக இருந்தவர் ஆனந்தரங்கர்.
- ✓ முசபர்சங், ஆனந்தரங்கருக்கு 1749 ஆம் ஆண்டில் மூவாயிரம் குதிரைகளை அவருக்கு மன்சுபேதார் என்னும் பட்டத்தையும் வழங்கினார்.
- ✓ செங்கற்பட்டுக் கோட்டைக்குத் தளபதியாகவும், அம் மாவட்டம் முழுமைக்கும் ஜாகீர்தாராகவும் நியமனம் பெற்றார். துபாசி பணியாற்றுவோர் தமிழ்மக்களின் தலைவராக அறிவிக்கப்படுவர். எனவே, ஆனந்தரங்கர் வணிகராக, துபாசியாக இருந்தபோதிலும் மன்னரைப்போல் மதிக்கப் பெற்றார். துய்ப்ளே ஆட்சியில் ஆனந்தரங்கருக்குத் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன.
- ✓ ஆளுநர் மாளிகைக்குள் பல்லக்கில் செல்லும் உரிமை அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு செல்லும்போது மங்கல ஒலிகள் ஒலிக்கும்.
- ✓ பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தாலும் ஆனந்தரங்கர் தமிழ்மொழிமீது மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார்.
- ✓ தமிழிலேயே கையெழுத்திட்டார். உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த **பெப்பிசு** என்பாரைப் போன்று, தமிழில் நாட்குறிப்பு எழுதியமையால், இவரை **இந்தியாவின் பெப்பிசு** எனவும், **நாட்குறிப்பு வேந்தர்** எனவும் அறிஞர் போற்றுகின்றனர்.

**டைஸ் என்னும் இலத்தீன் சொல்லுக்கு நாள் என்பது பொருள். இதிலிருந்தே டைரியம் என்னும் இலத்தீன் சொல் உருவானது. இச்சொல்லுக்கு நாட்குறிப்பு என்பது பொருள். இதிலிருந்தே டைரி என்னும் ஆங்கிலச் சொல் உருவானது.**

**அருணாச்சலக் கவிராயர் தம் இராம நாடகத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றிய பின்னர், மீண்டும் ஒருமுறை ஆனநந்தரங்கர் முன்னிலையில் அரங்கேற்றினார்.**

ஆனந்தரங்கருடைய நாட்குறிப்புகள் அவரது காலத்தில் யாருமே புரிந்திராத அரியதோர் இலக்கியப் பணி – கே.கே. பிள்ளை.

தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ள செய்திகளைச் சித்திரகுப்தனைப் போல் ஒன்றுவிடாமல் குறித்து வைத்துள்ளார். – வ.வே.சு.

**ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்துள்ள இலக்கியங்கள்**
**ஆனந்தரங்கக் கோவை – தியாகராச தேசிகர்**
**ஆனந்தரங்கன் தனிப்பாடல்கள்**
**கள்வன் நொண்டிச் சிந்து**
**ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – அரிமதி தென்னகன்**
**ஆனந்தரங்கர் புதினங்கள்**
**ஆனந்தரங்க விஜயசம்பு - சீனிவாசக்கவி (வடமொழி)**
**ஆனந்தரங்க நாட்சந்தமு – கஸ்தூரிரங்கக்கவி (தெலுங்கு)**

## சொல்

**(பகாபதம், பகுபதம்)**

- ✓ ஓர் எழுத்து, தனித்தேனும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பெருளை உணர்த்துமானால், அது சொல் எனப்படும்.
- ✓ பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள். பதம் பகாப்பதம், பகுபதம் என இரு வகைப்படும்.

**பகாப்பதம்**

- ✓ பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நான்கு வகைப்படும்.

1. பெயர்ப் பகாப்பதம் - மரம், நாய், நீர்
2. வினைப் பகாப்பதம் - உண், காண், எடு
3. இடைப் பகர்பதம் - தில், மன், பிற
4. உரிப் பகாப்பதம் - சால, நனி, கடி, உறு

(இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்)

**பகுபதம்**

- ✓ பகுதி, விகுதி, இடைநிலை எனப் பரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும். (பகுபதம்-பிரிக்கவியலும் பதம்). பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.
- ✓ பெயர்ப்பகுபதம் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறன் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம்.

(எ-டு) 1. பொன்னன் - பொன்+ன்+அன் (ன்-இரட்டித்து) பொன் என்னும் பொருட்பெயர் அடியாகப் பிறந்தது.

4. Something is better than nothing.
ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை.
5. Though he endeavours all he can.
புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்.

## முத்தொள்ளாயிரம்

**சொற்பொருள் :** உய்ம்மின் – பிழைத்துக் கொள்ளுங்கள், மல்லல் – வளமை, வள் – நெருக்கம், விசும்பு - வானம்.

புறவு - புறா, நிலை – உடை, ஈர்த்து – அறுத்து, துலை – துலாக்கோல் (தராசு), நிறை – ஒழுக்கம், வன்கண் – வீரத்தன்மை, மேனி – உடல். மருப்பு - தந்தம், ஊசி – எழுத்தாணி, மரம் – வீரம், கனல் – நெருப்பு, திருத்தக்க – செல்வம் நிலைத்த, வையகம் – உலகம், மொய்யிலை – நெருங்கியமைந்த இலை, மாறன் – பாண்டியமன்னன், களிறு – ஆண் யானை.

**இலக்கணக்குறிப்பு :**
மல்லல் நெடுமதில் – உரிச்சொற்றொடர்
நெடுமதில் – பண்புத்தொகை
வாங்குவில் – வினைத்தொகை
உயர்துலை – வினைத்தொகை
குறையா வன்கண் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இலைவேல் – உவமைத்தொகை
மருப்பூசி, மார்போலை - உருவகங்கள்
மாறன் களிறு – ஆறாம் வேற்றுமைத் தொகை

**பிரித்தரிதல் :** தந்துய்ம்மின் – தந்து + உய்ம்மின், வில்லெழுதி – வில் + எழுதி, பூட்டுமின் – பூட்டு + மின்.
மருப்பூசி – மருப்பு + ஊசி, மார்போலை – மார்பு + ஓலை, எமதென்று – எமது + என்று, மொய்யிலை – மொய் + இலை.

**அணி – உருவக அணி.**

**நூற்குறிப்பு** மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம்.

- ✓ ஆயினும் இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.
- ✓ புறத்திரட்டு என்னும் நூல்வாயிலாக நூற்றெட்டு வெண்பாக்களும், பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக இருபத்திரண்டு வெண்பாக்களும் கிடைத்துள்ளன.
- ✓ மூவேந்தர்களின் ஆட்சிச் சிறப்பு, படைச் சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது.
- ✓ இந்நலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## கலிங்கத்துப்பரணி – செயங்கொண்டார்

**சொற்பொருள் :** தீயின்வாய் – நெருப்பில், சிந்தை – எண்ணம், கூர – மிக, நவ்வி – மான்.
முகில் – மேகம், மதி – நிலவு, உகு – சொரிந்த (பொழிந்த), புனல் – நீர்.

**இலக்கணக்குறிப்பு :**
வெந்து, உலர்ந்து, எனா, கூர – வினையெச்சங்கள்
செந்நாய் – பண்புத்தொகை
கருமுகிலும் வெண்மதியும் – எண்ணும்மை
கருமுகில், வெண்மதி – பண்புத்தொகைகள்
கடக்க, ஓடி, இளைத்து – வினையெச்சங்கள்
வியர்த்த வியர்வன்றோ – பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் :** உலர்ந்து – உலர் + த் (ந்) + த் + உ. உலர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

**பிரித்தறிதல் :** வாயினீர் – வாயின் + நீர், வெந்துலர்ந்து – வெந்து + உலர்ந்து.
காடிதனை – காடு + இதனை, கருமுகில் – கருமை + முகில், வெண்மதி – வெண்மை + மதி.

**ஆசிரியர் குறிப்பு :** கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் சயங்கொண்டார்.

- ✓ திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர். முதல் குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர். பரணிக்கோர் செயங்கொண்டார் எனப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாராட்டியுள்ளார்.
- ✓ இசையாயிரம் உலாமடல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு.

**நூற்குறிப்பு :** ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் பரணி என்பது பெயர். இது, தொண்ணூற்றாறு வகை சிற்றிலங்கியங்களுள் ஒன்று.

- ✓ பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப்பரணி.
- ✓ கலிங்க மன்னன் அனந்தபன்மன்மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்தொடுத்து வெற்றிபெற்றான்.
- ✓ அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல், தோல்வியுற்ற கலிங்கநாட்டின் பெயரால், அமைந்து உள்ளது.
- ✓ இந்நூலில், ஐந்நூற்றத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள் உள்ளன. சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப்புகழ்ந்துள்ளார்.

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மாணவ னுக்கு வகுப்பது பரணி. –
**பன்னிரு பாட்டியல்**

**பரணி இலக்கியங்கள்**

1. தக்கயாகப் பரணி, 2. வங்கத்துப் பரணி, 3. மேகவதைப் பரணி, 4.பாசுவதைப் பரணி, 5. சீனத்துப்

RADIAN IAS ACADEMY

- ✓ எங்கும், தமிழ், எதிலும் தமிழ் என்பதனை முழு மூச்சாகக்கொண்டு, வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என வலியுறுத்தினார்.
- ✓ தமிழை வளர்க்க வேண்டும் என்றால், பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று என்பார்.

**இளைஞர்களுக்கு அறிவுரை**

- ✓ இளைஞர்களே! தமிழுலகின் இழிந்தநிலையை ஓருங்கள், ஓர்ந்து (எண்ணி) உங்கள் பொறுப்பை உணருங்கள், தமிழ்த்தாயைப் புதுப்போர்வையில் ஒப்பனை செய்து, அரியாசனத்திலமர்த்த சூள்கொண்டெழுங்கள், எழுங்கள், பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள் என்று அறைகூவல் விடுப்பார்.
- ✓ திரு.வி.க. நடை என்றே ஒரு தனிநடையை நடைமுறைப்படுத்தும் அளவிற்கு பேசுவதுபோலவே எழுதுவது, எழுதுவது போலவே பேசுவது என்னும் முயற்சியில் இவர் வெற்றி கண்டவர். திரு.வி.க. வெல்லுஞ்சொல் இன்மையறிந்து உணர்ச்சிச் சொற்களைக் கோத்துக் கேட்டார்ப் பிணிக்கும் தனையவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம் பேசுவதில் வல்லவர்.
- ✓ அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை உணர்ச்சிமிகு பேச்சினால் தம்பால் ஈர்த்து மேடைத்தமிழின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் திரு.வி.க.
- ✓ அவருக்கு வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்பார் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார். இதனால், இக்காலத் தமிழ்மொழி நடையாளராக மதிப்பிட்டுக் காணுமளவிற்குச் சீரிய மொழிநடையில் அவரின் மனித வாழ்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், இமயமலை அல்லது தியானம் முதலிய நூல்கள் அவரது கற்பனைத்திறனையும், சீர்திருத்த ஈடுபாட்டையும் உயர்ந்த நடையையும் வெளிக்காட்டுகின்றன.

**உரைநடை நூல்கள்**

- ✓ முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுள் காட்சியும், தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு, தமிழ்நூல்களில் பௌத்தம், காதலா? முடியா? சீர்திருத்தமா?, என் கடன் பணிசெய்து கிடப்பதே, இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச்சோலை, உள்ளொளி என்பன இவர் இயற்றிய இன்னபிற உரைநடை நூல்கள்.

**செய்யுள் நூல்கள்**

- ✓ முருகன் அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல், கிறித்துவின் அருள்வேட்டல், அருகன் அருள்வேட்டல், உரிமை வேட்டல், பொதுமை வேட்டல், பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் ஆகியன இவரது செய்யுள் நூல்கள்.

**இதழ்ப்பணி**

- ✓ தேசபக்தன், நவசக்தி எனும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம்பெறப் பாடுபட்டவர். அதற்காகத் தமது ஆசிரியர் பணியையும் துறந்தார். தமது வீறுகொண்ட தமிழ்முழக்கத்தால், சிதறிக்கிடந்த தொழிலாளர்களை ஒன்றிணைத்துத் தொழிலாளர் இயக்கம் கண்டார்.

**தமிழ் வாழ்வினர்**

- ✓ திரு.வி.க. தம் சிந்தனை, சொல், செயல் ஆகியவையால் சுத்த சன்மார்க்கியாக, சமயப் பொதுமையாளராக விளங்கி அருந்தோண்டாற்றினார். எழுபது வயதாகி உடல்தளர்ந்து படுக்கையில் இருந்தபோதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை மு.வரதராசனாரின் உதவியுடன் வெளியிட்டார். அவர், வாழ்நாளின் இறுதிவரை தமிழைத் தன் மூச்சாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றினார்.
- ✓ மணமுடித்த ஆறே ஆண்டுகளில் அவர்தம் மனைவி கமலாம்பினை அம்மையாரை இழந்தார்.
- ✓ தனிமையில் வாழ்ந்துவந்த அவரிடம் நண்பர் ஒருவர், மனைவியை இழந்து தனிமையில் வாழ்வது கடினமாக இல்லையா? எனக்கேட்டார். அதற்கு, நான் தனியாக வாழவில்லை, தமிழோடு வாழ்கிறேன் எனக் கூறினார். திரு.வி.க. 1953-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினேழாம் நாள் தமது எழுபத்தோராம் வயதில் தமிழ் மூச்சுக்கு விடைதந்தார்.

> **தாய்மொழி**
> ஈன்ற ஒருத்தியையும் பிறந்த நாட்டையும் பேசும் மொழியையும் ஒருவன், தாய், தாய், தாய், என்று போற்றுகிறான். ஒருவனுக்குத் தன்னைப்பெற்ற தாயின்பால் எத்தகைய அன்புண்டோ, அத்தகைய அன்பு, அவனது நாட்டினிடத்தும், மொழியினிடத்தும் அவனுக்கு இருத்தல் வேண்டும். பெற்ற தாயின் அன்புக்கும், பிறந்த நாட்டின் பற்றுக்கும் ஊற்றாயிருப்பது பேசும் மொழியாகும். பேசுந் தாய்மொழியின்மாட்டு அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவனாவான் – **திரு.வி.கலியாணசுந்தரனார்**

## வழாநிலை, வழு, வழுவமைதி

**அ) வழாநிலை**

- ✓ இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
  செல்வன் படித்தான்
- ✓ இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப்பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே, இது வழாநிலை எனப்படும்.

**வழாநிலை அறுவகைப்படும்.**

1. திணை வழாநிலை - செல்வி பாடினாள், மாடு வந்தது.
2. பால் வழாநிலை - கண்ணன் வந்தான், நாய் ஓடியது.
3. இட வழாநிலை - நான் வந்தேன், நீ வருவாய்.

RADIAN IAS ACADEMY

ஐம்பால்களுள் எந்தப் பாலில் உள்ளதோ அதற்கேற்பப் பயனிலையைப் பெறல் வேண்டும். (எ-டு) அழகன் பாடினான்.

வள்ளி ஆடினாள்.

புலவர்கள் பாடல்களை இயற்றினார்கள்.

யானை பிளிறியது.

மான்கள் ஓடின. எழுவாய் – கள் விகுதி பெற்றால் பயனிலையும் கள் விகுதி பெறல் வேண்டும். எழுவாய் – அர் விகுதிபெற்றால் பயனிலையும் – அர் விகுதி பெறல் வேண்டும்.

(எ-டு) மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள்.

மூவர் தேவாரத்தைப் பாடினர்.

எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.

(எ-டு) என் புத்தகம் இதுவன்று.

என் புத்தகங்கள் இவையல்ல. தொடரில் காலவழு ஏற்படாமல் காத்தல் வேண்டும்.

(எ-டு) தலைவர் நாளை மதுரையில் பேசுவார்.

நேற்று மழை பொழிந்தது. – பிழையான சொற்களைத் திருத்துதல் (வழுஉச் சொற்களைத் திருத்துதல்)

பேச்சுவழக்குச் சொற்களை அப்படியே எழுத்தில் கொண்டுவருவது தவறு. அவ்வாறு எழுதுவதனை வழுஉச் சொற்கள் னக் கூறுவர். அவற்றுக்குறிய எழுத்துவழக்குச் சொற்களை எழுதுவதே முறை.

1. One doth the act, another hath the blow.
   பழி ஓரிடம், பாவம் ஓரிடம்.
2. Every fox must at last pay his skin to the flayer.
   பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான்.
3. Money makes many things.
   பணம் பத்தும் செய்யும்.
4. The day has eyes, the night has ears.
   பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே.
5. What comes from the cradle goes to the grave.
   தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

## உமர்கய்யாம் பாடல்கள்

**சொற்பொருள் :** பகர்வது – சொல்வது, தெளிவீரே – தெளியுங்கள், துவ்வா – நுகராத, அகன்று – விலகி, ஆழி – கடல்.

**இலக்கணக்குறிப்பு :** நோக்கி – வினையெச்சம், துவ்வா விடம் - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

**ஆசிரியர் குறிப்பு :**கவிமணி தேசிக விநாயகனார் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர்.

- ✓ இவரின் பெற்றோர் சிவதாணு – ஆதிலட்சுமி அம்மையார்.
- ✓ இவர் உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு உமர்கய்யாம் பாடல்கள் என்பது. உமர்கய்யாம் பதினோரம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர்.
- ✓ இவரது முழுப்பெயர் **கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம்** என்பது. இவர் கணிதம், வானவியல் ஆகியவற்றில் புலமைமிக்கவர். இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடுபொருளாகக் கொண்டவை.

**இவர் இயற்றிய பிற நூல்கள் –** மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தை செல்வம், ஆசிய ஜோதி முதலியன. இவரது காலம் 1876 ஆம் ஆண்டு வரை.

**நூற்குறிப்பு:** இந்நூல் இம்மை மறுமை பற்றி ரூபாயத் என்னும் பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுள்களின் மொழிபெயர்ப்பு. இதனையே கவிமணி மொழிபெயர்த்துள்ளார்.

- ✓ இதில், நூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன. வாழ்க்கைத் தத்துவத்தை இப்பாடல்கள் விளக்குகின்றன. (ரூபாயத் – நான்கடிச் செய்யுள்)

## மணிமேகலை – சீத்தலைச்சாத்தனார்

## ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

**முன்கதைச் சுருக்கம்**

- ✓ கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை.
- ✓ முற்பிறப்பின் வினைப்பயன் காரணமாக அரசகுமாரனாகிய உதயகுமாரன், மணிமேகலையை மணம்புரிய விரும்புகிறான். மலர்வனத்திற்குச் சென்ற அவளைப் பின்தொடர்கிறான்.
- ✓ மணிமேகலை அங்குள்ள பளிங்கறையில் சென்று மறைந்துகொள்கிறாள். அங்கிருந்த அவளை மணிமேகலா தெய்வம், மணிபல்லவத் தீவிற்கு வான்வழியே தூக்கிச் செல்கிறது. அங்குத் தனது பழம்பிறப்பை உணர்கிறாள் மணிமேகலை. மேலும் மணிமேகலா தெய்வம், அவளுக்குப் பசியற்றிருக்கவும் விரும்பும் உருவம் எடுக்கவும் வான்வழிச் செல்லவும் தேவையான மூன்று மந்திரங்களைத் தெரிவித்து மறைகிறது.
- ✓ தீவதிலகையின் உதவியால், அமுதசுரபியைப் பெற்றுப் புகார் நகரை அடைகிறாள். அங்கு, அறவணவடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன்முதலில் பிச்சையேற்றாள்.
- ✓ அதன்மூலம் அமுதசுரபியில் அள்ள அள்ளக் குறையாத அன்னம் பெருகியது. அதனைக் கொண்டு பசிப்பிணி நீக்கும் அறப்பணியை மேற்கொள்கிறாள்.
- ✓ அமுதசுரபி, முற்பிறப்பில் ஆபுத்திரனிடம் இருந்தது என்பதை அறிந்த மணிமேகலை அவனைக் காணும்பொருட்டு ஆபுத்திரன் நாட்டிற்குச் செல்வது, இங்குப் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

**சொற்பொருள் :** ஆயம் – தோழியர் கூட்டம், ஆசனம் - இருக்கை, நாத்தொலைவில்லை – சொல் சோர்வின்மை, யாக்கை – உடம்பு, பிணிநோய் – நீங்கா நோய், பேதைமை – அறியாமை, செய்கை - இருவினை, உணர்வு - அறிவியல் சிந்தனை, அரு – உருவமற்றது, உரு – வடிவம், வாயில் –

RADIAN IAS ACADEMY

உண்ட உணவு, செரித்தபின்னரே மீண்டும் உண்ணவேண்டும்மெனத் தமிழ் மருத்துவம் கூறுகிறது. முன் உண்டது செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவை ஏற்படாது.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது
அற்றது போற்றி உணின்.

- ✓ தமிழகத்து உணவு, தொன்றுதொட்டு மருத்துவமுறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது. அன்றாடச் சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும். சீரகம், வயிற்றுச் சூட்டைத்தணிக்கும். மிளகு, தொண்டைக்கட்டைத் தொலைக்கும். பூண்டு, வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுக்கம். வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.
- ✓ பெருங்காயம், வளியை வெளியேற்றம்,. இஞ்சி பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும். தேங்காய், நீர்க்கோவையை நீக்கும். கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும். சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர், சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை அதிகரிக்கும். உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது.

**தவிர்க்க வேண்டியன**

- ✓ நோய்க்கு முதல் காரணம் உப்பு. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி.
- ✓ உண்ணும் முறை: நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும். உமிழ்நீர் கலக்காத உணவு உள்ளே சென்றாலும், அது செரிக்காது, குடலும் தன் செரிமான ஆற்றலை இழந்துவிடும். உணவின் சத்துகள் வீணாகாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ணல் வேண்டும். வேகவைத்த காய்கறி நீரில் மிகுதியான சத்துகள் இருப்பதனால் அதனை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- ✓ **தண்ணீரும் மருந்தே :** நீரின்றமையாது உலகு என்பது வள்ளவம். இயற்கை உணவுப்பொருள்களில் நீரில்லாத உணவுப்பொருள்களே இல்லை. உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கு குருதி தூய்மை அடைவதற்கும் உடலிலுள்ள கழிவுப்பொருள்கள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமையாதது.
- ✓ **சமச்சீர் உணவு:** ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. சோறும் காய்கறியும் அரைவயிறு. பால், மோர், நீர் கால்வயிறு, கால்வயிறு வெற்றிடமாக இருத்தல் வேண்டும். வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும். எனவே, ஔவையார் மீதூண் விரும்பேல் என்றார்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி.
காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே – **கவிமணி**

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்மை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – **திருமூலர்**

**அறுசுவையின் பயன்கள்**

- ✓ இனிப்பு - வளம், கார்ப்பு - உணர்வு, துவர்ப்பு - ஆற்றல், உவர்ப்பு - தெளிவு, கைப்பு - மென்மை, புளிப்பு - இனிமை

**நோய் நீக்கும் மூலிகைகள்**

- ✓ துளசிசெடியின் இலைகளை நீரிலிட்டுக் கொதிக்கச் செய்து ஆவிபிடித்தால் மார்ப்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி நீங்கும். கீழ்க்காய்நெல்லி, இதனைக் கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி எனவும் குறிப்பிடுவர். மஞ்சட்காமாலைக்கு எளிய மருந்தாக இன்றும் பயன்பட்டு வருகிறது. தூதுளை, சிங்கவல்லி என வேறுபெயர்களிலும் வழங்கப்படும். ஞானப்பச்சிலை என வள்ளலார் போற்றும் இவ்விலை குரல்வளத்தை மேம்படுத்தும், வாழ்நாளை நீட்டிக்கும். மேனி துலங்க குப்பைமேனி என்பது பழமொழி. கற்றாழைக்குக் குமரி என்னும் வேறுபெயரும் உண்டு. பெண்களின் கருப்பை சார்ந்த நோய்களை நீக்குவதால் குமரி கண்ட நோய்க்குக் குமரிகொடு. கறிவேப்பிலையும் மூலிகையே. (வேடு கட்டுதல் – சட்டியின் வாயை மெல்லிய துணியால் மூடிக்கட்டுதல்)
- ✓ கரிசலாங்கண்ணிக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள். கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம். அகத்திக்கீரை, பல் சார்ந்த நோய்களைக் குணமாக்கம். வல்லாரை நினைவாற்றல் பெருக உதவும்.

## பொருள்கோள்

- ✓ ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக் கொள்ளும் முறையைப் பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர்.

**பொருள்கோள் எண்வகைப்படும்.**

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள், 2. மொழிமாற்றுப் பொருள்கோள், 3. நிரல்நிறைப் பொருள்கோள், 4. விற்பூட்டுப் பொருள்கோள், 5. தாப்பிசைப் பொருள்கோள், 6. அளைமறிபாப்புப் பொருள்கோள், 7. கொண்டுகூட்டுப் பொருள் கோள், 8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

✓ **குறிப்பு :** மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது.

8. அடிமறிமாற்றுப் பொருள்கோள் செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

(எ-க) மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே.

✓ இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சதையாது.

1. The wise and the fool have their follows.
இனம் இனத்தோடு சேரும்.
2. He who has an art has everywhere a part.\
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. Being on the sea, sail being on the land, settled.
காலத்திற்கேற்ற கோலம் கொள்.
4. No rains no grains.
மாரியல்லாது காரியம் இல்லை.
5. Bad words find bad acceptance.
நுணலும் தன் வாயாற் கெடும்.

## திருக்குறள்
## சான்றாண்மை
### (பண்புகளால் நிறைந்து நிற்றல்)

**சொற்பொருள் :** கடன் – கடமை, சான்றோர் – நல்ல குணங்கள் நிறைந்தவர், நாண் – நாணம், ஒப்புரவு - உதவுதல், கண்ணோட்டம் – உயிர்களிடத்து இரக்கம், வாய்மை – உண்மை.

சால்பு - சான்றாண்மை, ஆற்றுவார் – செயல் செய்பவர், ஆற்றல் – வலிமை, மாற்றார் – பகைவர், துலையல்லார் – ஆற்றலில் குறைந்தவர், கட்டளை – உரைகல், இன்னா – தீங்கு, இனிய – நன்மை, செய்யாக்கால் – செய்யாவிடத்து

இன்மை – வறுமை, இளிவன்று - இழிவானதன்று, திண்மை – வலிமை, ஊழி – உலகம், ஆழி – கடல், இருநிலம் – பெரிய நிலம், பொறை – சுமை.

**இலக்கணக்குறிப்பு:** என்ப – பலர்பால் வினைமுற்று

மேற்கொள்பவர் – வினையாலணையும் பெயர்

உள்ளதூஉம் - இன்னிசையளபெடை

அன்று – குறிப்புவினைமுற்று

கண்ணோட்டம் – தொழிற்பெயர்

கொல்லாநலத்தது, சொல்லாநலத்தது - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பணிதல் – தொழிற்பெயர்

ஆற்றுவார், மாற்றார் – வினையாலணையும் பெயர்

இன்மை, திண்மை – பண்புப் பெயர்கள்

சான்றவர் – வினையாலணையும் பெயர்

இருநிலம் – உரிச்சொற்றொடர்

மன், ஓ – அசைச்சொற்கள்

**பகுபத உறுப்பிலக்கணம் :** அறிந்து – அறி + த் (ந்) + த் + உ. அறி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

ஆற்றுவார் – ஆற்று + வ் + ஆர். ஆற்று – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. பணிதல் – பணி + தல், பணி – பகுதி, தல் – தொழிற்பெயர் விகுதி

**பிரித்தறிதல் :** ஒருவற்கு – ஒருவன் + கு, இளிவன்று – அளிவு + அன்று, சால்பென்னும் – சால்பு + என்னும்

**இன்பம் – சுரதா**

**சொற்பொருள் :** இசைபட – புகழுடன், கயவர் – கீழ்க்குணமுடையோர்.

**இலக்கணக்குறிப்பு:** தளிர்க்கை – உவமைத்தொகை, பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் – பண்புத்தொகைகள், வழங்கி – வினையெச்சம், கற்றல், பெறுதல், வாழ்தல் – தொழிற்பெயர்கள்.

**ஆசிரியர் குறிப்பு:** உவமைக் கவிஞர் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் திருவாரூர் மாவட்டத்திலுள்ள பழையனூரில் 23-11-1921 அன்று பிறந்தார். பெற்றோர் திருவேங்கடம் – செண்பகம் ஆவர்.

✓ பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட பற்றுக் காரணமாகத் தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா ஆயிற்று.

✓ தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள் முதலான கவிதை நூல்களை இயற்றியுள்ளார். தேன்மழை என்னும் கவிதை நூல், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது. தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணிப் பட்டத்தையும், தமிழக அரசின் பாவேந்தர் விருதையும் இவர் பெற்றுள்ளார்.

**நூற்குறிப்பு:** தேன்மழை

நூலில் இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாகப் பதினாறு பகுதிகளாகக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## பெருந்தலைவர் காமராசர்

✓ தன்னலமற்ற தலைவர், கர்மவீரர், கல்விக்கண் திறந்த முதல்வர், ஏழைப்பங்காளர் என்னும் புகழுரைகளுக்கெல்லாம் உரியவர் காமராசர்.

✓ விருதுநகரில் குமாரசாமி, சிவகாமி இணையர்க்கு மகனாய் 1903 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினைந்தாம் நாளன்று தோன்றினார்.

**இளமைப்பருவம் :** காமராசர், திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று, அதன்பிறகு ஓர் ஆண்டு தமிழ்பாடம் கற்றார். காமராசர் அதன்பின்பு, கல்வியோடு உணவளிக்கப்பட்ட

RADIAN IAS ACADEMY

சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார்.

- ✓ நிலச்சீர்த்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது. நில உச்சவரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது. நிலமுதலாளிகளிடமிருந்து உபரிநிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை பிரித்தளிக்கப்பட்டன.
- ✓ சிறுதொழிலாளர் நலத்திட்டகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்புற வீடுகட்டும் திட்டம், இலவச மருத்துவவசதி முதலியனவும் இவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

**காமராசர் திட்டம்**

- ✓ 1962 ஆம் ஆண்டு சீனப்படையெடுப்புக்குப்பின், காங்கிரசுக் கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. இடைத்தேர்தல்கள் சிலவற்றில் காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தது. எனவே, கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப்பணியில் ஈடுபட வேண்டும் எனக் காமராசர் வலியுறுத்தினார்.
- ✓ முதலில் தாமே முதலமைச்சர் பதவியைவிட்டு விலகிக் கட்சிப்பணிக்குத் திரும்பினார். மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி முதலியோரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணிகளில் ஈடுபட்டனர். அத்திட்டத்தைக் காமராசர் திட்டம் என அழைத்தனர்.

**அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்**

- ✓ புவனேசுவர் நகரில் 1963 ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில் காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார்.
- ✓ இரஷ்யாவிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தொழில் முன்னேற்றங்களை நேரில் கண்டார். அவற்றை நம் நாட்டிலும் செயல்படுத்த முனைந்தார்.
- ✓ இந்தியப் பிரதமர் நேரு 1964 ஆம் ஆண்டில் காலமானார். இவ்வேளையில் காமராசர் நாடாளுமன்றக் காங்கிரசு கட்சி உறுப்பினர்களின் கருத்தைக் கேட்டு லால்பகதூர் சாஸ்திரியை முதன்மை அமைச்சராக்கினார்.
- ✓ சாஸ்திரி எதிர்பாராதமுறையில் 1966 ஆம் ஆண்டு தாஸ்கண்டில் உயிரிழந்தார். காமராசர் நேருவின் மகள் இந்திராகாந்தியே பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் எனக் கருதி, அவருக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினார். அதனாலேயே இந்திராகாந்தி பிரதமரானார்.

**காமராசருக்குச் செய்த சிறப்புகள்**

- ✓ காமராசருக்கு நடுவணரசு பாரத ரத்னா (இந்திய மாமணி) அளித்துச் சிறப்பித்தது. நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச்சிலையை நிறுவியது.
- ✓ தமிழக அரசு, இவரின் கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் எனப் பெயர் சூட்டியது.
- ✓ கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது, சென்னை மெரீனா கடற்கரைச் சாலையில் சிலையமைத்துச் சிறப்பித்தது. காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.
- ✓ விருதுநகரிலிருந்த காமராசரின் இல்லமும் அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் நிறுவப்பட்டது.
- ✓ தமிழக அரசு, காமராசர் பிறந்த நாளான சூலை பதினைந்தாம் நாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது. **இவரைக் கல்விக் கண் திறந்தவர் எனத் தமிழுலகம்** போற்றுகிறது.

**மறைவு**

- ✓ காந்தியடிகள் மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர், 1974 ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.
- ✓ அவர் மறைந்தாலும் இன்றைய தலைவர்களுக்கு முன்னோடியாக நின்று பெருந்தலைவர் என்னும் பொருத்தமான புகழுரையால் நிலைத்து வாழ்கிறார்.

## புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேருவது புணர்ச்சி ஆகும்.

வாழை + மரம் = வாழைமரம்.

வாழை மரம் - இதில் வாழை, மரம் என்னும் இருசொற்கள் இணைந்து ஒரு சொல்லாவதனை அறிவீர்கள். வாழை என்னும் சொல் நிலைமொழி. அதன் ஈற்றெழுத்து ஐ அதனை அடுத்து வரும் (ம் + அ = ம) மரம் என்னும் சொல் வருமொழி. அச்சொல்லின் முதல் ம் என்பது, இதில் இருசொற்களும் இயல்பாகப் புணர்கின்றன. அதனால், இதனை இயல்புப் புணர்ச்சி என்பர்.

வாழை + பழம் = வாழைப்பழம்

வாழை, பழம் ஆகிய சொற்கள் இரண்டும் இணையும்போது, ப் என்னும் மெய் தோன்றுகின்றது. இதனை விகாரப்புணர்ச்சி என்பர். இவ்விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

(எ-டு) தமிழ் + பாடம் = தமிழ்ப்பாடம் – தோன்றல் புணர்ச்சி (ப் – தோன்றல்)

கல் + சிலை = கற்சிலை – திரிதல் புணர்ச்சி (ல், ற் – ஆதல்)

மரம் + வேர் = மரவேர் – கெடுதல் புணர்ச்சி (ம் – கெடுதல்)

**அ) குற்றியலுகரப் புணர்ச்சி**

கு,சு,டு,து,பு,று ஆகிய ஆறும் நெடிலடுத்தும் இரண்டும் முதலிய பல எழுத்துக்களைச் சார்ந்தும் வரும்போது, தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்பர்.

1. நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யைவிட்டு நீங்கும்.

பொது + தேர்வு - பொதுத்தேர்வு, திரு + குறள் - திருக்குறள்

13. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான் – சாலப்பேசினான், தவ + சிறிது – தவச்சிறிது.

14. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக்கூறினான், இனி + காண்போம் - இனிக்காண்போம்

**வல்லினம் மிகா இடங்கள்**

1. அது, இது, அவை, இவை எனும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை எனும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது

அவை + பறந்தன = அவை பறந்தன

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. ஆ, ஏ, ஓ எனும் வினா எழுத்துகளின் பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் – அவனா சென்றான், அவனோ + பேசினான் – அவனோ பேசினான்

அவனே + சிரித்தான் – அவனே சிரித்தான்

3. எழுவாய்த்தொடரில் பின் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது – மலர்பூத்தது, வண்டு + பறந்தது – வண்டுபறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. வினைத்தொகையில் பின் வல்லினம் மிகாது.

ஊறு + காய் – ஊறுகாய், சுடு + சோறு – சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.மூ

கபிலபரணர், இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் பின் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் – தமிழ்கற்றார், கடல் + கடந்தார் – கடல்கடந்தார்

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த – பூவொடு சேர்ந்த, கபிலரோடு + பரணர் – கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து, தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழியபல்லாண்டு

11. இரட்டைகிளவி, அடுக்குத்தொடர்களில் பின் வல்லினம் மிகாது.

சல + சல – சலசல

பாம்பு + பாம்பு = பாம்பு பாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெறரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் – கற்றசிறுவன், சிறிய + பெண் – சிறியபெண்

1. Take away the fuel, the boiling will cease.
எரிவதைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்.
2. Practice makes perfect.
சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.
3. The law-maker should not be a law-breaker
வேலியே பயிரை மேய்ந்தாற்போல.
4. Misfortune never comes single.
பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்.
5. Look no gift horse in the mouth.
தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா?

RADIAN IAS ACADEMY

## நாட்டுப்புறப்பாடல்

**தொழிற்பாடல் (மீனவர் பாடல்)**

**பொருள் :** மீனவர்களாகிய எங்களுக்கு விடி வெள்ளிதான் விளக்கு. பரந்த கடலே படிக்கும் பள்ளிக்கூடம். கடலலையே எங்களுக்கு உற்றதோழன். மீன்பிடி வலையே நாங்கள் படிக்கம் நூல். கட்டுமரமே வாழும் வீடு. காயும் கதிரே எங்கள் வீட்டுக் கூரை. தோன்றும் மேகமே நல்ல குடை. பிடிக்கும் மீன்களே எங்கள் பொருள்கள். இடியும் மின்னலும் பார்க்கும் கூத்து. வெண்மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை. முழுநிலவே முகம் பார்க்கும் கண்ணாடி. மூச்சடக்கி நீந்துதலே எங்கள் வழிபாடு. நாங்கள் வணங்கும் தலைவன் பெருவானம். நாங்கள் அவனுக்குத் தொண்டு செய்யும் தொழிலாளர்கள்.

**சொற்பொருள் :** விரிகடல் – பரந்த கடல், காயும் ரவிச்சுடர் – சுட்டெரிக்கும் சூரியக் கதிர், யோகம் – வழிபாடு.

**நாட்டுப்புறப் பாடல் – விளக்கம்**

- ✓ பழங்காலப் பண்பாட்டின் எச்சம் எனக் கருதப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஆகும். இவை வழிவழியாகப் பாடப்பட்டுவரும் வாய்மொழி இலக்கியங்களே.
- ✓ பழமொழிகள், விடுகதைகள், கதைப்பாடல்கள், தொழிற்பாடல்கள் முதலியன நாட்டுப்புற இலக்கியத்துள் அடங்கும். தெம்மாங்குப் பாடல், களையெடுப்புப் பாடல், கதிரறுப்புப் பாடல், மீனவர் பாடல் முதலியன தொழிற்பாடல்கள்.
- ✓ எளிய சொற்களும் நடைமுறை வாழ்க்கையை ஒட்டிய ஆழ்ந்த கருத்துகளும் அடங்கியவை

- ✓ என்னுடைய சகோதரியின் மரணத்தைவிடவும் வள்ளிம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது என்று காந்தியடிகள் மனம் வருந்தினர்.
- ✓ மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். அவருடைய தியாகம் வீண் போகாது.
- ✓ சத்தியத்திற்காக உயிர்நீத்த அவருடைய உருவம் என் கண்முன் நிற்கிறது. நம்பிக்கைதான் அவரது ஆயுதம் என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.
- ✓ தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- ✓ தில்லையாடி வள்ளியம்மை நினைவைப் போற்றி நடுவணரசு, அஞ்சல்தலையும் அஞ்சல் உறையும் வெளியிட்டுள்ளது.
- ✓ தில்லையாடி – நாகப்பட்டிணம் மாவட்டத்தில் திருக்கடையூருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது.
- ✓ சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண்புலிக்குட்டிக்குத் தில்லையாடி வள்ளியம்மை நினைவாக வள்ளி எனப் பெயரிடப் பெற்றள்ளது. காந்தியடிகள், தமிழர்மீதும் தமிழ்மொழியின்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வள்ளியம்மையும் ஒருகாரணம் என்றும் கூறலாம். அவரை மகாத்மா என்ற உயர்நிலைநோக்கித் திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மைக்கு உண்டு.
- ✓ வள்ளியம்மையின் நினைவைப் போற்றும் வகையில் தில்லையாடியில் தமிழ்நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது. கோ-ஆப்-டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளா **கூட்டுறுவுச் சங்கம்** சென்னையிலுள்ள தனது அறநூறாவது விற்பனை மையத்திற்குத் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை எனப் பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது.

## இராணி மங்கம்மாள்

- ✓ தமிழ்நாட்டில் நாயக்கர் மரபில் பெண்கள் முடிசூடி ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை. ஆனால், காப்பாட்சியாளராக ஆட்சிபுரிந்து உள்ளனர். அதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்ந்தவர்தான் இராணி மங்கம்மாள்.
- ✓ மதுரையை ஆண்டுவந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள், இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது தன்மகன் அரங்க கிருட்டினமுத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான். அவனுக்குத் துணையாக இருக்கவேண்டும் என்னும் கடமையுணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.
- ✓ மங்கம்மாள், தன் மகன் அரங்க கிருட்டிமுத்துவீரப்பனுக்குத் திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.
- ✓ அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்குதல் வேண்டும். முன்கோபமும் அதன் விளையும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது, பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்பட வேண்டும் என்றெல்லாம் மகனுக்கு அறிவுரை கூறினார்.
- ✓ முத்துவீரப்பன் அன்னை காட்டிய வழியில் திறமையாக ஆட்சிப்புரிந்தான்.
- ✓ தந்தை சொக்க நாதர் இழந்த பகுதிகளைப் போரிட்டு மீட்டான். கோவில்களைக் கட்டி அறச்செயல்கள் பல செய்தான். மக்களின் பசிப்பிணியைப்போக்க ஆங்காங்கே சத்திரங்களும் சாவடிகளும் கட்டினான்.
- ✓ நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்னும் உணர்வோடும் நடுவுநிலைமைப் பண்போடும் அமைதியாக ஆட்சி நடத்தி மக்களிடம் நற்பெயர் பெற்றான். ஏழாண்டுக்காலம் ஆட்சி நடத்திய அவன், அம்மைநோய் கண்டு உலக வாழ்வை நீத்தான்.

### மங்கம்மாள் ஆட்சிப்பொறுப்பேற்றல்

- ✓ சில நாளில் மருமகள் முத்தம்மாளும் காலமானாள். மறைந்துபோன மகன் – மருமகளின் நினைவுகள் அரண்மனை முழுவதும் நிறைந்து அவரைத் துன்பத்தில் மூழ்கச் செய்தன. இருப்பினும், அரசியல் பட்டறிவும் ஆட்சிப்பொறுப்பும் இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன.
- ✓ மகன் முத்துவீரப்பன் இறந்ததால், கி.பி.1688 ஆம் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான். பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியாளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.
- ✓ மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

### திருவிதாங்கூர்ப்போர்

- ✓ திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மா, மதுரை நாயக்க அரசுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருள்களைச் செலுத்தவில்லை. கல்குளம் பகுதியிலிருந்த நாயக்கர் படையைத் தாக்கி அழித்தார்.
- ✓ எனவே, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர்ப் படையைத் தோற்கடித்துத் திறைப்பொருள் மற்றும் பொன், பீரங்கி முதலிய பொருள்களையும் பெற்றுத் திரும்பியது.

### தஞ்சைப் போர்

- ✓ தஞ்சையை ஆண்ட மராத்தியருக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. ஒருமுறை தஞ்சை ஷாஜி, மதுரை நாயக்கர் ஆட்சிப்பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். அவற்றை மீட்க, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் ஒரு படை அனுப்பினார். அப்படை அப்பகுதிகளை மீட்டுத் தஞ்சையை அச்சுறுத்தியது. தஞ்சை அமைச்சர் பாலாஜி

RADIAN IAS ACADEMY

அவியினும் வாழினும் எண்.
எண் – நேர் (நாள்)

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்
படும் – நிரை (மலர்)

3. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.
நாடு – நேர்பு (காசு)

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
உலகு – நிரைபு (பிறப்பு)

**ஈரசைச்சீர் நான்கு**

இரண்டு அசைகள் சேர்ந்து ஒருசீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

| சீர் | - | வாய்பாடு | |
|---|---|---|---|
| நேர் நேர் | - | தேமா | மாச்சீர் – 2 |
| (தேமா, புளிமா என மாவில் முடிவதனால் மாச்சீர்) | | | |
| நிரை நேர் | - | புளிமா | விளச்சீர் – 2 |
| (கருவிளம், கூவிளம் என விளத்தில் முடிவதனால் விளச்சீர்) | | | |
| நிரை நிரை | - | கருவிளம் | |
| நேர் நிரை | - | கூவிளம் | |

(ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவிற்கு உரியவை) இணை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

**மூவசைச்சீர் எட்டு**

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச்சீர் எட்டு ஆகும்.

**காய்ச்சீர் நான்கு**

நேர் நேர் நேர் - தேமாங்காய்
நிரை நேர் நேர் - புளிமாங்காய்
காய்ச்சீர்கள் – நான்கு
நிரை நிரை நேர் - கருளிளங்காய்
நேர் நிரை நேர் - கருவிளங்காய்

இவை வெண்பாவிற்கு உரியன ஆதலின் வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

**கனிச்சீர் நான்கு**

நேர் நேர் நிரை - தேமாங்கனி
நிரை நேர் நிரை - புளிமாங்கனி
கனிச்சீர்கள் – நான்கு
நிரை நிரை நிரை - கருவிளங்கனி
நேர் நிரை நிரை - கூவிளங்கனி

இவை வஞ்சிப்பாவிற்கு உரியதால், வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

**நாலசைச்சீர் பதினாறு**

மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனிதனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.

**4. தளை**

நின்ற சீரின் ஈற்றசையும், வரும்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும். (தளை – கட்டுதல்)

ஒன்றி வருதலாவது - நேர் முன் நேரும், நிரை முன் நிரையும் வருதல்.

ஒன்றாமல் வருதலாவது - நேர் முன் நிரையும், நிரை முன் நேரும் வருதல்.

(எ-டு) கண்/ணா மன்/னா
நேர் நேர் நேர் நேர் - நேர் அசைகள் ஒன்றி வந்தன.
உயர்/வற உயர் நலம்
நிரை நிரை நிரை நிரை - நிரை அசைகள் ஒன்றி வந்தன.

அக/ர முத/ல
நிரை நேர் நிரை நேர் - இவை அசைகள் ஒன்றாமல் வந்தன.
மலர்/மிசை ஏ/கினான்
நிரை நிரை நேர் நிரை

**தளை ஏழு வகைப்படும் அவை**

1. நேரொன்றாசிரியத்தளை, 2. நிரையொன்றாசிரியத்தனை, 3. இயற்சீர் வெண்டளை, 4. வெண்சீர் வெண்டனை, 5. கலித்தளை, 6. ஒன்றிய வஞ்சித்தளை, 7. ஒன்றாத வஞ்சித்தளை

**1. நேரொன்றாசிரியத் தளை**

மா முன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை.
(எ-டு)பா / ரி பா / ரி
நேர் – நேர் சேர்ந்து வருவதால்
நேர் நேர் நேர் நேர் மாமுன்நேர்
நேரொன்றாசிரியத் தளை
தேமா தேமா

**2. நிரையொன்றாசிரியத் தளை**

விளம்முன் நிரை வருவது நிரையொன்றாசிரியத்தளை
(எ-டு)பலர் / புகழ் கபி / லர்
நிரை நிரை நிரை நேர் விளமுன் நிரை
நிரை-நிரை சேர்ந்து வருவதால்
கருவிளம் புளிமா
நிரையொன்றாசிரியத்தளை

**3. இயற்சீர் வெண்டளை**

மா முன் நிரையும், விள முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை
எ-டு) அக/ர முத/ல
நிரைநேர் நிரைநேர் மா முன் நிரை
புளிமா புளிா
இயற்சீர் வெண்டளை
நில/வரை நீள்/புகழ்
நிரை நிரை நேர் நிரை விளமுன் நேர்
கருவிளம் கூவிளம்

இயற்றினார். அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென்மொழிப்புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

- ✓ இவர் திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**நூற்குறிப்பு:**

- ✓ திருவிளையாடற் புராணம், மதுரைக்காண்டம் (பதினெட்டுப் படலம்), கூடற்காண்டம் (முப்பது படலம்), திருவாலவாய்க்காண்டம் (பதினாறு படலம்) என்னும் முப்பெரும்பகுதிகளையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவுகளையும் உடையது.
- ✓ மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று விருத்தப்பாக்கள் உள்ளன.
- ✓ மதுரையில் இறைவன் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இப்படலங்கள் விளக்குகின்றன. இந்நூல், இறைவனின் திருவிளையாடல்களை விளக்கி எழுந்த நூல்களுள் விரிவானதும், சிறப்பானதும் ஆகும். தொடைநயமும் பத்திச்சுவையும் மிக்க இந்நூலுக்கு ந.மு.வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.

**வஞ்சகமாய நெஞ்சமோடு மொழிதல்**

**– மதுரகவி பாஸ்கரதாஸ்.**

**இலக்கணக்குறிப்பு:** மனக்குரங்கு – உருவகம்

நாடுநகர் – உம்மைத்தொகை

செம்பொன் – பண்புத்தொகை

மாடும் ஆடும் – எண்ணும்மை

**ஆசிரியர் குறிப்பு:** பாஸ்கரதாஸ் மதுரை நகரில் பிறந்தவர். இவர் இனிய இசையமைப்பால் புதிய பல இசையுருக்களை அமைத்தவர்.

இசைப்புலமையுடன் நாடகப்புலமையும் பெற்றவர். நாடக மேடைகளில் விடுதலைப் பாடல்களை இசைத்தவர். இவரின் இசைப்பாடல்களைக் கேட்ட காந்தியடிகள், இவரைப் பெரிதும் பாராட்டினார்.

இவரைச் சிறப்பிக்கும்வகையில் மதுரையில் இவர் வாழ்ந்த பகுதிக்கு மதுரகவி பாஸ்கரதாஸ் நகர் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவரின் காலம் கி.பி.1892 முதல் 1952 வரையாகும்.

## இரட்சணிய யாத்திரிகம் – எச்.ஏ.கிருட்டினனார்

## இரட்சணிய சரிதப் படலம்

## சிலுவைப்பாடு

### முன்கதைச் சுருக்கம்

இறை மகனாகிய இயேசுபெருமான் பெத்தலகேமில் மரியன்னைக்கு மகனாகப் பிறந்தார். குழந்தை இயேசுவை, ஏரோது மன்னனின் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொருட்டுத் தந்தையாகிய சோசப்பும் தாய் மரியன்னையும் குழந்தையோடு எகிப்துக்குச் சென்றனர். ஏரோதுவின் இறப்புக்குப் பின்னர், அவர்கள் இசுரேலுக்குப் பக்கத்திலுள்ள நாசரேத்திற்கு வந்தனர். இயேசு, யூதேய காட்டிலிருந்த புனித யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார்.

**சொற்பொருள் :** ஈண்டு - இவ்விடம், புகல்வது – சொல்வது, காண்டகு – காணத்தக்க, இருப்பாணி - இரும்பு ஆணி,

கடாவினார் – அடித்தார், கீண்டு – தோண்டி.

செற்றம் – சினம், குருசு – சிலுவை, சொற்ற – சொன்ன, துளக்கம் – விளக்கம்,

சுருதிமுதல் – மறை முதல்வராகிய இயேசுநாதர்

சிதைப்புண்டு – சிதைக்கப்பட்டு, பன்னரிய – சொல்லுதற்கரிய, பலபாடு – பல துன்பம்.

இரும்பொறை – பெரும் பொறுமை, வித்தகன் – ஆண்டவன்,

தொழும்பர் – அடியார், இசைபெறுதல் – புகழ்பெறுதல், துஞ்சினவர் – உறங்கியவர்.

கீண்டு – பிளந்து, இருப்புமுனை – ஆணியின் நுனி, வதைப்புண்டு – துன்பமடைந்து,

மாண்டுபடும்போது - இறக்கும்நிலையில், இரட்சகர் – காப்பவர்.

மன்றாடும் – மிக வேண்டுதல், ஆகடியம் – ஏளனம்

**இலக்கணக் குறிப்பு :** செங்கை, சேவடி, வெவ்விருப்பு - பண்புத்தொகைகள்

இருப்பு - வலித்தல் விகாரம்

கனிவாய் – உவமைத்தொகை

வன்மறவோர் – பண்புத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம் –** தீண்டினார் – தீண்டு + இன் + ஆர், தீண்டு – பகுதி, இன் - இறந்தகால இடைநிலை,

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. கடாவினார் – கடாவு + இன் + ஆர், கடாவு - பகுதி, இன் - இற்நதகால இடைநிலை,

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல் -** ஈண்டினியான் - ஈண்டு + இனி + யான், காண்டகு – காண் + தகு,

சேவடி – செம்மை + அடி, வெவ்விருப்பாணி – வெம்மை + இரும்பு + ஆணி.

மற்றிரண்டு – மற்று + இரண்டு, குருசேற்றி – குருசு + ஏற்றி.

பிரித்தறிதல் – தன்னரிய – தன் + அரிய, தவிப்பெய்தி – தவிப்பு + எய்தி

இத்தகைய - இ + தகைய, மனநலம் – மனம் + நலம்

இருப்புமுறை - இரும்பு + முறை, ஈண்டிவரே - ஈண்டு + இவரே, எடுத்துரைக்கும் – எடுத்து + உரைக்கும்.

பங்கிட்டார் – பங்கு + இட்டார், எழுத்திட்டார் – எழுத்து + இட்டார், என்றாகடியமான – என்று + ஆகடியம் + ஆன.

**ஆசிரியர் குறிப்பு:** இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் எச்.ஏ.கிருட்டினனார், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் ஊரில், 1827 ஏப்பிரல் இருபத்து மூன்றாம் நாள் பிறந்தார்.

- ✓ இவருடைய தந்தை சங்கரநாராயணர் பெரும்புலவராக விளங்கினார்.

பாழ்செயல் விலக்கல் வேண்டும்
பண்பினைக் காத்தல் வேண்டும்.

இப்பாடல் அடிதோறும் ஆறுசீர்கள் பெற்றுள்ளதால், இதனைக் கழிநெடிலடி என்பர். பாடலிலுள்ள சீர்களை எண்ணி, இதனை அறுசீர்க்கழிநெடிலடி என்பர். இதுபோல் ஏழுசீர்கள் இருந்தால் எழுச்சீர்க்கழிநெடிலடி என்றும், எட்டுச் சீர்கள் இருந்தால் எண் சீர்க்கழிநெடிலடி என்றும் கூறுவர்.

**தொடை :**

✓ மலர்களைத் தொடுப்பதுபோலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது தொடை எனப்படும். (தொடை – தொடுக்கப்படுவது; தொடை – மாலை). பாவின் ஓசையின்பத்திற்கும் சிறப்பிற்கும் இத்தொடை வேண்டுவதாகும். தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.

✓ தொடை எண் வகைப்படும். அவை : 1. மோனைத் தொடை, 2. எதுகைத்தொடை, 3. முரண்தொடை, 4. இயைபுத்தொடை, 5. அளபெடைத்தொடை, 6. இரட்டைத்தொடை, 7. அந்தாதித் தொடை, 8. செந்தொடை.

✓ அவற்றுள் முதல் ஐந்து தொடைக்கான விளக்கங்களைக் காண்போம்.

1. **மோனைத்தொடை** : செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத்தொடை எனப்படும்.

எண்ணித் துணிக கருமமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.
- குறள், 467

இக்குறட்பாவில் முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதால், இது மோனைத் தொடை.

2. **எதுகைத் தொடை** அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
- குறள், 1

இக்குறட்பாவில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் க என்னும் இரண்டாம் எழுத்து ஒத்து வந்துள்ளது. எனவே இ∴து அடியெதுகைத் தொடை எனப்படும்.

3. **முரண்தொடை** : அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பும் உறுதல் இலன்.
- குறள், 628

✓ இப்பாடலில் முதலடியில் இன்பம் என்றும், இரண்டாம் அடியில் துன்பம் என்றும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. எனவே, இ∴து அடிமுரண்தொடை எனப்படும்.

4. **இயைபுத்தொடை** : அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத்தொடை எனப்படும்.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டத் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்.

இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி (ஒத்து) வந்துள்ளதால் அடிஇயைபுத்தொடை ஆயிற்று.

5. **அளபெடைத் தொடை** அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.
- குறள், 15

✓ இப்பாடலில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால், அடியளபெடைத் தொடை எனப்படும்.

**தொடை விகற்பங்கள்**

✓ நான்கு சீர்களையுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைக்கொண்டு தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும்.

✓ இவ்வேழும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய ஐந்தும் பொருந்தத் தொடை விகற்பம் முப்பத்தைந்து வகைப்படும்.

**மோனை :**

**1. இணைமோனை (1, 2) :**

நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.
- குறள், 99

**2. பொழிப்பு மோனை (1, 3)**

ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒத்து வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.
- குறள், 22

**3. ஒரூஉ மோனை (1, 4) :**

ஓர் அடியுள் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ஒரூஉ மோனை எனப்படும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.
- குறள், 28

**4. கூழைமோனை (1, 2, 3) :**

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது கூழைமோனை எனப்படும்.

RADIAN IAS ACADEMY

நகமும் சதையும் போல

5. Wealth is best known by want.

நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

**ஓய்வும் பயனும்! - பெருஞ்சித்தரனார்**

**ஆசிரியர் குறிப்பு** : பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை. மாணிக்கம்.

- ✓ இவரது ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்.
- ✓ பெற்றோர் துரைசாமி, குஞ்சம்மாள் ஆவர். 10.03.1933 அன்று பிறந்த இவர், 11.06.1995 ஆம் நாள் மறைந்தார்.
- ✓ கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார்.

**நூற்குறிப்பு** : இப்பாடல், பள்ளிப் பறவைகள் என்னும் குழந்தைப் பாடல் தொகுப்பின் இரண்டாம் பகுதியில்

- ✓ இடம் பெற்றுள்ளது.
- ✓ இந்நூலிலுள்ள பாடல்கள் பல தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களில் வெளிவந்தவை. இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என்னும் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.

**எதிர்காலம் யாருக்கு? - மீரா**

**சொற்பொருள்** : தேட்டை – செல்வம்

**ஆசிரியர் குறிப்பு** : மீரா என்னும் பெயர் மீ. இராசேந்திரன் என்பதன் சுருக்கமே

- ✓ 1938 ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தார். தாம் படித்த சிவகங்கைக் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றினார்.
- ✓ இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், கோடையும் வசந்தமும், ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், குக்கூ ஆகிய கவிதை நூல்களையும், வா இந்தப் பக்கம், மீரா கட்டுரைகள் ஆகிய கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்.
- ✓ தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ்ச்சான்றோர் பேரவை விருது முதலியவற்றை வழங்கித் தமிழுலகம் இவரைச் சிறப்பித்துள்ளது.

**நூற்குறிப்பு** இப்பாடல் இராசேந்திரன் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இப்பாடல்களைத் தொகுத்தவர் சேந்தி உடையநாதபுரம் சீனிவாசன். இந்நூல், சிறுதுளி பெருவெள்ளம் என்னும் பெருந்தலைப்பினுள் அமுதத்துளிகள், தேன்துளிகள், கண்ணீர்த்துளிகள், பன்னீர்த்துளிகள், மழைத்துளிகள், குருதித்துளிகள் என்னும் சிறுதலைப்புகளின்கீழ் நாற்பத்தைந்து கவிதைகள் உள்ளன.

**உயிர்க்கோளம்**

- ✓ நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால், அதனை உயிர்க்கோளம் என வழங்குகிறோம். ஆறறிவு பெற்ற மனிதன் உயிரினக் குன்றின் மணிமுடியாக வீற்றிருக்கிறான்.
- ✓ மனிதனின் அறிவும் ஆற்றலும் அளப்பரியன. மனிதனே உயிர்க்கோளத்தின் மையம்.

**நிலத்தின் மேற்பரப்பு**

- ✓ உயிர்க்கோளம் தன்னகத்தே பல இயற்கைக் காட்சிகளைக் கொண்டுள்ளது. பரந்த வான்வெளியும், உயர்ந்த மலை முகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறும், கவின்மிகு சோலையும், கனிதரும் மரங்களும், கண்ணைக்கவரும் வண்ண மலர்களும், கருத்தைக் கவரும் வியத்தகு உயிரினங்களும் அதன் நிலைக்கறன்கள் ஆகும்.
- ✓ உயிர்களின் வாழ்க்கை இயற்கைச் சூழ்நிலைகளாகிய நீரையும் காற்றையும் கொண்டு நடைபெற்று வருகின்றது. இங்குப் பலவித இயற்கைக் காட்சிகள் நிலவியுள்ள போதிலும், அவையாவும் மாற்றத்திற்கு உட்பட்டவை. மலைகள், ஆறுகள், சமவெளிகள் முதலியன அன்றிருந்ததுபோல இன்று இல்லை.
- ✓ அவை பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. சான்றாக, அன்றிருந்த பூம்புகாரும், தனுசுக்கோடியும் இன்று கடலுக்குள் மூழ்கிவிட்டன. கடற்கரைக் கோவில்களுள் மாமல்லபுரம் ஒன்றுதான் எஞ்சியுள்ளது.
- ✓ எரிமலைகள் மற்றும் நிலநடுக்கங்களால் நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிவிடுவதும், புதிய நிலத்தோற்றங்கள் உருவாவதும் உண்டு.

**கடல் வளம்**

- ✓ உயிர்க்கோளம் என்றால், நாம் வாழும் நிலப்பகுதியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அதில் அடங்கியுள்ள நீர்ப்பகுதியையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.
- ✓ நிலத்தின் மேற்பரப்பில் முக்கால் பங்கு கடல் நீர் சூழ்ந்துள்ளது. கடல், என்றும் வற்றாத நீர் நிலையாகும். அது, தட்பவெப்பநிலையை ஒழுங்குபடுத்துகிறது.
- ✓ கடல் நீர் ஆவியாக மாறி, மேகங்களாகத் திரண்டு மழையாகப் பொழிகிறது. வளம் குன்றாத மீன்துறையாகக் கடல் பயன்படுகிறது. மனித வாழ்க்கைக்குத் தேவையான உப்பு, தாதுப்பொருள் முதலியவற்றை வழங்குகின்றது.
- ✓ முத்து, பவளம், கிளிஞ்சல், கடற்பஞ்சு, சங்கு முதலிய பொருள்களை அளிக்கின்றது. கடலில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன.

**வளிக்கோளம்**

- ✓ நிலப்பரப்பில் கடல்நீர் சூழ்ந்துள்ளதுபோலவே, காற்று மண்டலம் மேலே பரவியுள்ளது. நீர்ப்பாகத்தை நீர்க்கோளம் என்றும், காற்றுமண்டலத்தை வளிக்கோளம் என்றும் கூறுவர்.
- ✓ காற்றுமண்டலம் ஒரு கலவை. அதில் உயிர்வளி (ஆக்சிசன்) 21%, உப்புவளி (நைட்டிரசன்) 78% மற்றவளிகள் 1% கலந்துள்ளன. உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள நிலம், நீர், காற்று போன்றவை அடங்கிய நிலை சுற்றுச்சூழல் எனப்படும்.

RADIAN IAS ACADEMY

- ✓ தீயினால் சுடுவதும், நாவினால் தீயசொற்களைக்கொண்டு சுடுவதும் என்பது ஒற்றுமை தீயினால் சுட்டது ஆறும்; நாவினால் சொன்னது ஆறாது என்பது வேற்றுமையாகும். எனவே இப்பாடலில் வேற்றுமையணி இடம் பெற்றுள்ளது.

**5. நிரல் நிறையணி**

- ✓ சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல் நிறை அணியாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
- குறள், 45

- ✓ இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். "இல்வாழ்க்கையின் பண்பு எனப்படுவது அன்பு காட்டுவது. இல்வாழ்க்கையின் பயன் எனப்படுவது அறம் செய்தல் என்பதாகும்" என்பது இக்குறட்பாவின் கருத்து.
- ✓ இக்குறட்பாவில் அன்பும் அறனும் முதலடியில் அமைந்துள்ளன. அடுத்த அடியில், அச்சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி பண்பு, பயன் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, இது நிரல் நிறையணி.

**இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.**

1. A wolf in sheep's clothing - பசுத்தோல் போர்த்திய புலி.
2. Union is strength - ஒற்றுமையே வலிமை.
3. No smoke without fire - நெருப்பில்லாமல் புகையாது.
4. Might is right - வல்லான் வகுத்ததே வாய்க்கால்.
5. Many things fall between the cup and the lip - கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

# 10வது தமிழ் பாடத்தின் முக்கிய குறிப்புகள்

## வாழ்த்து – மாணிக்கவாசகர்

**சொற்பொருள்:**

| | |
|---|---|
| மெய் | - உடல் |
| விதிர்விதிர்த்து | - உடல் சிலிர்த்து |
| விரை | - மணம் |
| நெகிழ | - தளர |
| ததும்பி | - பெருகி |
| கழல் | - ஆண்கள் காலில் அணியும் அணிகலன் |
| சயசய | - வெல்க வெல்க |

**இலக்கணக்குறிப்பு:**

விடேன் - தன்மை ஒருமை வினைமுற்று

- ✓ **ஆசிரியர் குறிப்பு**
- ✓ சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர். இவர், திருவாதவூரில் பிறந்தவர். இவ்வூர், மதுரைக்கு அருகில் உள்ளது.
- ✓ மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்;
- ✓ பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது, திருப்பெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர். இதனால் மாணிக்கவாசகரை, 'அழுது அடியடைந்த அன்பர்' என்பர். திருவாசகமும் திருக்கோவையாரும் இவர் அருளியன.
- ✓ இவர் எழுப்பிய கோவில், தற்பொழுது ஆவுடையார்கோவில் என வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது.
- ✓ இவர்தம் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.
- ✓ **நூற்குறிப்பு:** சைவத்திருமுறைகள் பன்னிரண்டுனுள் எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன.
- ✓ திருவாசகத்தில் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
- ✓ திருவாசகம் கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யுமாதலால், 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் தொடர் வழங்கலாயிற்று.
- ✓ திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த ஜி.யு.போப், இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். திரு என்பது, நூலின் சிறப்பை உணர்த்த வந்த அடைமொழி, சதகம் என்பது, நூறு பாடல்களை கொண்ட நூலைக் குறிக்கும்.

## திருக்குறள் - ஒழுக்கமுடைமை

**சொற்பொருள்:**

- ✓ விழுப்பம் - சிறப்பு
- ✓ பரிந்து - விரும்பி
- ✓ தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும்.
- ✓ குடிமை - உயர்குடி
- ✓ இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்
- ✓ அழுக்காறு - பொறாமை
- ✓ ஆக்கம் - செல்வம்
- ✓ ஓல்கார் - விலகமாட்டார்
- ✓ உரவோர் - மனவலிமையுடையோர்
- ✓ ஏதம் - குற்றம்
- ✓ எய்துவர் - அடைவர்
- ✓ இடும்பை - துன்பம்
- ✓ வித்து - விதை
- ✓ ஒல்லாவே - இயலாவே
- ✓ ஒழுகல் - நடத்தல்இ வாழ்தல்
- ✓ உலகம் - உயர்ந்தோர்,
- ✓ ஒட்ட – பொருந்த
- ✓ கூகை - கோட்டான்,
- ✓ இகல் - பகை
- ✓ திரு - செல்வர்,
- ✓ தீராமை - நீங்காமை
- ✓ அருவினை - செய்தற்கரிய செயல்
- ✓ ஞாலம் - உலகம்
- ✓ ஒழுக்கம் - அடங்கியிருப்பது

RADIAN IAS ACADEMY

- ✓ இந்நூல் சிறப்புப் பாயிரம் தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது.
- ✓ இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது. ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக்கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர். இம்மருந்து உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும்.
- ✓ அதுபோல, இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும். இந்நூலின் ஐம்பத்தொன்பதாவது பாடல், நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

## உயர்தனிச் செம்மொழி

**"வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி"**

பாவலரேறு பெருஞ்சித்திரனார். '**திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்**' என்று பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். "தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி, அதுவே நம்மொழி" என்பார் **பாவாணர்.**

### நிலைத்த மொழி

- ✓ உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன என்பர் மொழிநூலார்.
- ✓ இவற்றுள் இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் மூவாயிரம்.
- ✓ இவற்றுள்ளும் ஈராயிரமாண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன.
- ✓ இவற்றுள் இலத்தீனும் ஈப்ருவும் வழக்கிழந்து போயின. இன்றும் நிலைத்து நிற்கும் மொழிகளுள் நம் தமிழ்மொழியும் ஒன்று.
- ✓ ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கு, அதன் பழைமையும் வளமையும் மட்டும் போதாது.
- ✓ அம்மொழி பேச்சுமொழியாக, எழுத்துமொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக பயிற்றுமொழியாக நிலைபெற்றிடல்வேண்டும். இலக்கிய வளம், இலக்கண அரண், மிகுந்த சொல்வளம், வரலாற்றுப் பின்னணி, தனித்தியங்கும் மாண்பு, காலத்திற்கேற்ற புதுமை எனப் பலவகைகளிலும் சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ்மொழிக்கு இவை அனைத்தும் பொருந்தும்.

### செம்மொழித் தகுதிப்பாடுகள்

1.தொன்மை 2.பிறமொழித் தாக்கமின்மை 3. தாய்மை 4.தனித்தன்மை 5. இலக்கிய வளம், இலக்கணச்சிறப்பு 6.பொதுமைப் பண்பு 7. நடுவுநிலைமை 8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு 9.உயர்சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு 11. மொழிக் கோட்பாடு எனப் பதினொரு தகுதிக் கோட்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் முஸ்தபாவும், மொழிவல்லுநர்களும் வரையறுத்துள்ளார்கள்.

**1.தொன்மை**

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக் கண்டம். அவன் பேசிய மொழி தமிழ்மொழியே என்கின்றனர் ஆய்வாளர். அக்குமரிக்கண்டத்தில் முதல், இடைத்தமிழ்ச்சங்கங்கள் அமைத்துக் தமிழர் மொழியை வளர்த்தனர். இந்நிலைப்பகுதி கடற்கோளால் கொள்ளப்பட்டதால், தமிழ்ச்சான்றோரால் மூன்றாவது தமிழ்ச்சங்கம் இன்றைய மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது. இது மூவாயிரம் ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தது என்பர். உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை, அதன் தொன்மையைக் கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பார் கம்பர்.

**2. பிறமொழித் தாக்கமின்மை**

தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது. மிகுதியான வேர்ச் சொற்களைக் கொண்ட மொழி, தமிழ். அவ்வேர்ச் சொற்களைக் கொண்டே புத்தம் புதுக் கலைச்சொற்களைத் தமிழ்மொழியால் உருவாக்கிக்கொள்ள இயலும்.

**3. தாய்மை**

தமிழ்மொழியானது திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. அது பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது. என்பார் கால்டுவெல். ஆயிரத் தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது தமிழ். ஆதலால், உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ் என்பது பெருமைக்குரிய ஒன்று.

**4. தனித்தன்மை**

இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.

**5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு**

- ✓ உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு.

RADIAN IAS ACADEMY

சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் துணையுடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

**தமிழ்ப்புலமையும் தனித்தமிழ்ப்பற்றும்**

- ✓ யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு, திராவிட சாஸ்திரி என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார்.
- ✓ பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய தனிப்பாசுரத்தொகை என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்டார்.
- ✓ இந்நூலினை, ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- ✓ பரிதிமாற்கலைஞர், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்தபோது கல்லூரி முதல்வராக இருந்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் மில்லர்.
- ✓ டென்னிசன் இயற்றிய ஆர்தரின் இறுதி என்னும் நூலில் துடுப்புகளை அசைத்துச் செலுத்தப்பட்ட படகானது அழகிய அன்னப்பறவைக்கு உவமையாக்கப்பட்டிருந்தது.
- ✓ அதனை வியந்து பாராட்டிய மில்லர். "தமிழில் இதுபோன்ற உவமை ஏதேனும் உண்டோ?" என்று மாணவர்களிடம் வினவினார். அதற்குப் பரிதிமாற்கலைஞர், "பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே கம்பராமாயணக்குகப்படலத்தில் இத்தகைய உவமை உள்ளது" என்று கூறி, 'விடுநனி கடிது' என்னும் அப்பாடலைப் பாடியும் காட்டினார்.

**தமிழின் சிறப்பை உணர்த்தல்**

- ✓ தமிழ்ச்சொற்களோடு வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதுதல், மணியும் பவளமும் கலந்து கோத்த மாலைபோலாகும் எனத் தமிழின் அருமை உணராதோர் கூறினார். ஆனால், அது தமிழ்மணியோடு பவளத்தைப்போலச் செந்நிறம் உடையதான மிளகாய்ப்பழம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது பரிதிமாற்கலைஞரின் கருத்து.

**தமிழ்த்தொண்டு**

- ✓ பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில், பட்டவகுப்புகளில் தமிழை விலக்கி, வடமொழியைக் கொண்டுவரப் பல்கலைக்கழகத்தாரால் முடிவெடுக்கப்பட்டது.
- ✓ 1902ஆம் ஆண்டில் பரிதிமாற்கலைஞரின் உறுதியான எதிர்ப்பால், அம்முடிவைப் பல்கலைக்கழகம் கைவிட்டது.
- ✓ பரிதிமாற்கலைஞர், ரூபாவதி, கலாவதி முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார்.
- ✓ சித்திரக்கவி எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்ததால், சித்திரக்கவி என்னும் நூலை எழுதினார்.
- ✓ குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் ஐம்பத்தொரு பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்.
- ✓ மு.சி. பூர்ணலிங்கம் தொடங்கி வைத்த ஞானபோதினி என்னும் இதழைப் பரிதிமாற்கலைஞர் நடத்தினார்.
- ✓ பரிதிமாற்கலைஞர் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் செந்தமிழ் இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரைவரைந்தார்.
- ✓ தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார். இவர் தமது முப்பத்து மூன்றாம் அகவையில் (02.11.1903) இயற்கை எய்தினார்.
- ✓ நடுவணரசு பரிதிமாற்கலைஞருக்கு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ளது.

**பரிதிமாற்கலைஞரின் சொல்லாக்கங்கள்**

| | |
|---|---|
| Aesthetic | - இயற்கை, வனப்பு |
| Biology | - உயிர்நூல் |
| Classical Language | - உயிர்தனிச்செம்மொழி |
| Green Rooms | - பாசறை |
| Instinct | - இயற்கை அறிவு |
| Order of Nature | - இயற்கை ஒழுங்கு |
| Snacks | - சிற்றுணா |

## எழுத்து

## (சார்பெழுத்துகள்: ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள்)

1. **ஐகாரக்குறுக்கம்**

- ✓ ஐ - இரண்டு மாத்திரை
- ✓ ஐம்பது- சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது
- ✓ தலைவன்-சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது
- ✓ கடலை-சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது
- ✓ இவ்வாறு சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்த ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

**ஔகாரக்குறுக்கம்:**

- ✓ சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.
- ✓ ஔவை, வௌவால் - ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.
- ✓ சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

**மகரக்குறுக்கம்**

- ✓ 'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது 'ம்' என்னும் மெய்யெழுத்து,

RADIAN IAS ACADEMY

**10. தன்வினைத்தொடர் (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது)**

✓ பாத்திமா திருக்குறள் கற்றாள்.

✓ இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

**11. பிறவினைத்தொடர் (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது)**

✓ பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்.

✓ இது பிறவினைத்தொடர், பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத் தொடராகும்.

**12. நேர்கூற்றுத்தொடர் (ஒருவர் பேசுவதை அவர் பேசியபடியே கூறுவது)**

✓ ஆசிரியர், "மாணவர்களே, நாளை ஒழுக்கமுடைமையில் குறள்கள் ஐந்தனைப் படித்து வருக", என்றார். இவ்வாறு ஆசிரியர், மாணவர்களிடம் கூறிய இத்தொடர் நேர்கூற்றுத் தொடராகும்.

✓ இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும், தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும், இங்கு, இப்போது, இவை எனச் சுட்டுப்பெயர்கள் வரும், நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்.

✓ (எ-டு) தேன்மொழி பொன்னியிடம்,"நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள்.

**13. அயற்கூற்றுத்தொடர்**

✓ ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது, அயற்கூற்றுத்தொடர், பொன்னியிடம் தேன்மொழி தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.

✓ அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா, இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும், சுட்டுப்பெயர்கள் அது, அவை, அங்கே என மாறும், காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும், என்று, ஆக என்னும் இணைப்புச்சொற்களும் இடம்பெறும்.

**14. உடன்பாட்டுத்தொடர்**

✓ செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத் தொடர், கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.

**15. எதிர்மறைத்தொடர்**

✓ கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்.

✓ இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இ∴து எதிர்மறைத்தொடர்.

**16. பொருள்மாறா எதிர்மறைத்தொடர்**

✓ "கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்" இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது பொருள்மாறா எதிர்மறைத்தொடர் எனப்படுகிறது.

✓ இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அ∴து உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருகவேண்டும் என்பது எனது பிரார்த்தனை – **தந்தை பெரியார்**

## சிலப்பதிகாரம்

**மதுரைக்காண்டம்**

**வழக்குரை காதை**

✓ காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன். காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் கண்ணகி. இவ்விருவரும் மனையறம்பூண்டு இன்புற்று வாழ்ந்தனர்.

✓ கோவலன், ஆடலரசி மாதவியை விரும்பி கண்ணகியை விட்டுப் பிரிந்தான். அவன், இந்திரவிழாவில் கானல்வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்ட கோவலன், மாதவியை விட்டுப் பிரிந்தான், பிரிந்தவன், தன்மனைவி கண்ணகியிடம் சென்றான். அவன், தான் இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணினான்.

✓ வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அவர்களுக்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்னும் சமணத்துறவி சென்றார். அவர், மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார். கோவலன் சிலம்பு விற்றுவர மதுரைநகரக் கடைவீதிக்குச் சென்றான். விலைமதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றனைக் கோவலன் விற்பதனைப் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் அறிந்தான்.

✓ பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன், பொய்யான பழியைக் கோவலன்மேல் சுமத்தினான். அதனை ஆராய்ந்து பாராத மன்னன்,'அவனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க' என்று ஆணையிட்டான். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதரி மூலம் அறிந்த கண்ணகி பெருந்துயருற்றாள்.

✓ கண்ணகியின் கால் சிலம்பு மாணிக்கப்பரல்கள் உடையது. கோப்பெருந்தேவியின் கால் சிலம்பு முத்துக்கள் உடையது.

**சொற்பொருள்:** கொற்கை - பாண்டிய நாட்டின் துறைமுகம்.

சூளுடை கானகம் - அச்சம் தரும் காடு,

உகந்த - விரும்பிய,

தாருகன் - அரக்கன்

இமையவர் - தேவர்

புள் - பறவை (புறா)

புன்கண் - துன்பம்

ஆழி - தேர்ச்சக்கரம்

RADIAN IAS ACADEMY

களைந்தோம் – களை + த் (ந்) + த் + ஓம்
களை – பகுதி த் - சந்தி, த் - ந் ஆனது விகாரம் த் - இறந்தகால இடைநிலை ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல்:**

வெளியுலகில் - வெளி + உலகில்,

செந்தமிழ் - செம்மை + தமிழ்

ஊரறியும் - ஊர் + அறியும்

எவ்விடம் - எ + இடம்.

**ஆசிரியர் குறிப்பு:** பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்

- ✓ 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் 29ஆம் நாள் புதுவையில் பிறந்தார்.
- ✓ தந்தை கனகசபை, தாய் இலக்குமி. பாரதியின்மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் ஆகிய சிறப்புப்பெயரால் வழங்கப்படுகிறார்.
- ✓ குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர்தம் படைப்புகளாம். தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியுள்ளது.
- ✓ ஆண்டு தோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது. திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளது.

**பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்**

- ✓ "தொண்டு செய்து பழுத்த பழம்" இப்பாடல் வரிகள் பெரியாரைப் பற்றிய பாவேந்தரின் படப்பிடிப்பு.
- ✓ பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை. ஒன்று, பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள். குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன அகற்றப்படவேண்டியவை.
- ✓ பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது. என்று பெரியார் உறுதியாக எடுத்துரைத்தார்.
- ✓ "ஆணுக்குப்பெண் இளைப்பில்லை" என்று பெரியார் உறுதியாக எடுத்துரைத்தார்.
- ✓ பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார்.
- ✓ "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்" என்று பெரியார் நாப்பறை ஆர்த்தார். கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை என்றும் தெரிவித்தார்.

## சொல்

- ✓ ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்.

**மூவகை மொழிகள்**

- ✓ மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

**1.தனிமொழி**

- ✓ ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது, **தனிமொழி**

(எ-டு) வா, கண், செய்தான்.

**2. தொடர்மொழி**

- ✓ இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருளை உணர்த்துவது **தொடர்மொழி**

(எ-டு) 1. படம் பார்த்தான்

**3. பொதுமொழி**

- ✓ ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்துநின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, **பொதுமொழி**

(எ-டு) அந்தமான்

- ✓ 'அந்தமான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த + மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் (விலங்கு) என வேறுபொருளையும் தருகின்றது.

**வினைச்சொல்**

- ✓ இராமன் வந்தான், கண்ணன் நடந்தான்
- ✓ இத்தொடர்களில் இராமன் , கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள். அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான் , நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும் , நடப்பதும் ஆகிய செயல்களைக் குறிப்பதால்.
- ✓ இவை வினைச்சொற்கள். இவையே பயனிலைகளாகவும் (முடிக்கும் சொற்களாகவும்) உள்ளன. இவ்வாறு, எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

**வினைமுற்று**

- ✓ அருளரசு வந்தான்
- ✓ இத்தொடர்களில் வந்தான். என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.
- ✓ வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும். முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும், திணை, பால், எண், இடங்களைக் காட்டும் இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

**தெரிநிலை வினைமுற்று**

- ✓ செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

RADIAN IAS ACADEMY

முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
முப்பால் - அறம், பொருள், இன்பம்
மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை
மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்
நாற்றிசை - கிழக்கு,மேற்கு,வடக்கு,தெற்கு
நானிலம் - குறிஞ்சி,முல்லை,மருதம் நெய்தல்
ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
ஐம்புலன் - தொடுஉணர்வு, உண்ணல், உயிரித்தல், காணல் , கேட்டல்
ஐம்பொறி - மெய், வாய், மூக்கு, கண், செவி

## கம்பராமாயணம்

**சொற்பொருள்:**

அம்பி – படகு
நாயகன் - தலைவன்
நாமம் - பெயர்
கல் - மலை
திரள் - திரட்சி
துடி – பறை
அல் - இருள்
சிருங்கிபேரம் - கங்கைக்கரையோர நகரம்
திரை – அலை
மருங்கு - பக்கம்
பண்ணவன் - நற்குணங்கள் பல உடைய இலக்குவன்
பரிவு - இரக்கம்
அருத்தியன் - அன்பு உடையவன்,
மாதவர் – முனிவர்,
முறுவல் - புன்னகை
சீர்த்த – சிறந்த,
பவித்திரம் - தூய்மையானது.
இனிதின் - இனிமையானது,
உண்டனெம் - உண்டோம் என்பதற்குச் சமமானது.
தழீஇய – கலந்த
நெடியவன் - உயர்ந்தவனாகிய இராமன்,
குறுகினன் - வந்துள்ளான்.
இறை – தலைவன்
நாவாய் - படகு
அமலன் - குற்றமற்றவன், இளவல் - தம்பி
குரிசில் - தலைவன்
துன்பு - துன்பம்
உன்னேல் - நினைக்காதே

**இலக்கணக்குறிப்பு:**

போர்க்குகன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.
கல்திரள்தோள் - உவமைத்தொகை
நீர்முகில் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
திரைக்கங்கை (அலைகளை உடைய கங்கை) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
இருந்தவள்ளல் - பெயரெச்சம்
வந்துஎய்தினாள் - வினையெச்சம்
கூவா - ஈறுகொட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
குறுகி சேவிக்க - வினையெச்சங்கள்
தேவா - விளி
கழல் - தானியாகுபெயர்
வந்தனென் - தன்மை ஒருமை வினைமுற்று
அழைத்தி (அழைப்பாய்) - முன்னிலை ஒருமை வினைமுற்று
வருக - வியங்கோள் வினைமுற்று
பணிந்து,வளைத்து,புதைத்து – வினையெச்சங்கள்
இருத்தி – முன்னிலை ஒருமை வினைமுற்று, தேனும் மீனும் - எண்ணும்மை
மாதவர் (மா + தவர்) – உரிச்சொற்றொடர்.
அமைந்த காதல் - பெயரெச்சம்
சீர்த்த - ஒன்றன்பால் வினைமுற்று
தழீஇய (தழுவிய) – சொல்லிசை அளபெடை
கார்குலாம் (காரது குலாம்) – ஆறாம் வேற்றுமைத்தொகை,
உணர்த்துவான் - வினையாலணையும் பெயர், பார்த்தகண்ணை – பெயரெச்சம்
தீர்கிலேன், செய்குவென் - தன்மை ஒருமை வினைமுற்றுகள்
தீராக் காதலன் - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
மலர்ந்த கண்ணன் - பெயரெச்சம்
இனிய நண்ப – குறிப்புப் பெயரெச்சம்
நெடுநாவாய் - பண்புத்தொகை
தாமரை நயனம் - உவமைத்தொகை
நனிகடிது – உரிச்சொற்றொடர்
நெடுநாவாய், நெடுநீர் – பண்புத்தொகைகள்
என்னுயிர் - ஆறாம் வேற்றுமைத்தொகை
நன்னுதல் - பண்புத்தொகை
நின்கேள் - நான்காம் வேற்றுமைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

ஈட்டினான் - ஈட்டு + இன் + ஆன், ஈட்டு - பகுதி இன் - இறந்தகாலஇடைநிலை ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

எய்தினான் - எய்து + இன் + ஆன் எய்து – பகுதி, இன் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

இருந்த - இரு + த் (ந்) + த + அ இரு – பகுதி த் - சந்தி த் ந் ஆனது . விகாரம் த் - இறந்தகால இடைநிலை அ – பெயரெச்ச விகுதி.

இறைஞ்சினான் - இறைஞ்சு + இன் + ஆன், இறைஞ்சு – பகுதி, இன் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் - வினைமுற்று விகுதி,

வந்தனென் - வா (வ) + த் (ந்) + த் + அன் + என், வா – பகுதி, வ – எனக் குறுகியது விகாரம், த் -சந்தி த் - ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, என் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

RADIAN IAS ACADEMY

ஆண்டு ஏப்பிரல் திங்கள் பதினான்காம் நாள் அம்பேத்கர் பிறந்தார்.

- ✓ தந்தையார் இராம்ஜி சக்பால், தயார் பீமாபாய். அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி.
- ✓ பீமாராவின் ஆசிரியர் அம்பேத்கர்.
- ✓ அம்பேத்கர் 1908 இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார். பின்னர், பரோடா மன்னர் பொருளுதவியுடன் 1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- ✓ அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915இல் முதுகலைப் பட்டமும் 1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். பின்னர், மும்பையில் சிறிதுகாலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- ✓ மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.
- ✓ ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்தைக் கல்வி கற்பதற்காகவே செலவழித்தார்.

**முதல் உரிமைப்போர்**

- ✓ தந்தை பெரியார் 1924ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலயநுழைவு முயற்சியும், 1927ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனித உரிமைக்காக முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள் எனலாம்.

**விடுதலை உணர்வும் வட்டமேசை மாநாடும்**

- ✓ வட்டமேசை மாநாடு 1930ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்மாநட்டில் அண்ணல் அம்பேத்கர் கலந்துகொண்டார்.

**கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்**

- ✓ 1946ஆம் ஆண்டு, மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார்.
- ✓ மும்பையில், அவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
- ✓ இவர் எழுதிய 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்னும் நூலைப் பொருளாதாரத் துறையின் சிறந்த நூலாகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேராசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள்.

**இந்திய வரலாற்றின் புதிய பக்கங்கள்**

- ✓ சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது. என்றார் அம்பேத்கர்.

**அண்ணலாரின் இலட்சியச் சமூகம்**

- ✓ அண்ணல் அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி. ஆவர், "ஓர் இலட்சிய சமூகம் சுதந்தரம், சமத்துவம், சகோதாரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றார்.
- ✓ எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்று, சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தார் அம்பேத்கர்.

**பெரியோர் போற்றிய பெருந்தகை**

- ✓ "அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர், பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி, அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் நாம் காணமுடியாது" என்று பெரியார் புகழாரம் சூட்டினார்.
- ✓ "பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்" என்று அம்பேத்கரை நேரு புகழ்ந்துரைத்தார்.
- ✓ "அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர், மிகவும் ஆர்வத்துடனும் விரைந்தும் தன்னந் தனியாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்" என்று இராசேந்திர பிரசாத் பாராட்டியுள்ளார். நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் ஆறாம்நாள் புகழுடம்பு எய்தினார்.
- ✓ இந்திய அரசு, பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு 1990ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.
- ✓ இருபெருந் தலைவர்கள் இந்தியாவில் இருந்தார்கள். ஒருவர் பெரியார், மற்றொருவர் அம்பேத்கர்.
- ✓ வடக்கே இருந்து அம்பேத்கரும் தெற்கேயிருந்து பெரியாரும் இடைவிடாது உழைத்ததனால் சாதி என்னும் பாறை உடைந்து சுக்கு நூறானது.

**அன்றாட வாழ்வில் சட்டம்**

- ✓ சட்டம் என்பதற்குச் செம்மை என்பது பொருள்.
- ✓ செம்மை என்னும் சொல் நடுவுநிலை என்னும் பொருளிலும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

**அரசியல் அமைப்புச் சட்டம்**

- ✓ சட்டங்கள் பலவகைப்படும். உலக நாடுகளிடையே தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை அனைத்து நாட்டுச் சட்டம் என்கிறோம்.
- ✓ நம் நாட்டின் முதன்மையான வாழ்வியல் அடிப்படைச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டம் என்கின்றோம். நாட்டின் நாடாளுமன்றம் மாநிலச் சட்டமன்றங்களும் அரசுத் துறைகளின் அலுவலகங்களும் இதன் அடிப்படையில்தான் இயங்குகின்றன.

**சமயச் சார்புச் சட்டங்கள்:**

- ✓ இந்தியா சமயச் சார்பற்ற நாடு, எனினும், மக்கள் தாம் பின்பற்றும் சமயங்களுக்கு ஏற்ப வாழ உரிமையுடையவர் ஆவர். இந்தியாவில் அவரவர் பின்பற்றிய சமயத்திற்கேற்ற சட்டங்களும் உள்ளன.

RADIAN IAS ACADEMY

யவனர் - புதுவருவாய்

வட்டி – பனையோலைப் பெட்டி

நெடிய மொழிதல் - அரசரிடம் சிறப்புப் பெறுதல்

**இலக்கணக்குறிப்பு:**

சென்ற வட்டி – பெயரெச்சம்

செய்வினை – வினைத்தொகை

புன்கண் , மென்கண் - பண்புத்தொகைகள்

ஊர(ஊரனே) – விளித்தொடர்

**பகுபத உறுப்பிலக்கணம்:**

சென்ற – செல் (ன்) + ற் + அ. செல் - பகுதி ல் -ன் ஆனது விகாரம், ற் - இறந்தகால இடைநிலை அ – பெயரெச்ச விகுதி

சேர்ந்தோர் – சேர் + த் + த் + ஓர். சேர் - பகுதி, த் - சந்தி, த் - ந் ஆனதுவிகாரம், த் - இறந்தகால இடைநிலை ஓர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல்:**

அங்கண் - அம் + கண்,

பற்பல – பல + பல

புன்கண் - புன்மை + கண்,

மென்கண் - மென்மை+ கண்

**ஆசிரியர் குறிப்பு:** மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், மிளைகிழான் நல்வேட்டனார் என்னும் பெயர் பெற்றார்.

- ✓ ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார்.
- ✓ இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடலும் குறுந்தொகையில் ஒன்றுமாக ஐந்து பாடல் உள்ளன. இவர் சங்ககாலத்தவர்.

**நூற்குறிப்பு:** பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள் எனப் போற்றப்படுவன. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், **'நல்'** என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் நற்றிணையே. இஃது **அகத்திணை** நூலாகும்.

- ✓ இதில், ஐந்திணைக்குமான பாடல்கள் உள்ளன.
- ✓ இதிலுள்ள பாடல்கள், ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை.
- ✓ இப்பாடல்களைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி.
- ✓ நற்றிணைப் பாடல்கள் நானூறு, பாடினோர் இருநூற்றெழுபத்தைவர்.

## புறநானூறு - கண்ணகனார்

**சொற்பொருள்:**

துகிர் - பவளம், நகம்

மன்னிய - நிலைபெற்ற

சேய் - தொலைவு

தொடை - மாலை

கலம் - அணி.

**இலக்கணக்குறிப்பு:**

பொன்னும் துகிரும் முத்தும் பவளமும் மணியும் - எண்ணும்மைகள்

மாமலை - உரிச்சொற்றொடர்

அருவிலை, நன்கலம் - பண்புத்தொகைகள்

**பகுபத உறுப்பிலக்கணம்:**

புணர்ந்து, புணர் + த் (ந்) + த் + உ. புணர் - பகுதி த் - சந்தி, த் - ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி.

**பிரித்தறிதல்:**

அருவிலை - அருமை + விலை

நன்கலம் - நன்மை + கலம்

**ஆசிரியர்குறிப்பு:** இப்பாடலாசிரியர் கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.

**நூற்குறிப்பு:** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.

- ✓ புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது.
- ✓ இந்நூல் சங்ககால மக்களின் வாழ்க்கைநிலை, மன்னர்களின் வீரம், புகழ், கொடை, வெற்றிகள் பற்றிய பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. தமிழரின் வரலாற்றை அறியவும், பண்பாடு உயர்வை உணரவும் பெரிதும் உதவுகிறது.

## பேச்சுக்கலை

- ✓ மேடைப்பேச்சில் நல்ல தமிழைக்கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த்தென்றல் திரு.வி.க, பேரறிஞர் அண்ணா, ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் முதலியோர் ஆவர்.

**முக்கூறுகள்**

- ✓ பேசும்பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்துப் பேசுவதனையே பேச்சுமுறை என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

## வினா, விடைவகைகள், ஒருபொருட் பன்மொழி

**வினா வகை**

- ✓ வினா ஆறுவகைப்படும் அவை. அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பன.

**1. அறிவினா**

- ✓ தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும்பொருட்டு வினவப்படும் வினா அறிவினா.

(எ-டு) திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.

**2. அறியாவினா**

- ✓ தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது அறியாவினா.

(எ-டு) எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

**3. ஐயவினா**

- ✓ மறைநூல் - நான்மறை
- ✓ சேய் - குழந்தை
- ✓ பூதி - திருநீறு

**பகுபத உறுப்பிலக்கணம்:**

காய்ந்தார் – காய் + த் (ந்) + த் + ஆர் காய் - பகுதி, த் - சந்தி, த் - ந்த ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

நிறைந்த – நிறை த் (ந்) த் அ. நிறை – பகுதி, த் - சந்தி, த் - ந் ஆனது விகாரம் த் - இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

வருவார் – வா (வரு) + வ் + ஆர். வா – பகுதி வா – வரு என ஆகியது விகாரம், வ் - எதிர்கால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

அறிந்து – அறி + த் (ந்) + த் + உ, அறி – பகுதி, த் - சந்தி, த் - ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ – வினையெச்சவிகுதி.:

ஆக்கி – ஆக்கு + இ, ஆக்கு – பகுதி, இ - வினையெச்சச விகுதி.

பெற்றேன் - பெறு (பெற்று) + ஏன். பெறு – பகுதி (பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது), ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

தீண்டிற்று – தீண்டு + இன் (ற்) + று, தீண்டு – பகுதி, இன் - இறந்தகால இடைநிலை ன் - ற் ஆனது விகாரம், று – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

தளர்ந்து – தளர் + த் (ந்) + த் + உ தளர் – பகுதி, த் - சந்தி, த் - ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

உரையார் – உரை + ய் + (ஆ) + ஆர். ஊரை – பகுதி, ய் - உடம்படுமெய், ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

புரிந்த – புரி + த் (ந்) + த் + அ. புரி – பகுதி, த் - சந்தி – **த்** ந் த ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

**இலக்கணக்குறிப்பு:**

- ✓ செலவொழியா வழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்,
- ✓ வழிக்கரை – ஆறாம் வேற்றுமைத்தொகை,
- ✓ உறுவேனில் - உரிச்சொற்றொடர்,
- ✓ நீர்த்தடம் - இரண்டாம் வேற்றுமை உருபுமும் பயனும் உடன்தொக்கதொகை,
- ✓ பந்தர் - பந்தல் என்பதன் கடைப்போலி.
- ✓ அணைந்த வாகீசர் - பெயரெச்சம்
- ✓ பொருங்கடல் - வினைத்தொகை
- ✓ பெருமையறிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- ✓ அறிந்து , அடைந்து - வினையெச்சங்கள்
- ✓ கரகமலம் - உருவகம்
- ✓ பொழிந்திழிய - வினையெச்சம்
- ✓ தேசம் - இடவாகுபெயர்
- ✓ வந்தவர் - வினையாலணையும் பெயர்
- ✓ நற்கறிகள், இன்னமுதம் - பண்புத்தொகைகள்
- ✓ துளங்குதல் - தொழிற்பெயர்
- ✓ பூதி சாத்த - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- ✓ அங்கணர் - அன்மொத்ழிதொகை
- ✓ நோக்கி - வினையெச்சம்
- ✓ எழுந்து, சென்று - வினையெச்சங்கள்
- ✓ பணிவிடம் - ஆறாம் வேற்றுமை தொகை
- ✓ கேளா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

**பிரித்தறிதல்:**

- ✓ செலவொழியா - செலவு + ஒழியா,
- ✓ வழிக்கரை - வழி ᴗ கரை.
- ✓ வந்தணைந்த - வந்து அணைந்த
- ✓ எம்மருங்கும் - எ ᴗ மருங்கும்.
- ✓ எங்குறைவீர் - எங்கு + உறைவீர்
- ✓ கண்ணருவி - கண் ᴗ அருவி
- ✓ உடம்பெல்லாம் - உடம்பு ᴗ எல்லாம்
- ✓ திருவமுது - திரு ᴗ அமுது
- ✓ மனந்தழைப்ப - மனம் ᴗ தழைப்ப
- ✓ நற்கறிகள் - நன்மை ᴗ கறிகள்,
- ✓ இன்னமுது - இனிமை ᴗ அமுது
- ✓ வாளரா - வாள் ᴗ அரா
- ✓ அங்கை - அகம் ᴗ கை
- ✓ நான்மறை - நான்கு ᴗ மறை
- ✓ விதிர்ப்புற்றஞ்சி - விதிர்ப்பு ᴗ உற்று அஞ்சி
- ✓ பாவிசை - பா + இசை

**ஆசிரியர் குறிப்பு:** பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார். இவர், தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர்.

- ✓ அநபாயச்சோழனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர்.
- ✓ உத்தமசோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர். இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றும் தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றுவர். இவரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

**நூற்குறிப்பு:** தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர். அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் 'பெரியபுராணம்' என்னும் பெயர் பெற்றது.

- ✓ இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது, தில்லை நடராசப்பெருமாள், 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர்.
- ✓ இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வ மணம் கமழும் தன்மையுடையன.
- ✓ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார். 'பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

**விரியுவமை**

- ✓ உவமை, உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) ஆகிய இரண்டனையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை. இ∴து, உவமைத் தொடர் எனப்படும்.
- ✓ (எ-டு) தேன்போன்ற மொழி
- ✓ இத்தொடரில் தேன் - உவமை, மொழி – உவமேயம், போன்ற – உவம உருபு,
- ✓ உவம உருபு, இத்தொடரில் வெளிப்பட வந்துள்ளதனால் இது, விரியுவமை எனப்படும். இ∴து உவமைத் தொடராகும்.

**தொகையுவமை**

தேன்மொழி

- ✓ இதில் உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இதனைத் தொகையுவமை என்பர். இதனை, உவமத்தொகை எனவும் கூறுவர்.

## உவமை உருவக மாற்றம்

- ✓ பவளவாய் (பவளம் போன்ற வாய்) - இத்தொடரில் வாய் பவளத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.
- ✓ பவளம் - உவமை, வாய் - உவமேயம் (உவமையை ஏற்கும் பொருள்)
- ✓ இவ்வாறு, ஒரு பொருளை அதனைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும்.
- ✓ வாய்ப்பவளம், இத்தொடரில் வாயே பவளம் எனப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. உவமைத்தொகையில் முதல் பகுதி (பவளம்) உவமானமாகவும் அதன் அடுத்த பகுதி உவமேயமாகவும் (வாய்) அமையும். உருவகத்தில், உவமேயம் முதல் பகுதி, உவமை அடுத்த பகுதியாக இருக்கும். இவ்வாறு உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது, இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப்படுத்திக் காட்டுவதே உருவகம்.

| உவமை | - | உருவகம் |
|---|---|---|
| அமுதமொழி | - | மொழியமுது |
| கயற்கண் | - | கண்கயல் |
| தேன்தமிழ் | - | தமிழ்த்தேன் |
| பூவிரல் | - | விரல்பூ |
| மதிமுகம் | - | முகமதி |
| மலரடி | - | அடிமலர் |
| முத்துப்பல் | - | பல்முத்து |
| விற்புருவம் | - | புருவவில் |
| மலர்ப்பாதம் | - | பாதமலர் |

| தொடர் | பொருள் |
|---|---|
| 1. ஆயிரங்காலத்துப்பயிர் | - நீண்ட காலத்திற்குரியது |
| 2. எடுப்பார் கைப்பிள்ளை | - தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர் |
| 3. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது | - பட்டறிவில்லாத படிப்பறிவு |
| 4. அவலை நினைத்து உரலை இடித்தல் | - எண்ணமும் செயலும் ஒத்துவராமை |
| 5. முதலைக்கண்ணீர் | - பொய்யழுகை |
| 6. அவசரக்குடுக்கை | - எண்ணித் துணியாதார் |
| 7. ஆகாயத்தாமரை | - இல்லாத ஒன்று |
| 8. கம்பி நீட்டல் | - சொல்லிக்கொள்ளாமல் செல்லல் |
| 9. தாளம்போடுதல் | - எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளல் |
| 10. கானல்நீர் | - இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இராது |
| 11. பஞ்சாய்ப்பறத்தல் | - அலைந்து திரிதல் |
| 12. குட்டிச்சுவர் | - பயனின்றி இருத்தல் |
| 13. கொட்டியளத்தல் | - மிகுதியாகப் பேசுதல் |

## தமிழ்விடு தூது

போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிபுத்தூரனும் , தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் இருந்தமையால், தமிழே நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.

**சொற்பொருள்:**

அரியாசனம் - சிங்காசனம்

பா ஓ நான்கு – வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா

வரம்பு – வரப்பு

ஏர் - அழகு

நாற்கரணம்- மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

நெறிநாலு – வைதருப்பம் (ஆசுகவி), கௌடம் (மதுரகவி), பாஞ்சாலம் (சித்திரகவி), மாகதம் (வித்தாரகவி) ஆகிய செய்யுள் நெறிகள்.

இவை விதையாய் உருவகம் செய்யப்பட்டன.

நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு

இவை வயலின் விளைவாக உருவகம் செய்யப்பட்டுள்ளன.

கொட்டிகொளும் - கூட்டமாகக் கூடும்

சீத்தையர் – கீழானவர், போலிப்புலவர்

தூர்கட்டி – பயிர் அடி பருத்து வளர்தல்

நாளிகேரம் - தென்னை.

**நூற்குறிப்பு:** தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று. கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அ∴றிணைப்பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்.

மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மேல் காதல்கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது.

RADIAN IAS ACADEMY

- ✓ செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை, அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம் (புத்தபிக்கும் தங்குமிடம்), வெண்கலத்தாலான புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன. இவை பண்டைய காவிரிப்பூம்பட்டின மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என்பதும் காவிரிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது என்பதும் வலுவான சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன.
- ✓ புத்தர்சிலை, தூண் போன்றவற்றைக்கொண்டு, அங்கு வாழ்ந்த மக்களில் சிலர் புத்தசமயத்தைப் பின்பற்றியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது,

**காசுகள்**

- ✓ தருமபுரி, கரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில், கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலக்கட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களினால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு பக்கத்திலோ ஒரு பக்கங்களிலோ முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகளில் சூரியன் மலைமுகடு, ஆறு, காளை, ஸ்வஸ்திரம், கும்பம் முதலிய சின்னங்கள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.
- ✓ தூத்துக்குடி மாவட்டம் அதிச்சநல்லூரில் **(ஆதிச்சநல்லூர்-திருநெல்வேலி)** 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. கி.மு 300 முதல் கி.பி.300 வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த இத்தாழிகளில் இறந்தோரின் எலும்புகளுடன் தங்கத்தினாலான நெற்றிப் பட்டம், செம்பினாலான ஆண், பெண் தெய்வ உருவங்கள் , மற்றும் இரும்பினாலான கத்திகள், விளக்குத் தாங்கிகள் முதலிய பொருள்களும் கிடைத்துள்ளன.

RADIAN IAS ACADEMY

## புணர்ச்சி

- ✓ நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது புணர்ச்சி எனப்படும். இவ்வாறு இருசொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி, இயல்பாகச் சேர்வது இயல்புப்புணர்ச்சி.

(எ-டு) பொன் + வளையல் = பொன்வளையல்

- ✓ இருசொற்கள் சேரும்போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விகாரப்புணர்ச்சி என்பர்

(எ-டு) 1. வாழை + பழம் = வாழைப்பழம் - தோன்றல்

2. மரம் + வேர் = மரவேர் - கெடுதல்

3. பொன் + குடம் = பொற்குடம் - திரிதல்

**அ) திசைப்பெயர்ப் புணர்ச்சி**

- ✓ முதன்மை திசைகள் நான்கு. அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன. திசைப்பெயர்களோடு திசைப்பெயரும்,பிறபெயரும் சேர்வது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

(எ-டு) 1. வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

வடக்கு + மேற்கு = வடமேற்கு

- ✓ வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு நீங்கிப் புணர்ந்தது

(எ-டு) 2. தெற்கு + மேற்கு = தென்மேற்கு

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

- ✓ தெற்கு என்னும் திசைப்பெயரோடு மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் சேரும்போது, நிலைமொழியின் இறுதியிலுள்ள கு நீங்கும், பிறகு றகர மெய் னகரமாகிப் புணரும்.

**ஆ) திசைப்பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி**

(எ-டு) 1. வடக்கு + மலை = வடமலை

- ✓ இதில் நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க்,கு ஆகியன இரண்டும் நீங்கிப் புணர்ந்தது.

(எ-டு) 2. தெற்கு + திசை = தென்திசை

- ✓ இதில் நிலைமொழியின் இறுதியாகிய கு நீங்கியது, அதன் அயல் எழுத்தான ற் - ன் ஆக மாறிப் புணர்ந்தது.

(எ-டு) 3. கிழக்கு + நாடு = கீழ்நாடு

- ✓ இங்கு நிலைமொழியின் இறுதியாகிய க்கு நீங்கி, ழ என்னும் உயிர்மெய்யில் (ழ் + அ) அகரம் நீங்கி, கி என்னும் முதல் எழுத்து கீ என நீண்டு, கீழ் + நாடு – கீழ்நாடு எனப் புணர்ந்தது.

(எ-டு) 4. மேற்கு + நாடு = மேல்நாடு, மேனாடு

- ✓ நிலைமொழியில் கு நீங்கியது. அதன் அயலெழுத்தான ற் - ல் ஆக மாறி மேல் + நாடு = மேல்நாடு எனவும், ற் - ன் ஆக மாறி மேல் + நாடு = மேனாடு எனவும் இருவகையில் புணர்ந்தன.

**இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி**

- ✓ நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் பண்புப் பெயர்களாம்.
- ✓ செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, இளமை, புதுமை போல்வனவும் இவற்றுக்குரிய எதிர்ச்சொற்களும் இவைபோன்ற பிறவும் மையீற்றுப் பண்புப்பெயர்கள் எனப்படும்

(எ-டு) 1. கருவிழி = கருமை + விழி

- ✓ கரு +விழி = கருவிழி
- ✓ ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து மை நீங்கிப் புணர்ந்தது.

(எ-டு) 2. பெரியன் = பெருமை + அன் - பெரு + அன், பெரி + அன், பெரி + ய் + அன் பெரியன்

- ✓ ஈறு போதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து, மை நீங்கிப் பின் பெரு என்பதன் இறுதி உகரம் இடைஉகரம் இஆதல் எனும் விதிப்படி பெரி யாகிப் பின் யகர உடம்படுமெய் பெற்றுப் பெரி + ய் + அன் என்பது 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, ய் + அ = ய என்றாகிப் பெரியன் எனப் புணர்ந்தது

10. அகரஈற்றுச் 'செய்' என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்

பாட + கேட்டேன் = பாடக் கேட்டேன்
தேட + சென்றான் = தேடச் சென்றான்
பாட + தெரியுமா? = பாடத் தெரியுமா?
ஓட + பார்த்தான் = ஓடப் பார்த்தான்

11. சால, தவ என்னும் உரிச்சொற்கள்பின் வரும் வல்லினம் மிகும்.

சால + பசித்தது = சாலப் பசித்தது
தவ + சிறிது = தவச் சிறிது

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வல்லினம் மிகும்

காணா + கண்கள் = காணாக் கண்கள்
கேளா + செவி = கேளாச் செவி
ஓடா + தேர் = ஓடாத் தேர்
நாறா + பூ = நாறாப் பூ

**ஆ) வல்லினம் மிகா இடங்கள்**

1. வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது

விடு + கணை = விடுகணை
விரி + சுடர் = விரிசுடர்
தோய் + தயிர் = தோய்தயிர்
பாய் + புலி = பாய்புலி

2. உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது

காய் + கனி = காய்கனி
தாய் + தந்தை = தாய்தந்தை
முத்து + பவளம் = முத்துபவளம்

3. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது

கதை + சொன்னார் = கதை சொன்னார்
கடல் + தாவினான் = கடல் தாவினான்
புகழ் + பெற்றார் = புகழ் பெற்றார்

4. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது

கற்க + கசடற = கற்க கசடற
வளர்க + சிந்தனை = வளர்க சிந்தனை
வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்
காண்க + படம் = காண்க படம்

5. விளித்தொடரை அடுத்துவரும் வல்லினம் மிகாது

முருகா + கேள் = முருகா கேள்
கண்ணா + சொல் = கண்ணா சொல்
கிளியே + தா = கிளியே தா
அண்ணா + போ = அண்ணா போ

6. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது

கடகட, தடதட, சடசட, படபட

7. அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள், எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது

அவை + பறவைகள் = அவை பறவைகள்
இவை + சட்டைகள் = இவை சட்டைகள்
அவை + தடங்கள் = அவை தடங்கள்
எவை + படங்கள் = எவை படங்கள்

8. அது, எது எனும் சுட்டுச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகாது

அது + கூடை = அது கூடை
இது +சட்டி = இது சட்டி
அது + தோணி = அது தோணி
இது + பாடம் = இது பாடம்

9. பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர் (படித்து என்பதுபோல் வன்றொடர்க் குற்றியலுகரச்சொல் அல்லாதவை) ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

வந்த + கயல்விழி = வந்த கயல்விழி
தைத்த + சட்டை = தைத்த சட்டை
வந்து + தந்தான் = வந்து தந்தான்
செய்து + பார்த்தான் = செய்து பார்த்தான்

10. எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது

கண்ணகி + பார்த்தாள் = கண்ணகி பார்த்தாள்
பூவிழி + தந்தாள் = பூவிழி தந்தாள்

## திருக்குறள் : பெரியாரைத் துணைக்கோடல்

**இலக்கணக்குறிப்பு:**

அறனறிந்து (அறத்தை + அறிந்து), திறனறிந்து (திறனை + அறிந்து) இரண்டாம் வேற்றுமைத்ததொகைகள்
தேர்ந்து கொளல் - வினையெச்சம்
கொளல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
உற்றநோய் - பெயரெச்சம்
உறாஅமை – செய்யுளிசை அளபெடை
பெற்றியார் – வினையாலணையும் பெயர்
கொளல் - தொழிற்பெயர்
வன்மை – பண்புப்பெயர்,
ஒழுகுதல் - தொழிற்பெயர்
சூழ்வார் – வினையாலணையும் பெயர்.
தக்கார், செற்றார் – வினையாலணையும் பெயர்கள்
துணையார். ஆள்வார் – வினையாலணையும் பெயர்கள்
இல்லை – குறிப்பு வினைமுற்று
பகைகொளல் (பகையைக் கொளல்) - இரண்டாம் வேற்றுமைத்தொகை

**சொற்பொருள்:**

- பேணி – போற்றி
- தமர் - உறவினர்
- வன்மை – வலிமை
- மதலை – துணை
- பத்தடுத்த – பத்து மடங்கு

## திருக்குறள் : பொருள் செயல்வகை

**சொற்பொருள்:**

- பொருளல்லவர் - தகுதியற்றவர்
- பொருள் - செல்வம்
- எள்ளுவர் - இகழ்வர்
- இருள் - பகை
- புல்லார் - பற்றார்
- குழவி – குழந்தை
- செவிலி - வளர்ப்புத்தாய்
- குன்று - மலை,
- கைத்தொன்று - கைப்பொருள்

RADIAN IAS ACADEMY

**கனிமவியல் அறிவு**

- ✓ சிலப்பதிகாரம் பல்வகை மணிகளையும், அதன் தன்மைகளையும் விளக்குகிறது.

**மண்ணியல் அறிவு**

- ✓ தமிழர், தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்பப் பாகுபடுத்தியுள்ளனர். அவையே ஐவகை நிலங்கள். மேலும் செம்மண், களர்நிலம், உவர்நிலம் எனவும் பகுத்துள்ளனர். நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலம் எனவும், சுவையின் அடிப்படையில் உவர்நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர் நிலம் எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.
- ✓ தமிழர், செம்மண் நிலத்தை அதன் பயன் கருதிப் போற்றினார். இதனைச் செம்புலப் பெயல் நீர்போல' என்னும் குறுந்தொகை வரி உணர்த்தும். உவர்நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன்தருவதில்லை. இதனை, 'அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம்' என்னும் புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன. எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம். இதனைப் 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்பார் திருவள்ளுவர்.

**அணுவியல் அறிவு**

- ✓ இன்றைய அறிவியல், அணுவைப் பிளக்கவும் சேர்க்கவும் முடியும் என ஆய்ந்திருக்கிறது. ஔவை, 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி' என்று சொல்கிறார். 'ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்' எனக் கம்பரும் கூறுவார்.

**நீரியல் அறிவு**

- ✓ "நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
- ✓ தான்நல்கா தாகி விடின்" – குறள், 17 – எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**மருத்துவ அறிவு**

- ✓ 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். திருவள்ளுவர், 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.
- ✓ 'மருந்தாகித் தப்பா மரத்தற்றல்' என்னும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும். பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.
- ✓ அகத்தியர், தேரையர், போகர், புலிப்பாணி முதலிய சித்தர்களின் மருத்துவ நூல்கள் இன்றும் தமிழர்களின் உடற்பிணியைப் போக்குகின்றன. உலகில் பின்விளைவுகளற்ற மருத்துவங்களுள் சித்த மருத்துவமும் ஒன்று. இன்று பரவலாகப் பயின்று வரும் இயற்கை மருத்துவம் என்னும் மருந்தில்லா மருத்துவ முறையை, அன்றே நம் தமிழன் கண்டறிந்துள்ளார்.

**அறுவை மருத்துவம்**

- ✓ "கண்ணிடந் தப்பிய கண்ணப்பன் வரலாறு ஊனுக்கு ஊன்" என்னும் செய்தியும்,
- ✓ "உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி
- ✓ அடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்"
- ✓ என்னும் கம்பர் வாக்கும் அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.
- ✓ மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தையை மாடு முட்டியதால், அவரின் குடல் சரிந்தது. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியை மணிமேகலை எடுத்துரைக்கிறது.
- ✓ திருவாசகத்தில் பல்வகை அறிவியல் செய்திகள், உயிரியல் செய்திகள், மருத்துவச் செய்திகள் விரவிக்கிடக்கின்றன. 'புல்லாகிப் பூடாய்' எனத் தொடங்கும் திருவாசக வரிகள் பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாய்க் கூறுகின்றன. 'மானுடப் பிறப்பினுள் மாதா உதிரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்' எனத் தொடரும் பாடலடிகள் கருவியல் அறிவை நன்கு தெரிவிக்கின்றன.

## பொருள் இலக்கணம்

### அகப்பொருள்

- ✓ பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்

**அகப்பொருள்**

- ✓ அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.
- ✓ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை , பெருந்திணை என அகத்திணைகள் ஏழுவகைப்படும்.
- ✓ அவற்றுள் முதலைந்தும் அன்பின் ஐந்திணை என்று வழங்கப்படும்
- ✓ அகப்பொருளுக்குரிய பொருள்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

**முதற்பொருள்**

- ✓ அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும். நிலம் ஐவகைப்படும்.

**ஐவகை நிலங்கள்**

1. குறிஞ்சி-மலையும் மலைசார்ந்த இடமும்
2. முல்லை-காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம்-வயலும் வயல்சார்ந்த இடமும்
4. நெய்தல்-கடலும் கடல்சார்ந்த இடமும்
5. பாலை-மணலும் மணல்சார்ந்த இடமும்

**பொழுது** பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்

**பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)**

1. கார்காலம்-ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம்-ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக்காலம்-மார்கழி, தை
4. பின்பனிக்காலம்-மாசி, பங்குனி,
5. இளவேனிற்காலம்-சித்திரை, வைகாசி
6. முதுவேனிற்காலம்-ஆனி, ஆடி

**சிறுபொழுது (ஒருநாளின் ஆறு கூறுகள்)**

1. காலை-காலை 6 மணிமுதல் 10 மணிவரை
2. நண்பகல்-காலை 10 மணிமுதல் 2 மணிவரை

RADIAN IAS ACADEMY

## சீறாப்புராணம்

## விலாதத்துக் காண்டம்

**சொற்பொருள்:**

1. தெண்டிரை – தெளிந்த அலைகள்
2. கான் - காடு
3. தடக்கரி – பெரிய யானை
4. திரள் - கூட்டம்
5. அறைகுவன் - சொல்லுவான்
6. தாரை – வழி
7. அணித்தாய் - அண்மையில்
8. அடவி – காடு
9. உழுவை – புலி
10. கூண்ட – சேர்ந்த
11. கனல் - நெருப்பு
12. வெள்ளெயிறு – வெண்ணிறப்பற்கள்
13. புலால் - இறைச்சி
14. வனம் - காடு
15. வள்ளுகிர் - கூர்மையான நகம்,
16. மடங்கல் - சிங்கம்
17. கோடு – தந்தம்
18. கிரி – மலை
19. இரும்பனை – பெரிய பனை
20. உரும் - இடி
21. அலறும் - முழங்கும்
22. தொனி – ஓசை
23. மேதி – எருமை
24. கவை – பிளந்த
25. கேழல் - பன்றி
26. எண்கு – கரடி
27. மரை – மான்
28. எழில் - அழகு
29. புயம் - தோள்
30. முறுவல் - புன்சிரிப்பு
31. இடர் – துன்பம்
32. வேங்கை – புலி
33. வென்றி – வெற்றி
34. அணித்து – அருகில்
35. விளம்பினான் - சொன்னான்
36. மாதிரம் - மலை
37. கேசரி – சிங்கம்
38. புளகிதம் - மகிழ்ச்சி
39. காது – கொல்லுதல்
40. கவின் - அழகு
41. வள்ளுகிர் - கூர்மையான நகம்
42. தெரிசனம் - காட்சி
43. சலாம் - வணக்கம்
44. திண்டிறல் - உறுதியான வலிமை
45. அதிசயம் - வியப்பு
46. உன்னி – நினைத்து
47. தெளிந்தார் – தெளிவு பெற்றார்
48. புந்தி – அறிவு
49. மந்தராசலம் - மந்தரமலை
50. சந்தம் - அழகிய
51. சிரம் - தலை
52. இவண்நெறியில் - இவ்வழியில்
53. செகுத்திடுவது – உயிர்வதை செய்வது
54. அறைந்த – சொன்ன

**இலக்கணக்குறிப்பு:**

படர்ந்த தெண்டிரை – பெயரெச்சம்

நதிப்பரப்பு – ஆறாம் வேற்றுமைத்தொகை

தொழுது அறைகுவன் - வினையெச்சம்

தடக்கரி – உரிச்சொற்றொடர்

நெடுநீர் – பண்புத்தொகை

பொருந்தி – வினையெச்சம்

பெருங்கிரி – பண்புத்தொகை

வரி உழுவை (வரிகளைக்கொண்ட புலி) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

புடைத்து, நிமிர்ந்து, கிடந்து, மடிந்து – வினையெச்சங்கள், கால் மடித்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

வெள்ளெயிறு - பண்புத்தொகை

முதிர்ந்தமேதி, பொதிந்தமெய் - பெயரெச்சங்கள்

கவைடியக்கேழல் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

செவிபுக – ஏழாம் வேற்றுமைத்தொகை

நின்ற வேங்கை – பெயரெச்சம்

செங்கதிர், பெருவரி – பண்புத்தொகைகள்

பூதரப்புயம் - உவமைத்தொகை

வால்குழைத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

பெருஞ்சிரம், தண்டளி

திண்டிறல் - பண்புத்தொகைகள்

எழுந்து, புதைத்து, வணங்கி – வினையெச்சங்கள், வள்ளுகிர்ப்புலி (கூர்மையான நகத்தை உடைய புலி) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

நனிமனம் - உரிச்சொல்தொடர்

சிரமுகம்(சிரமும் முகமும்) – உம்மைத்தொகை

உயிர்செகுத்து- இரண்டாம் வேற்றுமைத்தொகை

புகுக – வியங்கோள் வினைமுற்று

மலரடி – உவமைத்தொகை

நன்று நன்று – அடுக்குத்தொடர்

கொலைப்புலி (கொலையை விரும்பும் புலி) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

**பகுபத உறுப்பிலக்கணம்:**

படர்ந்த – படர் + த் (ந்) + த் + அ, படர் – பகுதி, த் - சந்தி, த் -ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ- பெயரெச்ச விகுதி.

அறைகுவன் - அறை கு + வ் + அன், அறை – பகுதி கு – சாரியை வ் - எதிர்கால இடைநிலை, அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

பொருந்தி – பொருந்து + இ, பொருந்து – பகுதி, இ - வினையெச்ச விகுதி.

நிமிர்ந்து – நிமிர் + த் (ந்) + த் + உ. நிமிர் – பகுதி, த் - சந்தி, த் - ந்த ஆனது விகாரம், த் -

RADIAN IAS ACADEMY

முதன்மையமைச்சர் சர்ச்சில், அரை நிருவாணப் பக்கிரி என்று ஏளனம் செய்தபோதும், காந்தியடிகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

- ✓ தென்ஆப்பிரிக்காவில் இந்தியர்க்கு எதிரான கறுப்புச் சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தியதால், சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் அவர் செருப்புத் தைத்தார். முதல் இணைச்செருப்பே சிறப்பாக அமைந்தது. அதனை யாருக்காவது அன்பளிப்பாக அளிக்க விரும்பினார். அவர் நினைவிற்கு வந்த முதல் மனிதர் ஸ்மட்ஸ், அவர் காந்தியடிகளைச் சிறையிலடைத்த ஆளுநர். சிறையிலிருந்து விடுதலையானதும் ஸ்மட்ஸை சந்தித்துத் தாம் தைத்த காலணிகளை வழங்கினார். அதற்கு ஈடாக ஸ்மட்ஸ், காந்திக்கு விவிலியம் சார்ந்த இரு நூல்களைப் பரிசாகக் கொடுத்தார். அவற்றைப் பொன்னேபோல் போற்றித் தம்முடனே வைத்துக்கொண்டார் காந்தியடிகள்.
- ✓ 1948ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முப்பதாம் நாள் காந்தியடிகள் சுட்டுக்கொல்லப்பட்டார். உலகமே இரங்கல் செய்தி விடுத்தது, ஸ்மட்ஸ் தம்முடைய இரங்கல் செய்தியில், "காந்தி சிறையில் தாமே தயாரித்த காலணியை, எனக்கு அன்பளிப்பாக அளித்தார். அதனை ஆர்வத்தோடு வாங்கி அணிந்தேன், என் கால்கள் நடுங்கின, நிற்க முடியவில்லை. உடனே, அதனை எடுத்துச்சென்று என் பூசை அறையில் வைத்து வணங்கி வருகிறேன்" என்று குறிப்பிட்டார்.
- ✓ "தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது" என்று கூறினார்.

## புறப்பொருள்

புறப்பொருள் எனப்படுவது, வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவது. **அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் உலகியல்** ஆகும். புறம்பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள் வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்.

1. **வெட்சித்திணை:** பகைநாட்டின்மீது போர் தொடங்குமுன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச்செய்வது வெட்சித்திணை. அவ்வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள்.
2. **கரந்தைத் திணை:** வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது, கரந்தைத்திணை
3. **வஞ்சித்திணை:** மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது, வஞ்சித்திணை.
4. **காஞ்சித்திணை:** தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை
5. **நொச்சித்திணை:** பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது நொச்சித்திணை.
6. **உழிஞைத்திணை:** உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.
7. **தும்பைத் திணை:** பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத் திணை. இவ்வீரர்கள் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவர்.
8. **வாகைத்திணை:** வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை.
9. **பாடாண்திணை:** பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம் புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை. (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை)
10. **பொதுவியல் திணை:** வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை.
11. **கைக்கிளைத்திணை:** கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும்.
12. **பெருந்திணை:** பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

**இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக**

1. A friend in need is a friend indeed-உயிர் கொடுப்பான் தோழன்
2. Self help is th ebes thelp-தன் கையே தனக்கு உதவி
3. Efforts never fail-முயற்சி திருவினையாக்கும்
4. Live and le tlive-வாழு, வாழவிடு
5. Think everybody alike-உன்னைப்போல் பிறரையும் நேசி.

## கலித்தொகை – நல்லந்துவனார்

**இலக்கணக்குறிப்பு:**

ஒழுகுதல், தோன்றல், பொறுத்தல் - தொழிற்பெயர்கள்

**பகுபத உறுப்பிலக்கணம்:**

ஆற்றுதல் - ஆற்று + தல், ஆற்று –பகுதி, தல் - தொழிற்பெயர் விகுதி,

புணர்ந்தார் – புணர் + த் (ந்) + த் + ஆர், புணர் - பகுதி, த் - சந்தி, த் - ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி,

பிரியாமை – பிரி + ய் + ஆ + மை, பிரி – பகுதி, ய் - சந்தி, ஆ – எதிர்மறை இடைநிலை, மை – தொழிற்பெயர் விகுதி,

அறிந்து – அறி + த் (ந்) + த் + உ , அறி – பகுதி, த் - சந்தி, த் -ந் ஆனது விகாரம், த் -

**நூற்குறிப்பு:** தமிழகத்தில் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம்.

- ✓ வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு போற்றும்.
- ✓ பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

## திருவருட் பிரகாச வள்ளலார்

- ✓ 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்னும் பெரியபுராணப்பாடலைப் பாடினார்.
- ✓ சாதிகளிலும் மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்களை அவற்றிலிருந்து மீண்டுவரச் சமரச சுத்த சன்மார்க்கப்பாதை அமைத்த, வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்.
- ✓ பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என அறிஞர் போற்றுவர்.
- ✓ அக்காலத்தே புலவர் பெருமக்களாலும் சமூகச் சீர்திருத்தச் செம்மல்களாலும் போற்றப்படும் பெருஞ்சிறப்பினைப் பெற்றவர் வள்ளலார்.
- ✓ கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள் ளமருதூரில் 05-10-1823 இல் இராமையா, சின்னம்மை இணையர்க்கு ஐந்தாவது மகனாக இராமலிங்கர் பிறந்தார்.
- ✓ தில்லையில், இறைவழிபாட்டின்போது விழியசைக்காமல் இறைவனைப் பார்த்துச் சிரித்ததைக் கண்ட ஆலய அந்தணர், இக்குழந்தை இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டினார்.
- ✓ "அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
- ✓ இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த" இறைவன் தம்மை வருவிக்க உற்றதாகக் கூறுவார் வள்ளலார்.
- ✓ திருவொற்றியூர்ச் சன்னதி வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த திகம்பர சாமியார், அவ்வழியில் செல்லும் மனிதர்களைக் கண்டு, "அதோ மாடு போகிறது, ஆடு போகிறது, நாய் போகிறது, நரி போகிறது" என்று, அவரவர்களின் குணத்தன்மைகளுக்கேற்ப விலங்குகளின் பெயர்களால் கூறுவார்.
- ✓ இராமலிங்கர் அவ்வழியே சென்றபோது 'இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்' என்று கூறினார்.
- ✓ சென்னையிலுள்ள கந்தகோட்டத்து இறைவனை இராமலிங்கர் வணங்கி மனமுருகப் பாடி மகிழ்வார். இப்பாடல்களின் தொகுப்பே தெய்வமணிமாலை.
- ✓ இராமலிங்கர் வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலையும் திருவொற்றியூர்ச் சிவபெருமான்மீது, எழுத்தறியும் பெருமான் மாலை என்னும் நூலையும் பாடினார்.
- ✓ மூடநம்பிக்கைகளாலும் சாதி மத வேறுபாடுகளாலும் மக்கள் துன்புறுவதனைக் கண்டு மனம் பதைத்த வள்ளற்பெருமான்,
- ✓ "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
- ✓ கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" எனப் பாடினார்.
- ✓ ஒருமைவாழ்வு, ஒருமையரசு, ஒருமையுலகம் காண விரும்பிய வள்ளற்பெருமான்.
- ✓ "ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
- ✓ ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்" என வற்புறுத்தினார்.
- ✓ "சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன்" என்றார்.
- ✓ "பெண்ணினுள் ஆணும், ஆணினுள் பெண்ணும்
- ✓ அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி"
- ✓ என ஆணும் பெண்ணும் சமமென்று அன்றே உரைத்தார்.

**பசிப்பிணி மருத்துவர் வள்ளலார்**

- ✓ சங்ககாலத்தில் ஒரு முல்லைக்கொடியின் துயர் நீக்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரி வள்ளலைப்போல வள்ளலார், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர்வாடத் தாம் வாடினார்.
- ✓ வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடியபிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான்.
- ✓ இவ்வருத்தம் நீங்கவே, வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி, மத வேறுவாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.

**பேரின்ப வீட்டின் திறவுகோல்**

**'உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்'** என்றார் வள்ளலார்.

**பொதுமை நெறி:**

- ✓ வள்ளலார், இறைவன் ஒருவனே, அவன் ஒளி வடிவினன் என்பதனையும் அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப்பெருங்கருணையே கருவி என்பதனையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை வடலூரில் நிறுவினார்.

**அருட்பா அருளிய அருளாளர்**

- ✓ இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார். மேலும், மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளிபெற, அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால்தான் பாரதியார் இவரைப் "புதுநெறிகண்ட புலவர்" என்று போற்றினார்.
- ✓ வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர். தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார்.

RADIAN IAS ACADEMY

பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் துணையுடன் எழுதியுள்ளார். இவரது இந்திரதேச சரித்திரம் என்னும் நூலும் பாராட்டத்தக்கது. இவை தவிர, இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறு நூல்களை வெளியிட்டார். வீரமாமுனிவரைப்போல் எழுத்துச் சீர்திருத்தமும் செய்துள்ளார்.

- ✓ திருவாசகத்திற்கும் உரை எழுதியுள்ளார்.
- ✓ உங்களுடைய தருமமும் கருமமுமே உங்களைக் காக்கும் என்று முத்தாய்ப்பாய், நம் உள்ளத்தில் நறுந்தேனைப் பெய்வித்தார். இத்தகு நற்சான்றோர் 1914 மே மாதம் ஐந்தாம் நாள் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

## பா வகைகள்

- ✓ வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் 'பா' நால்வகைப்படும்.

**வெண்பாவின் பொது இலக்கணம்**

1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
2. இயற்சீர், (மாச்சீர், விளச்சீர்) வெண்சீர் (காய்ச்சீர்) வரும். பிற சீர்கள் வாரா.
3. இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும், பிறதளைகள் வாரா.
4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றுகொண்டு முடியும்.
5. செப்பலோசை பெற்று வரும்
6. **இரண்டடி முதல், பன்னிரண்டு அடிவரை வரும்**

**வெண்பாவின் வகைகள்**

- ✓ வெண்பாவின் வகைகள் ஆறு, அவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப∴பெறாடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சந்தியல் வெண்பா என்பன.

1. **குறள் வெண்பா:** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டதாய், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது குறள்வெண்பா (குறள் - இரண்டடி)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

இக்குறட்பா ஒரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா. (க என்னும் எழுத்து எதுகையாக இரண்டு அடிகளில் ஒன்றி வந்துள்ளது)

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று

- ✓ இக்குறட்பா இரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா

2. **நேரிசை வெண்பா:** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, நான்கு அடிகளைக் கொண்டதாயும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும், முதல் இரண்டடி ஒரு விகற்பமாயும், கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும், நான்கடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது **நேரிசை வெண்பா** எனப்படும்.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியொடிப்
புல்லுக்கும் ஆங்கேபொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை

- ✓ இப்பாடலின் நான்கடியிலும், இரண்டாமடியின் இறுதிச் சீரிலும் ஒரே எதுகை பெற்று ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா

உன்னுள்கலைவைத்தாய் ஊக்க மலைவைத்தாய்
கன்னல் மொழியுன்னுள் கள்வைத்தாய் - மின்வைத்தாய்
மண்ணில் புதுமை மலர்க்குள் மணம்வைத்தாய்
தண்ணீர்த் தமிழேநீ தாய்

இ∴து இரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா

3. **இன்னிசைவெண்பா:** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும். இரண்டாம் அடியின் இறுதியில் தனிச் சொல் பெற்று. மூன்று விகற்பத்தான் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டு விகற்பத்தானும் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

தாய்தமக்கே ஒப்பில்லை தாரணியில் எப்பொருளும்
சேய்நம்மைச் சீராட்டி செந்நீரைப் பாலாக்கி
வாய்வழியாய்த் தாமூட்டி வாழ்விக்குந் தெய்வமொன்று
தாய்போலும் உண்டாமோ தான்

- ✓ இப்பாடலில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் இல்லை. நான்கடிகளும் ஒரு விகற்பத்தான் வந்துள்ளன. (இரண்டாம் எழுத்து ய் எதுகையாகி ஒன்றி வந்துள்ளது)

தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும் - தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு

- ✓ இப்பாடலில் இரண்டாம் அடியில் தனிச்சொல் வந்துள்ளது. ஆனால், நான்கடியிலும் மூன்று விகற்பங்கள் வந்துள்ளதால், இ∴து இன்னிசை வெண்பாவாயிற்று.

4. **ப∴றொடை வெண்பா:** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது ப∴றொடை வெண்பா.

முக்கனியே! முப்பாலே! மூவாத முத்தமிழே!
சொக்கனது மாநகரைச் சூழ்ந்த பெரும்பேறே!
இத்தரைச் சூரியனே! எங்கள் உயிரமுதே!
சித்திரைத் தண்ணிலவே! தேயா மொழிவெற்பே!
செம்மொழிமாக்குடும்பம் சீராட்டும் செம்மொழியே!
எம்மொழிக்கும் மூத்தவளே! என்றும் இருப்பவனே!
பண்புணர்த்தும்ஆசானே! பார்போற்றும் தேனூற்றே!
கண்ணெ! நீ ஞாலக் கனி!

RADIAN IAS ACADEMY

படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே

✓ இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருகின்றது.

**மரபுச்சொற்கள்**

**ஒலிமரபு**

| | |
|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் |
| எருது எக்காளமிடும் | காகம் கரையும் |
| குதிரை கனைக்கும் | கிளி பேசும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் |
| சிங்கம் முழங்கும் | கூகை குழறும் |
| நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | சேவல் கூவும் |
| பூனை சீறும் | புறா குனுகும் |
| யானை பிளிறும் | மயில் அகவும் |
| எலி கிச்சிடும் | வண்டு முரலும் |

**வினை மரபு**

| | |
|---|---|
| அம்பு எய்தார் | சோறு உண்டான் |
| ஆடை நெய்தார் | தண்ணீர் குடித்தான் |
| உமி கருக்கினாள் | பால் பருகினான் |
| ஓவியம் புனைந்தான் | பூப் பறித்தாள் |
| கூடை முடைந்தார் | மரம் வெட்டினான் |
| சுவர் எழுப்பினான் | மாத்திரை விழுங்கினான் |
| செய்யுள் இயற்றினான் | முறுக்குத் தின்றான் |

| பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச்சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| அங்கத்தினர் | உறுப்பினர்உபயோகம் | பயன் | |
| அதிகாரி | அலுவலர் | கிராமம் | சிற்றூர் |
| அதிபர் | தலைவர் | குமாரன் | மகன் |
| அந்நியர் | அயலார் | சாவி | திறவுகோல் |
| அபிஷேகம் | நீராட்டு | நஷ்டம் | இழப்பு |
| அபூர்வம் | புதுமை | நாஷ்டா | சிற்றுண்டி |
| அலங்காரம் | ஒப்பனை | பாக்கி | நிலுவை |
| அனுமதி | இசைவு | கஜானா | கருவூலம் |
| ஆபத்து | இடர் | விஞ்ஞானம் | அறிவியல் |
| ஆராதனை | வழிபாடு | ஜனங்கள் | மக்கள் |
| ஆசீர்வாம் | வாழ்த்து | நிபுணர் | வல்லுநர் |
| இலஞ்சம் | கையூட்டு | ஆஸ்பிடல் | மருத்துவமனை |
| இலாபம் | வருவாய் | டீ ஸ்டால் | **தேநீர்க்கடை** |
| உத்தரவு | ஆணை | பஸ் ஸ்டாண்ட் | பேருந்து நிலையம் |
| உத்தியோகம் | பணி | போஸ்ட் ஆபிஸ் | அஞ்சலகம் |

RADIAN IAS ACADEMY

## நிற்க நேரமில்லை – சாலை.

## இளந்திரையன்

**ஆசிரியர் குறிப்பு:** சாலை. இளந்திரையனின் பெற்றோர் இராமையா, அன்னலட்சுமி. இவர் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாலைநயினார் பள்ளிவாசல்.

✓ தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகித் தமிழ்த்துறைத் தலைவரானார். உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் சாலை.

✓ இளந்திரையன். 1991இல் தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றார்.

✓ தம் வாழ்நாள் முழுவதும் தமிழின முன்னேற்றத்திற்கான படைப்புகளை வழங்கி எழுச்சியூட்டினார்.

✓ வாழ்ந்த காலம் 06-09-1930 – 4-10-1998.

**நூற்குறிப்பு:** பாடப்பகுதியில் வந்துள்ள கவிதை. “பூத்தது மானுடம்’ என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ளது.

✓ சாலையாரின் படைப்புகளான ‘புரட்சி முழக்கம்’, ‘உரை வீச்சு’ ஆகிய நூல்கள் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசுகள் பெற்றுள்ளன.

## பல்துறை வேலைவாய்ப்புகள்

✓ ‘வினையே ஆடவர்க்குயிர்’ என்கிறது குறுந்தொகை. ‘முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை’ என்கிறது. தொல்காப்பியம். ஊடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே திருமூலர்.

“வெறுங்கை என்பது முடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்”
கவிஞர் தாரா பாரதி

## நூலகம்

✓ ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால்தான் அன்றாட உலக நடப்புகளை அறிந்த மனிதனாகக் (Informative man) கருதப்படுவான் என யுனெஸ்கோ கூறியுள்ளது.

பற்றின் பரபரெனும் பாரில்பிண்
ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே வோது.

- ✓ இப்பாடலில் பாம்பு, எள் ஆகிய இரண்டிற்கும் சிலேடை கூறப்பட்டுள்ளது. ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும் எனும் முதலடி, படமெடுத்து ஆடியபின் குடத்துள் சென்றடையும், படமெடுத்தாடும்போது, இரைச்சலிடும் எனப் பாம்பிற்கும்,
- ✓ செக்காடியபின் எடுத்த எண்ணெயைக் குடத்தில் ஊற்றுவர். செக்காடும்போது இரைச்சல் உண்டாகும் என எள்ளிற்கும் சிலேடையாக வந்துள்ளது.

இப்பாடலில் சொற்கள் பிரிவில்லாமல் இருபொருள்கள் தந்தன. எனவே, இது செம்மொழிச்சிலேடை ஆயிற்று.

**ஆ) பிரிமொழிச்சிலேடை**

- ○ ஒருசொல் தனித்து நின்று ஒருபொருளையும், அதுவே பிரிந்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப் பாடுவது, பிரிமொழிச்சிலேடை ஆகும்.

**4. பின்வருநிலையணி**

- ○ செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ, பொருளோ, சொல்லும் பொருளோ மீண்டும் மீண்டும் வந்து அழகு சேர்க்கும். அவை, சொல் பின்வருநிலையணி, பொருள் பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி என மூவகைப்படும்.

**அ) சொல்பின்வரு நிலையணி**

- ○ செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல்பின்வருநிலை அணி.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்
துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

- ✓ இக்குறள்பாவில் துப்பு என்னும் ஒரேசொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வருநிலையணி.

**ஆ) பொருள் பின்வருநிலையணி**

- ✓ செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது, பொருள் பின்வருநிலை அணி.

"அவிழ்ந்தன தோன்றி, அல்ந்தன
காயா,
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை –
மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை".

- ✓ இப்பாடலில் மலர்தல் என்னும் ஒரு பொருளில் அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல் ஆகிய சொற்கள் வந்துள்ளன. எனவே, இது பொருள் பின்வருநிலையணி.

**இ) சொற்பொருள் பின்வருநிலையணி**

- ✓ செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, சொற்பொருள் பின்வருநிலை அணி.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

- ✓ இப்பாடலில், தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொற்பொருள் பின்வருநிலையணி.

**5. பிறிதுமொழிதலணி**

- ✓ உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.
- ✓ பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்.
- ✓ சால மிகுத்துப் பெயின்.
- ✓ மென்மையான மயில்தோகையே ஆயினும், அதனை அளவுக்கு மிஞ்சி வண்டியிலேற்றின் அச்சு ஒடிந்துவிடும் என்பது உவமை.

பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்றுகூடின், தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது, இதனால் பெறப்படும் பொருள். எனவே, இது பிறிதுமொழிதலணி

---

# 11வது 2018-பாடத்திட்ட
# புதிய தமிழ் புத்தகம்

**இயல் - 1 பேச்சுமொழியும் கவிதைமொழியும்**

- ➢ கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார்.
  **- மகாகவி பாரதி**
- ➢ மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன.
- ➢ நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஓருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக் கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் **மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.**
- ➢ **வால்ட்விட்மன்** கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லை விட முக்கியமானதாகி விடுவதில்லை.
- ➢ **கவிஞர் மல்லார்மே** பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று.
- ➢ **ஸ்டெஃபான்** மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர்.

RADIAN IAS ACADEMY

நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் உள்ளிட்ட பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றார். வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999 இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றிருக்கின்றார்,

**இயல் - 1 மொழி முதல், இறுதி ஏழுத்துகள்**

**மொழி முதல் எழுத்துகள் - 22**

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்
2. மெய்யெழுத்துகள் மெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.
3. மெய்களில் க.ங.ச.ஞ.த.ந.ப.ம.ய.வ என்னும் பத்து வரிசைகள் சொல்லின் முதலில் வரும். (ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்
4. ட,ண,ர,ல,ழ,ள,ற,ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை
5. ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

- 'ங்' என்னும் மெல்லின மெய் 'விதம்' எனப் பொருள் தரும் 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும்.
- உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லை. ஆனால் தமிழ் இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**மொழி இறுதி எழுத்துக்கள் - 24**

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்
2. மெய்களில் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினோரெழுத்தும் சொல்லில் இறுதியில் வரும்
3. க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை
4. பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக்கொள்வர்.
5. ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும் இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

- நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் புணர்ச்சி என்பர்.

**உயிரீறு, மெய்யீறு**

- மணி (ண்+இ) + மாலை = மணிமாலை - உயிரீறு; பொன் + வண்டு = பொன் வண்டு - மெய்யீறு

**உயிர்முதல், மெய்முதல்**

- வாழை+இலை = வாழையிலை - உயிர்முதல்; தமிழ்+ நிலம் (ந்+இ) = =தமிழ் நிலம் - மெய்முதல்
- சார்பெழுத்துகளுள் ஆய்தம் சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது.
- குற்றியலுகரமும் நுந்தை தவிர குற்றியலிகரமும் சொல்லின் முதலில் வாரா.
- 'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது.
- 'தமிழ் என்ற சொல்லை இனிமை, பண்பாடு அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்
- "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புற நானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் 'பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.
- "தமிழ்கெழு கூடல்" என்ற விடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது.
- கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து. தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளா கின்றன.
- தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது.
- ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே". மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ் மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| அழகியல் | Aestheetic |
| இதழாளர் | Journalist |
| கலை விமர்சகர் | Art Critic |
| புத்தக மதிப்புரை | Book Review |
| புலம் பெயர்தல் | Migration |
| தத்துவ ஞானி | Philosopher |

- நாடற்றவன் - அ.முத்துலிங்கம்
- நல்ல தமிழ் எழுத வேண்டுமா? - அ.கி. பரந்தாமனார்
- உயிர்த்தெழும் காலத்துக்காக - சு,வில்வரத்தினம்

RADIAN IAS

பாலைத்திணை - ஓதலாந்தையார், ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை.

- பேயனார், சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன

**இயல் - 2 யானை டாக்டர்**

- காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் காட்டின் மூலவர் என்பர்

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்**

| | |
|---|---|
| 1) கயம் | 12. அரசுவா |
| 2) வேழம் | 13. அல்லியன் |
| 3) களிறு | 14. அனுபமை |
| 4) பிளிறு | 15. ஆனை |
| 5) களபம் | 16. இபம் |
| 6) மாதங்கம் | 17. இரதி |
| 7) கைம்மா | 18. குஞ்சரம் |
| 8) வாரணம் | 19. வல்விலங்கு |
| 9) அஞ்சனாவதி | 20. கரி |
| 10) அத்தி | 21. அஞ்சனம் |
| 11) அத்தினி | |

- காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல் யாழ்வரைத் தங்கி யாங்கு - கலித்தொகை
- யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர் யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். உலகப்புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வனப்பேணுநர்களுக்கு வழங்கப் படும் மிக உயரிய விருதான வேணுமேனன் ஏலீஸ் விருதினை 2000 ஆம் ஆண்டில் பெற்றார். தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப்புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின் மூலம் செயல்படுத்தியவர்.

**இயல் - 2 மெய்ம்மயக்கம்**

**உடனிலை மெய்ம்மயக்கம்**

- தமிழில் க்,ச்,த்,ப் ஆகிய மெய்யெழுத்துகள் தம் எழுத்துகளுடன் மட்டுமே சேரும் உடனிலை மெய்ம்மயக்க எழுத்துகள் ஆகும்.
- இந்த எழுத்துகளின் அருகில் அவற்றுக்குரிய எழுத்து வரிசை மட்டுமே வரும். பிற எழுத்துகள் வாரா.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

- தமிழில் ர்,ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகள் தம் வரிசை எழுத்துகளுடன் சேர்ந்து வராமல் பிற மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும். எனவே, இவ்விரு மெய்யெழுத்துகளும் வேற்று நிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரியவையாகும்.

**ஈரொற்று மெய்ம்மயக்கம்**

- தனிச்சொற்களிலோ கூட்டுச்சொற்களிலோ சொற்களின் இடையில் ய்,ர்,ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் வரும், (மூன்று மெய்களாக மயங்கி வரும்) இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர்.
- **ய்** - காய்ச்சல், நாய்க்கால்
- **ர்** - உயர்ச்சி, தேர்க்கால்
- **ழ்** - வீழ்ச்சி, காழ்ப்புணர்ச்சி
- தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர்

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| இயற்கை வேளாண்மை | Organic Farming |
| இரசாயன் உரங்கள் | Chemical Fertilizers |
| ஒட்டு விதை | Shell seeds |
| தொழு உரம் | Farmyard Manure |
| மதிப்புக்கூட்டுப் பொருள் | value Added Product |
| வேர் முடிச்சுகள் | Weaver Bird |
| அறுவடை | Harvesting |

**இயல் - 3 மலை இடப்பெயர்கள் ஓர் ஆய்வு**

- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள், திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார். கமில் சுவலபில் (Kamil Zvelebil).
- "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம். "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை)
- தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.
- தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப் பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம் பெறுகின்றது.

**இயல் - 3 காவடிச் சிந்து**

- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச் சிந்து எனலாம்,

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| ஜகம் | உலகம் |
| புயம் | தோள் |
| வரை | மலை |
| வன்னம் | அழகு |

- இல் - எதிர்மறை இடைநிலை
- அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதி**

- இயைவதாயினும் - இயைவது + ஆயினும்
- உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- புகழெனின் - புகழ் + எனின்
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட் (GEORGEL HART) என்பவரால் புறநானூறு The Four Hundred Songs of War and Wisdom. An Anthology of poems from Classical Tamil, the Purananuru என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு,போப் (G.U.POPE), புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றை "Extracts from Purananooru & Purap-porul Venbamalai" என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.
- சுவடிகளில் எழுதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்த புற நானூறு பிற்காலத்தில் அழிந்து போகும் நிலை எய்தியபோது பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து தற்காலத் தமிழரும் பயன்பெறும், வகையில், உ.வே.சா. 1894 ஆம் ஆண்டு முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார் இதன் பின்னர் பலரும் வெளியிட்டுள்ளனர்.
- புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும் அகவற் பாக்களால் ஆனது. புறநானூற்றின் பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.
- கடவுள் மாய்ந்த இளம்பெருவழுதி: பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர் ஆயினும் அரிய குணங்கள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர். கடற்செலவு ஒன்றில் இறந்து போனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப் படுகின்றார். இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் பரிபாடலில் ஒரு பாடலும் இயற்றியுள்ளார்.

**இயல் - 3 வாடிவாசல்**

- சி.சு செல்லப்பா சிறுகதை புதினம் விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலான இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.
- சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- அவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள்: வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ் ராமையாவின் சிறுகதைப்பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது
- இவருடைய 'சுதந்திர தாகம்' புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

**இயல் - 3 பகுபத உறுப்புகள்**

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | க்.ட்.ற்.இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு,கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப்.வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ,அல்,இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என்,ஏன்,அல்.அன், கு,டு, து.று |
| தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் | எம்.ஏம்.அம்.ஆம்.ஓம். கும்.டும். தும்.றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ,ஆய்,இ |
| முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதிகள் | இர்,ஈர்,மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன்,ஆன் |
| படர்க்கை பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள்,ஆள் |
| படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர்,ஆர்,ப.மார். கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து.று,டு |
| படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ,ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க.இய.இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ.உம் |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ.இ |

- 'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி.வை தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்.

**கலைச்சொல் அறிவோம்**

- இனக்குழு - Ethnic Group
- புவிச்சூழல் - Earth Environment

RADIAN IAS ACADEMY

| | |
|---|---|
| 1953 | நோம் சாம்ஸ்கி, 'மொழி அறிவு மூளைக்குள் பதிந்திருக்கிறது என்று கண்டறிந்தார். |

- சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன், அறிவியல் புனைகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், திரைப்படம் என்று இவருடைய படைப்புகளின் பரப்பு விரிவானது. கணிப்பொறியின் கதை, சிலிக்கன் சில்லுப்புரட்சி அடுத்த நூற்றாண்டு ஆகியவை இவருடைய புகழ்பெற்ற அறிவியல் நூல்கள், அறிவியலை எளிய தமிழில் ஊடகங்களில் பரப்பியதற்காக, மத்திய அரசின் விருது பெற்றவர். இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவுக் கருவியைக் கொண்டு வந்ததில் சுஜாதாவின் பங்களிப்பு அதிகம்.

**இயல் - 4 விஞ்ஞானி**

- மீ.ராசேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட மீரா மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரு தளங்களிலும் பரவலாக அறியப்பட்டவர். சிவகங்கை அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இவருடைய 'ஊசிகள்' கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் போன்ற கவிதை நூல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றவை இவர் அன்னம் விடு தூது, கவி ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.
- தில்லி வானொலி நிலையம் உருது மொழியில் 'மஷைரா' என்னும் கவியரங்கத்தை முதன் முறையாக ஒலிபரப்பியது. அதுபோல் தமிழிலும் கவிதைகளை ஒலிபரப்பவேண்டுமென்ற விருப்பத்தில் சிட்டி'யும் (சுந்தர்ராஜன்) சோமுவும் 'கவியரங்கம்' என்று பெயரிட்டு ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். திருச்சி வானொலி நிலையம் இம்முதல் கவியரங்கத்தைத் தமிழ்ப் புத்தாண்டு நாளையொட்டி 13.04.1944 அன்று ஒலிபரப்பியது. 'எழில்' என்ற தலைப்பில் நடந்த இக்கவியரங்கமே தமிழ் நாட்டில் நடந்த முதல் கவியரங்கமாகும்.

**இயல் - 4 நீலகேசி**

**சொல்லும் பொருளும்**

- மாழ்கி - தொட்டால் சுருங்கி எனும் தாவரம், மாழ்குதல் - மயங்குதல்; சோதனை அறிவு.

**சொல்லும் பொருளும்**

- அரும்புதல் - பருத்தல்; இயைபுஇல் பொருத்தமற்றது; ஆக்கம் - உயிருடைத்து.
- அறிவியல் உலகில், தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்ற உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியவர் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜகதீச சந்திரபோஸ்.

**சொல்லும் பொருளும்**

- கற்றிலை - அறியவில்லை பெருந்தவத்தாய் - பெரிய தவமுடையவர்.

**சொல்லும் பொருளும்**

- வாய்த்துரை - பொருத்தமான உரை; வாமன் - அருகன்; தேறு - தெளிவாக.
- 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **ரோமர்** ஒளியின் திசைவேகத்தையும், **பியரி கேசன்டி** ஒலியின் திசைவேகத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தினர். ஒலியின் திசைவேகம் 331 மீ/வி ஒளியின் திசைவேகம் $3\times10^8$ மீ/வி எனவே ஒலி ஒளியும் ஒரே நேரத்தில் தோன்றினாலும் ஒளியே நம்மை விரைவில் வந்தடையும்.

**இலக்கணக்குறிப்பு**

- அரும்பும் மலரும் - எண்ணும்மை;
- அரும்பிணி - பண்புத்தொகை
- வெப்பம் குளிர் - உம்மைத் தொகை
- கொளல் - தொழிற்பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **காட்டிய** - காட்டு + இ(இன்) + ய் + அ
- **காட்டு** - பகுதி
- **இ(ன்)** - இறந்தகால இடைநிலை; னகரம் புணர்ந்து கெட்டது.
- **ய்** - உடம்படுமெய் சந்தி, அ - பெயரெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

- மன்னுயிர் - மன் - உயிர்
- தனிக்குறில் முன்னொற்று உயிர்வருஇன் இரட்டும் - மன்ன் + உயிர்
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - மன்னுயிர்
- பெருந்தவத்தாய் - பெருமை + தவத்தாய்
- ஈறுபோதல் - பெரு + தவத்தாய்
- இனம் மிகல் - பெரு + ந் + தவத்தாய்
- பெருந்தவத்தாய்.
- நீலகேசி என்பது ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று விருத்தப்பாவால் ஆனது. இதற்கு நீலகேசித் தெருட்டு என்றும் பெயர். இது குண்டலகேசி என்னும் நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது. நீலகேசி என்னும் சமண சமயப் பெண், சமயத் தலைவர் பலரிடம் வாதம் செய்து. சமண நெறியை நிலை நாட்டுவதாக நூல் அமைந்துள்ளது. தமிழில் எழுதப்பட முதலாவது தருக்க நூல் இது என்பர். இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட, பதினொரு பகுதிகளிலும் மொத்தமாக 894 பாடல்கள் உள்ளன. இதை எழுதியவர் யார் என அறியப்படவில்லை. இதன் உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர்.

**இயல் - 4 புற நானூறு**

**சொல்லும் பொருளும்**

- செலவு - வழி;

RADIAN IAS ACADEMY

(தொல்.அகத். 235) எனக் குறிப்பதோ எண்வகை மெய்ப்பாடு பற்றிக் கூறும்போது கல்வியின் பொருட்டு ஒருவருக்கு **பெருமிதம்** தோன்றும் (தொல்.மெய்.9) என்றும் கூறுகிறது.

**கல்வியின் சிறப்பு**

- துணையாய் வருவது தூயநற் கல்வி - திருமந்திரம்
- கல்வி அழகே அழகு - நாலடியார்
- இளமையில் கல் - ஔவையார்

| | |
|---|---|
| கணக்காயர் | எழுத்தும் இலக்கியமும் உரிச்சொல்லும் (நிகண்டு) கணக்கும் கற்பிப்போர் |
| ஆசிரியர் | பிற்காலத்தில் ஐந்தாக விரிக்கப் பட்ட மூவகை இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர் |
| குரவர் | சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர் |
| பள்ளிகள் | கலைகள், கல்வி கற்பிக்கும் இடங்களாக விளங்கின |
| மன்றம் | கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடமாகத் திகழ்ந்தது |
| சான்றோர் அவை | செயல்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அவையாக இருந்தது. |

- கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று **பெரிய திருமொழியும்** ஓதும் பள்ளி என்று **திவாகர நிகண்டும்** கல்லூரி என்று **சீவக சிந்தாமணியும்** குறித்துள்ளன.
- **'பள்ளி'** என்ற சொல்லுக்குப் **'படுக்கை'** என்று பொருள்.
- பட்டி மண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது.

**தமிழகத்தில் விடுதலைக்கு முன் கல்வி வளர்ச்சி**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1826 | சென்னை ஆளுநர் சர் தாமஸ் மன்றோ ஆணைக்கிணங்கப் பொதுக்கல்வி வாரியம் தொடங்கப்பட்டது |
| 1835 | சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப் பட்டது. இது இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்று |
| 1854 | பொதுக்கல்வித் துறை நிறுவப்பட்டு முதல் பொதுக்கல்வி இயக்குநர் (DPI) நியமிக்கப்பட்டார். |
| 1857 | சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப் பட்டது |
| 1859 | 1794 இல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆஃப் சர்வே என்ற நிறுவனம், 1859 இல் கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது |
| 1910 | தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது |
| 1911 | பள்ளியிறுதி வகுப்பு - மாநில அளவிலான பொதுத்தேர்வில் நடைமுறைக்கு வந்தது. |

- தரங்கம்பாடியில் முதன்முதலில் அச்சுக்கூடத்தை ஏற்படுத்தி, மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களை அச்சடித்தனர்.இந்தியாவில் முதன் முதலில் அச்சேறிய மொழி தமிழே ஆகும்.
- 1813 ஆம் ஆண்டு சாசனச் சட்டப்படி லண்டன் பாராளுமன்றம், இந்தியர்களின் கல்விக்காக ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்கியது.
- 1835 ஆம் ஆண்டில் மெக்காலே கல்விக்குழு உருவாக்கப்பட்டது.
- 1854 ஆம் ஆண்டு சார்லஸ் வுட்டின் அறிக்கை, இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம் என்று போற்றப்படுகிறது.
- கி.பி. 1882 ஆம் ஆண்டு உருவான ஹண்டர் கல்விக்குழு சீருடை முறை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 45 இன் கீழ் நாட்டிலுள்ள 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தியது.
- இரா. மீனாட்சி 1970 களில் எழுதத் தொடங்கி நெருஞ்சி, சுடுபூக்கள் தீபாவளிப்பகல், மறு பயணம், வாசனைப்புல், உதயநகரிலிருந்து, கொடி விளக்கு உள்ளிட்ட கவிதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார். பாண்டிச்சேரி அரோவில்லில் வாழ்ந்து வருகிறார். ஆசிரியப் பணியிலும் கிராம மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்டவர்.

**இயல் - 5 நற்றிணை**

**சொல்லும் பொருளும்**

- பிரசம் - தேன்;
- புடைத்தல் - கோல்கொண்டு ஒச்சுதல்;
- கொழுநன் குடி - கணவனுடைய வீடு;
- வறன் - வறுமை
- கொழுஞ்சோறு - பெருஞ்செல்வம்;
- உள்ளாள் - நினையாள்
- மதுகை - பெருமிதம்

**இலக்கணக்குறிப்பு**

- வெண்சுவை தீம்பால் - பண்புத்தொகை; விரிகதிர், ஒழுகுநீர் - வினைத் தொகைகள்; பொற்கலம், பொற்

- செம்மொழி - Classical language
- மூதாதையர் - Ancestor
- மதிப்புக்கல்வி - Value Edcuation
- மன ஆற்றல் - Mental Abilities

**இயல் - 6 நாளெல்லாம் வினைசெய்**

- முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது.
- போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோ வெல்லோ என்பவரால் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- ஆனந்தரங்கர் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரெஞ்சுக் கிழக்கிந்திய உரை பெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.
- உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் **சாமுவேல் பெப்பிசு** ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 - 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும் இதனால் ஆனந்தரங்கர் **இந்தியாவின் பெப்பிசு** என்று அழைக்கப்படுகிறார்.

**ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ.வே.சா.**

- தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.
- அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது. முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல் ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்.

  **-மகாகவி பாரதியார்.**

- ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்
- 480 காசு - ஒரு ரூபாய்
- 60 காசு - 1 பணம்
- 8 பணம் - 1 ரூபாய்
- 24 பணம் - ஒரு வராகன்
- 1 பொன் - 1/2 வராகன்
- 1 வராகன் - 3 அல்லது 3.2 ரூபாய்
- 1 மோகரி - 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம்
- 1 சக்கரம் - ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்

**ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில**

1. ஆனந்தரங்கன் கோவை - தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் - புலவரேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் - பிரபஞ்சன்

**இயல் - 6 சீறாப்புராணம்**

**சொல்லும் பொருளும்**

- வரை - மலை, கம்பலை - பேரொலி; புடவி - உலகம் எய்துதல் - பெறுதல், வாரணம் - யானை, பூரணம் - நிறைவு, நல்கல் - அளித்தல், வதுவை - திருமணம்,கோன்- அரசன், மறுவிலா - குற்றம் இல்லாத: துன்ன - நெருங்கிய; பொறிகள் - ஐம்புலன்; தெண்டிரை - தெள்ளிய நீரலை; விண்டு - திறந்து; மண்டிய - நிறைந்த; காய்ந்த - சிறந்த; தீன் - மார்க்கம்.

**இலக்கணக்குறிப்பு**

- மலிந்த, மண்டிய, பூத்த, பொலிந்த - பெயரெச்சங்கள்; இடன் - ஈற்றுப் போலி; தரும் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்; பெரும்புகழ், தெண்டிரை - பண்புத்தொகைகள்;
- பொன்நகர் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- மாநகர் ; உறுபகை - உரிச்சொல் தொடர்கள்;
- ஐந்தும் - முற்றும்மை; தானமும் ஒழுக்கமும்
- தவமும் ஈகையும் - எண்ணும்மைகள்

**பகுபத உறுப்பிலக்கணம்**

- மலிந்த - மலி + த் (ந்) + த் + அ
- மலி - பகுதி, த் - சந்தி , 'ந்' ஆனது விகாரம்
- த் - இறந்தகால இடைநிலை
- அ - பெயரெச்ச விகுதி
- நெருங்கின - நெருங்கு + (இ)ன் + அ
- நெருங்கு - பகுதி, (இ)ன் - இறந்தகால இடைநிலை
- அ - பெயரெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

- அறம்பொருள் - அருமை + பொருள்
- ஈறுபோதல் - அரு + பொருள்
- இனமிகல் - அரும்பொருள்
- **மனையென - மனை + என**
- இ ஈ ஐ வழி யவ்வும் - மனை + ய் + என
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே மனையென

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ப்பூ குறிஞ்சிப் பூ | தோன்றி | தாமரை கழுநீர் | ப்பூ | ம்பூ மராம்பூ |
| மரம் | சந்தனம் தேக்கு அகில் மூங்கில் | கொன்றை காயா குருத்தம் | மருதம் வஞ்சி காஞ்சி | புன்னை ஞாழல் | பாலை உழிஞை ஒமை |
| உணவு | மலை நெல் முங்கிலரிசி | வரகு சாமை முதிரை | செந்நெல் வெண்ணெல் | உப்பும் மீனும் விற்றுப் பெற்ற பொருள் | வழியிற் பறித்த பொருள் |
| பறை | தொண்டகப்பறை | ஏறுகோட் பறை | நெல்லரி கிணை மண முழவு | மீன் கோட் பறை நாவாய்ப் பம்பை | துடி |
| யாழ் | குறிஞ்சிப் யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | சாதாரிப் பண் | மருதப் பண் | செவ்வழிப் பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | வெறிபாடல் மலை நெல் விதைத்தல் தேன் எடுத்தல் கிழங்கு அகழ்தல் | சாமை வரகு விதைத்தல் களை கட்டல் அரிதல் | விழாச் செய்தல் வயலில் களை கட்டல் நெல்லரிதல் | உப்பு உண்டாக்கல் விற்றல் மீன் பிடித்தல் உணக்கல் | போர் செய்தல் சூறை பாடல் |

**இயல் - 6 பிம்பம்**

- புதுச்சேரியைச் சேர்ந்த பிரபஞ்சனின் இயற்பெயர் வைத்தியலிங்கம். இவர் சிறுகதை புதினம், நாடகம் கட்டுரை என்று இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் இயங்கி வருபவர். 1995 இல் இவருடைய வரலாற்றுப் புதினமான வானம் வசப்படும்' சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவருடைய படைப்புகள் தெலுங்கு கன்னடம், இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**இயல் - 6 பா, இயற்றப் பழகலாம்**

- பாக்களின் வகைகள், அப்பாக்களின் ஓசைகள், பாக்கள் இயற்றுவதற்குரிய விதிமுறைகள் முதலியவற்றை வெளிப்படுத்துவது யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலாகும்.
- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்னும் பாவகைகள் முறையே செப்பலோசை அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்னும் ஓசை வடிவம் கொண்டவை.
- குறளடி இரண்டு சீர்களாகவும் சிந்தடி மூன்று சீர்களாகவும், அளவடி அல்லது நேரடி நான்கு சீர்களாகவும், நெடிலடி ஐந்து சீர்களாகவும் கழி நெடிலடி ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பல சீர்களாகவும் வருவதே கவிதையின் வடிவமாகும்.
- பா இயற்றுவதற்குரிய எளிய வடிவமாக ஆசிரியப்பாவைக் கூறலாம், அகவல் ஓசை பெற்றதால் ஆசிரியப்பாவை அகவற்பா என்றும் கூறுவர், பெரும்பாலும் ஆசிரியப்பா இரண்டு அசைகளால் அமையும், ஆசிரியப்பாக்களால் ஆன பாடல்களே சங்ககாலத் தமிழில் மிகுதியாக உள்ளன.
- ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் இயற்சீர் ஆகும் இதனை ஆசிரிய 'உரிச்சீர்' என்றும் கூறுவர்.
- ஷேக்ஸ்பியர் என்னும் மாபெரும் படைப்பாளனின் பிறந்த நாளான ஏப்ரல் 23 உலகம் முழுவதும் புத்த நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**கலைச்சொல் அறிவோம்**

- ஆவணம் - Document
- உப்பங்கழி - Back water
- ஒப்பந்தம் - Agreement
- படையெடுப்பு - Invasion
- பண்பாடு - Culture
- மாலுமி - Sailor

**இயல் - 7 காலத்தை வென்ற கலை**

- இராசராசன் 988 ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றி கொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் "கேரளாந்தகன் வாயில் கோபுரம்" எனப் பெயரிடப் பட்டுள்ளது
- செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு '**விசித்திர சித்தன்** என்று அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் குடைவரைக் கோவில்களை அமைத்ததாக மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறுகின்றது.
- கட்டக்கலை என்பது உறைந்துபோன இசை - **பிரடிரிகா வொன்ஸ்லீவிங்**
- இந்தியக் கட்டடக் கலைப்பாணியை நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர்.
- தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.
- 1886 ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் **ஷீல்ஸ்** ஆறு ஆண்டுகள் தீவிரமாகக் கல்வெட்டுகளைப் படியெடுத்து வாசித்து இக்கோவிலை இராசராச சோழன்தான் கட்டினான் என்று உறுதி செய்தார்.
- நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு, இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்து தொடங்கியது.
- இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப் பணிகளில் இருந்திருக்கிறார்கள்.

**இயல் -7 குற்றாலக் குறவஞ்சி**

**சொல்லும் பொருளும்**

- கொத்து - பூமாலை;

தாமரை இதழின் ஜீவா பற்றிய சிறப்பு மலரில் வெளியானது.

### இயல் -7 புரட்சிக்கவி

**சொல்லும் பொருளும்**

- ஒதுக - சொல்க;
- முழக்கம் - ஓங்கி உரைத்தல்;
- கனிகள் - உலோகங்கள்;
- மணி - மாணிக்கம்;
- படிகம் - பளபளப்பான கல்;
- மீட்சி - விடுதலை;
- நவை - குற்றம்;
- படி - உலோகம்

**இலக்கணக்குறிப்பு**

- ஒதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய - **வியங்கோள் வினைமுற்றுகள்;**
- அலைகடல் - **வினைத்தொகை**
- தமிழ்க்கவிஞர் - **இருபெயரொட்டுப் பண்புத்தொகை**
- பேரன்பு, நெடுங்குன்று - **பண்புத்தொகை**
- ஒழிதல் - **தொழிற்பெயர்,**
- உழுதுழுது - **அடுக்குத்தொடர்**

**பகுபத உறுப்பிலக்கணம்**

- **நின்றார்** - நில்(ன்) + ற் + ஆர்
- **நில்** - பகுதி ('ல்' 'ன்' ஆனது விகாரம்),
- **ற்** - இறந்தகால **இடைநிலை,**
- **ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி
- **செய்வான்** - செய் + வ் + ஆன்
- **செய்** - பகுதி,
- **வ்** - எதிர்கால இடைநிலை,
- **ஆன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி
- **அழைத்தான்** - அழை + த் + த் + ஆன்
- **அழை** - பகுதி, த் - சந்தி,
- **த்** - இறந்தகால இடைநிலை,
- **ஆன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி
- **வேண்டுகின்றேன்** - வேண்டு + கின்று + ஏன்
- **வேண்டு** - பகுதி,
- **கின்று** - நிகழ்கால இடைநிலை,
- **ஏன்** - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- **ஆழ்க** - ஆழ் + க
- **ஆழ்** - பகுதி ,
- **க** - வியங்கோள் வினைமுற்று விகுதி
- **பறித்தார்** - பறி + த் + த் + ஆர்
- **பறி** - பகுதி.
- **த்** - சந்தி,
- **த்** - இறந்தகால இடைநிலை,
- **ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி.

**புணர்ச்சி விதி**

- நீரோடை - நீர் + ஒடை
- உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
- சிற்றூர் - சிறுமை + ஊர், ஈறு போதல் சிறு + ஊர்
- தன்னொற்றிரட்டல் - சிற்று + ஊர்
- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் - சிற்ற் + ஊர்
- உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - சிற்றூர்
- கற்பிளந்து - கல் + பிளந்து
- ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும் - கற்பிளந்து
- மணிக்குளம் - மணி + குளம்
- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் - மணிக்குளம்
- அமுதென்று - அமுது + என்று
- உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - அமுத் + என்று
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - அமுதென்று
- புவியாட்சி - புவி + ஆட்சி
- இ ஈ ஐ வழி யவ்வும் - புவி + ய் + ஆட்சி
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - புவியாட்சி
- வடமொழியில் எழுதப்பட்ட **பில்கணீயம்** என்னும் காவியத்தைத் தழுவி தமிழில் பாரதிதாசனால் 1937 இல் எழுதப்பட்டது புரட்சிக்கவி. பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கனக சுப்புரத்தினம் என்னும் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார். பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர். குடும்ப விளக்கு பாண்டியன் பரிசு இருண்ட வீடு சேர தாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு ஆகிய காப்பியங்களையும் எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர் 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியுள்ளார். இவருடைய **பிசிராந்தையார்.** நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. **'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே'** என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.

RADIAN IAS ACADEMY

| | |
|---|---|
| காமாவசாயித்வம் | அடக்கி ஆளும் ஆற்றல்<br>விரும்பியதை முடிக்கும் ஆற்றல் |

**இயல் -9 ஜப்பானிய ஹைக்கூ**

- பிரமிள் என்ற பெயரில் எழுதிய சிவராமலிங்கம், இலங்கையில் பிறந்தவர், இவர் பானுசந்திரன் அரூப் சிவராம், தருமு சிவராம் போன்ற பல புனைபெயர்களில் எழுதியவர். புதுக்கவிதை விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்த தளத்தில் இயங்கியவர், ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய கவிதைகள் முழுமையாகப் பிரமிள் கவிதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது. லங்காபுரி ராஜா உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் நக்ஷத்திரவாசி என்னும் நாடகமும் வெயிலும் நிழலும் உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

**இயல் -9 தொலைந்து போனவர்கள்**

**இலக்கணக்குறிப்பு**

- கற்றேன் - தன்மை ஒருமை வினைமுற்று;
- உடை அணிந்தேன் - இரண்டாம் வேற்றுமைத்தொகை;
- உரைத்தாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று

**பகுபத உறுப்பிலக்கணம்**

- வென்றேன் - வெல்(ன்) + ற் + ஏன்
- வெல் - பகுதி (ல்,ன் எனத் திரிந்தது விகாரம்)
- ற் - இறந்தகால இடைநிலை
- ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- நிற்கின்றாய் - நில்(ற்) + கின்று + ஆய்
- நில் - பகுதி (ல்,ன் எனத் திரிந்தது விகாரம்)
- கின்று - நிகழ்கால இடைநிலை
- ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
- பெற்றேன் - பெறு (பெற்று) + ஏன்
- பெறு - பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது)
- ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- அணிந்தேன் - அணி + த்(ந்) + த் + ஏன்
- அணி - பகுதி
- த் - சந்தி (த்,'ந்') எனத் திரிந்தது விகாரம்)
- த் - இறந்தகால இடைநிலை
- ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
- அப்துல் ரகுமான் புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக் கவிதை என்று கவிதைகளின் பல வடிவங்களிலும் எழுதியுள்ளார். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர். பால்வீதி, நேயர்விருப்பம், பித்தன், ஆலாபனை முதலான பல நூல்களை எழுதியுள்ளார். பாரதிதாசன் விருது, தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் **தமிழன்னை விருது ஆலாபனை** என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| தரங்கம் | கடல் |
| கவனம் | வேகம் |
| துரகதம் | குதிரை |
| வென்றி | வெற்றி |
| விசயன் | அருச்சுனன் |
| நான்மறை | நான்கு வேதங்கள் |
| யாக்கை | உடல் |
| ஒவுஇலாது | ஒன்றும் மிச்சமின்றி |
| அயன் | பிரமன் |
| எழிலிஏறு | பேரிடி |
| அங்கை | உள்ளங்கை |
| அவுணன் | அரக்கன் (மாவலி சக்கரவர்த்தி) |
| மல்லல் | வளமை |
| தொடையல் | மாலை |
| சூரன் மாமதலை | கதிரவன் மகன் |
| உற்பவம் | பிறவி |

இலக்கணக் குறிப்பு

- கருங்கடல், பெருந்துயர், வெங்கணை, செங்கை, வெவ்வினை - பண்புத்தொகை
- தடந்தேர், மாமதலை - உரிச்சொல்தொடர்
- கண்மலர் - உருவகம்
- ஈகையும் செல்வமும் - எண்ணும்மை
- முத்தியும்பெறுதி - உயர்வுசிறப்பும்மை
- நவில்க, உதவுக கொள்க, தருக, சொல்லுக - வியங்கோள் வினைமுற்றுகள்
- வென்றி - மெலித்தல் விகாரம்
- பொருள் எலாம்,நிகர் அலன் - இடைக்குறை விகாரங்கள்
- வாழ் அயன், செய்புண்ணியம் - வினைத்தொகைகள்

**பகுபத உறுப்பிலக்கணம்**

- தாண்டிய - தாண்டு + இ(ன்) + ய் + அ
- தாண்டு - பகுதி
- (இ)ன் - இறந்தகால இடைநிலை
- ய் - உடம்படுமெய்சந்தி
- அ - பெயரெச்ச விகுதி
- உலகிலுள்ள பழமையான மொழிகளில் இதிகாசங்களும் காப்பியங்களும் தோன்றியுள்ளன.

RADIAN IAS ACADEMY

- சாதி, மத, இன, பால், வேறுபாடுகள் கடந்த அருட்பெருஞ்சோதி ஒன்றே இறைவன் என்பதை வலியுறுத்தினார்.
- ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றுத் தெய்வமணிமாலை, கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கியவர் வள்ளலார்.
- மநு முறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலை நமக்கு நல்கியவர்;
- ஒழிவில் ஒடுக்கம், தொண்ட மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர் வள்ளலார்.
- அவர் சாதி, சமய, மத வேறுபாடுகள் கடந்து அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு பாரட்டச் **சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார்**.
- சத்திய தருமச் சாலையைத் தொடங்கினார்.
- தெய்வங்கள் பல எனச் சொல்லும் உருவ வழிபாட்டை மறுத்தார்.
- பசியின்றி அனைத்து உயிர்களும் இன்பமுடன் வாழ வலியுறுத்திய வள்ளலாரின் சில கொள்கைகள் பின்வருமாறு.
- கடவுள் ஒருவரே, அவரைச் சோதி வடிவில் உண்மை அன்பால் வழிபட வேண்டும்.
- சிறு தெய்வ வழிபாடு கூடாது
- அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது
- புலால் உண்ணலாகாது.
- சாதி சமயம் முதலிய வேறுபாடுகள் கூடா, எவ்வுயிரையும் தம் உயிர்போல எண்ணி ஒழுகும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- எதிலும் பொது நோக்கம் வேண்டும்
- புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டா, மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டும்.

**கலைச்சொல் அறிவோம்**

- ஆன்மா - Soul
- அறிவு - Wisdom
- சித்த மருத்துவம் - Siddha Medicine
- மாயை - Illusion
- துன்பம் - Tragedy
- மாண்பு - Honour
- நிறுத்தக்குறிகள் - Punctuation marks

**இயல் -10 தாகூரின் கடிதங்கள்**

- பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் 16 ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 1913 ஆம் ஆண்டு கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்காக இலக்கியத்துக்கான **நோபல் பரிசு** பெற்றார்.1919 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர், ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர்கள் வழங்கிய **'சர்'** பட்டத்தைத் துறந்தார். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப்பாடல்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், ஏறக்குறைய இருபது பெரு நாடகங்கள், குறு நாடகங்கள், எட்டு நாவல்கள், எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகள் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களிலும் நூல்களை எழுதியுள்ளார். அவற்றுடன் அவருடைய ஓவியப் படைப்புகள், பயணக் கட்டுரைகள், ஆங்கில மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றையும் இணைத்துக் கொண்டால் அவருடைய ஆளுமையின் பேருருவை அறிய முடியும். குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும். தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921 இல் விஸ்வபாரதி கல்கலைக்கழகத்தை நிறுவினார். 'குருதேவ்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் தாகூரின் 'ஜனகணமன' என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகவும் **'அமர் சோனார் பங்களா'** என்னும் பாடல் வங்காள தேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகிறது

**இயல் - 10 மனோன்மணீயம்**

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| கடிநகர் | காவல் உடைய நகரம் |
| காண்டி | காண்க |
| பூம்பராகம் | பூவில் உள்ள மகரந்தம் |
| ஆசு இலா | குற்றம் இலாத |
| தோட்டி | துறட்டி |
| அயம் | ஆடு, குதிரை |
| புக்கவிட்டு | போக விட்டு |
| சீரிய தூளி | நுண்ணிய மணல் |
| சிறுகால் | வாய்க்கால் |
| பரல் | கல் |
| முந்நீர் மடு | கடலாகி நீர்நிலை |
| அண்டயோனி | ஞாயிறு |
| சாடு | பாய் |
| ஈட்டியது | சேகரித்தது |
| எழிலி | மேகம் |
| நாங்கூழ்ப்புழு | மண்புழு |

RADIAN IAS ACADEMY

# 11வது தமிழ் பாடத்தின் முக்கிய குறிப்புகள்

## வாழ்த்து

### இறை வாழ்த்து

- தாயுமானவர் பாடல்கள் - தாயுமானவர்
- அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே - தாயுமானவர்
- இறைநெறியை வலியுறுத்தும் இந்நூல் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றப்படுகின்றது.
- இந்நூல் 1452 பாடல்களைக் கொண்டதாகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

- பெற்றோர்: கேடிலியப்ப பிள்ளை - கெசவல்லி
- ஊர்: வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காடு
- காலம்: கி.பி 18ஆம் நூற்றாண்டு
- மனைவி: மட்டுவார்குழலி
- கேடிலியப்ப பிள்ளை திருச்சிராப்பள்ளியை ஆண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற அரசரிடம் கணக்கராகப் பணிபுரிந்தார்.
- திருச்சிராப்பள்ளியில் கோவில் கொண்டுள்ள இறைவன் அருளால் பிறந்தமையால் தாயுமானவர் எனப்பெயர் பெற்றார்.
- தாயுமானவர் தந்தை மறைவுக்கு பின் கணக்கராகப் பணியாற்றி விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஆட்சியிலும், அவர் மனைவி மீனாட்சி ஆட்சியிலும் பணியாற்றினார்.
- திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பாரிடம் அருளும், ஆசியும் பெற்று துறவரம் பூண்டார்.
- இவர் முக்தி பெற்ற இடம் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரம்
- பாடல் பாவகை: எண் சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

**அருஞ்சொற்பொருள்:**

- ஆரமிர்தே - அரிய அமிழ்தே
- பூரணமாய் - முழுமையாய்
- புனிதம் - தூய்மை
- கருவி ஆதி - கருவிகள் முதலான
- உயிர்த்திரளை ஆட்டும் - அனைத்து உயிர்க் கூட்டங்களையும் ஆட்டுவிக்கும்.
- கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவி - எண்ணிப்பார்க்க முடியாத கருத்துகளுக்கும் உட்பொருளாய் உள்ள
- விழுப்பொருளே - மேலான பொருளே

**இலக்கணம்**

- பழச்சுவை - ஆறாம் வேற்றுமைத் தொகை
- ஆரமிர்து - பண்புத்தொகை
- தரும் பொருளே - செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்
- நீங்காப் பூரணமாய் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- காலமும் தேசமும் - எண்ணும்மை
- உயிர்த்திரள் - ஆறாம் வேற்றுமைத் தொகை
- சொலும் - சொல்லும் என்பதன் இடைக்குறை விகாரம்
- விழுப்பொருள் - உரிச்சொற்றொடர்

### மொழி வாழ்த்து

- வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக் பள்ளியகரம் நீ. கந்தசாமிப்புலவர்
- பாவகை: கலி விருத்தம்

ஆசிரியர் குறிப்பு:

- பெற்றோர்: நீலமேகம் பிள்ளை - சௌந்தரவல்லி
- பிறப்பு: 09.06.1898
- ஊர்: தஞ்சை புறநகர் தற்பொழுது பள்ளியக்கிரகாரம் என வழங்கப்படும் "பள்ளியகரம்"
- ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளைக் கற்றவர்.
- கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் பல ஆண்டுகள் அமைச்சராக விளங்கினார்.
- தாமஸ்கிரே என்பார் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்றைத் தமிழில் "இரங்கற்பா" என்னும் தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார்.
- மறைவு: 18.06.1977

**அருஞ்சொற்பொருள்:**

- வையம் - உலகம்
- தொன்மக்கள் - பழங்காலத்து வாழ்ந்த மக்கள்
- உளத்தினை - தம் மனக்கருத்தை
- கையினாலுரை காலம் - சைகையால் உரைத்த காலம்
- இரித்திட - விலகிட
- பைய - மெல்ல
- நாவையசைத்த பழந்தமிழ் - பேச்சு மொழியாகத் தோன்றிய பழந்தமிழ்
- தாள் - திருவடி
- ஐயை - தாய்

இலக்கணம்

- தொன் மக்கள் - பண்புத்தொகை
- உள்ளம் - ஆகுபெயர்
- உரைகாலம் - வினைத்தொகை
- பழந்தமிழ் - பண்புத்தொகை
- ஐயைதாள் - ஆறாம் வேற்றுமைத் தொகை
- தாள் தலை - இரண்டாம் வேற்றுமைத் தொகை

- நாவை (ய்+அ) சைத்த = நாவயசைத்த
- நின்ற + ஒன்றே
- நின்ற (வ்+ஒ) ன்றே = நின்றவொன்றே
- சே (ச்+ஏ) + அழகு
- சே (ய்+அ) ழகு = சேயழகு
- சே (வ்+அ) ழகு = சேவழகு
- இவ்வாறு உடம்படு மெய் பெற்றபின் "உடல் மேல் உயிர் வந் தொன்று வதியல்பே" என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள உயிர் ஏறிப்புணரும்.

**குறிப்பு:**

- நிலைமொழியிறுதி உயிராக இருந்தும் குற்றியலுகரமாக விருப்பின் இவ்விதி பொருந்தாது. அதற்கு மேல் வரும் குற்றியலுகரப் புணர்ச்சியைக் காண்க.

**குற்றியலுகரப் புணர்ச்சி:**

- நிலைமொழியின் இறுதி எழுத்து குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருப்பின் குற்றியலுகரம் தான் ஊர்ந்து வந்து வல்லின மெய்யை நிற்கச் செய்து தான் மட்டும் மறையும், பின் உடல்மேல் உயிர்வந் தொன்றுவதியல்பே என்னும் விதிப்படி நிலைமொழியீற்று வல்லின மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள உயிரேறிப் புணரும்.

**எ.கா:**

- கருத்து (த்+உ) + அதனுள்
- கருத் (த்+அ) தனுள் = கருத்ததனுள்

விதி: "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" - (நன்னூல்)

- நிலைமொழியிறுதிக் குற்றியலுகரம், யகர முதன் மொழியோடு பொழுது இகரமாகத் திரிந்து புணரும்.

**எ.கா:**

- கொக்கு (க்+உ) + யாது = கொக்கியாது
- அவ்வாறு திரியும் இகரம் குற்றியலிகரமாகும்.

விதி: "யவ்வரின் இய்யாம்"

- சில இடங்களில் நிலைமொழி இறுதி முற்றுகரம் உயிர் முதன் மொழியோடு புணரும் பொழுது தான் ஊர்ந்து வந்த மெய்யைவிட்டு மறையும்.
- உடல்மேல் உயிர் வந் தொன்றுவ தியல்பே என்னும் விதிப்படி புணரும்.

**எ.கா:**

- கதவு (வ்+உ) + அடைப்பு = கத (வ்+அ) டைப்பு = கதவடைப்பு
- செலவு (வ்+உ) + அயர்ந்திசின் = செலவயர்ந்திசின்

விதி: "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்

- யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி" - (நன்னூல்) 164
- உக்குறள்-குற்றியலுகரம்; யவ்வரின் - யகரம் வரின்;
- இய்யாம்-இகர மாகும்; முற்றும் - முற்றுகரமும்
- அற்று - குற்றுகரம் போல மெய்விட்டோடும்; ஒரோ வழி - சில இடங்களில்
- நெடில் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றுள் டகரத்தையும், றகரத்தையும் ஊர்ந்து வரும் குற்றியலுகரங்கள் வருமொழியோடு புணரும் பொழுது "அவை ஊர்ந்து வரும் ஒற்று இரட்டித்துப் புணரும்".

**எ.கா:**

- கோடு + உகிர்
- கோட்டு + உகிர் - டகர ஒற்று இரட்டியது பின்னர்
- உயிர்வரின் உக்குறள் என்னும் விதிப்படி
- கோட்டு (ட்+உ) + உகிர் = கோட்டுகிர் என்று புணர்ந்தது.
- வயிறு + வலி = வயிற்றுவலி
- வயிற்று + வலி = றகர ஒற்று இரட்டியது பின்னர்
- வயிற்று வலி என்று புணர்ந்தது

விதி:

"நெடிலோடு டுயிர்த் தொடர்க் குற்றுக ரங்களுள் டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே" - (நன்னூல் 183)

பலா (ல்+ஆ) + பழம்

- இதில் நிலைமொழியின் இறுதி எழுத்து இயல்பாக உயிரெழுத்தாக அமைந்துள்ளது.
- கானம் + பறவை
- இதில் நிலைமொழியின் இறுதி மகர ஒற்றாகும். அது வருமொழியோடு புணரும் பொழுது மவ்வீ றொற்றழிந்து என்னும் விதியினால் மகரமெய் அழிந்தது.
- கான (ன்+அ) + பறவை
- கான + பறவை என்பதில் நிலைமொழி உயிரீறாக மாறுகின்றது.
- இதுபோல் இயல்பாகவும் விதியினாலும் உயிரீறாக நிற்கும் சொல்முன் வல்லெழுத்தை (க, ச, த, ப) முதலாகவுடைய சொற்கள் வந்து புணரின் அவ்வல்லெழுத்து மிக்குப் புணரும்.
- பலா + பழம் = பலாப்பழம்
- கானம் + பறவை = கானப்பறவை

**விதி:**

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்வித வாதன மன்னே" - (நன்னூல் 165)

- திசைப்பெயர்களோடு வேறு திசைப் பெயர்களோ, பிற சொற்களோ வந்து புணரும் பொழுது

RADIAN IAS ACADEMY

கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத வல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே" - (பரணர்)
திணை: பாடாண் துறை: இயன்மொழி

**பாடியோர்:**

- பரணர், இவர் வரலாற்றுக் குறிப்புகளைப் பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவர்.
- கபிலர் போல மிக்க புகழுடன் வாழ்ந்தவர் எனவே கபில பரணர் என்னும் தொடரால் விளங்குவார்.
- பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்து பாடிக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றவர்.

**பாடப்பட்டோர்:**

- இப்பாடல் வையாவிக்கோப்பெரும் பேகன் என்னும் குறுநில மன்னனைப் புகழ்ந்து பாடியதாகும்.
- பேகன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்.
- கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய புகழுக்குரியவன்
- இவனது ஊர் நல்லூர் - ஆவியர் குடியில் பிறந்தவன்.

**திணை விளக்கம்: பாடாண் திணை**

- ஒரு மன்னனது புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண் திணையாகும்.
- பாடப்படுகின்ற ஆண் மகனது ஒழுகலாற்றைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**துறை விளக்கம்: இயன்மொழி**

- ஒரு வேந்தனெதிர்சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது இயன்மொழி வாழ்த்து என்னும் துறையாகும்.
- ஒருவனின் இயல்பைப் புகழ்ந்து கூறி வாழ்த்துவது இத்துறையின் உயிர்ப்பாகும்.

**அருஞ்சொற்பொருள்**

- படான் - (போர்) செய்யான்
- உகுத்தும் - பெய்தும்
- படை மடம் - போர் நெறிக்கு மாறுபட்டுப் போர் புரிதலாகிய இயல்பு.
- கொடை மடம் - வரையறையின்றிக் கொடுத்தலாகிய இயல்பு

**இலக்கணம்**

- அறுகுளம், அகல்வயல் - வினைத்தொகைகள்
- வரையா மரபு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- கடாஅ - இசைநிறையளபெடை
- கழற்கால் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

**அகநானூறு**

- அகம் + நான்கு + நூறு - அகநானூறு
- பாடல்கள் 13 அடிச்சிறுமையும் 31 அடிப்பெருமையும் கொண்டவை - 400 பாடல்கள் அமைந்த நூல் - 3 பிரிவு உடையது.
- இந்நூல் நெடுந்தொகை என்றும் வழங்கப்படும்.
- களிற்றியானை நிரையில் 120 பாடல்களும், மணிமிடை பவளத்தில் 180 பாடல்களும், நித்திலக் கோவையில் 100 பாடல்களும் உள்ளன.
- 1, 3, 5 என ஒற்றைபடை எண்களாக வருவன பாலைத்திணைப்பாடல்கள்.
- 2, 8 என வருவன குறிஞ்சித்திணைப் பாடல்கள்
- 4, 14 என வருவன முல்லைத்திணைப் பாடல்கள்
- 6, 16 என்று வருவன மருதத்திணைப் பாடல்கள்
- 10, 20 என்று வருவன நெய்தல் திணைப் பாடல்கள்
- இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர் ஆவார்.
- தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி ஆவான்.

**பாலை**

"ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன....."
(ஔவையார்)

- ஔவையார் அதியமான் நெடுமானஞ்சி என்னும் குறுநில மன்னனுடன் ஆழ்ந்த நட்புக் கொண்டவர்.
- அம்மன்னன் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்.
- அதியமான் ஔவைக்கு நெல்லிக் கனியைக் கொடுத்த செய்தி புறநானூற்றால் அறியலாம்.
- ஔவையார் பாடிய பாடல்களைப் புறநானூற்றிலும், நற்றிணையிலும், குறுந்தொகையிலும் காணலாம்.
- வெள்ளி வீதியார் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற்புலவர்.
- கரிகாலன் மகள் ஆதிமந்தி
- வெள்ளி வீதியார் கணவனைத் தேடியலைந்த செய்தியை ஔவையார் பாடலில் காண்கிறோம்.
- காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தனவே என்ற பாடல் குறுந்தொகையில் காணலாம்.
- இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் எட்டும் நற்றிணையில் இரண்டும் அகநானூற்றில் இரண்டும் திருவள்ளுவமாலையில் ஒன்றும் காணக்கிடைக்கின்றன.
- வேங்கைப்பூவின் நிறம் மஞ்சள்.

**அருஞ்சொற்பொருள்**

- ஓங்குமலை - உயர்ந்த மலை
- சிலம்பு - மலைச்சாரல்

RADIAN IAS ACADEMY

- சில இடங்களில் வல்லின முதன்மொழியோடு புணரும் பொழுது மகரம் கெடாது. வருமொழியின் வல்லெழுத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்து புணரும்.
- மெல்லின, இடையின முதன் மொழியோடு புணரும் போது மகரம் கெட்டு இயல்பாக புணரும்.

மரம் + அடி

- மர (வ்+அ)டி = மரவடி
- மகரம் கெட்டு உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்தது.
- மரம் + கிளை = மரக்கிளை
- ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்குப் புணர்ந்தது.
- பழம் + தின்றான் = பழந்தின்றான்
- நிலைமொழி ஈற்று மகரம் கெட்டு வருமொழி முதலிலுள்ள 'த்' என்னும் வல்லின மெய்க்கு இனமான 'ந்' என்னும் மெல்லின மெய்யாகத் திரிந்து புணர்ந்தது.
- மரம் + வேர் = மரவேர்
- மகர ஈற்று மொழி இடையின முதன் மொழியோடு புணரும் போது மகரம் கெட்டு இயல்பாய் புணர்ந்தது.
- மரம் + நார் = மரநார்
- மகர ஈற்று மொழி மெல்லின முதன் மொழியோடு புணரும் போது மகரம் கெட்டு இயல்பாகப் புணர்ந்தது.

விதி: "மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரியும் ஆகும்" - (நன்னூல் 219)

- வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழியீற்று "ண" கரம் வல்லின முதன் மொழியோடு புணரும் போது "ட" கரமாகத் திரியும்.
- மண் + கலம் = மட்கலம்
- நிலைமொழியீற்று "ன" கரம் வல்லின முதன் மொழியோடு புணரும் போது "ற" கரமாகத் திரியும்.

பொன் + குடம் = பொற்குடம்

- "ணனவல் லினம் வரட் டறவும் பிறவரின்
"இயல்பும் ஆகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே - (நன்னூல் 209)

**வேற்றுமைப் புணர்ச்சியில்:**

- நிலைமொழியீற்று லகரமும், ளகரமும், வல்லின முதன் மொழியோடு புணரும் போது றகரமாகத் திரியும்; ளகரம் டகரமாகத் திரியும்.

எ.கா:

- கழல் + கால் = கழற்கால்
- கள் + குடம் = கட்குடம்
- நிலைமொழியீற்று லகரமும், ளகரமும் மெல்லின முதன் மொழியோடு புணரும் போது னகரமாகவும் ளகரம் ணகரமாகவும் திரியும்.

எ.கா:

- சொல் + மாலை = சொன்மாலை
- அருள் + மொழி = அருண்மொழி
- விதி: "லளவேற் றுமையீற் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப"
- நிலைமொழி ஈற்றில் னகரமோ, லகரமோ நின்று வருமொழி முதலில் தகரம் வரின் அது றகரமாக மாறும்; நகரம் வரின் அது னகரமாக மாறும்.

எ.கா

- பொன்+தீது = பொன்றீது
- கல் + தீது = கற்றீது
- பொன் + நன்று = பொன்னன்று
- கல் + நன்று = கன்னன்று
- நிலைமொழி ஈற்றில் னகரமோ, ளகரமோ நின்று வருமொழி முதலில் தகரம் வரின் அது டகரமாகவும் நகரம் வரின் அது ணகரமாகவும் மாறும்.

எ.கா:

- மண் + தீது = மண்டீது
- முள் + தீது = முட்டீது
- கண் + நீர் = கண்ணீர்
- முள் + நன்று = முண்ணன்று

விதி: "னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே" - (நன்னூல் 237)

- பல என்னும் சொல் முன் பல என்னும் சொல்லும் சில என்னும் சொல்முன் சில என்னும் சொல்லும் வந்து புணரும் போது.

இயல்பாகப் புணரும்

- பல + பல = பலபல
- சில + சில = சிலசில

மிக்குப் புணரும்

- பல + பல = பலப்பல
- சில + சில = சிலச்சில
- நிலைமொழி இறுதியிலுள்ள அகரம் கெட எஞ்சி நிற்கும் லகரம் றகரமாகத் திரிந்து புணரும்.

எ.கா:

- பல + பல
- பல் + பல
- பல் + பல = பல் (ல்+அ) + பல = பற்பல
- சில + சில = சில் + சில = சிற்சில
- பல, சில என்னும் சொற்கள் முன் பிற சொற்கள் வந்து புணரின் நிலைமொழி இறுதி அகரம் கெட்டுப் புணரும்; கெடாமலும் புணரும்.
- பல (ல்+அ) + பணி = பல்பணி
